


காலத்தின் சாட்சியம் :
கம்பன் அடிப்பொடி

முனைவர் சொ.சேதுபதி



காலத்தின் சாட்சியம்:

கம்பன் அடிப்பொடி

முனைவர் சொ. சேதுபதி

பாவை பப்ளிகேஷன்ஸ்
142, ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை,
சென்னை - 600 014. ☎ : 28482441, 28482973
e-mail : pavai123@yahoo.com

Kaalathin Chatchiyam: Kamban adippodi
by Dr.C.Sethupathi

காலத்தின் சாட்சியம்:கம்பன்அடிப்பொடி
சேதுபதி

முதற்பதிப்பு : மார்ச் 2014

பாவை பப்ளிகேஷன்ஸ் வெளியீடு

Code No. : P 1246

ISBN : 978 - 81 - 7735 - 693 - 9

பக்கங்கள் : viii + 144 = 157

விலை ரூ. : 140.00

வடிவமைப்பு : கபிலன் கிராபிக்ஸ்
புதுச்சேரி.

அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,
142, ஜானி ஜான் கான் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
☎ : 28482441, 28482973

காரைக்குடி கம்பன் கழகத்தின் பவளவிழா, திருநாள் மங்கல நிகழ்வில் 21.03.2013 அன்று வெளியிடப்பெற்றது.

விற்பனையகங்கள்

சென்னை 044-24899351 044-26359906, 044-24404873
திருச்சி 0431-2700885 மதுரை 0452-2344106, 2350271
திருநெல்வேலி 0462-2323990 கோவை 0422-2380554
சேலம் 0427-2450817, வேலூர் 0416-2234495
தஞ்சாவூர் 04362-231371 புதுச்சேரி 0413-2357403
திண்டுக்கல் 0451-2432172 ஒசூர் 04344-245726
உதகை 0423-2441743.

பதிப்புரை

கம்பன் கழகம் என்றாலே நம் எண்ணத்தில் மலர்பவர் கம்பன் அடிப்பொடி என்று அழைக்கப் பெறும் சா.கணேசன் அவர்கள்தான்.

எண்ணம், எழுத்து, சொல், செயல்,மூச்சு என அனைத்தையும் கம்பனுக்காக அர்ப்பணித்து வாழ்ந்த அமரர், அவர்.

தோழர் ஜீவாவுடன் இணைந்து நாட்டுப்பணியும், இலக்கியப் பணியும் ஆற்றிய உத்தமர்.

நூற்றாண்டுவிழாக் கண்ட அவரது நூல்கள் நாட்டுடைமை யாக்கப் பெறுமுன்பே அவர் தம் சொத்துக்களை நாட்டு விடுதலைக்காக விட்டுக் கொடுத்தார் என்பதும் அதற்கு விலையாக, எந்தச் சலுகையும் ஏற்கமாட்டேன் என்று புறக்கணித்தார் என்பதும் இன்றைய தலைமுறையினர் அறியவேண்டிய செய்திகள்.

தன், உடல், பொருள், ஆவி அனைத்தையும், நாட்டுக்காகவும், தமிழுக்காகவும் ஆக்கிய அன்பர் 'சாவன்னா கானா' என்னும் சா.கணேசன், கம்பர் உள்ள காலமெல்லாம் கன்னித்தமிழோடு வாழ்வார் என்பதற்குக் கட்டியம் கூறும்முகமாக அவர்தம் அரும்பணிகளை ஐந்துகரங்களாக ஆக்கித் தந்திருக்கிறார் பேராசிரியர் முனைவர் சொ. சேதுபதி. அவர் கம்பன் வீட்டுக் கட்டுத்தறி; காரைக்குடி கம்பன் கழகம் கண்டு தந்த நல்இளைஞர்.

கம்பன் கழகங்களுக்கெல்லாம் முன்னோடிக் கழகமான காரைக்குடிக் கம்பன் கழகத்தின் பவளவிழா நாள்மங்கலத்தில் பண்பாளர், கம்பன்அடிப்பொடியார் அவர்கள் குறித்த இந்நூலை, எமது பாவை பப்ளிகேஷன்ஸ் வாயிலாக வெளியிடுவதில் பெருமை கொள்கிறோம்.

தோழர் ஜீவா நின்று முழங்கிய வரலாற்றுப் பெருமையுடைய காரைக்குடிக் கம்பன் கழகத்தின் பவளவிழாப்பொழுதில், இந்நூல் வாயிலாக எமது பங்களிப்பையும் நல்கச் செய்த கம்பன் கழகத்தாருக்கும் இந்நூலை எழுதித்தந்த பேராசிரியர் முனைவர் சொ.சேதுபதி அவர்களுக்கும், ஏற்று வாசிக்கும் தமிழ் மக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பதிப்பகத்தார்.

பணிவுரை

"இப்படி ஒரு மனிதன் இரத்தமும் சதையுமாய் நம்முன்னே வாழ்ந்தார் என்று சொன்னால் வருந்தலைமுறையினர் நம்பவா போகிறார்கள்?" என்று காந்தியைக் குறித்து மேனாட்டார் ஒருவர் சொன்னதாகச் சொல்வார்கள்.

இந்தக் கருத்து காந்திக்கு எப்படிப் பொருந்துமோ அப்படியே அவர்தம் தொண்டர் சா.க.என்னும் 'கம்பன் அடிப்பொடி' சா.கணேசனார்க்கும் பொருந்தும்.

எல்லையில்லா அன்பும் நேயமும் தேசத்தின்மீது வைத்தவர். அந்த வரிசையில் கல்வி பல கற்றுக் கம்பனையும், கம்பன் வழி, தமிழையும், அது கொண்டு பிரபஞ்சத்தையும் தம் காலத்துக்குள் கண்டு, உணர்ந்து, காட்ட முனைந்தவர்.

பல்துறை ஆற்றலைப் பெற்ற அப்பெருமகனாரின் பன்முகப் பரிமாணங்களை ஐங்கரங்களாக ஆக்கி, அவரை, மனிதக் கணேசராகக் காட்டும் முயற்சி இந்நூல்.

ஃ ஃ ஃ

முயற்சிதான். இன்னும் முடிவுறாப் பணி இது என்பது எழுத எழுதத் தெரிகிறது. கிடைத்த பல அரிய தகவல்களை இந்த நூலுக்குள் அடக்க முடியாமல் தவித்த பொழுதுகள் அதிகம். அந்த வகையில் விரிக்க வேண்டியவை அநேகம்.

ஆயினும் எடுத்துக்கொண்ட பொருண்மைக்கு இன்றியமையாத கருத்துக்களைத் தகுந்த சாட்சியங்களாக இந்நூலுள் கொடுத்திருக்கிறேன்.

இன்னும் இந்த வரிசையில் எழுதவேண்டியிருக்கிறது என்பது நன்றாகத் தெரிகிறது.

பவளவிழாக்காணும் பெருமைமிகு காரைக்குடிக்கம்பன் கழகத்துத் திருநாள் மங்கலத்தில், நூற்றாண்டு விழாக் கண்ட கம்பன் அடிப்பொடியார் குறித்த இந்தச் சிறுநூலை எனது அன்பிற்கினிய அண்ணன் திரு. பழ.பழனியப்பன் அவர்களின் நெறிகாட்டலுக் கிணங்க, புதுவைப் பல்கலைக்கழகத்து, சுப்பிரமணியபாரதி தமிழியற்புலப் பேராசிரியர் அ.அறிவுநம்பி அவர்கள் வெளியிடுவது மிகுந்த பொருத்தம் உடையது.

கம்பன் அடிப்பொடி அவர்களின் மணிவிழாக் காலத்தைக் கவனத்தில் கொண்டு மலர் தயாரிக்க முனைந்த அமரர் கவிஞர் பூ. அமிர்தலிங்கனாரின் அருந்தவப் புதல்வர் அவர்.

காலத்தாற் செய்த அவரின் பணி காலங்கடந்தும் களஞ்சியமாகக் கிடைத்திருக்கிறது என்றால் அதற்குக் கம்பன் அடிசூடி, பழ.பழனியப்பன் அவர்களுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

பேச்சுக்கு இடையில், எப்படி 'கம்பா கம்பா' என்று தன் தலைவனை, அடிப்பொடியார் கருதிக் கூறுவாரோ, அதுபோல் கம்பன்அடிப்பொடியாரைக் கருத்திற்கொண்டு அவர் இடத்தில் இருந்து அப்பெரும்பணியை ஆற்றிக்கொண்டிருக்கும் அண்ணன் பழ.பழனியப்பன் அவர்கள் அளித்த பேரூக்கத்தாலும், உதவியாலும் இச்சிறுநூலை, பவளவிழாக் காணும் கம்பன் கழகத்திற்குக் காணிக்கையாக்கி மகிழுகிறேன்.

ஃ ஃ ஃ

மலைப்பாய் இருக்கிறது. அந்த மகத்தான மனிதரின் எதிர்பார்ப்பற்ற இலட்சிய வாழ்க்கை, இது இனிவரும் தலைமுறையினருக்குத் தெரிந்தாகவேண்டும் என்று வெளியிடும் பாவை பதிப்பகத்தாருக்கு- தோழர் இரத்தினசபாபதி, சேகர் உள்ளிட்ட தோழர்களுக்கு - என் நன்றி.

சென்ற நூற்றாண்டில் எல்லோரும் சிறந்தவர்களாகவே இருந்திருக்கிறார்கள், பிறந்திருக்கிறார்கள், நாம் இந்த நூற்றாண்டில்

பிறந்து இருந்து என்ன பயன்? என்று அடிக்கடி வினவிக் கொள்ளும் சூழலில் இருக்கிறோம்.

வறிதே பொழுது போய்விடாது இந்த அரிய மனிதரின் வரலாற்றுத்துளிகளைத் தொகுத்தளிக்க உதவிய, அக்கா இரா.மீனாட்சி, அண்ணன் கவிஞர் மரு.பரமகுரு, அருமை நண்பர் இரா.குறிஞ்சிவேந்தன், அக்கறையோடு என்னைக் காத்துக்கொண்ட அம்மா, வடிவமைத்துத் தந்த கபிலன் பதிப்பகத்து உரிமையாளர் கவிஞர் சொ.அருணன், தகவல்களைத் தேடித் தொகுக்கப் பெரிதும் உதவிய, வரலாற்றுப் பெருமையுடைய காரைக்குடி ஹிந்துமதாபி மான சங்கத்துப் பெரியோர்கள் மற்றும் புதுக்கோட்டையின் தமிழ்ப் பதிப்புலகின் ஆவணக்காப்பகமான 'ஞானாலயா' நிறுவனர்கள் பா.கிருஷ்ண மூர்த்தி, திருமதி. டோரதி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிழற்படங்களை நல்கி உதவிய காரைக்குடி 'சுந்தரம் ஸ்டுடியோ' சுப்பு என்னும் சுப்பிரமணியன் மற்றும், வாங்கிப் படித்து இந்நூலை இன்னும் விரித்தெழுத உதவிசெய்யும் வாசக அன்பர்கள் யாவருக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றி.


'காலத்தின் நெருக்கடிக்குள் கட்டுப்பட்டுக் கிடக்கும் மனிதவாழ்வு காலத்தை வெல்வதில் கவனமாய் இருக்கட்டும். காலம் பல கடந்து பிரபஞ்சம் தழைக்கப் பேருழைப்பு நல்கட்டும்' என்பதை எனது வேண்டுகோளாய் வைத்து, இப்போதைக்கு விடைபெறுகிறேன்.

மீண்டும் இவர் குறித்து விரித்தெழுத எனக்குக் காலம் கருணை புரிந்திட வேண்டும்.

யாவர்க்கும் என் கைகூப்பு!

புதுச்சேரி
19 மார்ச் 2013

மிக்க அன்புடன்
சேதுபதி



காணிக்கை


பவளவிழாக் காணும் பைந்தமிழ்ச்சோலையாம்

காரைக்குடி கம்பன் கழகத்திற்கு

இந்நூல் காணிக்கை

சாட்சியங்கள்

பணிவுரை	V
காலமும் கணேசனும்	01
அரசியல் உலகில் அதிசய மனிதர்	15
சமயங்கலந்த சமரசப் பெரியார்	31
கலைகளின் வழியே காலத்தை அளந்தவர்	52
இலக்கியவுலகின் இலக்குவன்	73
காரைக்குடிக் கம்பன்	85
காலத்தின் சாட்சியம் கம்பன்அடிப்பொடி	125



காலமும் கணேசனும்

காலத்தையும் இடத்தையும் தன்னிரு கால்களாய்க் கொண்டு நடக்கும் வரலாற்றின் இயக்கத்தில் மிகச்சிறிய அணுத்துகள் இந்த மானுட வாழ்க்கை.

வாழையடி வாழையென வந்த அந்த மானுடத் திருக்குலத்தின் மீச்சிறு துகள்தான் ஒரு தனிமனித வாழ்வு.

எனினும் இந்தத் துகளின் இயக்கம், அந்தப் பேரியக்கத்தின் அச்சாணி. அந்தப்பேரியக்கத்தின் போக்கு, இந்தத் துகளின் பாதையையும், பணியையும் தீர்மானிக்கும் பேராற்றல் உடையது. எனவே, ஒன்றின் இயக்கம், அல்லது மாற்றம் மற்றொன்றைப் பாதிக்கும்; வளர்க்கும்; திசைமாற்றும்.

கனலாய் விழும் வினா

'எல்லை இன்னதெனக் கணித்தறிய இயலாத இந்த இயக்கத்தில் எங்கே நாம் இருக்கிறோம்?' என்ற கேள்வியில் இருந்து பிறக்கிறது அறிவு.

உயிரின்மீது ஒரு கனல்துகளாய் விழுந்த இது சிந்தனையாய்க் கனன்று வேள்விச்சாலையில் சுழன்றெழும் தீயின் நாவுபோல் நாலாபக்கமும் தேடியலைந்து மேலேறுகிறது. தன்னை உணர்ந்து, தன்னைச் சுற்றியுமுள்ள அனைத்தையும் தரிசனப்படுத்தும் அதன் பேரொளியில், அறியக் கிடைத்தவற்றையெல்லாம் பத்திரப் படுத்திப் பாதுகாத்துக் கொள்ளக் கிடைத்த மாபெரும் பாத்திரம் மொழி.

தொடக்கத்தில் காற்றின் மேனியில் சைகையின்மூலம், மர்மக் கோடுகளை எழுப்பி அருகில் இருப்போர்க்குத் தன்னை அறிவித்துக்கொள்ளத் துணைசெய்த இம்மொழியை, காணாதாருக்கும் காட்டவேண்டி, தாம் வதிந்த கற்குகைகளின் மேனிகளில் கிறுக்கத் தொடங்கியது ஆதிமானுடம்.

அதுவும் கூட, முதலில், ஆற்றங்கரை மணலில், தன் காலடித் தடத்தைக் கண்டதில் இருந்து பெற்ற வழியாய் இருக்கலாம்.

முதலில், உணவைத் தேடிப் பிறகு இணையைத்தேடித் தம்மை விருத்தி செய்துகொண்ட விலங்கில் இருந்து, அனைத்தையும் தேடித் தமக்கென்றாக்கும் வெறியில் பிறந்த மிருகத்தில் இருந்து, பிற உயிர்படும் வாதனைகளைத் தன்னுயிர் உணர்வால் அறியத் தொடங்கியபோது மானுடம் பிறந்தது.

காலாய் இருந்து கையாய் மாறிய ஒரு கால அற்புதத்தில், விரல்கள் நீண்டு, பற்றிக்கொள்ளப் புறப்பொருள் தேடி உடல் அலையும்போது, அகப்பொருள் தேடி மனமும் அலைந்தது; மனிதம் மலர்ந்தது.

தொன்மம் உணர்த்தும் உண்மை

தன்முன்னாலேயே தனக்கும் அப்பால் விரிந்த பிரபஞ்சத்தைக் காணும்போது மூன்றாவது கண் முளைத்தது.

அவன் ஆதிசிவன் ஆனான். சக்தியைத் துணையாக்கிக் கொண்டான். இரு பிள்ளைகள். ஒரு குடும்பம். தோட்டத்தில் கிடைத்த ஒற்றை மாம்பழம் இந்த வீட்டை இரண்டாக்க, பிறந்த இடமே நிரந்தரம் என்று முதல்பிள்ளை தங்கினான்; உலகம் சுற்றிவரப் போனான் இளையவன்; இவர்களோடு கூடப்பிறந்தது இவர்களின் ஆதிமொழி.

அது 'தமிழ்' என்று சொல்லிக் கொள்ளும் இனத்தில் இருந்து கிளைத்த மானுடம், தாம் உணர்ந்தவற்றை, முதலில் காற்றிலும், பின்னர் ஓலைகளிலும், எழுதிவைத்தது; அடையாளமிட்டு அறிவிக்க வேண்டிக் கற்களிலும் வெட்டிவைத்தது.

அடுத்து அடுத்துப் பிறந்து வளர்ந்த சந்ததி எழுந்து படித்துப் பார்க்கும்போது, அது இலக்கியம் ஆனது; தடுமாற்றம் இன்றி ஒருமையுடன் புரிந்து கொள்ள இலக்கணம் எழுந்தது.

'மன்னா வுலகத்து மன்னுதல் குறித்துத்
தம்பெயர் நிறீஇத் தாமாய்ந்த'

வாழ்வு ஒவ்வொன்றும் வரலாறாகத் தமிழினம் தாங்கிக் கொண்டதும் காலத்தின் ஓட்டத்தில் தங்கிக் கொண்டதும் இப்படித்தான்.

காலமும் கணக்கும்

இங்கே இன்னொன்றையும் சொல்லிவிடவேண்டும்.

உலக வரைபடத்தில் நிலநடுக்கோட்டை நாம் கற்பனையில் வரைந்து அளப்பதுபோல, பிரபஞ்ச இயக்கத்தின் நுட்பத்தைப் புரிந்து தம்மை நிலைநிறுத்திக் கொள்ள மனிதம் கண்டுபிடித்த அற்புதம்தான் இந்தக் காலம்.

> "காலத்தை நம்மவர் மிகத்துல்லியமாகக் கணித்து வந்திருக்கின்றனர். நொடி, விநாடி, நாழிகை, யாமம், பொழுது, நாள், வாரம், பக்கம், மாதம், இருது, அயனம், ஆண்டு என்று பகுத்துக் கணக்கிடுதல் நமது முறை. இம்முறை பல நூற்றாண்டுகளாக நடைமுறையில் தொடர்ந்து இருந்து வருகிறது.

இக்கணிப்புமுறை சூரியன், சந்திரன் இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டு விஞ்ஞான நெறியில் நிர்ணயிக்கப் பெற்றது. இம்முறையே சில நூற்றாண்டுக்கு முன்வரை அகில உலகமும் ஏற்றுப் போற்றிவரப் பெற்றதாகும். ஆண்டுக்குச் சூரியன், மாதத்திற்குச் சந்திரன், வாரத்திற்குச் சூரியன் முதல் சனிவரையுள்ள ஏழு கிரகங்கள், அதிதேவதைகள்.

உலகம் 360 பாகை (Degree) களாக வகுக்கப் பெற்றுள்ளது. சூரியன் இந்த 360 பாகைகளையும் முழுக்க ஒரு சுற்றுச் சுற்றும் கால அளவை ஒரு வருடமாகக் கொள்வோம். 360 பாகைகளையும் பன்னிரண்டு ராசிவீடுகள் (Sign of the Zodiac) என வகுத்து ஒவ்வொரு ராசிவீட்டிலும் 30 பாகைகளாகக் கணக்கிட்டுள்ளனர். அப்படிக் கணக்கிட்ட அந்த ஆண்டிற்கு 360 நாட்களாகவே அமைந்தன. இது பல்லாயிரம் ஆண்டுகட்கு முன் ஏற்பட்ட கணிப்பு. பூமியின் கோள்வழி (Orbit) சிறிது சிறிதாக மாறிக்கொண்டு வருகிறது. அதாவது, பூமியானது ஆண்டு ஒன்றுக்கு 11 இஞ்சு வீதம் கோள்வழியை விட்டுவிலகிக் கொண்டிருக்கிறது. அதனால் ஆண்டு ஒன்றுக்கு 360 நாட்களாக இருந்த நிலை சிறிது சிறிதாக மாற்றம் பெற்றுத் தற்பொழுது ஆண்டு ஒன்றுக்கு 365 நாள், 6 மணி, 13 நிமிஷம், 53 விநாடியாகக் கூடியிருக்கிறது.

எனவே, ஆதிகாலத்தில், 60ஆண்டுக்கு 60X360=21,600 நாட்களாக இருந்த நிலைமாறித் தற்காலத்தில் $60X365^{1}/4$ =21,915 நாட்களாகிவிட்டன. முந்திய கணக்குப்படி பார்த்தால், 60 ஆண்டும், 10 மாதமும், 15 நாளும் ஆகின்றன. ஆதலால், ராசிவீடுகளில் கிரகங்கள் அமையும் கால அளவுகளிலும், ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுகின்றன. என்றாலும் பெருத்த மாற்றம் ஏற்படவில்லை.

குத்து மதிப்பாகப் பார்க்கும்பொழுது பன்னிரண்டு ராசி வீடுகளிலும்- அதாவது, 360 பாகைகளிலும்- தங்கியிருந்து ஒரு முழுவட்டம் சுற்றுவதற்கு, சூரியனுக்கு

ஓர் ஆண்டும், சந்திரனுக்கு ஒரு மாதமும், செவ்வாய்க்கு ஒன்றரை ஆண்டுகளும், புதனுக்கு ஓராண்டும், வியாழனுக்குப் பன்னிரண்டு ஆண்டுகளும், வெள்ளிக்கு ஓராண்டும், சனிக்கு முப்பது ஆண்டுகளும், ராகு கேதுகளுக்கு ஒன்றரை ஆண்டுகளும் ஆகின்றன.

இந்த முறையில் நோக்கும்போது, ஆதிநாட்களில் ஒருவர் பிறந்த காலத்தில் அமைந்த ஆண்டு, மாதம், நட்சத்திரம், கிரகநிலை யாவும் அறுபது ஆண்டு நிறைந்த மறுநாளில் அப்படியே அமைந்திருக்கும். ஆனால், பூமியின் கோள்வழியில் மாற்றம் ஏற்பட்டுள்ள இந்நாட்களிலும், ஆண்டு, மாதம், நட்சத்திரம், பெரும்பாலான கிரகங்களின் நிலையாவும் பிறந்த நாளில் அமைந்ததைப்போலவே இருக்கக்காண்போம். ஆதலால், ஏனைய பிறந்த நாட்களை விட, அறுபதாவதாண்டு நிறைந்து அடுத்துவரும் பிறந்த நாளே சிறப்புடையதாகும். எனவே, இதனைச் சிறப்பாகக் கொண்டாடுவது நமது மரபு" (கம்பன் அடிப்பொடி, கட்டுரைக் களஞ்சியம், பக்.138-140)

என்று மணிவிழாவின் பின்புலம் குறித்து, எழுதியிருக்கும் ஒருநபர், உலகம் உவப்பச் சிறப்புடன் வாழ்ந்து, சாதனைகள் பல புரிந்த தீரர்; நண்பர்கள் உறவினர்கள் எல்லாம் ஒருங்குகூடி, மணிவிழா எடுக்க முனைந்ததை ஏற்காமல், ஒருவருக்கும் தெரியாமல், வீட்டைவிட்டுக்கிளம்பி திருத்தணிகை முருகன் திருமுன் இருந்து இப்படி எழுதுகிறார்:

"யான் பிறந்த கீலக,வை காசி,மகம் இசைநாளில்
மான்கரந்த சிவன்மைந்தன், வள்ளிமகிழ் தமிழ்த்தெய்வம்
தேன்நிறைந்த மலர்மார்பன், திருமுருகன் அடிபரவ
வான்சிறந்த திருத்தணிகை மனமகிழச் சென்றடைந்தேன்

திருத்தணிகை மலைஏறித் திருமுருகன் திருமுற்றத்து
அருத்தியுடன் வழிபாட்டை அடிநாயேன் புரிபொழுதில்
கருத்தினிலே உதித்தசில கவிகளைப் பின் கண்டபடி
உருத்தெரிய எழுதிஅவண் ஓதிமன நிறைவுகொண்டேன்"

இப்படி எழுதியவர், மணிவிழா மறுத்த மாண்பாளர் யார் எனக் கேட்கிறீர்களா? தமிழகத்தின், பழைய இராமநாதபுர

(தற்போதைய சிவகங்கை) மாவட்டத்தைச் சார்ந்த காரைக்குடி சாமிநாதன்-நாச்சம்மை தம்பதியரின் புதல்வராய், 06.06.1908இல் பிறந்த கணேசன் என்பவர்தான். இப்படிச் சொல்வதைவிட, 'சாவன்னா கானா' என்று அழைக்கப்பெறும் கம்பன் அடிப்பொடி.

"அதை முதலில் சொல்லிவிடவேண்டியதுதானே?" என்று நீங்கள் கோபிப்பது புரிகிறது.

முதலில் உள்ள பெயர் அது; செயலில் வளர்ந்த பெயர் இது.

"எதுவாக இருந்தாலும் உலகம் அறிந்த பெயர் இதுதானே, இது சொல்லி அதுசொன்னால் தானாகவே விளங்கிவிடப் போகிறது?" என்கிறீர்கள்.

உண்மைதான். பிறப்பும் பெயரும் இயல்பாய் அமைவது. புகழும் சிறப்பும் செயலால் விளைவது.

பேரும் புகழும்

தோன்றிய யாவும் மறைந்துபோவது உலக இயற்கை; மறைந்த பிறகும் நிலைத்து நிற்பது மனித வாழ்க்கை.

பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையில் ஒரு கோடாய்க் கிடக்கும் வெற்றிடத்தைச் சீர்மிகு செயலால் நிரப்பித் தன் பெயரை நிறுத்த மனிதர்க்குக் கிடைத்த வரம் இந்த வாழ்க்கை. அவமே போக்காது, இவ்வாழ்வைத் தவமே என ஆக்கித் தன்னை நிலைநிறுத்திக் கொள்வது தமிழர்தம் மாண்பு.

"மன்னா வுலகத்து மன்னுதல் குறித்தோர்
தாம்பெயர் நிறீஇத் தாமாய்ந்தனரே" (புறம்-165)

என்கிறார் பெருந்தலைச்சாத்தனார். இப்'பெயர்' இடுபெயர் அன்று; செயலால் விளைந்த சிறப்புப் பெயர்; காலகாலத்திற்கும் நிற்கும் காரணப்பெயர்.

இந்த இடத்தில் பாரதியும் நம் நினைவில் படர்கிறார்: "பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்" என்று.

அதற்கு என்ன வழி?

"ஈதல் இசைபட வாழ்தல்" என்கிறது வள்ளுவம்.

"பிறந்து இறந்து போய்ப் பெறுவதும் இழப்பதும் புகழே" என்கிறான் கம்பன்.

அவனுக்குத் தெரிந்திருக்கிறது, மனிதப்பிறப்பே புகழுக் குரியது தான் என்று. பிறக்கிறபோதே புகழுக்குரியது மனிதப் பிறப்பு. 'இறப்புக்கு இடையில் இதை இழந்துவிடாமல் இருப்பதே வாழ்க்கை' என்பதைச் சொல்லாமல் சொல்கிறது, இத்தொடர்.

இறப்பு அல்ல, மானுடத்திற்கு இழப்பு; இருக்கிறபொழுதே இந்தப் புகழைத் தொலைப்பதுதான். பின்னர் வாழ்வு, பிழைப்பாகி விடுகிறது.

நாம் பேசுவது வாழ்க்கையை அல்லவா? 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்தலை' யல்லவா?

இது உண்மைதானா?

'இல்லை' என்று அறிவியலாலும் சொல்லமுடியவில்லை, இப்போது.

"தந்தையறிவு மகனறிவு" என்று பேசுகிறது பழமொழி. அவ்வாறெனில், தாயறிவு?

அதுதான் பிரபஞ்ச அறிவு.

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி....
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்து' இப்போது அரிதாய்ப் பெற்ற மானிடப்பிறப்பு. 'வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்' என்று பேசிய அப்பர், இடைக்காலத்தில், இதனைப் பேணாது விட்ட பெரும்பிழையைத் தானேயுணர்ந்து புலம்புகிறார்: "குறிக்கோள் இலாது கெட்டேன்."

எது குறிக்கோள்?

இதுதான் என்று யாரும் குறித்துக் கொடுக்க முடியாதது குறிக்கோள்.

வரலாறு என்பது...

தன்னைப் பேணி, தன் சுற்றம் பேணி, தன்ஊர், நாடு, உலகம் எனப் பிரபஞ்சம் பேணும் முயற்சியில் விளையும் வாழ்வில்

ஒவ்வோர் உயிரும் தன்னை உணர்ந்து, தன் பொழுதறிந்து, 'தான்' சிதையாது காத்தல் குறிக்கோள். அது ஒரு தவம்.

"தவம் செய்வார் தம் கருமம் செய்வார்" என்கிறார் வள்ளுவர்.

இப்படித் தவம் செய்யும் வாழ்வு, தரணியில் உள்ளோர்க்குத் தகுவழி காட்டும் பெருவாழ்வு. வாழ்ந்து, வாழ்விக்கும் வள்ளல் பெருமக்களின் வழி தொடர்ந்து வருகிறது வரலாறு.

வரலாறு என்பது காலத்தையும் இடத்தையும் தன்னிரு கால்களாய்க் கொண்டு நடக்கும் இயக்கம்.

தொடங்கிய இடத்திற்கு வந்துவிட்டோம். ஆனால், தொடக்கத்தில் இருந்த மாதிரி, இப்போது இல்லை.

இடையில் இவ்வளவு பேசியிருக்கிறோம். இடையில் கழிந்த பொழுது நமக்குள் உணர்த்திக் காட்டிய உண்மைகள் ஏராளம்.

மாயவலைபின்னிச் சூழ நிற்கிறது காலம். இதை, 'பூஜ்ஜியங்களின் சங்கிலி' என்கிறார் கவிஞர் சிற்பி.

'வாழ்நாள் முழுதும் சிந்தி, ஆனந்தகுமாரசுவாமி ஆய்ந்தளித்த எழுத்தோவியங்களில் ஒன்று, 'காலமும் நித்தியமும்' (Time and Eternity).

ஓட ஓடக் குரைத்தபடி துரத்திக்கொண்டு கடிக்க வரும் கால நாயிடமிருந்து காப்பாற்றிக் கொள்ளும் முயற்சியிலேயே 'காலமானவர்களும்' உண்டு. அவர்களுக்கு மத்தியில், காலத்தில் வாழ்ந்து காலத்தை வெல்லும் கவனத்தில் அக்கறை கொண்டவர் கணேசன்.

காலமும் சா.கணேசனும்

அதனால்தான், தாமதத்தையே தமது மதமாய்க் கொண்ட கவியரசு கண்ணதாசனும், காலத்தைக் கண்டு அஞ்சாதபோதிலும் இந்தக் கணேசனைக் கண்டு அஞ்சி, கடிகார முள்ளுக்கு முன்னோடி வந்து கவியரங்கேறியிருக்கிறார், கம்பன் திருநாளில்.

முதல் அமைச்சர் ஆனாலும், காலத்தின் முன்னால் தான் யார் என்று கண்டுகொள்ள வைத்த பெருமைக்குரியது அவர் கட்டிக் காப்பாற்றிய கழகம்.

காலண்டர் காட்டிய கணக்குப்படி, 6.6.1908ல் தொடங்கி, 28.7.1982ல் முடிந்துபோய்விட்ட ஒரு காலத்தின் கணிதக் குறிப்பல்லர் கணேசன். அதற்குமுன்னும், பின்னும் நீள்கிறது அவர் பெயர். அது பாரதி சொன்னதுபோல், 'பெயர் விளங்கி ஒளிர நிறுத்திய புண்ணியம்.' 'வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபில்' தான் யார் எனத் தெளிந்து, தன் பணி இன்னதென உணர்ந்து, தன் பொழுதில் அவர் ஆற்றிய தவம். அது முடிந்துபோவது இல்லை. இன்னும் இன்னும் தொடரும் என்பதன் உன்னத அடையாளம், அவர் கண்டு தந்த கம்பன் கழகம். அத்தோடு நிறுத்தாமல் அவர் கட்டியெழுப்பிய தாய்த்தமிழ்க்கோயில். அவர் கண்ட கனவு போல் இடையில் நின்ற மணிமண்டபம்.

அவையனைத்தும் ஒரு காலத்து மனிதனின் இருப்பை மட்டும் சொல்லவில்லை. காலங்கடந்து வாழும் ஒரு மொழியின், தேசத்தின், பிரபஞ்சப் பேரியக்கத்தைக் கண்டு உணர்ந்து உணர்த்திய கவிச்சக்கரவர்த்தியின் அளப்பரிய பேராற்றலை உலகுக்கு உணர்த்தவேண்டி நிற்கின்றன என்பதாகவே உணர்கிறேன்.

அது உண்மையா பொய்யா என்பது முக்கியமில்லை. இந்த உணர்வுதான் முக்கியம்.

இந்த உணர்வை ஊட்டத்தான் அந்தப் பைத்தியக்கார மனிதர், பலப்பல மனிதர்களுக்கு மணிவிழாவை முன்னின்று நடத்திய மனிதர், தம்மணிவிழா நிதியனைத்தையும் இம் மண்டபத்தில் கொட்டிக் கட்டி முடித்துவிட்டு, தூலமாய், இங்கே உலவிக்கொண்டிருக்கிறார்.

எங்கெல்லாம் இராமகாதை சொல்லப்படுகிறதோ, அங்கெல்லாம் அனுமன் வந்து இருப்பதைச் சமயஉலகம் சொல்கிறது. எனக்கு அது தெரியாது.

ஆனால், எங்கெல்லாம் கம்பன் என்ற பெயர் கேட்கிறதோ, அங்கெல்லாம் கைகட்டிக்கொண்டு, சட்டையணியாத இக் கார்மேனியன் மூக்குக்கண்ணாடிமீது பனிப்படலம் படரக் கண்களில் துளிநீர் கசியக் காத்திருப்பார் என்பது சத்தியம்.

விஞ்ஞான மரபுப்படி விளக்கம் சொல்வதானால், இணையத்தில் 'கூகுளுக்குள்' சென்று, 'கம்பன்' என்ற பெயரிட்டுச் சொடுக்கினால், அது கொண்டுபோய் இணைக்கும் தளங்கள்தோறும் இவர் பெயர் இருக்கும்.

கம்பனையே சுவாசித்த கலைஞன்

காற்றின் செவிகளில் இவர் இறக்கிவைத்த, அந்தக் கம்பீர முழக்கம்.

"கம்பன் வாழ்க,
கம்பன் புகழ் வாழ்க,
கன்னித் தமிழ் வாழ்க"

என்ற மூன்று தொடர்களால் ஆகிய பெரு முழக்கம் கேட்டுக் கொண்டே இருக்கும்.

அது அவர் முழக்கம் மட்டும் அன்று; மூச்சு. மூச்சென்றால், 74 ஆண்டுகள், ஒருமாதம், 22 நாட்கள், இன்னும் எனக்குச் சொல்லத் தெரியாத, சில பல நாழிகைகளாய்ச் சுவாசித்துக் கொண்டிருந்த மூச்சு.

'இப்படி ஒரு மனிதரை இழந்துவிட்டோமே' என்று காலத்தின் பெருமூச்சைத் தமக்கென்று ஆக்கிய கலைமூச்சு; கவிமூச்சு; அத் தமிழ்மூச்சு நின்றுபோனது என்று எப்படி நம்புவது?

'கம்ப நட்சத்திரம்'

கண்ணுக்குத் தெரியவில்லை என்பதால் பகலில் நட்சத்திரங்கள் இல்லாமல் போவதில்லை. இவர் துருவ நட்சத்திரம். இல்லை யில்லை, கம்ப நட்சத்திரம். கணேசனாய்ப் பிறந்து கம்பன் அடிப்பொடியாகி, கம்பனாகவே வானில் கலந்த நட்சத்திரம்.

பிறந்தநாளும் இறந்தநாளும் அறியாத கம்பனுக்குப் பெருவிழா எடுக்க அவர் குறித்த நாளும் பொழுதுமே, அவர்தம் காலக் குறியீடுதானே!

"கலியாண்டு 3986, சகாப்தம் 807, விசுவாவசு - பங்குனி 4ஆம் தேதி, (கி.பி.886 பெப்ருவரி -23) புதன்கிழமை

துதியை திதி, அத்தநட்சத்திரம் கூடிய நன்னாளில், வெண்ணெய் நல்லூரில், இராமவதாரத்தை அரங்கேற்றிக் கம்பன் கவிச்சக்கரவர்த்தி ஆனான்"

என்று கணக்கிட்டு அந்த நாளையே அவன் பிறந்த நாள்போல் ஆக்கியவர், அவர்தானே!

அந்த நாளில் அவன் தன் இராமகாதையை, அரங்கேற்றினான் என்பதற்கு என்ன சாட்சி?

கண்டு சொன்னவர்தான் கணேசன். அவர் காலத்தின் சாட்சியம்.

கணேசன்: அவர் காலத்தின் சாட்சியம்

'காலமும் கணக்கும் நீத்த காரணன்' இராமன் மட்டுமல்லன்; கதை சொன்ன கம்பன் மட்டுமல்லன்; கம்பன் புகழுக்குக் காரணமாய, கன்னித்தமிழுக்கும் புகழ் சேர்த்த கம்பன் அடிப் பொடி சா.கணேசனும்தான்.

(அந்த மனிதர் இப்போது எதிரில் இருந்தால், 'நான்சென்ஸ்' என்று கோபக்குரல் கொடுப்பாரென அவரை அறிந்தவர் அறிவர்.)

இங்கே கன்னித்தமிழ் என்பதை மானுட அளவுகோல் கொண்டு அளப்பது மதியீனம்.

காசிஆனந்தன் போல,

"முந்திப்பிறந்தவள் செந்தமிழ் ஆயினும்
  மூப்பு வரவில்லையே - மணச்
சந்தனக் காட்டுப் பொதிகை மகளுக்குச்
  சாயல் கெடவில்லையே"

என்று கவிதைக் கண் கொண்டு பார்க்க வேண்டும்.

அது முடியாதவர்களுக்குக் காட்டத்தான் இக் கணேசன், தமிழன்னைக்குக் கோயில் எழுப்பினார்.

அது கல்லென்றால், கல்தான்; சிலையென்றால் சிலைதான்; தமிழ் என்றால் தமிழ்தான்; இவையெல்லாமும்தான் என்றால் எல்லாமும்தான்; இல்லையென்றாலும் இல்லைதான். 'ஆமே என்னின் ஆமே ஆம்...' என்று நினைவில் படரும் கம்பனின்

வரிகளைத் தொடர்ந்து கம்பன் அடிப்பொடியும் வந்துநிற்கிறார் பாருங்கள்!

அதுதான், அந்தக் கணத்து உணர்வுதான், நிஜம்! அதுவே நிரந்தரம்! யுகம் யுகமாய் விரியும் காலம் அனைத்தும் அந்தக் கணத்துள் அடக்கம்.

'சக்கரம் எடுப்பது ஓர் கணம்' என்கிறாரே பாரதி. அது 'எக்கணம்? என வினா எழுப்பித் துயருறும் சமூக அக்கறை உள்ளவர்களை யெல்லாம் நோக்கி 'இக்கணம் இக்கணம்' என்று காட்டவரும் தேவகணம்; அது அசுரகணமாய் ஆகிவிடக் கூடாது என்று எழுதுகோல் ஏந்தியவர்களும், எந்திராயுதங்கள் சுமந்தவர்களும், மந்திரம் ஒத்த சொல்லாயுதம் தாங்கியவர்களும் வளைய வந்த காலத்தில், வந்து பிறந்து வாழ்ந்து நிறைந்த கணங்களில் நிரம்பியது கணேசரின் வாழ்க்கை.

அந்தப் பெயரிலும் கூட ஒரு பொருத்தம் இருக்கிறது!

சங்கரன் மகனும் சாமிநாதன் மகனும்

ஐந்துகரத்தினை உடையவன் கணேசன்; அவன் வணிககுல மக்களின் முதல் தெய்வம்; சா.கணேசனுக்கும் அவனே முதற் பொருள். அவனுக்கு உள்ள ஐந்துகரங்களையும் தனக்கென்று ஆக்கிப் பணிசெய்தவர் இந்தக் கணேசன்.

முதற்கரம் நாட்டுவிடுதலையில் நாட்டம் கொண்டு உழைத்த திருக்கரம்.

இன்னொருகரம் ஆன்மிகத்திற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு உழைத்த அருட்கரம்.

மூன்றாம்கரம், கலைகளுக்கென்று முன்னின்று உழைத்த பெருங்கரம்.

நான்காம்கரம், தன் தந்தத்தையே ஒடித்து எழுதுகோல் ஆக்கிய தன்மை ஒத்து, எழுதுகோல் ஏந்திய இலக்கியத்திருக்கரம்.

ஐந்தாம்கரம், ஆனைமுகத்தனின் அடையாளமாகத் திகழும் தும்பிக்கை ஒத்த கணேசனின் நம்பிக்கையாய் நீண்ட திருக்கரம்; அது கம்பன் பணிக்கென்றே தன்னை ஆளாக்கிய தமிழ்க்கரம்; தனிக்கரம்.

வியப்பாக இல்லை!

இதில் எந்தக்கரம் சும்மா இருந்தது? இருந்தாலும் பணி செய்யும் இன்னொரு கரத்திற்கு ஒத்தாசையாகத்தானே இருந்து உதவியது.

ஆயிரங்கரங்கள் விரித்து உலகை ஆளும் சூரியக்குலத்துத் தோன்றிய இராமனை அளந்து காட்டிய கம்பனுக்கும் இரண்டு கரந்தானே இருந்திருக்கும்.

அவன் கரத்து ஏடாகவும், எழுத்தாணியாகவும் ஆக முடியா விடினும் பரவாயில்லை,

"எட்டுவகை மெய்ப்பாடும் எண்ணூறாம் உளப்பாடும்
சொட்டுபெருங் காப்பியத்தைச் சுவைத்தமிழில் உபகரித்த
பட்டறிவுப் பெட்டகமாம் பாரளந்த கம்பன்அவன்
சுட்டுவிரல் தொட்டருளும் சுண்ணாம்பாய் ஆகேனோ?"

என்று ஆழ்வார் மரபில், அடியார்க்கும் அடியாராய், அவர்தாளில் ஒட்டியிருக்கும் ஒரு சிறுதுகளின் குறும்பொடிக்கும் அடிப் பொடியாய்த் தன்னை ஆக்கிக் கொண்ட தகைமையை என்ன சொல்லுவது?

முன்னை வழிவந்த தவவலியும், முயன்றுடைய பெருந் தவமும், தன்னொத்தார் இனஞ்சேர்ந்து தாங்கிவந்த பெரு நெறியும், என்உடைமை என்று ஏற்றுக் கொள்ளாமல், தனதுடைமை அத்தனையும் தமிழ்உடைமை ஆக்கிவைத்த, கணேசன் இவன் பெருமை, கம்பன் புகழ்பாடும் செந்நாப்புலவர் சிந்துதமிழ்ச் சொற்கள் இங்கே உள்ள காலமெலாம் உயர்ந்தோங்கி நின்றிடுமே!

ஏடுதேடு காதலர் உ.வே.சா. அவர்களுக்கு, பாரதி பாடியது போல்,

"பொதியமலைப் பிறந்த மொழி வாழ்வறியும்
காலமெலாம் புலவோர் வாயில்
துதியறிவாய்,அவர்நெஞ்சின் வாழ்த்தறிவாய்,
இறப்பின்றித் துலங்கு வாயே"

என்று இவரையும் வாழ்த்தக் கம்பன் அன்பர்கள் கடமைப் பட்டுள்ளனர் என்பதே மெய்!

"இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்;
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்;
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்;
ஆல யம்பதி னாயிரம் நாட்டல்;
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்;
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்"

என்று பாரதி பட்டியலிட்டுக் காட்டிய தருமங்களையெல்லாம் கடைப்பிடித்தொழுகிய நகரத்தார்பெருமரபில், வந்து பிறந்தவர்; கடைக்கோடித் தமிழனும் இல்லையில்லை, கடைக்கோடி மனிதனும், கல்வி அறிவுபெற, கல்வியிற்சிறந்த கம்பனின் தமிழைச் செவிநுகர் கனிகளாய் ஆக்கிச் சேர்த்த செம்மல்!

காற்றோடு போகாமல் காலத்திற்கும் நிலைக்க, களம் கண்டு ஆய்வுத் தலைப்புகளை அறிஞர்களுக்கு வாரி வழங்கி எழுதுவித்த வள்ளல்!

சாதி, சமய, இன, தேச எல்லைகள் கடந்து எவர்க்கும் பொதுவாய்க் கம்பனை முன்னிறுத்திக் கன்னித்தமிழைச் சொந்தம் கொள்ள வைத்த சுறுசுறுப்புத் தேனீ!

காலத்தின் சாட்சியமாய்க் கல்லும் ஓலையும் சொல்லியதில் இருந்து வரலாற்றைச் சுவீகரித்துத் தன்காலத் தமிழில் தந்த நேர்த்தியாளர்; பின்னும் மானுடத்தைப் புகழில் ஏற்றும் பன்னரிய பல பல துறைகளில் வருவோரை இனங்கண்டு வரவேற்று எடுத்து வளர்த்து முன்னேகச் செய்த பெற்றியாளர்!

குறையொன்றும் இல்லா நிறைவாழ்வு அவர் வாழ்வு; அதுபோல் வாழும் வழிசொன்ன பெருவாழ்வு.

கணேசன் எழுதிய கவிவாக்குமூலம்

வாழும் ஒவ்வொரு கணத்தையும் பொருள் பொதிந்ததாய் ஆக்கத் துடித்த பாரதி, அது முடியாமல் போன தருணத்தில் அலறினார், 'முடம்படு தினங்காள்' என்று.

"வருடம் பலவினும்,
ஓர்நாட் போலமற் றோர்நாள் தோன்றாது

பலவித வண்ணம் வீட்டிடைப் பரவ
நடத்திடுஞ் சக்தி நிலையமே"

என்று கவிதையை மனைத்தலைவியெனக் கண்டு சரண் புகுந்தாரே பாரதி, அதுபோல், கம்பனைச் சரண்புகுந்தவர் கணேசன்.

"முன்னை மொழியாவுக்கும் மூத்த தமிழ்க்கிழவி
கன்னிநிலை மாறாக் கவின்குமரி- இன்னுந்தான்
என்னையிவள் காலமென யாரும் கணிக்கவொணா
அன்னவள்தான் சென்னிக்கு அணி"

என்று பணிந்து,

"கம்பனுடன் வள்ளுவனைக் காசில்மணி வாசகனை
நம்பிநிதம் கற்றுயர்வோம் நாம்"

என்று நெஞ்சுக்குச் சொல்லி,

"கன்னித்தமிழே என் மொழிஆம்
கம்பன் அறமே என்வழிஆம்
என்ன எண்ணி எப்பொழுதும்
இறுமாந்து இருப்பேன் என்றாலும்
மன்னும் மொழிகள் பலவுக்கும்
மாளாப் புலவர் பலருக்கும்
பின்னும் என்தன் நெஞ்சகத்தில்
பேதம் இல்லா மதிப்பு இருக்கும்"

என்று காலத்தின் முன்னால் கவிதைமொழியில் வாக்குமூலம் அளித்த கம்பன் அடிப்பொடியைவிட, நம் காலத்தின் சாட்சியாய் வேறு எவர் இருக்க முடியும்?

"பாரதம் தன்னை விநாயகர் அன்று
பக்குவமாக எழுதித்தந்தார் எனில்
பா ரதக் கம்பனின் பேரறிவை இங்கு
பண்புடன் தந்தவர் சா.கணேசன்
ஒற்றைக் கொம்பினால் பாரதத்தை அன்று
உருவாக்கித் தந்தவர் அக்கணேசன்
ஒற்றை மனிதராய் கம்பன் புகழ்தன்னை
உயர்த்தியே வாழ்கின்றார் சா.கணேசன்"

என்று பாடுகிறார் நெல்லைக் கண்ணன். (கம்பன் அடிப்பொடி கலைக்களஞ்சியம், ப.391)

உண்மைதானே!

மூலமுதல்வனாம் ஐங்கரத்தான் தாள் போற்றி, நம் கால முதல்வனாம் கணேசனின் பணிகளை ஐந்துகரம் ஒத்த ஐந்து இயல்களில் ஆராயப் புகலாம்.

□



1. அரசியல் உலகில் அதிசய மனிதர்

"காலப்பெருங்கடலில் - நாளும்
கரைந்த தோற்றமெலாம்
பாலப் பருவமுதல் - எங்கள்
பாரதத்தாய் அறிவாள்;
நாலு திசைமுழுதும் - கொள்கை
நாற்பதி னாயிரத்தார்
ஆலின் கிளையவைகள் - என்னில்
ஆக்கும் மரம் இவள்தான்"

என்பார் பாரதிதாசன்.

பாரதம் என்கிற பரந்த ஆலமரத்தின் வேர்தாங்கும் விழுதுகளாக இறங்கிய மனிதர்களில் இவரும் ஒருவர் என்று காலம் காட்டும் கார்மேனியன்தான் இந்தக் கணேசன்.

கணேசச் சித்திரம்

"தொட்டுப் பொட்டுப் போடலாம் போலிருந்தது அவருடைய ஸ்யாமள வண்ணம்; தும்பைப்பூப் போன்ற

வெண்ணிறக்கதர் வேட்டி; மடிப்புக் கலையாமல் தோள்பட்டையிலிருந்து தொங்கிக்கொண்டிருந்த பழுப்பு வண்ண மேல் வேட்டி; தங்கச்சட்டம் போட்ட மூக்குக் கண்ணாடி; முகில் கூட்டத்தைக் கிழித்துக் கொண்டு வந்து நிற்கும் முழுநிலவை யொத்த சந்தனப் பொட்டு; சட்டை போட்டு மறைக்க முடியாத ஓர் எளிமை; எளிமைக்குள் ளிருந்து எட்டிப்பார்க்கும் அசைக்க முடியாத ஓர் உறுதி; முகத்திலிருந்து வீசும் களங்கமற்ற, ஆனால், கவர்ச்சி நிறைந்த ஓர் ஒளி; கிட்ட நெருங்கிப் பழக அழைக்கும் ஒரு தோழமை. ஆனாலும், அந்தத் தோழமைக்குள்ளிருந்து திடீர் திடீர் எனக் கொப்புளிக்கும் ஒரு பயங்கரக் கண்டிப்பு" (கம்பன் அடிப்பொடி கலைக்களஞ்சியம்,ப.65)

இத்தனையும் ஒருங்கிணைந்த மொத்தத் தோற்றத்தின் பெயர் சா.கணேசன். இந்த வருணனையை நமக்கு வழங்கிக் கம்பன் அடிப்பொடியைச் சித்திரப்படுத்தியவர், நீதிபதி எஸ்.மகராஜன்.

பாரதத்தாயின் புதல்வர்

காரைக்குடி சாமிநாதன் - நாச்சம்மை தம்பதியர் பெருந் தவத்தால் வந்துதித்த, பிள்ளை கணேசன், பாரதத்தாயின் அருந் தவப்புதல்வராய் ஆனது எப்படி? சற்றே வரலாறு தெரிந்து கொள்ள, அவரின் சகவாழ்வியல் பயணியாம் இன்னொரு நீதியரசரான மு.மு.இஸ்மாயீல் அவர்களின் மேற்கோளைத் துணைக்கொள்ளலாம்.

"அடிமைப்பட்டு நலிந்திருக்கும் ஒரு நாட்டின் மக்களை உரிமை எழுச்சியும், விடுதலை வேட்கையும் உடையவர்களாக ஆக்குவதற்குப் பல்துறை முயற்சிகள் வேண்டும். ஒரு நாடு இன்னொரு நாட்டின்மீது ஆதிக்கம் செலுத்துவதென்றால், ஏதோ இந்த ஆதிக்கம் அரசியல் அளவிலோ, நிர்வாகத்துறையிலோ மாத்திரம் நின்றுவிடும் என்று சொல்லுவதற்கில்லை. இன்னொரு நாட்டினர்க்கு அடிமையாக இருக்கிறோம் என்ற உணர்வே இல்லாமல், மக்கள் வாழ்வார்களேயானால், அவர்களுடைய கலை, பண்பாடு, இலக்கியம், நாகரிகம் அனைத்தும் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்துவிடும். காரணம் என்னவெனில்,

அவற்றில் இவர்களுக்கு ஒரு பிடிப்பும், அவை பற்றிய ஒரு பெருமையும் இருக்குமாயின், அவை மேலும், வளர்ச்சியுற அந்த வளர்ச்சியின் காரணமாக அந்நிய ஆதிக்கமே அசைவுற்று இறுதியில் அழிந்துவிடும்.

இதன் காரணமாகவே, ஆதிக்கம் செலுத்தும் அந்நியர்கள், அரசியல் அதிகாரத்தோடு தங்களுடைய நாகரிகத்தையும், கலையையும் பண்பாட்டையும் படிப்படியாக இந்த மக்களிடையே பரப்பி அவற்றைப் பின்பற்றுவதில் கிடைக்கும் அரசியல் ஆதாயத்தின் காரணமாக அவற்றையே உயர்வானவையாகவும், பெருமையுடையதாகவும் கொண்டு தங்களுடைய சொந்த பண்பாடு, கலை, நாகரிகம் ஆகியவற்றை அடியோடு மறந்துவிடுபவர்களாக ஆக்கிவிடுகிறார்கள்.

இந்தப் பின்னணியில்தான் அரசியல் அடிமைப் பட்டிருக்கும் மக்களிடையே சுதந்திரஉணர்வை வளர்க்க முற்படும்பொழுது அந்த மக்களுடைய பண்டைய கலை, நாகரிகம், பண்பாடு, இலக்கியம் ஆகியவற்றிற்குப் புத்துயிர் கொடுத்து அவற்றை மறுமலர்ச்சி பெறச் செய்து, அவற்றைப் பற்றி மக்கள் புதியதொரு பெருமை உணர்வைப் பெறச் செய்வது அவசியமாகிறது.

இந்த அவசியத்தை உணர்ந்திருந்ததினால்தான், ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டுக் கிடந்த இந்தியர்களிடையே சுதந்திர உணர்வை வளர்க்க முற்பட்ட அரசியல் தலைவர்களும், தேசபக்தர்களும், சமூக சீர்திருத்தவாதிகளும், இந்தியநாட்டின் மொழிகளில் இருந்த பழம்பெரும் படைப்புகளை மக்களுக்கு அறிமுகப்படுத்தி அதற்காகப் பாமர மக்களும் புரிந்துகொள்ளக் கூடியவகையில் எளிய நடையில் எழுதவும், பேசவும், தொடங்கியதோடு, தற்கால அறிவு வளர்ச்சிக்கேற்பப் புதிய, புதிய நூல்களை எழுதவும், பழம்பெரும் இலக்கியங்களைப் படைத்த கவிஞர்கள், ஞானிகள் ஆகியவர்களுடைய பரந்த, விரிந்த அறிவை விளக்கவும் தலைப்பட்டனர்.

ஆங்கிலேய அதிகார வர்க்கத்தை, எதிர்த்து இந்திய மக்களைச் சுதந்திரப்போராட்டத்தில் இயங்கும்படி செய்த

முயற்சியின்போது இந்தியாவில் பலமொழிகளும்-குறிப்பாக, வங்காளமும், தமிழும் புதியதொரு முனைப்பைப் பெற்றன." (மேலது, ப.72-73)

தேசபக்தியோடு தெய்வபக்தியைக் கலந்து ஊட்டிய சுவாமி விவேகானந்தரால் பெரிதும் ஈர்க்கப்பெற்ற பலரும் களமிறங்கினர். திலகர் தலைமையில், புதிய உத்வேகத்தோடு, வங்கம் தங்க சிங்கம் அரவிந்தர், தமிழகத்தளபதி வ.உ.சி, விடுதலைக்குயில் சுப்பிரமணியசிவா, வீரவிளக்கு வ.வே.சு.ஐயர், இவர்களோடு இணைந்தும் இயக்கியும் போராடிய மகாகவி பாரதி என்று ஒரு பட்டாளமே கிளர்ந்தெழுந்தது.

எழுத்து, பேச்சு, இயக்கம் என்ற முப்பரிமாணங்களில் தம்பணிகளை அமைத்துக்கொண்ட இவ்விளைஞர்கள் இலக்கியங்களிலும் தம்மைப் பிணைத்துக்கொண்டார்கள். ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் உந்தாற்றலை அவர்கள் இந்திய இலக்கியங்களில் இருந்து பெற்றார்கள்.

பழைய புராணங்கள், தொன்மக்கதைகள் சமகாலப் போராட்டத்தின் குறியீடுகளாயின. பாஞ்சாலி, பாரதமாதா ஆனாள்; சிறையிருந்த வீரர்களுக்குச் சீதை முன்னுதாரணம் ஆயினாள். வில்லேந்திய இராமனைப்போலத் தகுதிவாய்ந்த பலர் சொல்லேந்திப் பத்திரிகைகளில் எழுதியும், மேடைகளில் முழங்கியும் மக்களிடையே எழுச்சியுண்டாக்கினார்கள். இது பொறாத ஆங்கில அரசு தலைவர்களை ஒடுக்கச் சிறையில் அடைத்தது; நாடு கடத்தியது; ஆயுள் தண்டனை விதித்தது. அத்தனையும் சகித்துக்கொண்டு போராடிய அவ்வீரர்களின் எழுச்சி மக்களிடையே விடுதலை உணர்வு பெருக்கெடுக்கக் காரணமானது. இது நீண்டு காந்தியுகத்திலும் கனன்று கொண்டிருந்தது.

இந்தப் பின்னணியில் காரைக்குடியும் இருந்தது.

மகாகவி பாரதி, காரைக்குடிக்கும் கானாடுகாத்தானுக்கும் வரவழைக்கப்பெற்றார். தொடர்ந்து சிவா, வ.வே.சு.ஐயர், வ.உ.சி. பின்னர் அண்ணல் காந்தி எனத் தலைவர்கள் அனைவரும் முற்றுகையிட்ட இடம் செட்டிநாடு.

பெற்ற தாயினும் பிறந்த பொன்னாட்டைக் காக்கும் எண்ணம் கடுகி வளர்ந்தது. இந்த ஈர்ப்பு கணேசன் என்ற இளைஞனையும் களத்தில் இறக்கியது.

காந்தியத் தொண்டர் கணேசன்

1908இல் பிறந்த கணேசன், தமது 18ஆவது வயதில், 1927இல் காங்கிரஸ் பேரியக்கத்தில் தம்மை இணைத்துக்கொண்டார். காந்தியடிகளின் காரைக்குடி வருகையின்போது, அவருக்குப் பணிவிடை செய்யும் தொண்டர்படைத் தலைமையேற்றார். 1935இல் தந்தை மறைந்தபின் அவர் செய்து வந்த தொழிலைக் கவனிக்கப் பர்மா செல்ல வேண்டிய நிர்ப்பந்தம், கணேசனார்க்கு நேர்ந்தது. அதுசமயம், காரைக்குடியில் 36ஆவது காங்கிரஸ் மாநாடு நிகழஇருந்தமையால், தம்பணி தவிர்த்துத் தாய் நாட்டுக்கு உழைக்கும் நோக்கில், அம்மாநாட்டுச் செயலராக இருந்து அருந்தொண்டாற்றினார். அதன்காரணமாய் ஏற்பட்ட பெருநஷ்டத்தை அவர் பொருட்படுத்தவே இல்லை.

'தேசத்தின் சொத்து' எனக் காந்தியடிகளால் அறிவிக்கப் பெற்ற ஜீவா அமைத்த சிறாவயல் ஆசிரமத்திற்குக் காந்தியடிகளை அழைத்துக் கொண்டுபோன காங்கிரஸ் தியாகிதான் கணேசன்.

காந்தியடிகளும் ஜீவாவும் சந்தித்துக்கொள்ளக் காரண மானவர் சா.க. ஆவார். காந்தியடிகள், தமது அரிஜன் இதழில், 'விடுதலை பெறும் இந்தியாவில் வருணாசிரமக் கோட்பாடுகள் இருக்கும்' என்று எழுதியிருந்ததுதொடர்பாக, அதனை மறுத்துத் தோழர் ஜீவா, காந்தியடிகளுக்குக் கடிதம் ஒன்று அனுப்பினார். அதனைப் பெற்ற காந்தியடிகள், 'இரவு 9.30 மணிக்குமேல் தங்கள் கடிதத்தைப் படிக்கத் தொடங்கினேன். அதிகாலை 3.30 மணி வரை அது பற்றியே சிந்தனை செய்தேன். இறுதியில் வெற்றி உங்களுக்குத்தான். விரைவிலேயே தமிழகம் வருவேன். நாம் விரைவில் சந்திப்போம்" என்று பதில் எழுதினார். (பொன்னீலன், ஜீவா என்றொரு மானுடன், ப.26)

பின்னர் 1927இல் இலங்கைக்குப் போகும் வழியில் காரைக்குடிக்கு வந்த காந்தியடிகள், மெய்யப்பச் செட்டியார் இல்லத்தில் தங்கியிருக்கிறார்.

"அவருடன் சா.கணேசன், ராய.சொக்கலிங்கம் இருவரும் இருக்கிறார்கள். வழக்கம்போல, காலை நேரத்தில் சவரம் செய்துகொண்டிருந்தபோது, காந்தி சா.கணேசனையும், ராய.சொக்கலிங்கத்தையும் அழைத்து, இங்கே ஜீவானந்தம் என்று ஒரு அறிஞர் இருக்கிறாரே தெரியுமா? என்கிறார். சா.கணேசன் முந்திக்கொண்டு, 'எனக்கு நெருங்கிய நண்பர் அவர். இப்போதே அழைத்துக் கொண்டு வருகிறேன்' என்றார். அதற்குக் காந்தி, "எங்கே இருக்கிறார் என்றுதான் கேட்டேனே தவிர, அவரை அழைத்துக் கொண்டுவரச் சொல்லவில்லை. அவரைச் சென்று பார்க்க ஏற்பாடு செய்யுங்கள்" என்றார். ஏற்பாடுகள் செய்யப்பட்ட சற்று நேரத்திற்கெல்லாம் காந்தி நண்பர்களோடு சிராவயலுக்குப்போனார்"

என்பது பொன்னீலன் தரும் செய்தி. (மேலது, ப.29)

எதிர்த்தவரே பாராட்டினார்

1935ல் தமிழக வரலாற்றின் சிறப்புமிக்க 37ஆவது சென்னை மாநில அரசியல் மாநாடு காரைக்குடியில் நடந்தது. அந்த மாநாட்டின் வரவேற்புக்குழுச் செயலாளராக, சா.க. பணியாற்றினார். சா.க.வின் அரசியல் வரலாற்றில் இது ஒரு முக்கிய நிகழ்வு. காரணம், பின்னர் சா.க. ஏற்றுப்போற்றிய இராஜாஜி அவர்களுடன் எதிர்நின்று தம் கருத்தை எடுத்து மொழிந்தது இந்நிகழ்வில்தான்.

'தூய்மையும் துணிவும் அரசியலுக்கு இன்றியமையாதன' என்பதை, எதிர்ப்பையும் மீறி எடுத்துக் கூறும் வல்லமையை சா.க. பெற்றிருந்தார் என்பதற்கு அவர்தம் வாக்குமூலத்தையே பின்வருமாறு சான்றாகக் கொள்ளலாம்.

"அந்த மாநாட்டில், கட்சி நடைமுறைகளில் வேறுபட்டிருந்த திரு.இராஜாஜி அவர்கள், திரு. எஸ்.சீனிவாச ஐயங்கார் அவர்கள், திரு. கே.பாஷ்யம் அவர்கள் போன்ற தலைவர்களும் கலந்துகொண்டனர். அம்மாநாட்டில், 1935ஆம் ஆண்டு மாநில சுயாட்சி சட்டத்தின்படி, காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டி இடுபவர்களுக்குரிய

தகுதி குறித்துத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. "காங்கிரஸ் கட்சியின் சார்பில், தேர்தலில் போட்டி யிடுபவர்கள் ஆறுமாதங்களுக்கு முன்பிருந்தே காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராக இருக்கவேண்டும். ஆறு மாதங்களுக்கு முன்பிருந்தே கதர் அணிபவராக இருக்க வேண்டும். வெள்ளையர் கொடுத்த பதவிகளை வைத்துக் கொள்ளாதவர்களாக இருக்க வேண்டும்" என்ற தீர்மான வாசகங்கள் அடங்கிய தீர்மானத்தை நானும், பி.இராம மூர்த்தி அவர்களும் கொண்டுவந்தோம். திரு. க.சந்தானம் அவர்கள் தீர்மானத்திற்கு வடிவம் தந்தார். கமலாதேவி சட்டோபாத்தியாயா, சீனிவாச அய்யங்கார் ஆகிய இருவரும் தீர்மானத்திற்குத் திருத்தம் தந்தனர். தீர்மானத்தை, திரு.இராஜாஜி அவர்களும், திரு. சத்தியமூர்த்தி அவர்களும் எதிர்த்தனர். முதலியார் சகோதரர்கள் போன்ற திறமையான நிர்வாகிகளை இழந்து விடக்கூடாது என்பதற்காகவே எதிர்த்தனர். இறுதியில் தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது. தீர்மானத் திற்கு ஆதரவாக 429 வாக்குகளும், எதிராக, 47 வாக்குகளும் கிடைத்தன. முடிவில், தீர்மானத்தை எதிர்த்த இராஜாஜி அவர்களே, தீர்மானத்தின் வெற்றியைப் பாராட்டிப் பேசினார்". (தீபம் நேர்காணல், பக்.431-432)

'நடையில்' நின்றுயர் நாயகனாக

பின்னர், 1936 முதல் தீவிர தேசியப் போராட்டத்தில் பங்கேற்றுவந்த சா.கணேசன், 1941இல் காந்தியடிகள் தொடங்கிய தனிநபர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுத் தன்னந் தனியராகப் பாதயாத்திரையாக, தில்லிக்குக் கிளம்பினார். வழியில் அடர்ந்த காடுகள், கரடுமுரடான பாதை, மிருகபயம், சோறு உறக்கமின்றி ஏற்பட்ட இடர்கள், இப்படியாகச் சொல்லொணாப் பலவித இன்னல்களுடன், 66 நாட்களில் 586 மைல்களைக் கடந்த அவர், ஆங்கிலக் காவலர்களால் கைது செய்யப்பட்டு, உத்தரப்பிரதேச அலிப்புரத்தில் சிறையில் அடைக்கப்பட்டார். நான்கு மாதச் சிறைத்தண்டனை அவருக்குப் பரிசாகக் கிடைத்தது.

நாட்டுநலன் கருதி, வடக்கிருந்து கிளம்பி, கம்ப'இராமன்' தெற்கில் வந்தது 'காப்பியம்' என்றால், அதேநோக்கில்,

தெற்கிலிருந்து கிளம்பி, வடக்குநோக்கி, இந்தக் கம்பன் அடிப்பொடி கிளம்பியது 'காலத்தின் வரலாறு'. இரண்டுக்கும் காரணம், 'இராமராஜ்யம்' தான்.

காரைக்குடியில் நடந்த புரட்சி

1942இல் காந்தியடிகள் எழுப்பிய, 'வெள்ளையனே வெளியேறு' முழக்கம், இந்தியாவின் ஒற்றுமைக்குரலாக ஓங்கி ஒலித்தது. அது காரைக்குடியிலும் கனமாய் எதிரொலித்தது.

அதுதொடங்கி, ஒவ்வொரு நாள் மாலையிலும், காரைக்குடி காந்தி சதுக்கத்தில் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பெற்றது. வெள்ளையராட்சிக்கு எதிராகவும், இந்திய விடுதலைக்கு ஆதரவாகவும் நடத்தப்பெற்ற அக்கூட்டத்தில், நாள்தோறும் சா.கணேசன் முழங்கினார். ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்துகேட்டனர். மூன்று நாட்கள் முறையாகச் சென்று கொண்டிருந்த இந்நிகழ்வில், நான்காம் நாள் ஒரு திருப்பம் ஏற்பட்டது. அதைத்தொடர்ந்து மக்கள் எழுச்சிபெற்றுப் போராடிய நிகழ்வை, சா.கணேசனே பின்வருமாறு எடுத்துச் சொல்கிறார்:

> "நான்காம் நாள் மாவட்டப்போலீஸ் அதிகாரியாக இருந்த திரு. தேவசகாயம் அரசாங்க எதிரிகள் சட்டப்படி உடனே என்னைக் கைது செய்ய முடிவு செய்தார். ஆனால், அப்பொழுது தேவகோட்டையில் உதவி ஆட்சித் தலைவராகப் பணியாற்றியவரும், தற்பொழுது 'யுனெஸ்கோ' பணிபுரிபவருமான திரு. நரசிம்மன் அவர்கள் என்னைக் கைதுசெய்ய விரும்பவில்லை. ஐந்தாம் நாள் தனி உத்தரவின்பேரில் பொதுக்கூட்டத்தில் பேசும்பொழுது, என்னைக் கைதுசெய்யப் போவதாகப் பொதுமக்கள் அறிந்து திரளாகக் கூடி இருந்தனர். காந்தி சதுக்கம் எட்டுத்தெருக்கள் இணைகின்ற இடம். கூடி இருந்த மக்களைத் திரு.தேவசகாயம் கலைந்துபோகச் சொல்லி மிரட்டியபோதிலும், அவர்கள் கலையவில்லை. தேவசகாயம் 100 போலீஸ்காரர்களைக் கொண்டு தடியடிப்பிரயோகம் செய்ததோடு நில்லாது, துப்பாக்கிப் பிரயோகம் வேறு செய்தார். மக்கள் கலையாது



போலீசாரோடு சண்டை யிட்டு விரட்டியடித்தனர்." (தீபம் நேர்காணல், ப.432)

காந்தியநெறியினின்றும் விலகாமல், காரைக்குடிப் பெருமையும் குறையாமல், சர்வாதிகாரத்தை எதிர்த்துக் காரைக்குடி மக்கள் களமிறங்கிப் போராடிய வரலாறு எத்தகு மகத்துவம் மிக்கதாக இருந்திருக்க வேண்டும்.

இந்த நிலையில்தான் தலைமறைவு வாழ்க்கையை, ஒரு தவவாழ்க்கையாக மேற்கொள்ளத் தொடங்கினார் சா.க. அந்தப் பின்புலத்தையும் அவரே விவரிக்கக் கேட்கலாம்.

தலைமறைவாக இருந்து நடத்திய தவம்

"கலவரம் நிறைந்த சூழ்நிலையில் காரைக்குடியிலிருந்து சென்னை வந்தேன். சென்னையில் திரு. டி.எஸ். சொக்கலிங்கம் அவர்கள் இல்லத்தில் தங்கினேன். திருவாளர்கள். பி.ஸ்ரீ., வ.ரா., இருவரும் அங்கு இருந்தனர். எங்களுடைய அரசியல் நடவடிக்கைகளின் நிகழிடமாக இருந்தது, மாம்பலம் இராமசாமித் தெருவிலுள்ள 'டைப் இன்ஸ்டிடியூட்' - என்மீது தேவகோட்டை நீதிமன்ற வழக்குத் தொடரப்பட்டிருந்தது. நாடெங்கிலும் சுதந்திரப் போராட்ட வீரர்கள்மீது வழக்குத் தொடரப்பட்டிருந் ததால், பலரும் சென்னையில் தலைமறைவாக வாழவேண்டி யிருந்தது. பகலில் தலைமறைவாகி, இரவில் மட்டும் இயக்க வேலைகளில் ஈடுபட்டதால், எங்களை 'நிசாசரர்கள்' என்று நாங்களே அழைத்துக்கொள்வோம். தலைமறைவாக வாழ்ந்த விடுதலை வீரர்களுக்கு திரு. கோயங்கா அவர்கள் செய்த உதவிகளை மறக்க முடியாது. என்னுடன் இருந்தவர்களில், திரு. ஏ.என்.சிவராமன், திரு. ஏ.ஜி. வெங்கடாச்சாரி, திரு. எஸ்.ஏ.ரஹீம் ஆகிய மூவரையும் குறிப்பிட்டுச் சொல்லலாம். தலைமறைவுக் காலத்தில், 'நாட்டுநடப்பு' என்ற வாரப் பத்திரிகை நடத்தினோம். ஆங்கில ஆட்சியின்

கொடுமைகளை விளக்கி, அந்தப் பத்திரிகை வெளிவந்தது. பம்பாயிலுள்ள எலிபெண்டாக் குகையில் இருந்து ஒலிபரப்பு நடத்தினோம். வானொலிநிலையங்களில் பணியாற்றிய தேசப்பற்று மிக்கவர்கள் ஒலிபரப்புக் கருவிகள் தந்து உதவினர். தலைமறைவாக இருந்தபொழுது, காந்தியடிகள் சிறையிலிருந்தார். திரு. காகலேல்கர் அவர்கள் இந்திப் பிரச்சாரச் சபைச் செயலாளர் எம்.சத்தியநாராயணா அவர்கள்மூலம் எங்களுக்குச் செய்தி அனுப்பிக் கொண்டிருந்தார். இந்த நாட்களில், தேவகோட்டை நீதிமன்றத்தைத் தீயிட்டுக் கொளுத்தியதாகவும், திருவாடானைச் சிறைச்சாலையை உடைத்ததாகவும் என்மீதும், இன்னும் சில தேசியத் தோழர்கள்மீதும் வழக்குத் தொடரப்பட்டது. போலீசார் என் சொத்துக்களைப் பறிமுதல் செய்தனர். இராஜாஜி அவர்களின் கட்டளைப்படி நாங்கள் சரணடைந்தோம்" (மேலது, பக்.432-433)

என்று தேசிய உணர்ச்சியும் வீரஉணர்ச்சியும் வெளிப்பட அவர் எடுத்துரைக்கும் நிகழ்வில் தலைமறைவு என்பது ஒரு பெயருக்குத்தான். மறைவாக வைத்திருக்கும் தேசபக்தியை மக்கள் மத்தியில் பொங்கிப் பரவ அவர்கள் எத்துணை பெரிய அரிய பணிகளை மேற்கொண்டிருந்திருக்கிறார்கள் என்பது புலனாகிறது. மேலும்,

"1942ஆம் ஆண்டுப்போராட்ட வழக்கில் எனக்கு இரண்டே முக்கால் ஆண்டுச் சிறைத்தண்டனை கிடைத்தது. அலிபுரம் சிறையில் செட்டிநாட்டைச் சார்ந்த ஆயிரம் விடுதலை வீரர்கள் இருந்தனர். இந்திய விடுதலைப் போராட்ட வழக்கில் எவருக்கும் அளிக்கப்படாத தண்டனை திருவாடானை வழக்கில் தொண்டர் முத்தையாவிற்கு அளிக்கப்பட்டது. அந்த வழக்கில் 180 ஆண்டு சிறைத்தண்டனை அளிக்கப்பட்டது... என்னோடு சிறையிலிருந்தவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள், திருவாளர்கள், எஸ்.பி.திருநாவுக்கரசு, டி.ஆர். அருணாசலம், ஆர்ச்.அருணாசலம், பூலாங்குறிச்சி சுப்பையாத்தேவர், அழகுத்தேவர் ஆகியோர்கள். பூலாங்குறிச்சியைச் சார்ந்த சுப்பையாத்தேவர் அவர்கள் தலைமறைவாக இருந்த பூலாங்

குறிச்சி மலையை அன்று வெள்ளையர்கள் பீரங்கியால் தாக்கித் தகர்த்தனர்" (மேலது, ப.433)

என்று அந்த உணர்ச்சிகரமான போராட்டச் செய்திகளைத் தன்னிடம் பேட்டி கண்ட, கவிஞர் சேவற்கொடியோனிடம், சா.க. விவரிக்கிறார்.

சட்டையைத் துறந்த சரித்திரப் பின்புலம்

அக்காலத்தில், விடுதலைப் போராட்டக்கூட்டங்கள் நடத்த ஆங்கிலேய அரசு தடை செய்திருந்தது,

> "கானாடுகாத்தானில் காந்தியடிகள் நுழையக்கூடாது என்று ஒரு தடை உத்தரவு. ஜவஹர் நடந்தே கானாடு காத்தானில் நுழைந்தார்." (ஆத்தங்குடி பெ.மு. சுப்பையா செட்டியார், கம்பன் அடிப்பொடி நினைவலைகள், கம்பன் கழகம், கரூர், ப.10)



அதுசமயம் கானாடுகாத்தானில் 1938இல் ஒரு கூட்டம் ஏற்பாடாகி இருந்தது. அதில், பங்கேற்பதற்காகத் தீரர் சத்தியமூர்த்தி, டாக்டர் சுப்பராயன், பாரிஸ்டர் ஜோசப், என்.கிருஷ்ணமூர்த்தி போன்ற பெருந்தலைவர்களுடன் சென்ற கணேசனைப் போலீசார் தடுத்தி நிறுத்தினர். மீறினால், சுட்டு விடுவதாக மிரட்டினர். அப்போது தன் சட்டையைக் கிழித்து நெஞ்சைத் திறந்துகாட்டி, 'சுடுங்கள்' என்று வீறு கொண்டெழுந்தார். அதுகண்டு செயலிழந்து நின்றனர் போலீசார். அன்றுமுதல் தம் வாழ்நாள் இறுதி வரை, அவர் சட்டை அணிவதையே நிறுத்தி விட்டார்.

"நாங்கள், டெல்லி, அலகபாத், காசி, சிம்லா,

ஹரித்துவார் என்று பல இடங்களிலும் குளிரில் அலைந்த போதும் அவர்கள் சட்டையணியவில்லை. 30 டிகிரி குளிரில் காலை 5 மணிக்குக் கங்கையில் நீராடி மேல் சட்டை அணியாது, எதையும் தாங்கும் உறுதியையும், உடலையும் அவர்கள் எங்களுக்கு 40 ஆண்டுகளுக்கு முன்னமேயே காட்டினார்கள்" (மேலது)

என்கிற ஆத்தங்குடி சுப்பையா அவர்கள், குறிப்பிடும் இன்னொரு செய்தியும் முக்கியமான ஒன்றாகும்:

"அலகாபாத்தில் பெரியர் "சாப்ரூ" அவர்களைப் பார்க்கச் சென்றிருந்தோம். அவர் மிகப்பெரிய வழக்கறிஞர். தேசபக்தர். நோய்வாய்ப்பட்டிருந்த அவர், திரு. சா.க. வந்திருப்பதை அறிந்து, படுக்கையுடன் தூக்கி வரச்செய்து, அளவிலா அன்புடன் பேசி ஜவஹர்லால் அவர்களிடம் வேண்டியவை சொல்லியிருப்பதாகக் கூறிய நிகழ்ச்சியை, 30, 35 வருடங்கள் கடந்துகூட இன்றும் என்னால் மறக்க இயலவில்லை." (மேலது)

ஓடும் ரயிலில் ஒரு போராட்டம்

மகாத்மா காந்தியடிகளைப் போன்று, நான்கு முழக்கதர் வேட்டியையும், மேலில் ஒரு துண்டையுமே அணிந்து வந்தவர் கணேசன். இந்தவரிசையில் இன்னும் ஒரு நிகழ்வும் இங்குக் குறிப்பிட வேண்டும்.

ஒருமுறை, பம்பாயிலிருந்து, நாமக்கல் கவிஞருடன், கணேசனும், அவரது உறவினர் ஆத்தங்குடி பெ.மு.சுப்பையா என்பவரும் சென்னைக்கு ரயிலில் வந்து கொண்டிருந்தபோது, உரத்தக்குரலில் பேசிக் கொண்டிருந்தனர். அதுபொறாத ஆங்கிலேயர் ஒருவர் இந்திய, ஆங்கிலேய ஏற்றத் தாழ்வுணர்ச்சியுடன் கண்டிக்கத் தொடங்கினார். அவரிடம் கணேசன், தம் சகோதரரின் காதுமந்தச் செய்தியைக் குறிப்பிட்டுச் சொல்லி விளக்கினார். எனினும் கேளாது கண்டிக்கத் தொடங்கினார், அவ் ஆங்கிலேயர். உடனே அவரை எதிர்த்து 'வந்தே மாதரம்' என்று கோஷமிட ஆரம்பித்துவிட்டார் கணேசன். நாமக்கல் கவிஞர், சுப்பையா ஆகியோருடன் அதனைக்கேட்ட ரயில் பயணிகள் அனைவரும் அவ்வாறே பதிலுக்கு முழக்கமிட்டனர். அதனால்,

அடுத்த நிறுத்தத்தில் அவ்ஆங்கிலேயர் பயணத்திற்கு இடைஞ்சல் செய்கின்றார் என்று கூறி இறக்கிவிட்டிருக்கின்றார்கள் எனில், அவரது துணிச்சல் எத்தகையது என்பது புரிபடும்.

இன்னல் வந்துற்றபோதும்...

"இன்னல்வந் துற்றிடும் போததற் கஞ்சோம்
ஏழைய ராகிஇனி மண்ணில் துஞ்சோம்
தன்னலம் பேணி இழிதொழில் புரியோம்
தாய்த்திரு நாடெனில் இனிக்கையை விரியோம்"

என்று பாடினார் பாரதியார். அவ்வழியே நாடினார் கணேசனார். 'சதையைத் துண்டு துண்டாக்கிடினும் தன் ஜீவன் ஓயாமல், இதயத்தினுள்ளே இலங்கு மகாசக்தியை' ஏத்தித் துணிந்து பணி செய்தார் சா.க.

'இதில் இவர் அடைந்த சிரமம், பெற்ற துன்பங்கள் கூறுவதற்கே அச்சப்படத்தக்கனவாகும். இற்றையத் தலை முறைக்கு இவை தெரியாத விஷயங்களாகும். மாறுவேடம் பூண்டு பல மாதங்கள், பல மாவட்டங்களைச் சுற்றிப் போராட்டத் தீ அணையாமல் உத்வேகமாக ஊக்குவித்த பெருமை இவருக்கு உண்டு. போலீஸார் வலைபோட்டுத் தான் அரித்தனர். ஆனால், பிடிபடவில்லை. அக் காலங்களில், பலமுறை பல இடங்களில் சந்தித்த எனக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்தார்கள். அக்காலங்களில் இவர் உண்மையில் ஊன் உறக்கமின்றி அடைந்த இன்னல்கள் எழுத்தில் அடங்கா. விவரித்து எழுதும் திறனும் எனக்கு இல்லை. தேடியலைந்தும், பற்பல முயற்சிகள் செய்தும், இவரைச் சிறைப்படுத்த இயலாத நிலை காரணமாகப் போலீஸாருக்கு, அதிலும் அன்றையக் கொடுங்கோலாட்சியின் போலீஸாருக்கு ஆத்திரம் ஏற்படத்தானே செய்யும். எனவே, இவரின் வீட்டில் அத்து மீறி நுழைந்து, அட்டகாசம் புரிய ஆரம்பித்தனர். பல அரிய விலை உயர்ந்த பொருள்கள், மேஜை, நாற்காலி, கட்டில்கள், சுவர்க் கண்ணாடிகள் முதலியன துவம்சம் ஆக்கப்பட்டன. பல ஆயிரம் மதிப்புள்ள சாமான்கள் குண்டர்களால் சூறையாடப்பட்டன. இவர்களுக்கு

ஏற்பட்ட நஷ்டம் எழுதுவதற்கே இயலாததொன்றாகும். இம்மாதிரி அட்டூழியங்கள் இப்பகுதியிலே எங்குமே யாருக்குமே ஏற்படவில்லை.

இருப்பினும், தொடர்ந்து மறைமுகமாகவே, இருந்து போராட்டத்தை மேலும் ஊக்குவித்தார். இறுதியாகப் பல மாதங்களுக்குப் பின்னர் சென்னையில் போலீஸ் கமிஷனரிடம் சரணடைந்தார். அப்போதும் அதிகார வர்க்கம் இவருக்குத் துன்பம் இழைக்கத் தவறவில்லை. பலவிதச் சிரமங்களை இழைத்த பின்னரே, தண்டனை கொடுத்து, அலிப்புரம் சிறைக்கு மீண்டும் அனுப்பினர். சுதந்தரத்திற்காக இவர் அடைந்த சிரமங்கள் கணக்கில் அடங்கா.' (கம்பன் அடிப்பொடி களஞ்சியம், பக்.86-67)

என்று கணேசனுடனான தமது போராட்டக்கால அனுபவங்களைப் பதிவுசெய்கின்றார், சக போராட்ட வீரர், டி..ஆர். அருணாசலம்.

'நான் இந்தியன்'

"ஆகஸ்ட் புரட்சிக்குப் பின்னர், குற்றவிசாரணை நடந்த போது, வழக்குமன்றத்தில், "உம் சாதி என்ன?" என்று கேட்டனர். அதற்கு, சாதிப்பெயரைச் சொல்ல மறுத்து, "இந்தியன்" என்று ஆணித்தரமாகச் சொன்ன கணேசனுக்கு, இரண்டாம்முறைச் சிறைவாசம், 18 மாதகாலம் வாய்த்தது. அந்தச் சமயத்திலும், தாம் நடத்திவரும் கம்பன் திருநாள் நிகழ்வுகளைத் தம் நண்பர் மெ.நா.சித.சிதம்பரம் அவர்களைக்கொண்டு, 1944ஆம் ஆண்டு இனிது நிகழ்த்தி விட்டார், கணேசன்.

'தாய் நாடு காக்கும் தரம்'

இந்த அளவிற்குக் கண்ணும் கருத்துமாய்க் கம்பன் விழா நடத்துவதில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த சா.க., தேசம் விடுதலை பெற்ற பிறகு, 1966இல் ஏற்பாடாகி இருந்த காரைக்குடிக் கம்பன் கழகத்தின் வெள்ளிவிழாவைத் தள்ளி ஒதுக்கிவிட்டு அப்போது நாட்டில் நிலவிய யுத்தச் சூழ்நிலை காரணமாக அந்நிதி முழுவதையும் தாய்நாடு காக்க அனுப்பி விட்டார். அதேசமயம் விழாவை நிறுத்தாமல், கம்பன் பள்ளிப்

படை கொண்ட நாட்டரசன்கோட்டையில், ஒருநாள் நடத்தினார். அதற்கும் தேசத்தை முன்னிறுத்தியே தலைப்பும் வைத்தார். அவர். நாட்டுக்காகப் பொருளையும் கொடுத்து, 'தாய்நாடு காக்கும் தரம்' என்ற பொருண்மையில் விழாவும் எடுத்த நாட்டுப்பற்றுள்ள நாயகர் என்பது வரலாறு சுட்டும் பதிவு.

சிறைக்கோட்டத்தைக் கம்பகோட்டமாக்கிய 'கம்பர்'

இது ஒருபுறமிருக்கத் தாம் இருக்கும் சிறைக்கோட்டத்தில் உடன் இருந்த அன்பர்களுக்கு, கம்பராமாயணம் உள்ளிட்ட இலக்கியப்பாடங்களை நடத்தி, சிறைக்கோட்டத்தை இலக்கியக் கோட்டமாக மாற்றினார் சா.க.

அச்சிறைவாசத்தின்போது, ஜவஹர்லால் நேரு உள்ளிட்ட தேசியத்தலைவர்களையும் சந்தித்து உரையாடியவர் கணேசன். பின்னர் காரைக்குடி அழகப்பர் கல்லூரிகளுக்கு வருகை தந்த போது, கணேசனைச் சந்தித்த நேருஜி, 'கம்பரே, நலமா?' என்று நலம் விசாரித்தது அந்தப் பின்புலத்தின் அடிப்படையில் தாம்.

'ஒப்பதே முன்பும் பின்பும்'

இராஜாஜியைத் தமது அரசியல் தலைவராகவும், ஆசானாகவும் கொண்ட கணேசன், 1946இல் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தேர்தலில், காமராஜருக்கு எதிராக நிறுத்தப்பட்டார். அத்தேர்தலில் காமராஜரே வெற்றிபெற்றார். தேர்தல் முடிந்தபிறகு, காமராஜர், இராஜாஜியிடம் பேசிக் கொண்டிருந்தபோது, "கணேசன் வெற்றிபெற மாட்டார் எனத் தெரிந்திருந்தும் அவரை ஏன் நிறுத்தினீர்கள்?" என்று கேட்டார். அதற்கு இராஜாஜி,"அதனால் என்ன? வேறு தக்க நபர் கிடைக்கவில்லை. கணேசனுக்கு இதில்என்ன நஷ்டம்? வெற்றி பெற்றால், லாபம். தோல்வியுற்றால் நஷ்டப்பட என்ன இருக்கிறது? கணேசன் எதையும் பொருட்படுத்த மாட்டார்" என்றாராம்.

'மெய்த்திருப்பதம் மேவு என்றபோதிலும், இத்திருத்துறந்து ஏகு என்றபோதிலும் சித்திரத்து அலர்ந்த செந்தாமரையை ஒத்திருக்கும் முகத்தை' உடையவனாக இராமன் திகழ்ந்ததைக்



கம்பனிடம் கற்றவர் அல்லவா,கணேசன்! அந்தப் பண்பில் பழுத்த பாங்கினால்தான், நாடு விடுதலை பெற்றபிறகு, தியாகிகளுக்காக வழங்கப்பெறும், நிலம், ஓய்வூதியம் எதனையும் பெற மறுத்தார் கணேசன். அவ்வாறு பெற்றால் அது தொண்டிற்குப்பெறும் கூலியாகிவிடும் என்பது அவர்தம் கருத்தாக நின்றது.

அப்பழுக்கில்லாத அரசியலாளர்

அதுமட்டுமல்ல. "காங்கிரஸ் தமிழ்நாடு தலைவர் பதவிக்கு இவர் நின்று ஒரே வாக்கில் தோற்றார். அந்த வாக்கை இவருக்குப் போடாதவர் இவர் நண்பர். அதற்குக் காரணம் அவர் என்ன சொன்னார் தெரியுமா? "கம்பனடிப்பொடி (சா.க) என்னிடம் வாக்குக் கேட்கவில்லை. ஆகவே, போடவில்லை" என்று கூறினார்.

> "ஒரு பெரிய வாய்ப்பைத் தமது வாக்கினால் தட்டி விட்டாரே" என்று பகைக்காமல் இறுதிவரை அவருடன் சிறந்த நண்பராகவே இருந்தார். "என் தொண்டுக்கு வாக்குப் போடட்டும்; நான் கேட்டதால் மட்டும் போடக் கூடாது" என்று இவர் (சா.க) கருதினார்"

என்கிறார் அ.அறிவொளி. (நெல்லை மாவட்டக் கம்பன் கழக வெளியீடு, ப.66) இந்த நிகழ்வை முன்னிறுத்தி, கல்லல் சோம.சண்முகம் செட்டியார்,

> "தமிழ்நாடு காங்கிரஸ் தேர்தலில் சா.க.வும், காமராசரும் போட்டியிட்டதில் சில ஓட்டுகள்

வித்தியாசத்தில் வாய்ப்புக் கிடைக்கவில்லை. இதில் வெற்றி பெற்றிருப்பின் சா.க.அவர்கள் தமிழ்நாடு முதல்வராகக் கூட வந்து ஆட்சி செய்திருப்பார்கள். முன்னாள் முதல்வர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் போல், நம் சா.க.வும் நேர்மையான அரசியல்வாதி. இதே மாதிரி அப்பழுக்கற்ற, நேர்மையான, கொள்கைப்பிடிப்புள்ள, சுயநலமற்ற, படாடோபமில்லாத, அரசியல்வாதிகளை இப்பொழுது அரசியல் வானில் காண்பது, சந்திப்பது, மிகமிக அரிது"

என்கிறார். (கம்பன்அடிப்பொடி கலைக்களஞ்சியம், ப.89)

எதையும் தாங்கும் இதயம்

'வெற்றியும் தோல்வியும் வீரனுக்கு அழகு' என்பது பழமொழி. இது சாதாரணப் போர் வீரனுக்கு. ஆனால், சத்தியாக் கிரகப் போராளிக்கு, வெற்றியைவிட, தோல்விதான் பெரிய விருது எனக் கொள்ளும் மனநிலை வேண்டும். அதுவும் சனநாயக நாட்டில், இது வெற்றி தோல்வி கருதும் போட்டியும் அல்ல, தேர்தல் போர்க்களமும் அல்ல என்கிற தெளிவு வேண்டும். கம்பனைக் கற்றுக் காந்தியவழிநின்ற கணேசனாருக்கு இது இயல்பாய் இருந்ததைச் சொல்லும் இதுபோல் இன்னொரு நிகழ்வு பின்வருமாறு:

"1957இல் தேர்தல். அகில இந்தியாவிலேயே மிகப் பரபரப்பான தேர்தல்கள் பன்னிரண்டில் இது ஒன்று என அறிஞர்கள் கூறினர். பாரதமக்கள் ஆவலுடனும் ஆர்வத்துடனும் கவனித்த தேர்தலாகும். சுமார் ஆயிரத்து எண்ணூறு வாக்குகள் வித்தியாசத்தில் கணேசனார் தோல்வியுற்றார்கள். ஈடுபட்ட ஊழியர்களுக்குப் பேரிடி. பலர் சோர்ந்தனர். சிலர் தேம்பியழுதனர். சிலர் படுக்கையில் நோயுடன் விழுந்தனர். ஆனால், கணேசனார் தேர்தல் சமயம் இருந்ததைவிட, அதிக உற்சாகமுடன் ஊழியர்களுக்குத் தைரியம் அளித்து உரையாற்றிய செய்கை ஒன்றே போதும். அவர் தைரியத்துக்கு எதையும் தாங்கும் இதயம் கொண்ட பண்பான அரசியல்வாதி கணேசனார் என்பதை அந்தத் தேர்தல் முடிவு தெரிந்த பின்னர் தமிழகம் அறிய முடிந்தது" (மேலது, ப.87)

என்கின்றார், கணேசனின் அரசியல் பண்புகளை மதிப்பிடும் டி..ஆர். அருணாசலம்.

ஆன்றோர் பார்வையில்...

சா.க. வின் அரசியல் பரிமாணங்கள் மற்றும் பணிகள் குறித்து, அவர்தம் சமகால நண்பர்கள் தருகின்ற கருத்தாக்கங்கள் காலத்திற்கும் சாட்சியங்களாக நின்று விளங்குவன. அத்தகு ஆன்றோர் சிலரின் பார்வையில், சா.க. என்னும் அரசியல் வாதியின் தோற்றம் எத்தகையதாய் இருந்ததென்பதைப் பின் வரக் காணலாம்.

வேண்டாமை உடைய விழுச்செல்வர்

"அவர் தேர்தலில், ஒருமுறை தோற்றார்- காரணம், காட்ட வேண்டியதைக் காட்டிப் பெறவேண்டியதைப் பெறத் தவறியமையால். இதுபற்றி வழக்கு மன்றத்திற்குச் சென்றார். அதற்காக வழக்குநிதி கேட்டிருந்தால், பல இலட்சங்கள் திரண்டிருக்கும். ஆனால், மிக உயர்ந்த விலையுள்ள தமது ரேடியோவை விற்றுத்தான் வழக்காடினாரே தவிர, வசூல்செய்ய விரும்பவில்லை. அவரிடம் முத்துராமலிங்கத்தேவர் ஒருமுறை சொன்னார்: "நீங்கள் நான் சொல்லும் ஒரு தொகுதியில் நிற்கிறேன் என்று விண்ணப்பத்தாளில் கையெழுத்து மட்டும் போடுங்கள். உங்களை அன்றே எம்.எல்.ஏ. ஆக்குகிறேன்" என்று. இதைச் செய்திருந்தால், அரசர்போல் செல்வாக்குடைய தேவர் சொன்னபடியே செய்திருப்பார். "தானாக, நின்று வெற்றி பெறாமல், வேறு ஒருவர் புகழைப் பயன் கொண்டு வெல்ல மாட்டேன்" என்றாரே தவிர, நாற்காலிக்காக ஓடிப்போய்க் கட்டியங்கூறாத தகைமை அவர். ஆகையால் கம்பனடிப்பொடியின் நேர்மை சந்தேகத்துக்கு அப்பாற்பட்டது."

இது விளக்கம் வேறொன்றும் வேண்டா நிலையில் அறிவொளியார் கூறியது. (நெல்லை மலர், பக்.65-66)

சொல்லும் சோர்விலாச்செயலும்

தொழிலதிபர்களையும் செல்வந்தர்களையும் அவர்களது செல்வாக்கை முன்னிறுத்தித் தேர்தலில் நிற்கவைக்கப்பட்ட

காலத்தில், தொண்டுக்கு முன்னுரிமை தந்து சா.க.வை முன்னிறுத்தியது சுதந்திராக் கட்சி. காரணம், தொண்டர்க்குத் தொண்டராக இருந்து, தலைமைக்குரிய தகுதிகளோடு இயங்கிய அவரது தனித்தன்மைதான் என்பதற்கு, அக்காலத்தில், ராஜ்யசபா உறுப்பினராக இருந்த ஜி.கே.எஸ். தரும் நினைவுரையையே சான்றாகக் கொள்ளலாம்.

"ராஜாஜி அவர்கள் சுதந்திராக் கட்சியை ஏற்படுத்திய போது, திரு. கணேசன் பெயர் அடிக்கடி கூட்டங்களில் குறிப் பிடப்பட்டது. ராஜாஜி அவர்கள் கணேசன்மீது பெருமதிப்புக் கொண்டிருந்தார். சுதந்திரா கட்சி ஏற்பட்டபோது, தென் மாவட்டங்களில், கட்சி அமைப்பதில், இவர் முக்கியப் பங்கை மேற் கொண்டிருந்தார். அரசியல் கட்சி அமைப்பதிலும், செயலாற்றுவதிலும், மிகுந்த அறிவும், அனுபவமும், அவருக்கு இருந்தது. ஒவ்வோ ரிடத்திலுமுள்ள தொண்டர்கள் பற்றியும், அவர் களுடைய திறமை களைப் பற்றியும் பரந்த முறையில் அறிந்து வைத்திருந்தார். பொதுக்கூட்டங்களில், ஆளுங்கட்சியை ஆணித் தரமாக அவர் தாக்கிப் பேசுவதையும், அதே சமயத்தில் மிகவும் திறமை யாக இலக்கியங்களி லிருந்து மேற்கோள்கள் காட்டு வதையும் பன் முறை கேட்டிருக்கிறேன். அவரது பேச்சென்றால், எப்போதும் நல்ல கூட்டம் இருக்கும்" (கம்பன் அடிப்பொடி கலைக் களஞ்சியம், பக்.57-58)



அது மட்டுமல்ல. அரசியல் ஈடுபாடும், கட்சியமைத்துக் கட்டுக்கோப்பாக நடத்திச் செல்லும் பாங்கும் உடைய அவர்,

"சுதந்திராக் கட்சி மாநிலத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுப் பணியாற்றியபோது, பெரும்பாலும் சென்னை அலுவலகத்திலேயே தங்கியிருந்தார். நான் ராஜ்யசபா உறுப்பினனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். நான் சென்னை சென்றபோதெல்லாம், அவரது அலுவலகத்திற்குச் சென்று அவரிடம் பேசிமகிழ்வேன். அரசியல் பற்றி குறிப்பாக, கதர் நூற்றல், சிறை வாழ்க்கை, அப்போதைய அரசியல் நிலைகளைப் பற்றிப் பேசுவோம். பிற மாநிலங்களில் சுதந்திராக் கட்சியின் அன்றாட நடவடிக்கைகள் பற்றி எனக்குத் தெரியாமல் இருந்தன. பிற மாநில நடவடிக்கைகள், அவை பற்றிய அவர்தம் கருத்து, அங்குள்ள தனிநபர்பற்றிய விளக்கங்களையெல்லாம் விளக்குவார் அவர். தமது



பொருளாதாரக் கருத்தில் ஆழமாக மூழ்கமாட்டார். மாநிலப் பொருளாதாரச் சுமையைப் பற்றி எப்போதும் ஆராய்ந்து கொண்டே இருப்பார்" (மேலது)

என்று மேலும் விரிக்கிறார், திரு.ஜி.கே.எஸ்.எனும் ஜி.கே.சுந்தரம்.

மக்கட் பணியே தம்பணியாய்...

மேலும், "தன்னலஞ்சிறிதுமின்றிப் பொதுநலம் பேணலில் தலைநின்ற கணேசன், 1962முதல் 1967 வரை சட்டமன்ற உறுப்பினராகவும், 1968முதல் 1974 வரை தமிழக மேலவை உறுப்பினராகவும் பணியாற்றியபோதும் தம் காந்தியநெறியில் நிலைநின்று மக்கட்பணியே தம்பணியாக் கொண்டு சிறந்திருந்தார்.

"என் அரிய நண்பர் சட்டப்பேரவை, சட்ட மேலவை ஆகிய இரு அவைகளிலிருந்து, பார்லிமெண்டரித் துறையிலும் நாட்டுக்குப் பணிபுரிந்திருக்கிறார். நான் மேலவைத் துணைத்தலைவராக இருந்தபோது அவர் உறுப்பினராக இருந்தார். அப்போது அவரது வாதத் திறமையை நான் பெரிதும் ரசித்ததுண்டு" (மேலது,ப.337)

என்று குறிப்பிடுகின்றார், சிலம்புச் செல்வர். ம.பொ.சிவஞானம்.

சுதந்திரக்கருத்தாளர்

"அரசியலிலும் சரி, சமூகக் கண்ணோட்டத்திலும் சரி, தமக்கென்று 'சுதந்திரமான', திட்டவட்டமான கருத்துகள் கொண்டவர் இவர். அதனால்தான், சட்டசபையில், இவர் பேச்சு ஆணித்தரமாகவும், தெளிவாகவும் அமைந்திருக்கிறது. உருவான நல்ல யோசனைகளை அளிக்கும் சட்ட சபை உறுப்பினர் களில் இவரும் ஒருவர்" (மேலது,ப.374)

என்கிறார் அருட்செல்வர் பொள்ளாச்சி மகாலிங்கம்.

பழம்பெரும் தேசபக்தர்

'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் ஈடுபட்டு, சா.க.வுடன், அலிப்புரம் சிறையில் 1943 பிப்ரவரி முதல் 6 மாதம் சிறைத்தண்டனை அனுபவித்தவரும், நாடு விடுதலை அடைந்த

பிறகு, ஆட்சித்தலைவராகவும், கல்விச் செயலராகவும், தமிழக அரசின் தலைமைச் செயலராகவும் பணிபுரிந்த கா.திரவியம், நெஞ்சம் நெகிழ உரைக்கும் மதிப்பீட்டுரை பின்வருமாறு:

> "அலிப்புரம் சிறையில் அன்பினால் ஆட்கொண்டு, அன்றுமுதல் இன்றுவரை எனக்கு நண்பராகவும், நல்லாசானாகவும் அமைந்து, உள்ளத்தூய்மையே உடலுக்குச் சட்டையாக அணிந்து, உண்மை, கடமை, கண்ணியம், பண்பின் உருமாய் விளங்கும் பழம்பெரும் தேசபக்தர் காரைக்குடி சா.கணேசன்"

என்று குறிப்பிட்டுத் தமது 'தேசியம் வளர்த்த தமிழ்' நூலைப் பணிவன்புடன் அவருக்கு அர்ப்பணித்திருக்கிறார் அப் பண்பாளர். (தேசியம் வளர்த்த தமிழ், ப.3)

மதிப்பிற்குரிய மாமனிதர்

> "நான் இந்தியப் பிரதமர்கள் இந்திராகாந்தி, மொரார்ஜி தேசாய், தமிழக அமைச்சர்கள், தமிழ்மூதறிஞர்கள் பக்கத்தி லெல்லாம் உட்கார்ந்திருக்கிறேன். அப்பொழுதெல்லாம் என்னிடம் உண்டாகாத மதிப்பும் மரியாதையும், கம்பனடிப்பொடிகளின் அருகில் அமர்ந்திருக்கும்போது ஏற்படும். அந்த மரியாதை, வெண்ணிற அங்கி அணிந்திருக்கும் எங்கள் சமயகுருவானவர்களுக்கு அருகில் இருக்கும்போது உண்டாகும் மரியாதையாகும்" (கம்பன் அடிப்பொடி கலைக்களஞ்சியம்,, ப.379)

என்கிறார், திருச்சியைச் சார்ந்த கவிஞர் மரியதாஸ்.

பாரதத்தொண்டர்

> "கணேசனார் உடல் பொருள் உயிர் அனைத்தையும் நாட்டுவிடுதலைக்குப் பலியாக்கிய பாரதத்தொண்டர். புலவர்க்குப் புலவர்; அறிஞர்க்கு அறிஞர்; கல்வெட்டுத் திறனர்; பல்கலை வல்லுநர்;இத்துணை நிறைவுகள் வாய்ந்த ஒரு தமிழ்ப்பெருமகன் கம்பனுக்கு அடிப்பொடியாகக் கிடைத்தது, இராமனுக்குக் கம்பன் கிடைத்ததுபோல் பெறற்கரிய பேறாகும்" (மேலது, ப.377)

என்று குறிப்பிடுகின்றார், வ.சுப.மாணிக்கம்.

என்றென்றும் தொண்டராய்...

"கணேசனாரைப் பொறுத்தமட்டில், அவர் எப்பொழுதும் தம்மை ஒரு தலைவராகக் கருதிக் கொண்டதுமில்லை. சொல்லிக்கொண்டதுமில்லை. தலைமைப்பதவிக்கு எப்பொழுதும் ஏதாவது ஒரு தலைவலி இருந்துகொண்டே இருக்கும். அந்தப் பதவியிலிருப்பது, சறுக்குமரத்தின் மீது நடனம் செய்கிற மாதிரி. ஒரு சாண் ஏற்றத்திற்கு முன், ஒரு முழம் இறக்கத்திற்குத் தயாராக இருக்க வேண்டும். தொண்டராயிருப்பவர்களுக்கு இந்தத் தொல்லைகள் ஏதுமில்லை. என்றென்றும் தொண்டராயிருந்து கொண்டிருக்கலாம். இந்தச் சூட்சுமத்தை நன்கு அறிந்து கொண்டிருக்கிறவர் அன்பர் கணேசனார். அவர் வீட்டு முகப்பில், சிரித்த முகத்தோடும் கூப்பிய கரத்தோடும் கூடிய அவருடைய உருவப்படம் இருப்பது, அவர் ஒரு தொண்டர் என்பதற்கு எடுத்துக்காட்டாகத் தெரியவில்லையா?" (மேலது, ப.84)



என்று போற்றும் வெ.சாமிநாத சர்மாவின்கூற்றினை மெய்ப்பிக்கும் கம்பன் அடிப்பொடி சா.கணேசனின் தோற்றத்தையும், அவர்தம் வரலாற்றுப் பதிவுகளையும் கண்ணெதிரே காண முடியுமா?

'முடியும்' என்பதற்குச் சான்றாகத் திகழ்கின்ற காரைக்குடிக் கம்பன் மணிமண்டபத்திற்கு வாருங்கள்! இளமை மாறாப் பொலிவுடன் திகழும் கன்னித் தமிழ்த்தாயின் திருக்கோயில் வளாகத்தில், கம்பீரமாக அமைந்திருக்கும் கம்பன் அடிப்பொடியாரின் சிலையைக் காணலாம்.

அவர்தம் வரலாறுகள் பதிந்த சுவடுகளாய், அவர்தம் மணிவிழாநிதியில் எழுந்த மணிமாடத்தின் அழகிய சுவர்ப்பரப்பில், அவர்தம் நிழற்படக் கண்காட்சியை இனிது காணலாம். தேவையான குறிப்புகளைத்தாங்கி, கருப்பு வெள்ளை வண்ணங்களில், நிரந்தரமாய் இருக்கும்அந்நிழற்படக் கண்காட்சி, ஈா.கணேசனாரின் சொல்லிமுடியாத வரலாற்றுச் செய்திகள் அனைத்தையும் மௌனமாய் உங்களுக்கு உணர்த்துவது உறுதி!

□



2. சமயங்கலந்த சமரசப் பெரியார்

"மனிதனிடம் விலங்குநீர்மையும் உண்டு. தெய்வத் தன்மையும் உண்டு. சத்தியாக்கிரகம் முன்னையதைக் களைந்து, பின்னையதை விளங்கச்செய்வது. தெய்வத் தன்மை முற்றும் விளங்கப் பெற்றவரே முழு - உண்மை - சத்தியாக்கிரகியாவர். கிறிஸ்து, திருநாவுக்கரசர், முதலியோர் முழு -உண்மைச் சத்தியாக்கிரகியர். சத்தியாக் கிரகத்தில் படித்தரங்களிருக்கின்றன. மனிதன் தெய்வத்தோடு தொடர்புகொண்டு, வாழும் சத்தியாக்கிரக வாழ்வே, சமய வாழ்வென்பது"

என்பார் திரு.வி.க. (மனிதவாழ்க்கையும் காந்தியடிகளும், ப.406)

காந்தியநெறிநின்ற கர்மவீரர் சா.க., ஒரு சிறந்த சத்தியாக் கிரகி. பிறப்பால் அவர் சைவர். சூழலால், வைணவத்தையும் ஏற்கும் குடும்பமரபுடையவர். தெய்வபக்தியும், தேசபக்தியும் நிரம்பப் பெற்ற அவரிடம் பிறப்புவழி அமைந்த சமய ஈடுபாட்டோடு, காந்தியநெறியில் கிட்டிய ஒழுகலாறுகளும் சேர்ந்து ஆன்மிகப் பணிகளை ஆற்றச் செய்தன.

இந்தக் காலக்கட்டத்தில் சமுதாயச்சீர்திருத்த முயற்சிகளில் இறங்கிய திராவிடர் கழக அமைப்புகள், கடவுள் மறுப்புக் கொள்கைகளை முன்னெடுத்து முழங்கின. தத்துவ, சமய, சமுதாய நடைமுறைகள், பழக்கவழக்கங்கள் கேலிக்கும் கேள்விக்கும் உள்ளாக்கப்பட்டன. ஆத்திகவாதிகளிடத்தில் குழப்பமும், நாத்திக வாதிகளிடத்தில் ஆழமின்மையும் சேர்ந்து மக்களைக் குழப்பின.

இந்தக் காலக்கட்டத்தில்தான், குன்றக்குடித் திருமடத் தொடர்பும், அடிகள்பெருமானின் அணுக்கமும் சா.க.விற்கு வாய்த்தன.

அடிகளாரோடு இணைந்து, சமயநெறி நின்று சமுதாயப் பணிகள் ஆற்றவும், சமயநெறிக்குரிய உயர்ந்த ஒழுகலாறுகளை மக்களிடத்தில் கொண்டு செல்ல, சமயப் பணிகள் புரியவும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.

அத்தோடு, பிற சமயப்பெரியோர்களின் தொடர்பும் தமிழ் இலக்கியங்களில் குறிப்பாக, கம்பனில் தோய்ந்து பெற்ற அனுபவமும் அவரை, சமயநெறிநின்று பழுத்த மனத்தடியாராக, சமயநெறிநின்ற ஆன்மிகத் தொண்டராக ஆக்கிவைத்தன.

அதற்கான சூழல்களை, அவர் விரும்பித் தருவித்துக் கொண்டதும் உண்டு; இயல்பில் வாய்த்ததும் உண்டு.

இரண்டுக்கும் இடையில் ஒரு சாட்சியமாய் நின்று இணைவித்தது காலம் என்பதுதான் இங்கு கருத்திற்கொள்ள வேண்டியது. முதலில் அடிகள் பெருமானுடனான தொடர்பில் இருந்து தொடங்கலாம்.


அடிகள்பெருமானும், அன்பர் சா.க.வும்

சமுதாய மாற்றத்திற்காகப் பெரியார் முனைந்து நின்ற காலத்தில், அவர் மறுதலித்த கடவுள் கொள்கை மற்றும் வழிபாடு தொடர்பான விமர்சனங்களை எதிர்கொள்ளத் தமிழகச் சமயச் சூழல் தகுதியான சான்றோரை வேண்டித் தவம் செய்த காலத்தில் தோன்றியவர்தாம் தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

அவரது சமய - சமுதாயச் சிந்தனைப்போக்குகளால் ஈர்க்கப் பெற்ற, ஒத்த கருத்துடைய அன்பர்கள் குன்றக்குடி நோக்கிப்

பயணம் மேற்கொண்டனர். குன்றக்குடித்திருமடத்தில் கூடிப் பேசி எடுத்த முடிவில் தோன்றிய பேரமைப்பு அருள்நெறித் திருக்கூட்டம். அதன் தலைவராக, அடிகளாரும், செயலருள் ஒருவராகக் கம்பன்அடிப்பொடி சா.கணேசனாரும் பொறுப் பேற்கும்படியாக வரலாறு, அவர்களை இணைத்துவைத்தது.

செட்டிநாட்டுப் பகுதியை ஒட்டி அமைந்திருக்கும் குன்றக்குடியில் உள்ள குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனத்தின் 45ஆவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளிய தவத்திரு அடிகள்பெருமானின் சமய, இலக்கியப் பணிகளுக்குத்



தொடக்க நாள்முதலே செட்டிநாட்டுப்பகுதி அறிஞர்களும், அன்பர்களும் உடனின்று உழைத்திருக்கின்றனர்.

அந்த வரிசையில், இலக்கியப்புலமையும், பக்தியுணர்வும், சிற்ப சாஸ்திர அறிவும் கொண்டு திகழ்ந்த அறிஞர், காரைக்குடி சா. கணேசன் ஆகிய கம்பன் அடிப்பொடியாரும், அடிகளாரிடத்தில் மாளாத அன்பும் பக்தியும் பூண்டவராக விளங்கினார்.

'கம்பனுக்கு வாய்த்த திரிசடை - கம்பன்அடிப்பொடி' .

காரைக்குடிக் கம்பன் கழக நிகழ்ச்சியில், கம்பன் பள்ளிப் படை கொண்டருளிய நாட்டரசன்கோட்டையில் 'புதரிடை

மலர்' என்னும் தலைப்பில் திரிசடை பற்றி அடிகளாரைப் பேச அழைத்துப் பெருமைப்படுத்தியவர் கணேசன். தமது தொடக்கக் காலப்பொழிவுகளுள் கவனத்திற்குரிய ஐந்தினைத் தமது சுயசரிதை ஒத்த 'மண்ணும் மனிதர்களும்' - நூலில் வரிசைப் படுத்தும் அடிகளார், இப்பொழிவை, மூன்றாவதாக நினைவு கூர்கின்றார். கம்பனின் திரிசடையை நினைக்கின்ற போதில், அடிகளாருக்குத் தமிழகச் சூழலும், கம்பன் அடிப்பொடியாரின் கம்பத் திருத்தொண்டும் நினைவுக்கு வந்து விடுகின்றன.


> "சீதையைத் திரிசடை காப்பாற்றியதைப்போல் கம்பன் அடிப்பொடி அவர்கள் கம்பனின் புகழை, கம்பனின் காவியத்தைத் தவம் செய்து காப்பாற்றினார்" (கம்பன் அடிப்பொடி கலைக்களஞ்சியம், ப.*371*)

என்று குறிப்பிடுகின்றார். மேலும்,

> "கம்பன்அடிப்பொடி அவர்கள் கம்பனை, அவனுடைய காவிய நலன்களை மட்டும் படிக்கவில்லை. கம்பனின் இலக்குகளும், கம்பன் அடிப்பொடி அவர்களுக்குப் பிடித்தமானவை. இராமனின் புகழ் பாடியும், இராவணனின் இகழ் மாற்றியும் கம்பன் புகழ் கொண்டான். கம்பன் அடிப்பொடி அவர்கள் கம்பன் புகழ் பாடியும், "மானுடம் வென்றதம்மா!" என்று கம்பன் பாடிப் பரவிய மானுடத்தை வாழச்செய்தும் புகழ் பெற்றார்" (மேலது)

என்கின்ற அடிகளார், கடையருக்கும் கடைத்தேற்றம் செய்விக்கும் காந்திய நெறியுடைய கணேசன் கம்ப நெறியிலும் வழுவாது ஒழுகிய பாங்கைப் பின்வருமாறு சுட்டி மதிப்பீடு செய்கின்றார்:

> "கம்பன் அடிப்பொடி அவர்கள் எப்போதும் சமுதாயத்தையே சார்ந்து இருந்தார். அவருடைய ஈடுபாடு சாதாரண மக்களைப் பற்றியதாக இருந்தது. கம்பனின் படைப்புகளில் குகன், அனுமன், கும்பகருணன், திரிசடை ஆகிய பாத்திரங்கள் கம்பன் அடிப்பொடி அவர்களுக்கு மிகவும் பிடித்தமானவை. இப்பாத்திரங்களின்



குணாதிசயங்கள் கம்பன் அடிப்பொடி அவர்களின் வாழ்க்கையில் தர்க்கங்களைச் செய்திருந்தன என்பதை அறிந்தவர் அறிய இயலும். அனுமனைப்போல நிரந்தினிது சொல்லுதல் - பேசுதல் கம்பன் அடிப்பொடி அவர்களுக்குக் கைவந்த கலை. இராமன்-குகன் நட்பை, உறவைக் கம்பன்அடிப்பொடி நினைந்து நினைந்து பாராட்டுவார். அதுபோலவே, யார்மாட்டும் எளிதில் பழகுவார்; பழகிய நட்பைப் பேணுவார். சீதையைத் திரிசடை காப்பாற்றி யதைப் போல் கம்பன் அடிப்பொடி அவர்கள் கம்பனின் புகழை, கம்பனின் காவியத்தைத் தவம் செய்து காப்பாற்றினார்.

சீதையை இராமனின் மனைவி என்று இராவணன் வாயிலாகவே சொல்ல வைக்கிறான் கம்பன். அதுபோல, கம்பனை ஏற்காது மறுத்தவர்களைக் கம்பன் கழக மேடையில் ஏற்றிக் கம்பனைப் பாராட்டச் செய்த பெருமை கம்பன் அடிப்பொடிக்கு உண்டு. கும்பகருணன் அறத்தின் பக்கமும் நின்றான். அதேபோழ்து, நன்றியறிதல் உடையவனாகவும் விளங்கினான். இஃது ஒரு திட்பமான

குணப்படைப்பு. கம்பன் அடிப்பொடி அவர்களுக்கு அறநெறி- அருள்நெறியில் அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு. ஆனாலும் அதே போழ்து இவற்றின் காரணமாக யாருக்கும் தீங்கு செய்யமாட்டார்; மற்றவர் செய்யவும் அனுமதிக்க மாட்டார்." (மேலது)

ஊழைமுன்வைத்து நடந்த உரையாடலில்...

கம்பன் கண்ட நாடுபோல் தமது தாய்த்திருநாடு திகழ வேண்டும் என்ற கருத்துடையவர் கணேசன். அதற்காகத் திருமடத்துத் திருப்பணிகளில் தம்மை ஒப்புக்கொடுத்து உழைத்து வந்தவர். ஒருமுறை ஊழ்தொடர்பான கலந்துரையாடலில் வெளிப்பட்ட அவரது உத்வேகத்தை, அடிகளார் தமது எழுத்தாக்கத்தில் பதிவுசெய்திருப்பது இங்கு நினைவுகூரத் தக்கது.

"கள்வார் இலாமைப் பொருள் காவலும் இல்லை; யாதும்
கொள்வார் இலாமைக் கொடுப்பார்களும் இல்லை மாதோ"

என்கின்ற பாடலைப்பற்றியும், சமுதாய மாற்றங்களை மையமாகக் கொண்டும் ஒரு கலந்துரையாடல் நடைபெற்றது. 1954இல், நடைபெற்ற இக்கலந்துரையாடலில், தவத்திரு அடிகளாரோடும், கம்பன் அடிப்பொடியாரோடும், தமிழகத்தின் ஆதீனகர்த்தர் ஒருவரும் பங்கேற்றார்.

அந்த "ஆதீனகர்த்தர் அவர்களுக்குப் பழைய மரபுகளில் இறுக்கமான பிடிப்பு. நெகிழ்ந்து கொடுக்க மாட்டார். கலந்துரையாடலில் சாதி வேற்றுமைகள், பொருளியல் வேற்றுமைகள் பற்றிய விவாதம் நடைபெற்றது. உலகில், கடவுள் மறுப்பு இயக்கங்கள் இவ்விரண்டு வேற்றுமைகளின் அடிப்படையில்தான் தோன்றி வளர்கின்றன. ஆதீனகர்த்தர் அவர்கள் இவ் வேற்றுமைகள் ஊழின்வழியில் அமைந்தவை; இவற்றை மாற்றுவதோ, மாற்ற நினைப்பதோ சமய மரபன்று என்று வாதிட்டார்.

கம்பன் அடிப்பொடி அவர்களுக்குச் சாதி வேற்றுமைகள் - பொருளாதார் வேற்றுமைகள் நீங்க

வேண்டும் என்ற ஆர்வம் உண்டு. அதேபோழ்து, ஊழிலும் நம்பிக்கை உண்டு. ஆனால், கம்பன் அடிப்பொடி அவர்களின் ஊழினைப் பற்றிய இக்கருத்து, அறிவுடனும், படிப்பினைகளுடனும் இயைபுடையது. முரட்டுத் தனமான நம்பிக்கை அல்ல. இதனை விளக்கக் கம்பன் அடிப்பொடி அவர்கள் ஓர் உரையே நிகழ்த்தினார். ஆதீன கர்த்தர் அவர்கள் எளிதில் உடன்படவில்லை.

கம்பன் அடிப்பொடி அவர்கள், அறிவு - கருத்து அடிப்படையில் விவாதிப்பதில் வல்லவர்; விவாதத்தின் போக்கு மகிழ்வாக அமையக்கூடியதாகவும் அமைத்துக் கொள்வார். விவாதத்தில் கலந்துகொள்வோர் கருத்துகளை வாங்கிக்கொள்ளாமல் - சிந்திக்காமல், முரட்டுத்தனமாக - பிடிவாதமாக விவாதித்துக் கொண்டிருந்தால் கம்பன் அடிப்பொடி அவர்களுக்குக் கோபம் வந்துவிடும். கோபம் வந்துவிட்டால் நகைச்சுவை ததும்பும் வகையில் கொச்சையான வினாக்களைத் தொடுக்க ஆரம்பித்து விடுவார். ஆதீனகர்த்தரவர்கள் ஊழின் பிடியிலிருந்து மீளவே இல்லை.

கம்பன்அடிப்பொடி அவர்கள், "ஊழினைக் கண்டு கொள்வதற்குத் துணையாய் அமைவன காரணங்களே தவிரக் காரியங்கள் அல்ல!" என்றார். "தீண்டாமைக்குரிய நிலையில் ஆசாரம் இல்லாமல் இருப்பது ஊழின் காரணமாக இருக்கலாம். இவை இரண்டுக்கும் காரணம், ஊழ் அல்ல; செயலின்மையேயாம். ஆதலால், ஊழின் காரணமாகத் தோன்றியவையல்ல தீண்டாமையும், வறுமையும்" என்று வலியுறுத்தினார். ஆதீன கர்த்தரவர்கள் ஊழின் பக்கமே சார்ந்து நின்று வழக்காடினார்கள். கம்பன்அடிப்பொடி அவர்களுக்குக் கோபம் வந்துவிட்டது.

"7° கிளாக் பிளேடைக்கொண்டு முகத்தை மழித்துக் கொள்வது என்பதும் ஊழ்தானா?" என்று வினாத் தொடுத்தார். உடன், அவையில் சிரிப்பு! வெகுளி! பின் அமைதி தழுவிய சூழ்நிலை தோன்றி நிலவியது! ஆதலால்

> கம்பன் அடிப்பொடி அவர்கள் எப்போதும் சமுதாயத்தையே சார்ந்து இருந்தார்"

என்று குறிப்பிடுகின்றார், அடிகளார். (மேலது, பக்.369-371)

இந்தச் சார்புநிலைதான், தவத்திரு அடிகள்பெருமானோடு இணைந்து அருள்நெறித் திருக்கூட்டத் திருப்பணியில் கம்பன் அடிப்பொடியாரை இயங்கச்செய்தது.

அருள்நெறித்திருக்கூட்ட அமைப்புப்பணியில்...

அருள்நெறித்திருக்கூட்டம், தமிழகத்தில் கால்கோள் கொள்வதற்குக் காரணமான காலச்சூழலை நாவலாசிரியர் பொன்னீலன்,

> "1950ஆம் ஆண்டின் தொடக்கத்தில், தமிழகத்தில் பார்ப்பன ஆதிக்க எதிர்ப்பு, கடவுள் எதிர்ப்பாக, கோயில் எதிர்ப்பாக, சமய இலக்கிய எதிர்ப்பாகப் பற்றி எரிந்த காலம் அது. பெரியாரும், திராவிடர் கழகமும் ஒருபக்கம் இந்த நெருப்பை நெய்விட்டு வளர்த்துக் கொண்டிருந் தார்கள். இளைஞர்கள் உள்ளங்களில் எல்லாம் இந்தப் பெருநெருப்புப் பற்றிப் படர்ந்துகொண்டிருந்தது. ஆத்திக வாதம் முற்றாக அழிந்து போகுமோ என்ற அச்சம் சமய வாதிகளிடம் தோன்றிற்று"

என்று பதிவுசெய்கின்றார். (தவத்திரு குன்றக்குடி அடிகளார் தமிழகத்தின் ஆன்மீக வழிகாட்டி, ப.19)

இந்தப் பின்னணியில் முன்னர் நாடு திகழ்ந்த பெற்றியையும், மூண்டிருந்த அந்நாள் இகழ்ச்சியையும் நினைவுகூர்ந்து மக்களுக்கு உண்மையுணர்த்துதற்கு முன்னின்ற மடாதிபதி அடிகள்பெருமான் ஒருவர் மட்டுமே. இவ்வமைப்புத் தோற்றம் பற்றி அடிகளார் எழுதுகின்றார்:

> "பெரியாரின் கடவுள் மறுப்புக்கொள்கையை, சிலை உடைப்புக் கொள்கையை எதிர்த்துப்போராட, தமிழ்நாடு அருள்நெறித்திருக்கூட்டம் 1952இல் தொடங்கப்பெற்றது. நமக்குத் தலைவர் பொறுப்புத் தந்தனர். மாநிலச் செயலாளர்களாக கம்பன் அடிப்பொடி சா.கணேசன், ஈரோடு எஸ்.மீனாட்சிசுந்தர முதலியார் இருவரும்

பொறுப்பேற்றனர். பொருளாளராக, தேவகோட்டை உ.ராம.மெ.சுப.சேவு.மெ. மெய்யப்பச் செட்டியார் பொறுப்பேற்றார். மாநிலம் தழுவிய இயக்கமாக வளர்ந்தது, இந்த இயக்கம். பெரியாரின் கோயில் சிலை உடைப்புக்கொள்கையைக் கடுமையாக விமரிசித்தது. பல நூற்றாண்டுகளுக்குப்பிறகு, சமயப்பரப்புக்கென இயக்க அமைப்பில் தோன்றியது அருள்நெறித்திருக்கூட்டம் ஒன்றேயாம். இந்த இயக்கம் ஆதீனங்களின் வாழ்த்துகளைப் பெற்ற இயக்கம்.

கம்பன் அடிப்பொடி சா.கணேசன் தமிழிலக்கியங்களில் மட்டுமின்றி சிற்பசாத்திரத்திலும் நல்ல அறிஞர்; ஆதாரங்களுடன் பேசினார். ஈரோடு எஸ்.மீனாட்சிசுந்தரமுதலியார் ஆங்கிலத்திலும் அருந் தமிழிலும் வல்லமை உடையவர். எனவே, ஆங்கில மேற்கோள்களுடன் கடுமையாகப் பேசினார். மற்றும் பன்மொழிப்புலவர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார், இலக்கிய மேதை அ.ச.ஞானசம்பந்தன், கு.அருணாசலக் கவுண்டர் போன்ற பல அறிஞர்கள் அருள்நெறித் திருக் கூட்ட மேடைகளில் பேசினார்கள். பெரியார், விநாயகர் சிலை செய்து உடைப்பதாகக் கூறினார். அருள்நெறித் திருக்கூட்டத்தினர் அமைதிபெற்றனர். பக்தர்கள், சிலையில் கடவுள் இருப்பதாக நம்பி வழிபாடு செய்கின்றனர். பெரியாரும் அங்ஙனமே நம்பி உடைக்கின்றார். அருள்நெறித்திருக்கூட்டத்தின் பிரசார வேகத்தினால் ஆங்காங்கு மோதல்களும் வந்தன... திராவிடர் கழகத்தினர் மதவாதிகளுக்கு என்று பத்து வினாக்களை அச்சிட்டுத் தமிழ்நாடு முழுவதும் வழங்கினர். இந்த வினாக்களுக்கு விடை தயாரித்தும் மேலும் பத்து வினாக்களைத் திராவிடக் கழகத்தினரைக் கேட்கும் வடிவத்திலும் நூல் வெளியிட்டது அருள்நெறித் திருக் கூட்டம்." (குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை தொ-16, பக்.171-173)

அதற்கான பதில்கள் ஏதும் கழகத்தாரிடமிருந்து வரவில்லை. எனினும்,

> "நாடுமுழுவதும் தீவிர சமயப்பிரசாரம் செய்யப் பெற்றது. ஒருபுறம் நாத்திகக்கொள்கைகளை எதிர்த்தும், பிறிதொருபுறம் சமயச் சீர்திருத்தக் கொள்கைகளை வலியுறுத்தியும், அதாவது, சாதி வேற்றுமை நீக்குதல், தீண்டாமை நீக்குதல், திருமுறைத்தமிழில் அர்ச்சனை செய்தல், சமய நிறுவனங்கள் சமுதாய மேம்பாட்டுப் பணிகளைச் செய்யவேண்டுமெனல் ஆகியன எடுத்து மொழியப்பெற்றன". (மேலது,ப.25)

இதனால் பல இடங்களில் மோதல்கள் ஏற்பட்டன. அடிகள்பெருமான்மீது கற்கள் வீசப்பட்டன. கல்லடிபட்டும், சொல்லடிபட்டும் அடிகளார், சமயநெறிநின்று சமுதாயப் பணியாற்றிவந்த காலத்தில், திருப்பெருந்துறையாகிய ஆவுடையார்கோவிலில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

திருப்பெருந்துறையில் திருவாசகவிழா

மாணிக்கவாசகப் பெருமானை உலகிற்கு நல்கிய திருப்பெருந்துறைத் திருக்கோயிலுக்கு அடிக்கடி சென்று வழிபாடு மேற்கொள்வது அடிகளார் வழக்கம்.

ஒருநாள், திராவிட இயக்கம் தீவிரமாகப் பரவிவந்த அக்காலத்தில் அதன் தாக்கத்தால் கோயிலின் எதிரில் கறுப்புக்கொடி கட்டப்பட்டிருந்ததைக் கண்ணுற்ற அடிகளார், அங்குள்ள திராவிடர்கழக அன்பர்களை அழைத்துப் பேசினார். இரவு 8 மணி தொடங்கி, 2 மணிவரை நீண்ட விவாதம். உரிய விளக்கங்கள் அளிக்கப்பெற்ற பிறகு, திருக்கோயில் முன்புள்ள கறுப்புக்கொடி இறக்கப்பெற்றது.

மறுநாள் சுற்றுப்புறப்பகுதிகளில் உள்ள தி.க. அன்பர்கள் கூடி கொடியேற்ற முயன்றனர். பக்தர்கள் அணி மறுக்க, விவாதம் வலுத்தது. இச்செய்தி மதுரையில் மேடையில் பேசிக் கொண்டிருந்த அடிகளாருக்குச் சொல்லப்பெற்றவுடனே வழக்கறிஞர் ஆர்.வி.எஸ்.மெய்யப்பனை அழைத்துக்கொண்டு ஆவுடையார்கோவிலுக்கு வந்த அடிகளார், இரு தரப்பின ரிடமும் பேசி ஒருமுடிவுக்கு வரச் செய்தார். எனினும் திராவிடர் கழகத்தினரது வேகம் அடங்கவில்லை. பரவலாகக் கிளர்ச்சி

செய்தனர். அருள்நெறித் திருக்கூட்டத்தரப்பிலும் கிளர்ச்சி செய்யப்பெற்றது. இந்தநிலையில்,

> *"1953ஆம் ஆண்டு திருவாசக விழா, திருவாதவூரில் முதலில் தொடங்கப்பெற்றது. பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவர் விழாவுக்கு அழைக்கப்பெற்றார். கம்பன் அடிப்பொடி சா.கணேசன் மற்றும் அறிஞர்கள் பலர் அழைக்கப்பெற்றனர்.*
>
> *காலை 9 மணிக்கு ஊர்வலம் ஆவுடையார்கோயிலில். 'திருவாசகவிழா' ஊர்வலத்தில் ஏராளமான அன்பர்கள், பக்தர்கள்! பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் தலைமையில் வெண்கலக்குரலில் கம்பன் அடிப்பொடி சா.கணேசன் சிவபுராணம் ஓத, அருள்நெறித்திருக்கூட்டக் கொடிகளுடன் ஊர்வலம்!*
>
> *இந்த ஊர்வலத்திற்குப் போட்டியாக இரு பக்கத்திலும் திராவிடர் கழகக் கொடிகளுடன் பாலைவனம் ஜமீன் துரைஅரசன் தலைமையில் ஊர்வலம். ஆயினும் எந்த விதமான சலசலப்பும் இல்லை; மோதலும் இல்லை, திருவாசகவிழா ஊர்வலம் முடிந்தவுடன் திருக்கோயில் முன்பு அருள்நெறித் திருக்கூட்டக்கொடி ஏற்றப்பெற்றது. பின் வழிபாடு நடந்தது. திருவாசக மாநாடு தொடங்கியது.*
>
> *மேடையில் ஈரோடு எஸ்.மீனாட்சிசுந்தரமுதலியார் பேசுகையில் ஒன்றிரண்டு சூடான சொற்கள் வந்து விட்டன. உடன் மாநாட்டில் இருந்த திராவிடர் கழகத்தினர் கூச்சல் போட ஆரம்பித்துவிட்டனர். தேவர் திருமகனாருக்கு ஆற்றொணா நிலை! தம்பி சிறுமருதூர் முத்துக்குமாரசாமி சேர்வைக்கு அளவற்ற கோபம்! கழகத்தினரின் சலசலப்பை அறைகூவலாக ஏற்றுக் கொள்வதாகப் பேச்சு! இந்த நிலையில் நாம் ஒலி பெருக்கியின்முன் வந்து வழக்கம்போல் சமாதானம் கூறி வேண்டுதல் செய்தோம். கூட்டம் அமைதியாகியது"* (மேலது, பக்.175-176)

என்று அடிகளார் குறிப்பிடுகின்றார்.

அருள்நெறித்திருக்கூட்டத்தின் முதல் மாநில மாநாட்டில்...

இவ்வாறாக, தமிழகம் எங்கும் உள்ள மெய்யன்பர்களால் உருப்பெற்ற அருள்நெறித்திருக்கூட்டத்தின் முதல் மாநில மாநாடு தேவகோட்டையில் 1954ஆம் ஆண்டு ஜூலை 10 மற்றும் 11ஆகிய இருநாட்கள் நிகழ்ந்தேறின. மிகச்சிறப்பாகத் திட்டமிட்டு நடத்தப்பெற்ற இம்மாநாட்டில் இராமநாதபுரம் -294, மதுரை-32, திருநெல்வேலி-11, தஞ்சாவூர்- 1, திருச்சிராப்பள்ளி-54, தென்னாற்காடு-1, சேலம்-9, கோயம்புத்தூர்-16, சென்னை-3 ஆக, 421 பிரதிநிதிகள் பங்கேற்றனர். ஊர்வாரியாக 212 அங்கத்தினர்கள் சேர்ந்திருந்தனர்.

வரவேற்புரை தரும் வரலாற்றுச் செய்திகள்

சீரும் சிறப்புமாக நடந்தேறிய இம்மாநாட்டினைத் தலைமையேற்று நடத்திய அடிகளாரின் அருள் திறத்தையும், கணேசனாரின் செயல்திறத்தையும் உள்ளபடி உணர்ந்துரைக்கின்றார், இம்மாநாட்டின் வரவேற்புரையாற்றிய, டி.ஆர். அருணாசலம் என்பார். அவர்தம் உரையில்,

> "நந்தமிழ் நாட்டிலே அன்பும் அருளும் ஆண்டவன் உணர்வும் நிரம்பி நின்ற நிலையறிவு பெற்ற சான்றோர்கள், மொழியும் கலையும், சமயமும், ஒழுக்கமும் வளர்ந்து நாடெலாம் திருப்தியும் அமைதியும் நிலவ, நல்வழி காட்டும் பெரும்பணி ஆற்றுவதற்கென்றே எண்ணரு மடங்களைத் தோற்றுவித்து அதன்வழி அரும்பணி ஆற்றி வந்தனர். காலத்தின் கோலம், அவைகளும் கூட, கடமையை மறந்து போக வெள்ளத்தில் புரள்வதாயின. நினைத்தால் நெஞ்சம் குமுறுகிறது. ஆத்திரம் பொங்குகிறது. இந்நிலையில், குன்றக்குடியில் குலவிடும் மடத்தில் இன்றையத் தலைவராய் எழுந்தருள்புரியும் திருவொடு கல்வியும் தேர்ந்த நல்லறிவும் கொண்டு விளங்கும் குருமகா சந்நிதானம் திருப்பெருந்திரு அருணாசல தேசிக அடிகள், இன்று நாடெலாம் சுற்றி நல்லுரை பகர்ந்தும், ஏழை எளியவர் இருப்பிடம் சேர்ந்து, அன்புரை கூறித் துன்பம்

துடைத்தும், மொழி கலை பணியே மூச்செனக் கொண்டு அல்லும் பகலும் அயராது உழைக்கும் அதனாலன்றோ ஆதீனங்களுக்கும் மக்கள் மனத்திடை மதிப்பேற்பட லாயிற்று? நாட்டிற்கு மட்டுமன்றிப் பழம்பெரும் மடங்கட்கும் நல்ல வழிகாட்டியாய் இலங்கும் அவர்களுக்கு மனமொழி மெய்யால் வணக்கம் சொல்லுவதையன்றி வேறென்ன கைம்மாறு செய்ய வல்லோம்? அத்தகு பெருமைசேர் அவர்களே நமது அருள்நெறி இயக்கத்தின் முதலும் மூலமும் ஆவார்கள் என்பது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை. அவர்கள் எல்லா வகையிலும் உடனிருந்து மாநாட்டைப் பயனுடையதாக ஆக்கி வாழ்த்துரை வழங்கத் திருவுளம் கொண்டு ஈண்டெழுந்தருளியிருக்கிறார்கள்.

குறிப்பாக, தமிழ்நாடு அருள்நெறித் திருக்கூட்டச் செயலாளரும், தேசபக்தரும், தியாகியும், நிர்வாகத்திறன் பெற்றவருமான திரு. சா.கணேசன் அவர்களைப்பற்றி இங்கு கூறாதுவிடின் என் கடமையினின்றும் வழுவியவனாவேன். அருள்நெறி இயக்கத்தின் ஆணிவேர் அன்னாரின் ஆக்கவேலை எனில் மிகையாகாது. அன்னாரின் தொண்டு தமிழ்நாடு நன்குணர்ந்ததே. அவர்களும் இம்மாநாட்டின் சிறப்புக்கு உறுதுணையாக இருந்து வருகிறார்கள்" (முதலாவது அருள் நெறித் திருக்கூட்ட மாநிலமாநாடு, பக்.7-8)

என்று அடிகள் பெருமான் குறித்தும், கம்பன் அடிப்பொடி குறித்தும் சுட்டுவது அவர் உடனின்று கண்ட பாங்கை உணர்த்துகின்றது.

இம்மாநாட்டில், "திருக்கூட்டச் செயலாளர் திரு.சா.கணேசன் அவர்கள் திருக்கூட்ட வரலாறு, இதுகாறும் அது ஆற்றிய பணி ஆகியவை அடங்கிய அறிக்கையை மாநாட்டின் முன் சமர்ப்பித்தார்கள்" என்ற குறிப்போடு தரப்பெற்றுள்ள மாநாட்டு மலருள் இடம் பெறும் அறிக்கை பின்வரும் கூறுகளைக் கொண்டமைகின்றது.

அருள்நெறித்திருக்கூட்டத் தோற்றவரலாறு, தொண்டின் பதிவுகள், கிளைத்த அமைப்புகள், எதிர்காலத் திட்டங்கள் பற்றி

யெல்லாம் எடுத்தியம்பும் இவ்அறிக்கை ஒருசிறந்த ஆவணப்பதிவு எனலாம். மேலும், அடிகள் பெருமானின் ஆக்கப் பணிகள் பற்றியும், அவர்களது தொலைநோக்குப் பார்வையையும் நன்கு விளக்குவதாக இவ்அறிக்கை அமைவதைக் காணலாம்.

காலப்போக்கில்...

மிகச்சிறப்பான முறையில் நடந்தேறிய இம்மாநாட்டினை அடுத்து, தமிழகம் எங்கும் சமய மறுமலர்ச்சி ஏற்பட்டது. காலச்சூழலில் தத்தமது சமயக்கருத்தோட்டங்களில் விலகாமல், சமுதாய அடிப்படையில் அடிகளாரும், பெரியாரும் இணைந்து இயங்கநேர்ந்ததை விமர்சித்தும், மறுத்தும், விலகியும் சிலர் போகின்ற நிலை ஏற்பட்டது. ஆனபோதும், அடிகளார் தமது நிலைப்பாட்டில் தெளிவாகவே இருந்தார். கம்பன் அடிப்பொடியாரும் தம் நெறிநின்று கம்பன் கழகத் திருப்பணியில் தம்மை நிலைநிறுத்திக்கொண்டார். அருள்நெறித் திருக்கூட்டம், அருள்நெறித்திருப்பணி மன்றமாக இன்னபிற அமைப்புக்களாகப் பிறப்பெடுத்துத் தம்பணியாற்றத் தொடங்கியது.

சட்டமேலவையில்...

வரலாறு மறுபடியும் இவர்களைச் சட்டமேலவையில் ஒருங்கிணைத்தது.

அதில், ஒருமுறை சட்டமேலவை உரையில், தவத்திரு குன்றக்குடி அடிகளார்,

> “அருமை நண்பர் திரு. சா.கணேசன் அவர்கள் கிட்டத் தட்ட என்னுடைய பொறுப்பில் உள்ள துறைக்கு ஒரு துணையாக, சகாவாக, கோவில்களையும், பழைய கலைகளையும், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், பாதுகாப்பதற்காக மிகச் சிறந்த பணியைச் செய்துவருகிறார்கள். அவர்கள் கலை, மொழி ஆகிய இரண்டுக்கும் இந்த அவையில் மிக அருமையான பணிகளைச் செய்துவ்ருகிறார்” (சட்ட மேலவை உரை, *1974*, மார்ச் *26*)

என்று சா.கணேசன் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

அதுபோல், அரசியல், சமூகப்பணிகளை விடவும் கல்வெட்டாய்வு, இலக்கியப்பணி - குறிப்பாகக் கம்பன் திருப்பணி முதலியவற்றில் ஈடுபாடு கொண்டு கம்பன் அடிப்பொடி செயல்பட்டுவந்த சூழல்களில், அடிகளார், கம்பன் கழக விழாக்களில் பங்கேற்றதோடு, காரைக்குடிக் கம்பன் கோட்டத்தில் தமிழ்த்தாய்த் திருக்கோயில் எழுப்புதற்கான கால்கோள் விழாவில் மேனாள் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களோடு பங்கேற்றுச் சிறப்பித்தார். கம்பன்அடிப்பொடி அவர்களின் மறைவுக்குப்பின்னர், அவரதுநெறிநின்று இயங்கி வரும் கம்பன்அடிசூடி (பழ.பழனியப்பன்)அவர்கள் தமிழ்த் தாய்த் திருக்கோயிலைக் கலைஞர் அவர்களைக் கொண்டு திறப்பித்த விழாவில் அடிகள்பெருமானைத் தலைமையேற்கச் செய்ததும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

ஆலயத்திருப்பணிகள்

சமயஞ் சாராது சமுதாயம் இல்லை. சமுதாயத்தை விடுத்த சமயமும் உண்மை நிலை இகந்ததாய்விடும்.

இரண்டுக்கும் இடையில் உறவுப்பாலம் இட்டுக் காலங் காலமாய் நிலைக்கும்படி, ஆலயங்களைச் சமய, சமுதாய அறச் சாலைகளாக, அக்காலத்து அரசர்கள் அமைத்தனர். அவர்கள் காலம் முடிந்த பிறகு, மன்னர்பின்னோராகிய நகரத்தார் குலத்தார், கோயில்களும் குளங்களும் பேணினர்.

இம்மரபில் பிறந்த சா.கணேசனாரும், சமயப் பணிகளைத் திருக்கோயில் பணிகளோடு இணைத்துக் காலம் முழுக்கக் கடமைகள் பல ஆற்றினார். கோயில் திருப்பணிகள், புனரமைப்பு, கும்பாபிஷேகம் என்று பம்பரமாய்ப் பணிகள் பல செய்திருக்கிறார். இவரையே தமது ஞானத்தந்தையாக ஏற்றுக் கொண்ட, வை. கணபதி ஸ்தபதி,

> "தந்தை சா.கணேசன் அவர்கள் எத்தனையோ, கும்பாபிஷேகங்களுக்குத் தலைமை தாங்கி, இரவு பகலாகப் பக்தி உணர்வோடு, இறைப் பணியாற்றி உள்ளார்கள்... ராஜராஜ சோழனின் ஆயிரமாவது சதயத்

திருநாளைச் சிறப்பாக நடத்தி, தஞ்சைப் பெருவுடையானின் அகம் குளிரக் குடமுழுக்குச் செய்த பேரின்பக் காட்சி கலையுணர்வு, பக்தியுள்ளம் படைத்த மக்களின் உள்ளத்திலே இன்னும் நிழலிட்டுக் கொண்டிருக்கிறது"

என்று குறிப்பிடுகிறார். (கம்பன் அடிப்பொடி கலைக்களஞ்சியம், பக்.38-39)

"தமிழ்நாட்டில், சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் (கிபி.980- 1016) செங்கோலோச்சிய ராஜராஜனுக்கு, வரலாற்று அறிஞர் பலர் ஒத்துழைப்பைப் பெற்றுப் பெருவிழா ஒன்றை வெற்றிகரமாக நடத்தி, அவனுடைய கலைப்பண்பையும், சமயத்தொண்டையும் தமிழராயினார் அதிசயிக்கும்வண்ணம் அறிமுகப்படுத்தியது அன்பர் கணேசனாருடைய ஆக்கப்பணிகளில் சிறந்த ஒன்றாகும்"

என்று வெ.சாமிநாதசர்மாவும் குறிப்பிடுகிறார். (மேலது, ப.84) இதற்கு, 'அன்பரின் சமயப்பற்று, அவர் பரம்பரையோடு ஒட்டி வந்த செல்வம்' என்பது அவரது கணிப்பு.

அந்த வகையில், இராஜராஜன் குறித்து, சா.க., எழுதிய குறுநூல், இவ்விருவரின் பெருமிதங்களை ஒருசேர உரைக்கும் திருநூல் எனலாம்.

மேலும், பிள்ளையார்பட்டி, சிக்கல், திருத்தணி, கரூர், திருவண்ணாமலை, காஞ்சி போன்ற இடங்களிலுள்ள பெரிய கோயில்களில் கும்பாபிஷேகப் பொறுப்பை ஏற்று, ஆகம முறைப்படி பணியாற்றியிருக்கின்றார்.

காஞ்சிப்பெரியவர்களுடன் கம்பன் அடிப்பொடியார்

கம்பன் அடிப்பொடியாரின் வாழ்வில் மிக முக்கிய நிகழ்வாக அமைவது, 'வித்வத் சதஸ்' ஆகும். காஞ்சிப் பெரியவரவர்களின் ஆணையை ஏற்று, காரைக்குடி அருகில் உள்ள இளையாற்றங்குடியில், 1962இல் முதன்முதலில், அகில இந்திய வித்வத்சதஸைச் சிறப்பாக நடத்தியவர் சா.கணேசன். பம்பரமாய்ச் சுழன்று அம்மாநாட்டினை நடத்திய பாங்கில் மகிழ்ந்த அம்மகான்,

சா.க.வுக்கு, 'தொண்டர் குலசேகரன்' என்று விருதளித்துப் போற்றினார்.

இளையாற்றங்குடி ஒரு குக்கிராமம், அதில் பங்கேற்ற வெளிநாட்டாரும் தங்கும் வசதிசெய்து, உணவு, உறைவிடம் போன்ற அனைத்துத் தேவைகளையும் நிறைவுசெய்து, குறைவிலாது கவனித்துக்கொண்ட கர்மவீரர் கணேசன்.



"1962 ஆம் ஆண்டு பெரியவர்கள் இளையாத்தங்குடி என்ற இடத்தில் முதன் முதலில் வியாஸ பாரத ஆகம வித்வத் சதஸ் என்ற ஓர் சதஸ் ஆராய்ச்சி நடத்தினார்கள். உலகின் பல நாடுகளிலிருந்து ஆராய்ச்சியாளர்களும் கலைஞர்களும் வந்து பங்கேற்றனர். பிரம்மாண்டமான பயனுள்ள கருத்தரங்கு அது. சாஸ்திரீயக்கலை முதல் கிராமியக்கலை வரை அனைத்தும் அதில் இடம் பெற்றன"

என்று அந்த சதஸில் ஒரு சிறப்புக்காட்சி அமைத்த கல்வெட்டாய்வாளர் இரா.நாகசாமி குறிப்பிடுகிறார். (http://tamilartsacademy.com/books/tavam/chapter01.xml)



அந்நிகழ்வில் பங்கேற்றுத் திரும்பிய இராமகிருஷ்ணதீட்சிதர் என்பார் தம்மைச் சந்தித்தபோது, பேசியதை நினைவு கூர்ந்து, வெ.சாமிநாத சர்மா,

> "...ஸதஸ் நடைபெற்ற வைபவத்தைப் பற்றி உற்சாகமாகப் பேசிக்கொண்டிருந்தார். அந்தப் பேச்சின் பெரும்பகுதி, அன்பர் கணேசனாரைப் பற்றியதாகவே இருந்தது. "அன்பர் கணேசன் ஒருவர் இல்லாமற்போனால், இந்த ஸதஸ் இவ்வளவு நன்றாக நடந்திருக்க முடியாது. பம்பரம்போல் சுற்றி, எங்கும் உள்ளவராய், யாரும் கண்டு பேசக்கூடிய மாதிரி எளியவராய், தம் சொல்லாலும் செயலாலும் எல்லோர் மனத்தையும் குளிரச் செய்கிறவராய் உழைத்தார். ஆசாரியரிடத்தில் அவருக் குள்ள பக்தியையும், ஆசாரியார் அவரிடத்தில் செலுத்திய அன்பையும் வார்த்தைகளால் சொல்லிக் காட்ட முடியாது"

என்று அத்தீட்சிதர் கூறிய வார்த்தைகளைக் கேட்டுப் பூரித்துப் போனதாகக் குறிப்பிடுகிறார். (கம்பன் அடிப்பொடி கலைக்களஞ்சியம், ப.83)

காஞ்சிப் பெரியவரிடம் மட்டுமல்லாது, சிருங்கேரி மடத்துப் பெரியவர்பாலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் சா.க. அவர்களும் கம்பன் மணிமண்டபத்திற்கு எழுந்தருளி சா.க.விற்கு



ஆசிநல்கியது வரலாறு. இதுபோல் இவர் சமண சமயத்தில் கொண்டிருந்த ஈடுபாடும் தனித்தறிய வேண்டிய ஒன்றாகும். அதற்குமுன்னதாக, கம்பன் அடிப்பொடி சா.க. வின் சமயக்கொள்கையைத் தெரிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாதது.

சமயங்கலந்த சமரசப் பெரியார்

அடிப்படையில் சைவரான சா.க., அனைத்துச் சமயங் களையும் அன்போடு அரவணைக்கும் இயல்பினர். இதில் உயர்வு, தாழ்வு கருதாதது மட்டுமல்ல, அனைத்தையும் ஒரே தளத்தில் வைத்து உணர்ந்து கொள்வது என்கிற பண்பு அவரிடம் இருந்தது.



அமைச்சர் சி.சுப்பிரமணியம் தலைமையில், சேவியர்தனி நாயகம் அடிகள் தொடக்கவுரையாற்றியிருக்க, ஸ்ரீரங்கம்சடகோ பராச்சாரியார்பேருரை நிகழ்த்தியதுமுக்கியநிகழ்வு. அதற்குக் கம்பன் கழகம், பெரிய அளவில் களம் அமைத்துக் கொடுத்தது. அதற்கு முன்னர் வரை, வைணவர்களே பெரிதும் விரும்பிப் பக்தியோடு படிக்கும் இலக்கியமாக இருந்த இராமா யணக்கதையை, எல்லாச் சமயத்தாரும், ஏன் சமய மறுப்பாளர் களும் கூட, ஏற்றுப் போற்றிப் படித்துப் பேசும் அளவிற்கு அதில் ஈடுபாட்டையும் சூழலையும் உருவாக்கிக் கொடுத்தவர் என்பது உலகறிந்த செய்தி.

அதிலும் அவர் ஒரு விசித்திரம் புரிந்தார். 1960ஆம் ஆண்டுக் கம்பன் விழாவில் வழக்கம்போல ஒரு கவியரங்கம். 'கம்பனில் காணும் சமயக் கருத்து" என்பது அக்கவியரங்கின் தலைப்பு. அ.சீனிவாசராகவன் தலைமை.

திருவாளர்கள், ராய.சொக்கலிங்கன், பூ.அமிர்தலிங்கன், எஸ்.கே. இராமராசன், கி.வா.ஜ., வே.மி. சம்மனசு, சாரண பாஸ்கரன், திருச்சிற்றம்பலக் கவிராயர், பா.சூரிய நாராயணன் ஆகியோர் அரங்கேறிக் கவிதை பாடினர். அவர்களுக்கான பாடுபொருட்கள் முறையே, சைவம், வைணவம், சமணம், பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாமியம், வேதாந்தம், சமரசம் என்பனவாக வழங்கப்பெற்றிருந்தன.

இது வியப்பையும், வேறுபாடான சிந்தனைகளையும் அக்காலத்தில் தோற்றுவித்திருக்கும். ஆனால், அதுகுறித்து அவர் கவலைப்பட்டார் அல்லர்.

காரணம், எது செய்தாலும் பன்முறை நினைந்து தெளிந்து இறுதியாக, உறுதியாக வடிவமைத்துச் செயல்படுவத்துவதில் சிறந்த நிர்வாகி அவர். அவர் வரலாறறிந்தவர். தத்துவம் உணர்ந்தவர். ஆழ்ந்த படிப்பாளி. ஆயினும், வரலாற்றடிப் படையில், இத்தலைப்பு எப்படிப் பொருந்தும் என்பது பொதுவாய் எழுகிற வினா.

இங்கு தரப்பெற்ற, சமயங்களில் கிறிஸ்தவமும், இஸ்லாமும் கம்பனுக்குப் பிற்பட்ட காலத்தில் தமிழகத்திற்கு வந்தவை. அச்சமயக் கருத்துகளை எப்படி கம்பனுக்குள் காணமுடியும்?

'முடியும்' என்றுதானே கம்பன் அடிப்பொடி கொடுத்திருக்க வேண்டும். எப்படி நடந்ததோ, நேரில் கண்டவர்கள் உண்மை உணர்வார்கள். காண இயலாதார்க்கும் காட்ட ஒரு கையடக்கப் பதிப்பாய் ஒரு நூலைத் தந்திருக்கிறது, வந்தவாசி, திருத்தக்கத் தேவர் இலக்கிய மன்றம்.

'கம்பர் - சமணம்' என்ற தலைப்பில், இக்கவியரங்கில் எஸ்.கே. இராமராசன் பாடிய, கவிதையின் தொகுப்பு அது.

எழுதவும், எழுதிய இக்கவிதை நூலாக வெளிவரவும் துணை நின்ற சா.க. இந்நூலுக்கு அற்புதமானதொரு அணிந்துரை நல்கி யிருக்கிறார். அதில் இக்கேள்விக்கான பதில் செறிந்திருக்கின்றது.

> "கன்னித்தமிழின் கவிச்சக்கரவர்த்தியான கம்பன் காப்பியப் பேருலகில், தனிமுடிசூடி, அரியணை வீற்றிருப்பவன். எல்லாக் கலைகளையும் கற்றவன். எல்லாத் துறைகளையும் கண்டவன். பல்வேறு சமயங்களையும் ஆய்ந்தவன். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில், அவன், "கல்லாத கலையும் வேதக் கடலும் உலகத்து எங்கும் இல்லாத" என்று கூறிவிடலாம். காண்பவை, கற்பவை, யாவும் கடவுளின் தோற்றமே எனத் தெளிந்தவன். எனவே தான், ஆன்று, அவிந்து, அடங்கிய சான்றோனாம் கம்பன் விருப்புவெறுப்பற்ற மேல்வனாய் மிளிர்கிறான். எங்கெங்கு அருமையானவை, பெருமையானவை, பயனுள்ளவை காணப்படுகின்றனவோ, அவையெல்லாம் போற்றி, ஏற்றுக் கொள்வதில், அவனுக்கு நிகர் அவனேதான் இல்லா விட்டால், 'பல்பெருஞ் சமயம் சொல்லும் பொருளும் போல் பரந்த அன்றே" என்ற உண்மையுரை அவன் திருவாக்கில் மலர்ந்திருக்க முடியுமா?"

நமது கேள்விக்கு எதிர்க்கேள்வி போட்டு முடிகிற இடத்தில்தான் நமக்கான பதிலும் இருக்கிறது!

"பல்பெரும் சமயம் சொல்லும் பொருளும்போல்" - உலகப் பெருஞ்சமயங்கள் - அவற்றுள் இந்தியாவில் நிலைபெற்ற சமயங்கள் அத்தனையும் அடங்கிவிடுமே?

எப்படி எனில், இத்தொடர் கருத்துரையன்று; கவிதைத் தொடர். கவிதை, மேலோட்டமானதாகத் தோன்றுவதில்லை.

ஆழ்ந்த அனுபவ, தத்துவத் தெளிவின் ஒளியில் கிடைக்கும் தரிசனம். ஒரு சூத்திரம்போல் விரியும் பாங்குடையது. இந்த ஒற்றைச் சூத்திரத்தைக் கொண்டு தத்தம் சமயக்கருத்துக் களை ஒப்பிட்டு உணர்ந்துகொள்ள நிச்சயம் கம்பனில் இடமிருக்கிறது.

இதற்கெல்லாம் மேலாக, இத்தகு ஓர் அடிப்படைக் கூறு இத்தேசத்தில் இல்லாவிட்டால், எப்படி இந்தச் சமயங்கள் இந்தியச் சமயங்களாகவே இயைந்திருக்க முடியும்?

தருக்க ரீதியான இப்பதிலைக் கம்பன்அடிப்பொடி தனியே தரவில்லை. உய்த்துணர வைக்கிறார். இச்சிந்தனையை மேலும் விரிவுபடுத்திக்கொள்ள, சமணம் குறித்து, இக்குறுநூலில் அவர் தந்திருக்கும் முன்னுரை நன்கு உதவும்.

சைவ, வைணவ எழுச்சிக்குப் பின், தமிழகத்தில் சமணத்தின் நிலைதான் என்ன?

பல்வேறு தலங்களுக்குக் கல்வெட்டாராய்ச்சிக்காகவும், களப்பணிகட்காகவும் சென்ற அனுபவமும், தத்துவ நூல்களைத் தேடிப் பயின்று பெற்ற தெளிவும் கூடிப் பெற்ற உண்மையின் அடிப்படையில் எழுகிறது, இவ்வுரை.

> "தமிழகத்தில், இன்று சமணம் குடத்து விளக்காய் இருக்கலாம். சமய அளவில், பரந்த தொகையினரை அது கொண்டிருக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால், அது தன்னைப் பல்வேறு சமயங்களுக்குள்ளும் கரைத்துக் கொண்டு, அவைகளினுள்ளே உயிராய், ஒளியூட்டிக் கொண்டு வாழ்கிறது. மொழிக்கும், கலைக்கும் - ஏன்? பிற பல சமயங்களுக்குமே அது கொடுத்த கொடையை வரலாற்று மெய்யுணர்வாளர்கள் நன்றியுடன் பாராட்டத் தயங்குவதில்லை. சைவம் முதலிய பல்பெரும் சமயங்களும் இன்று தம்மவை என்று போற்றிப் புகழும் சீலங்களில் சிறந்தன பல சமணத்தின் நன்கொடையே என்பதை மறுத்துவிடல் எளிதன்று"- (கம்பர் சமணம்,முன்னுரை)

இப்படித் தெளிவாகச் சொல்கிறவர், சைவர். அதுமட்டுமல்ல, இக்கவிதையை அரங்கேறிப் பாடியதோடு, அச்சிடவும்

நல்கியவர் பழுத்த வைணவர். இது சமயப்பொறை அன்று; சமய ஒருமை. கம்பன் வழி தமிழ் வளர்த்த தண்மை.

கணதரரின் மறு அவதாரம் : கணேசன்

கம்பன்அடிப்பொடி, எந்த அளவிற்குச் சமணத்தில் ஆழத் தோய்ந்தவர் என்பதற்கு, சமண சமய இலக்கிய மன்றங்களில் ஆற்றிய உரைகள் சான்று பகரும். அத்தகு நிகழ்வுகளை முன் வைத்து, சமணச் சான்றோர் ஆன திரு.ஜீவபந்து ஸ்ரீபால் எழுதுகிறார்:

> "வந்தவாசி திருத்தக்க தேவர் இலக்கிய மன்றச் சார்பிலும், ஆரணி ஜைன சங்கச்சார்பிலும், அப்பெரியார் (சா.க) ஆற்றிய சொற்பொழிவுகளால் தமிழக ஜைன சமயத்தினர் கண் திறந்தனர். தமிழகத்திலுள்ள பிராமி கல்வெட்டுச் செய்திகள் பற்றியும், ஆங்குள்ள ஜீன மலைகளில் காணும் குகைப் பள்ளிகள் பற்றியும் அவர் விளக்கிப் பேசியபோது, அறிஞர் சா.கணேசனார் அவர்களை ஜைனப்பெருமக்கள், பகவான் மகாவீரர் சமண சரண அறிவுரை மண்டபத்தில் விளக்கம் கொடுத்து வந்த கணதரரின் மறு அவதாரந்தானோ எனப் புகழ்ந்து போற்றினர்." (கம்பன் அடிப்பொடி கலைக் களஞ்சியம், ப.344)

அப்படியானால், சா.க. கொண்டிருந்த சமணப் பற்றும் பக்தியும் எத்தனை தூயதாக, உயரியதாக இருந்திருக்க வேண்டும்! இது வெறும் படிப்பினால், தேட்டத்தால் வந்திருக்க முடியாது என்பதற்கு இன்னொரு நிகழ்வைச் சான்றாகக் கொள்ளலாம்.

> "ஒருமுறை, சென்னை வந்திருந்த ஆசாரிய துளசி அடிகளாரைத் தரிசித்து, ஒரு சொற்பொழிவாற்றினார். (சா.க). அவ்வுரையில், தாம் கோவலன், கண்ணகி மரபில் வந்தவரென்றும், இன்னும் தம்முடைய உடலில், ஜைன இரத்தம் ஒரு துளி ஓடிக்கொண்டிருக்கிறதென்றும் கூறி, அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தினார். இவரைப் பாராட்டிப் பெரிய ஆசாரிய துளசி அடிகள், "அன்பர் சா.கணேசனார் உரையால், யான் தமிழகத்தின் வரலாற்றுண்

மையை அறிந்தேன். அன்று மாத்திரம் அவர் ஜைனரா? இன்றும் ஜைனத்துறவியர்போல், சட்டை ஒன்றும் தரித்துக் கொள்ளாமல் அரையில் ஓர் ஆடையும் மேலே ஒரு துண்டுமாகக் காட்சியளிப்பதனின்றும், இன்றும் அவர் ஜைனரே!' எனப் பாராட்டிப் புகழ்ந்தார்" (மேலது)

என்று சொல்வதில் இருந்து இவரின் மரபு வேர் எங்கிருக்கிறது என்பது புரியும். மேலும் அறிந்துகொள்ள இவர் எழுதிய நகரத் தார் வரலாற்றையும், பிள்ளையார்பட்டித் தல வரலாற்றையும் பார்க்கலாம்.

இதுபோல் பதிவுசெய்யப்பெறாமல் காற்றோடு கலந்து போயிருந்த காலத்தின் சாட்சியங்கள் எத்தனையோ?

சா.க. கண்டுணர்ந்த சமயக்கொள்கை

இந்த இடத்திலே, கம்பன் அடிப்பொடியாரின் சமயக் கொள்கை என்ன என்பதையும் நாம் அறிந்துகொள்வது பொருத்தமுடையது.

"அவரவர்க்கு அவரவர் சமயமே உயர்ந்தது. அன்றேல் உகந்தது. அதை யாரும் மறுக்கப்படாது. மனிதனைப் போலவே சமயங்களும், காலம், இடம், சூழ்நிலைகளுக்கு ஏற்ப, வளர்கின்றன; மாற்றமடைகின்றன. நம்மவர் காணாத, அல்லது கொள்ளாத, நல்லன ஏதும் இல்லை என்று முடிவு கட்டப்படாது. அப்படிப்பட்ட நல்லனவற்றைத் தழுவிக் கொள்ளத் தயக்கமோ, அன்றித் தடையோ இருக்கவும் கூடாது. மற்றவர்கள் கண்டு கொண்ட நல்லன வற்றைத் தாங்களும் தழுவிக்கொண்டு பயனடைந்தோம் என்பதைச் சொல்லாமல் மறைக்க முயல்வது பாபம். இந்த நன்னெறியில்தான் நம் முன்னவர் சென்றுளர். அதை ஒப்புக் கொள்வதால் நமக்கொன்றும் சிறுமை இல்லை. மாறாகப் பெருமையே விளையும்" (கம்பர் சமணம்,முன்னுரை)என்ற கொள்கையுடையவர் சா.க.

உலகில் எந்தவொரு சமயத்தையும் வெறுத்து ஒதுக்காது, எல்லாச் சமயங்களையும் தன்னுடைய சமயமென ஏற்றுப் போற்றுகிற, அதே சமயத்தில் தன் சமயத்தன்மையைப் பேணிக்

காத்துக்கொள்கிற, இயல்பான உணர்வு இந்தியர்களுக்கு உண்டு என்பதை உலகறிய உணர்த்திய தமிழர்களுள் ஒருவர் சா.க. அத்தகு மனநிலையைக் கம்பனும் கன்னித்தமிழுமே தந்திருக் கிறார்கள் என்பதைப் பல்வேறு இடங்களில் பதிவு செய்திருக் கிறார் சா.க. அவர் மட்டுமின்றி, அவரொடு பழகிய ஆன்றோர்கள் பலரும் குறிப்பிட்டுரைக்கின்றனர். சான்றுக்கு ஒன்று காணலாம்.

> "கம்பன் கண்ட இரா்மனைப்போலவே, கணேசன் அவர்களுக்கும் போகும் இடமெல்லாம் சகோதரர்கள்தாம். சைவரா, வைஷ்ணவரா, கிறிஸ்தவரா, முஸ்லீமா, பணம் படைத்தவரா, இல்லாதவரா- என்ற பாகுபாடெல்லாம் பார்க்காமல் தமிழ்அறிஞர்கள், அதுவும் கம்பன் அடியார்களைக் கம்பன் குடைநிழலில் அரவணைத்துக் கொள்வார். கம்பன்அடிப்பொடி பல்கலை வித்தகர். கல்லூரிப் படியேறாமலே சகலமும் கற்றுணர்ந்த மேதை அவர். கலை, இலக்கியம், கல்வெட்டுஆராய்ச்சி, தொல்பொருள்துறை, கவிபாடும் ஆற்றல் என்று எல்லா வற்றிலும் அவர் பார்வை பதிந்திருந்தது. மேலோட்டமாக நுனிப்புல் மேய்கிற கணக்கில் பேசுவது அவரிடம் கிடையவே கிடையாது. எந்தவிஷயமாக இருந்தாலும், துருவித் துருவி ஆராய்ந்து தாம் தெளிவு பெற்ற பிறகே, அதை மற்றவர்களுக்கு உணர்த்துவார்" (கம்பன் அடிப்பொடி கலைக்களஞ்சியம், ப.47)

என்ற ராஜேஸ்வரிநடராஜனின் கருத்து, சா.க.வின் சமயங்கடந்த சகோதரத்துவத்தை அடையாளப்படுத்தும்.


ஆக, அரசியலிலும், ஆன்மிகத்திலும் ஆழஊடுருவிச் சமய, சமுதாயப் பணிகளைத் தம் காலத்தில் செம்மையுறச் செய்த கம்பன் அடிப்பொடியாரின் முக்கியப்பணிகளில் கலைப் பணியும், இலக்கியப்பணியும் தனித்தறிய வேண்டிய துறைகளாக அமைகின்றன. இந்த வேளையில்,

> " கடவுள் காரியம், கன்னித்தமிழ், கம்பன் கவின் கலைகள், கல்வெட்டு சாஸனங்கள், கட்டடக்கலை, கோயில்திருப்பணிக்கலை ஆகியவற்றில் ஒருங்கே ஈடுபாடும், ஆர்வமும், அறிவாற்றலும் கொண்ட

இவரிடத்தில் எது மேலோங்கிநிற்பது என ஆராய்ந்து துணிவது வீண் சிரமமும், கால விரயமும் ஆம் என்பது நான் அறிந்த ஒன்றாகும். இவ்வளவும் தம் தேசிய, சமூக சேவைகளுக்கும், சொந்த அலுவல்கள் பலவற்றுக்கு மிடையே இவருக்கு எப்படி இயலும் என்பதே இன்றும் என் பெரு வியப்பு" (மேலது, பக்.348-349)

என்கிற கே.ஆர்.ஸ்ரீநிவாஸன் கருத்தும் கவனத்திற் கொள்ள வேண்டிய ஒன்றுதான்!

□



3. கலைகளின் வழியே காலத்தை அளந்தவர்

'ஆய கலைகள் அறுபத்து நான்கு' என்பது இலக்கிய வழக்கு. அந்த எண்ணிக்கைக்கு அப்பாலும் கலைகள் விரிந்து வளர்கின்றன என்று சொல்வாரும் உண்டு. கலைகளுக்கென்றே ஒரு தெய்வத்தை உருவகப்படுத்தி வெள்ளைத்தாமரையில் வீற்றிருக்கச் செய்த பெற்றி இந்தியர்களுக்கு உண்டு.

"எண்ணமென உள்ளகத்தில் இருந்த செல்வி
எழில் தவழ மொழியாடை உடுத்திக் கொண்டு
பண்ணாரும் இசைமலரைக் குழலிற் சூடிப்
பற்பலவாம் கலைகளெனும் பணிகள் பூண்டு
நண்ணும்ஒலி வரிகள்எனும் வடிவம் தாங்கி
நற்செவிகள் கண்களுக்கு விருந்து நல்கும்

பெண்ணணங்காய் வெளிப்பட்ட பெற்றி தன்னைப்
பேசிடுவார் பொருளறியும் பெருமை யோரே"

என்று அவளின் தன்மையை அழகுறப் பாடுவார் கம்பன் அடிப்பொடி. (இதில் பண்ணாரும் என்பதற்குப் பொருத்தமாக, 'பண்ணிறையும்' என்ற சொல்லையும் எழுதிவைத்திருக்கிறார். இப்பாடல் அவர்தம் கையெழுத்துப் பிரதியில் இருந்து இப்போதுதான் அச்சேறுகிறது) அவளையே தமிழன்னையாகப் பெருமிதப்படுத்தி ஆலயம் அமைத்து வழிபடச் செய்த பெருமையும் அன்னாருக்கு உண்டு.

என்னவாயினும், தன்னிகரற்ற தமிழ்க்கலைகள் பலவற்றிலும் தகுபுலமை கொண்டவராகக் கம்பன் அடிப்பொடி இனிது விளங்குவதை, அவர் காலத்தில் அவரோடு பழகியவர்கள் உணர்ந்து வியந்து உரைத்த சாட்சியங்கள் பலவுண்டு. அவர்களால் சொல்லப்பெறாத மாட்சிகளும் நிறையவுண்டு. பலரும் பட்டியலிட்டுக் காட்டுவதில் தோற்றுப் போயிருக்கிறார்கள் என்பதற்கு முன்இயலில் கண்ட கே.ஆர். ஸ்ரீநிவாஸனின் மேற்கோளும் ஒரு சான்று.

பல்கலைத் திறன்கொண்ட பண்பாளர்

> "இலக்கிய ரசனையாளர், பேச்சாளர், எழுத்தாளர், கவிஞர், கதாசிரியர், ஆராய்ச்சித் திறனாளர், அஞ்சா நெஞ்சர், சிற்ப- கட்டிட வல்லுனர், கோயிற்கலை அறிஞர், இயல் இசை நாடகம் கற்றுணர்ந்தவர், கல்வெட்டு ஆராய்ச்சியாளர், வரலாற்றறிஞர், சிறந்த அரசியல் பண்பாளர், ஒழுக்கசீலர், நேர்மையின் நெறியாளர், அச்சுக்கலை உணர்ந்தவர், சோதிட கணித வரலாற்றுறைஞர், விஞ்ஞானத்தில் மெய்ஞ்ஞானம் கண்ட மெய்யன்பர், நகைச்சுவையாளர், விருந்தோம்பலில் சிறப்பெய்தியவர், சமையல் கலையைக்கூட நன்கு உணர்ந்து பக்குவமாய்ப் படைத்தவர், செய்ந்நன்றி மறவாத செம்மல், தமிழ் மரபுக்காவலர், இங்ஙனம் எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்கிய பெருமகன்"

என்று பட்டியலிட்டுப்பார்த்துப் பெருமைப்படுவார் அவர்தம் பெயரன் கம்பராமன். (கம்பராமாயணக் காவலர் சா.கணேசன்,

நெல்லை மாவட்டக் கம்பன் கழகக்கிளை வெளியீட்டு மலர், ப.6)

தந்தையறிவு மகனறிவு

இவற்றுக்கெல்லாம் காரணம், தமிழர்களுக்கே இயல்பாய் அமைந்த வாழ்க்கை முறை என்பதை மறந்துவிட முடியாது. 'வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபில் யானு மொருவன்' என்கிற உணர்வு உயிரணுக்களோடு ஒட்டிப் பிறந்தது. சூழலோடு கட்டிப்பிணைத்துக் கொண்டு காலத்தின் வேகத்திற்கேற்ப வளர்ந்தது. அதில் கவனமாய் இருப்போர் சிகரத்தைத் தொடுவர் என்பதற்கு எத்தனையோ வரலாற் றறிஞர்களைச் சான்றாகக் காட்டலாம். அந்த வரிசையில் கணேசனாருக்குச் சிறப்பிடம் உண்டு.

'தந்தையறிவு மகனறிவு' என்று பழமொழி குறிப்பிடும்.

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்"

என்பார் திருவள்ளுவர். இதற்குக் கூட இருந்து, கொண்டு நோக்கி முன் கொணர்ந்து நிறுத்தல் என்று பொருள் அன்று. முன்செய்துவைத்த் பணிகளே பின்வரும் சந்ததியை மேலுறுத்தும் என்பதற்கு வாழ்வியல் சாட்சியமாக விளங்கியவர் சா.க.

கர்மயோகியாகச் சிறந்த சா.க.விற்குச் சிறந்த முன்னோடி, அவர்தம் தந்தையார், சாமிநாதன் செட்டியார்.

"அவர்கள் சமயத்துறையிலும், சமுதாயத்துறையிலும் ஆற்றிய பணிகள் எண்ணிறந்தனவாகும். ஆடம்பரமின்றி, அடக்கமாகவே பணி புரியும் பண்பினர் ஆதலின், அவர்கள் செயல்கள் விளம்பரத்தில் இடம்பெறுதல் இல்லை. ஆயினும், பிள்ளையார்பட்டிக் கற்பகவிநாயகர் ஆலயத்தின் முன் ஓங்கி உயர்ந்து கலையழகுடன் விளங்கும் இராஜகோபுரம் என்றென்றும் அவர்கள் புகழைப் பறை சாற்றி நிற்கும். இன்னும் அவர்களுடைய நேர் கண் காணிப்பில் நிர்மாணிக்கப்பெற்ற வெள்ளிரதங்கள் பலவும், வாகனங்கள் பலவும் அற்புதமான கலைநுட்பத்துடன் அவர்கள் பெயர் முழக்கிநிற்கும். திருக்கோயில்களில்

கும்பாபிஷேகங்கள், பெருவிழாக்கள் சிறப்பாகவும் முறை தவறாமலும் நடாத்துவிப்பதில் தனித்திறமையுடையவர்களாயிருந்தார்கள். வேதவிற்பன்னர்கள், ஆகம பண்டிதர்கள், பண்ணிசை வாணர்கள், சிற்பக்கலைஞர்கள், ஆபரணப் பணியாளர்கள் என்றின்னோரன்ன குழுவினர் எந்நேரமும் அவர்களைச் சூழ்ந்திருப்பர். அவரவர்களுக்கு ஏற்ற வகையில் பணிகள் அமைத்துக் கொடுத்துச் சிறந்த முறையில் நிறைவேற்றி வைப்பதில் பெருமகிழ்வு பெற்றார்கள். தெய்வீகப் பணியே சிந்தை முழுதும் நிறையப் பெற்றிருந்தார்கள். சமுதாயத் துறையிலும், வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம் தாமாகவே முன்வந்து சரீர சிரமத்தையும், பொருட் சிரமத்தையும் பாராட்டாது, கருமமே கண்ணாக இருந்து செவ்வனே செயலாற்றுவதில் நிகரற்று விளங்கினார்கள்... அன்பர் கணேசனாருக்கு அவர்தம் தந்தையார் தேடி வைத்த அழியாச் செல்வம், தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் பெருநெறிச் செல்வமாகும். அவருடைய தொண்டு உள்ளம், கருவிலேயே உருப் பெற்றதாகும். உணவு இல்லாமல்கூட, அவர் வாழ இயலும். தொண்டு செய்யாமல் வாழ அவரால் இயலாது" (கம்பன் அடிப்பொடி கலைக்களஞ்சியம், பக்.334-335)

என்று குறிப்பிடுகிறார், தவத்திரு இராமநாத சுவாமிகள்.

அவர் ஒரு நடமாடும் பல்கலைக்கழகம்

ஆக, இயல்பாகவே, 'கோயிலைத் தழுவிய குடிகள், குடிகளைத் தழுவிய கோயில்கள்' என்கிற அடிகள்பெருமானின் கருத்தாக்கத்திற்குக் களனான செட்டிநாட்டுப் பின்புலம் கணேசனாருக்குப் பெரிய துணை. அத்தோடு, பாரம்பரியமாய் வாய்த்த அறிவும், பழக்கத்தால் கிடைத்த அனுபவமும், ஒழுக்கத்தால் மேம்படுத்திக்கொண்டு ஓய்வறியாது உழைத்த ஊக்கமும் அவரை, நடமாடும் பல்கலைக்கழகமாக உயர்த்திற்று என்பதே உண்மை. அதனால்தான், அவரோடு ஒட்டிப்பழகிய, க.கு.கோதண்டராமன், 'கம்பன் அடிப்பொடி ஒரு நடமாடும் பல்கலைக்கழகம்' என்று போற்றுகிறார்; கோவை கம்பன்

கழகத்தலைவர், ஜி,கே.சுந்தரம், "நடமாடும் கலைக் களஞ்சியம்" என்கிறார்.

நடமாடும் கலைக்களஞ்சியம்

ஏற்கெனவே சா.க.வோடு அரசியல் கலையில் இணைந்து தேர்ந்த அவர், இவ்வாறு உரைக்கக் காரணம், அவரோடிருந்து பெற்ற அனுபவம் தான் என்பதை அவரது கருத்துரை உறுதிப் படுத்துகிறது:

"1974ல் என் அறுபதாண்டுநிறைவு மணிவிழாவைக் கொண்டாட விரும்பினேன். செட்டிநாட்டார் இந்தச் சடங்குகளில் நன்கு துறைபோயவர்கள்; ஆதலால், நான், சா.கணேசனிடம் எனது மணிவிழாவை வைதீக முறைப்படி சிறப்பாகச் செய்து கொடுக்குமாறு வேண்டினேன். அவரும் முழுமனதோடு ஒத்துழைத்துக் கோவையில் விழாவை நடத்தி முடித்ததோடமையாமல், திருக்கடையூரிலும், திருநள் ளாற்றிலும் சிறப்பாகச் செய்து நிறைவேற்றினார். காஞ்சி, கும்பகோணம் போன்ற ஸ்தலங்களுக்குச் சென்றபோது, அந்தந்தக் கோவில்களின் ஸ்தல வரலாறுகள், தீர்த்தம், மூர்த்திகளின் பெருமைகள் ஆகியவற்றையும் கூட இருந்து நன்கு புரிந்துகொள்ளுமாறு ஒவ்வொன்றையும் விளக்கிக் கூறினார். அப்பொழுதுதான், அவர் கோயில்கள், சிற்பங்கள், புராணங்கள், ஆகம சாஸ்திரங்கள் ஆகியவை பற்றிய ஒரு நடமாடும் கலைக்களஞ்சியம் என்பதை உணர்ந்தேன்" என்கிறார். (மேலது, பக்.59-60)

கோயிற்கலை அறிந்த கோமகன்

எனவே, கலைகளின் தெய்வீகச் சுரங்கமாகத் திகழ்ந்த கோயிற்கலையில் அவருக்கிருந்த நாட்டம் அளவிடற்கரியது. இயல்பாகவே அமைந்த தெய்வபக்தியும், சுப்பிரமணிய சிவா, பாரதி, காந்தி போன்ற மகான்களின் தொடர்பால் பெற்ற தேசபக்தியும், கனிந்து கலைகளின்பால் அளவற்ற ஈடுபா டுடையவராய்க் காலம் கணேசனை உயர்த்திற்று. அதற்கேற்ப, எதிர்மறையாக, திராவிட இயக்கம் அவரைத் தூண்டி ஊக்கப் படுத்திற்று. நாத்திகம் பேசிய அவர்களைவிடவும் ஆத்திகம் பேசும் அன்பர்களின் அக்கறையற்ற போக்கும், அலட்சியமும்,

போலித்தனமான பக்தியும் மூடச்சடங்குகளும் அவரை, இத் துறையில் ஆழமாக இறக்கிவிட்டது என்றே கருத வேண்டி யிருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாகக் கம்பனிடம் அவர் பெற்ற கலைஞானம் இவரை இங்ஙனம் ஆக்கிற்று என்பது பலரும் பன்னிப்பன்னிப் பேசும் உண்மை.

எனவே, குடும்பத்தோடு இணைந்து இவரை வளர்த்த கோயிற்கலையில் இருந்து கணேசனாரின் கலைவளத்தை, இவ்வியலில் விரிவுறக் காணலாம்.

சிற்பிகள் போற்றிய பெருஞ்சிற்பி

தமிழகம் கண்ட ஐம்பெரும்கலைகளுள் சிற்பக்கலை ஒன்று. முடியரசர்களாகத் திகழ்ந்த மன்னர்களுக்குப் பின்னர் தனவணிகர்களாகிய நகரத்தார்கள் கோயிற்கலையில், அதிலும் குறிப்பாகச் சிற்பக்கலையில் சிறந்த கவனம் செலுத்தினார்கள். அவர்கள் வாழ்க்கைச் சூழலே கோயிலை அடியொற்றி அமைந்தது; வளர்ந்தது. அத்தகு பின்புலத்தில் பிறந்த கணேசனாருக்கு,

> "தமிழ் இலக்கியத்தில் ஈடுபாடும், ரசனையும் எவ்வளவு அவர்களிடம் காணப்படுகின்றனவோ, அவற்றைவிடச் சிற்பக்கலையில் ஈடுபாடும் ரசனையும் அவர்களிடம் மேலோங்கியிருக்கக் காணலாம்" (கம்பன் அடிப்பொடி கலைக்களஞ்சியம்,ப.33)

என்கிறார், அவரையே தமது ஞானத்தந்தையாக ஏற்ற வை.கணபதி ஸ்தபதி.

இவர் பிறப்பால் சிற்பி. கணேசனார் வணிககுல மரபினர். இவர் களைப் பிணைத்தது, கோயிற்கலை. தொழில் கடந்து இவர்களுள் இப்படியொரு உறவு மலர, உறுதுணையானது கணேசனாரிடம் இருந்த தனிஈடுபாடு. பரம்பரை பரம்பரையாக நகரத்தார்களோடு பழகிய ஸ்தபதி சொல்கிறார்:

> "இப்பெருமக்கள் விஷயத்தில் சிற்பிகளாகிய நாங்கள், மற்றவர்களிடையே கண்டிராத ஒரு தனிப்போக்கைக் கண்டிருக்கிறோம். புரவலரும், புலவரும் போன்று சிற்பிகளோடு நெருங்கிப்பழகியதன் பயனால் சிற்பக்

கலையின் நுணுக்கங்களை ஆர்வத்துடன் ரசித்துச் சிற்பிகளோடு வாதிட்டு ஆழ்ந்த உண்மைகளையும், இரகசியங்களையும் வெளிக் கொணர்ந்து ஒவ்வொருவரும் சிற்ப அறிவுக்களஞ்சியமாகவும் திகழ்ந்திருக்கிறார்கள். கோவிலுக்கு அளவு நிர்ணயம் செய்தல், கோவில் உறுப்புகளில் அடக்க, சுருக்க, சுழற்றிகள் ஒழுங்கு படுத்துதல், மண்டபப் பத்திகள், உயரங்கள், ஆகியவற்றை அழகுபட வகுத்தல், பிரகாரங்கள், கோபுரங்கள் நிர்மாணித்தல், இன்னோரன்ன பல தொழில் நுணுக்கங்களைச் சிற்பிகளோடு நல்ல கலை உணர்வுடனேயே ஏற்றுச் செய்வித்திருக்கின்றார்கள். சிலர் சாஸ்திர ஞானமும், ஆகம நூலறிவும், நடைமுறைத் தொழில் நுணுக்கங்களும் சிறந்த அளவில் கைவரப் பெற்றுப் பிறர் வியக்கும் பேரறிவு படைத்தவர்களாகவும் விளங்கியிருக்கிறார்கள்.... இத்துணை சிறப்புகள் வாய்ந்த இவ்வணிகப் பெருங்குடியில் அவதரித்தவர், தந்தை சா.கணேசன் அவர்கள். பரம்பரைச் சிறப்புகள் அனைத்தையும் ஒருங்கே பெற்றிருப்பதுடன், மற்றவர்களிடம் காணாத தனிச்சிறப்புகளும் வாய்க்கப் பெற்றவர்கள்" (மேலது, பக்.33-34)

என்று சா.கணேசனாரின் இயல்பினை உணர்ந்து ஓதுகிறார். அவர் மேலும் சொல்கிறார்:

"சிற்பங்களைப் பார்த்துப் புரிந்து ரசிப்பது எல்லோராலும் இயலாத ஒன்று. சிற்பியாக இருத்தல் வேண்டும். அல்லது சிற்பங்களை அடிக்கடி பார்த்து, ஆராய்ந்து, அவற்றின் உட்கருத்தையும் நயத்தையும் அறியும் கலை உள்ளம் வாய்ந்தவர்களாக இருத்தல் வேண்டும். இத்தகைய உள்ளம் கொண்டோர் நம் நாட்டில் மிகமிகக் குறைவு. என் வாழ்க்கையில், சிற்பத் துறையில் பலவேறு அலுவல்களில் ஈடுபட்டிருக்கும்,பல நிலைகளில் உள்ளவர்களைச் சந்தித்துப் பேசியுமிருக் கிறேன். அவர்களின் ரசிகத்தன்மையை ஓரளவு அறிய முயன்றுமிருக்கின்றேன். ஆனால், தந்தை சா.கணேசன் அவர்களிடம் கண்ட கலை உள்ளத்தின் பரப்பையும்,

ஆழத்தையும் வேறு யாரிடத்திலும் நான் காணமுடிய வில்லை. ஒரு சிற்பத்தின் சிறந்த கலைக்கூறுகளை, அதனைக் கண்டவுடன் தொட்டுப் பேசும் ஆற்றல் அவர்களுக்கே உரிய தனிச்சிறப்பாகக் காண்கிறேன். எங்கெங்கு மற்றவர்கள் தயங்குகிறார்களோ, பிறர் கருத்தை எதிர்பார்க்கிறார்களோ, அங்கெல்லாம் நயத்தோடு எடுத்துரைக்கும் ஆற்றல் நிரம்ப அவர்களிடம் இருக்கின்றது. தந்தை சா.கணேசன் அவர்களுடன் எத்தனையோ கோவில்களுக்கும் கலைக்கூடங்களுக்கும் சென்று வரும் பேறு பெற்றிருக்கிறேன். ஆங்காங்கே உள்ள சிற்பங்களைப் பார்த்து அவர்கள் பேசுவதை அவர்கள் தரும் புதுவிளக்கங்களை- சுட்டிக்காட்டும் நயங்களைக் காதாரக் கேட்டு, உள்ளம் மகிழ்ந்து வியந்தும் இருக்கிறேன். இவர்களுக்கு மட்டும் இத்துணை ரசிகத் தன்மை எங்ஙனம் தோன்றியது என்று நான் துணிந்து இதுவரை அவர்களைக் கேட்க முடியவில்லை. அவர்களே ஒருமுறை பிறரிடம் இதுபற்றிச் சொல்லிக் கொண்டிருந்த உண்மை என் மனதை நெகிழச் செய்துவிட்டது" (மேலது)

என்று கூறி 'அவர் சொன்னது இதுதான்' என்று ஸ்தபதி சொல்லியதை இந்நூலின் இறுதி இயலில் பார்க்கலாம்.

சிற்பக்கலை நுட்பம் தெரிந்த செம்மல்

சிற்பக்கலையில் இத்துணை வல்லவராக இருந்த சா.க., அக்கலையைப் பொருத்த மட்டில், வெறும் இரசிகராக மட்டும் இருக்கவில்லை. அதனை, ஆழநீளங்களுடன் கண்டுணர்ந்து தம் காலத்திற்கொப்பப் புதுக்கியவர் என்பதுதான் இங்கு கவனிக்க வேண்டிய செய்தி.

பார்த்து, பழகி, பலருடன் பேசித் தெரிந்து கொண்ட செய்திகளோடு, அது தொடர்பாகப் படித்தும் அவர் கற்றுக் கொண்டவை அதிகம். பதச்சோறாக ஒரு அனுபவத்தைப் பார்க்கலாம்.

சிற்பங்களைச் செம்மையாகச் செதுக்குவதற்குச் சிற்பிக்குப் பெரிதும் தேவை, சிற்ப நூல்கள். பெரும்பாலும் சிற்பிகள் மட்டுமே தேடித்தொகுத்துப் படிக்கவேண்டிய ஒருதுறை நூல். இன்றைக்குக்

கணினித்துறையில் வளர்ந்து வரும் ஜாவா, சி பிளஸ்பிளஸ் (Java. c++) போல. அதனை மற்றவர்கள் ஈடுபாடு கொண்டு படித்தாலும் புரியாத நுட்பங்கள் அதில் உண்டு. ஆனால், சா.க. அவர்கள் அத்தகு நூல்களை, ஆங்கிலம், தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளில் வெளிவந்த அனைத்துச் சிற்ப நூல்களையும் தேடித்தொகுத்துப் படித்துப் பாதுகாத்தும் வைத்திருந்தார் என்பது மிகவும் குறிப்பிடத் தகுந்த ஒன்று. "ஏன்? சிற்பிகளிடம் இல்லாத நூல்களும் இவர்களிடம் உண்டு என்றால் மிகையாகாது" என்கிற ஸ்தபதி, சான்றுக்கொரு சாட்சியம் தருகிறார்:

> "அலகாபாத் பல்கலைக்கழக சமஸ்கிருதப் பேராசிரியர் திரு. பி.கே. ஆச்சார்யார் அவர்கள் பதிப்பித்த, 'மானசாரம்' என்ற சிற்ப நூலின் சமஸ்கிருத மூலம் மட்டுந்தான் எங்கள் வீட்டில் உண்டு. ஆனால், தந்தை சா.கணேசன் அவர்களிடம் மூலத்துடன் அதைப் பற்றிய பிற ஆறு துணைநூல்களும் இருக்கின்றன. அந்த நூல்களை அவர்களிடம் வாங்கிப் புரட்டிப் பார்த்தால், அவர்கள் அவற்றினுள்ளே புகுந்து படித்துப் பலவித கேள்விக் குறிகளையும், கருத்துரைகளையும் ஆங்காங்கே எழுதி இருப்பதைக் காணலாம்". (மேலது,ப.35)

இவ்வாறு படிப்பதோடு நின்றுவிடவில்லை, சா.க.வின் பணி. அந்த ஆற்றலைப் படைப்பாக மாற்றுவதில்தான் அவர் உயர்ந்திருக்கிறார்.

அலைதின்ற புகார் நகரைக் கலைகொண்டு மீட்டவர்

கடல் கொண்ட காவிரிப்பூம்பட்டினத்தில் கலைவண்ணம் மிளிர அவர் செய்த அரிய செயல்கள் விரித்துரைக்க இயலாத ஒன்றாகும்.

மயன் என்ற தமிழகப் பெருந்தச்சன் ஆதியில் பூம்புகாரைச் சமைத்ததாக, இலக்கியக் குறிப்புகள் சுட்டுகின்றன. அந்நகரத்தின் மாட்சியை எவரும் அறியாதபடி கடல்கோள் விழுங்கிவிட்ட நிலையில், மறுபடி அதனை நினைவுறுத்த விரும்பியது, அவர் காலத்துத் தமிழக அரசு.

தமிழ்ப்பெருங்காப்பியமாகிய சிலப்பதிகாரத்தை ஆராய்ந்து, அவ்வண்ணமே தமிழகத் தொல்பொருள் ஆய்வுத்துறையினர்

நடத்திய, பூம்புகார் கலைக்காட்சியில் முதல் முதலாக அப் பட்டினத்தின் ஒரு சிறந்த மாதிரியை உருவாக்கிக் கண்ணெதிரே காட்டிய பேராற்றல் சா.கணேசனாருக்கு உண்டு. அதுபோல், தஞ்சைக் கலைக்கூடத்தின் படைப்பு மூலவர்களுள் (சிருஷ்டி கர்த்தாக்களுள்) அவரும் ஒருவர்.

வடபெருங்கல் எடுத்துவந்து, சேரநாட்டில் சிலை நிறுவிய செங்குட்டுவன்போல், சோழநாட்டில், அதிலும் கண்ணகி பிறந்த பூம்புகார்ப்பதியில், பத்தினிக்கோட்டம் அமைக்க, சா.க. செய்த பணிச் செழுமையை உடனிருந்து கண்டு பங்கேற்றுப் பணி செய்த, வை.க. ஸ்தபதி கூறுகிறார்:

> "பத்தினித் தெய்வம் கண்ணகிப் பெருமாட்டிக்குக் கோட்டம் நிறுவ மனை தேர்ந்தெடுக்கப் பூம்புகாருக்கு அவர்களுடன் நானும் சென்றிருந்தேன். அவர்களே இடத்தைத் தேர்ந்தெடுத்தது மட்டுமல்லாமல், கோட்டம் நோக்க வேண்டிய திசையையும் 'மாக்னடிஸ்' (Magnetic Compas) கொண்டு தீர்மானித்து, கயிறு பிடித்து, வரை கோடிட்டுக் கூடியிருந்த பெரியோர்கள் வியக்கக் கோட்டத்தின் பார்வை பற்றிய உட்கிடக்கையையும் விளக்கினார்கள். கிழக்கு நோக்கிய இக்கோட்டம் ஈசானியப் பார்வை உடையதாக இருத்தலுக்குக் காரணம், ஊர் மக்களின் நல்வாழ்விற்குத் தேவை என்ற சிற்ப ரகசியம் அவர்களுக்கு நன்கு தெரிந்திருந்தமையால் தான்." (மேலது,ப.36)


பத்தினிக்கோட்டமும் சிலையும் நாட்டிய பாங்காளர்

இளங்கோவடிகள் எழுப்பிய சொற்கோயிலைப் பெற்ற கண்ணகிப்பெருமாட்டிக்குக் கற்கோயில் எழுப்ப விரும்பிய காரணத்தையும், அதனால் விளைந்த காரியங்களையும் பின் வருமாறு எழுத்தில் வடிக்கிறார் சா.க.

> "கற்கோயிலைப் போலவே ஓர் அற்புதச் சொற் கோயிலையும் பெற்றாள் கண்ணகிப்பெருமாட்டி... இந்தச் சொற்கோயிலை வலம்வந்தே பல பக்தர்கள் உட்சென்று கண்ணகித் தெய்வத்தைக் கருத்தால் கண்டு கைதொழ லாயினர். ஆனால் கண்ணாற்கண்டு கைதொழ ஒரு

கோயிலும் இன்றில்லை. கண்ணகி கோயில்தான் என்று நல்லறிஞர்கள் அறுதியிட்டுக் கூறும் கோயில்களும் பலவேறு அம்மன் கோயில்களாகவே ஆகி இன்று கொற்றவை வழிபாட்டிற்கு உரியனவாய் இருக்கின்றன. பூம்புகாரிலும் பத்தினிக்கோட்டம் ஒன்று இருந்திருக்க வேண்டும். அதற்குரிய சான்றுகள் ஏதும் கிடைக்காத நிலையில் உறுதியாக ஒன்றும் கூறமுடியவில்லை. பிற பல கோயில்கள் முதலியவற்றைப்போல, கண்ணகி கோயிலும் சிதைவாலோ அன்றிக் கடல்கோளாலோ மறைந்தும் போயிருக்கலாம். அஃது எப்படியேனும் ஆகட்டும். எங்ஙனம் உ.வே.சாமிநாதய்யரால் சொற்கோயிலாம் சிலப்பதிகாரம் நமக்குக் கிடைத்ததோ, அங்ஙனமே, காவிரிப்பூம்பட்டினத்து, மேலையூர் தாசில் பண்ணையால் கற்கோயிலாம் பத்தினிக்கோட்டத்தையும் நாம் பெற்று மகிழ்கிறோம். 1951ல் டாக்டர் ஆர்.கே.சண்முகம் செட்டியார் தலைமையில் பூம்புகாரில் சிலப்பதிகார விழா சிறப்புற நிகழ்ந்தது. வரவேற்புக் கழகத்தலைவராகத் தாசில் பண்ணை அதிபர் அமரர் கே.எஸ்.ராமலிங்கம் அவர்கள் விளங்கினார். அவர் அவ்விழாவில் கண்ணகிக்குக் கோயில் எழுப்புவதாக உறுதிபூண்டார். சிற்பநூல் நெறிப்படி கண்ணகி படிமம் செய்ய எளியேன் ஆலோசனையை விரும்பினர்." (பத்தினிக்கோட்ட அறநிலை வெளியீடு)

பின்னர், வை.கணபதி ஸ்தபதியாரிடத்தில் அப்படிமம் செய்யும் பணி ஒப்படைக்கப்பெற்றது. உலகத் தமிழ் மாநாட்டில், கலைக்காட்சிக்கூடத்தில் கொலுவீற்றிருந்த




அச்சிலைக்கு, முறைப்படி, நீர்ப்படை (ஜலவாசம்), கூலப்படை (தான்யவாசம்) முதலியன செய்யப் பெற்று சுமார் 3 ஆண்டு கட்குமேல் தாசில் பண்ணையில்

வைக்கப்பெற்று, பின்னர் 6.6.72ல் ஆகமநெறிப்படி கடவுண் மங்கலமும் குட நீராட்டும் மிகச்சிறப்பாகச் செவ்விதின் நிறைவேறிற்று. இதற்கான கால்கோள் விழா, 4.11.68இல் சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் அவர்கள் தலைமையில், அப்போதைய தமிழக முதல்வர் மு.கருணாநிதி அவர்களால் செய்யப் பெற்றது. திரு. ராமச்சந்திரஸ்தபதி தலைமைத்தச்சர் பொறுப்பேற்றார்.

அந்த வகையில், பத்தினிக் கோட்டத்தின் பாங்கும் பத்தினித் தெய்வத்தின் படிமமும் எத்தகையனவாய் அமைக்கப் பெற்றுள்ளன என்று சா.க. அவர்களே பின்வருமாறு விளக்குகிறார்:

> "பத்தினிக்கோட்டம் முற்றிலும் கருங்கல்லால் ஆன கட்டுமானம்; சதுர அமைப்புடையது; விமானம் சதுரமானது. இந்த விமான அமைப்பு மிகப் பழமை யானதாகும். இவ்வகை விமானங்கள் தற்பொழுது எங்கும் காண இயலாததாகும். இது வைக்கோல் வேய்ந்து முகடு கூட்டிய முறையில் காணப்படும். முகட்டின் அடிப்பாகம் நான்கினும் கோடிப்பாளை அமைந்திருக்கும். விமானத்தின் நான்கு மூலைகளிலும் கர்ணகூடம் விளங்கும். கோட்டத்தின் நாற்புறத்தும் தோரணம் மிளிரும். இது 'வையக மானம்' எனப் பெயர் பெறும். இவ்விமானம் அமைப்பதற்கு அடிப்படை முன்மாதிரியாக, மாமல்லபுரத்தில், 'துரோபதை ரதம்' என்று கூறப்படும், 'கூர்ச்ச குடில்' (புல்லகம்) கொள்ளப்பெற்றது. அதன் அமைப்புடன் வேண்டும் விகற்பங்களும் சேர்த்தமைக்கப் பெற்றது. அங்ஙனம் சேர்க்கும்பொழுது சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றுள் காணப்பெறும் சிற்ப அமைதிகளை மனத்திற்கொண்டு அவற்றை முடிந்த அளவுக்குத் தழுவிக் கொள்ளப் பெற்றது. இந்த விமானத்தை ஏன் மேற்கொண்டோம் என்றால், மிகப் பழைய வரலாற்றுப் பாத்திரத்திற்கு அமைக்கப்படும் கோட்டம் நவீன அமைதியைப் பெற்றுவிடலாகாது என்ற எண்ணந்தான். அங்ஙனமே, கண்ணகிக்குத் திருவுரு அமைக்கும்போதும், பெருங்கவனம் செலுத்தப்பெற்றது.



ஆடை, அணி முதலிய யாவும் அக்காலத்திற்கேற்ற, நூல் வழிக் கண்ட வண்ணமே சித்திரிக்கப்பெற்றன" (மேலது).

கையில் சிலம்பேந்தி நிற்கும் கண்ணகியையே பெரிதும் கண்டு பழகிய நம் கண்களுக்கு இவர் காட்டும் பத்தினித் தெய்வத்தின் படிம பாவம் வித்தியாசமானது; விளக்கமுறையில் சிலம்பின் உள்ளுணர்வுவழி செய்யப்பெற்றது. சொல்லில் இருந்து அக்கருத்தாக்கத்தை உள்வாங்கிக் கல்லில் கொணர முயன்ற அவர்தம் கருத்தையும் அவர் வடிவமைத்த கற்சிலையையும் ஒப்பிட்டு நோக்கப் பின்வரும் மேற்கோள் பெரிதும் உதவும்.

"கண்ணகி சிலையைச் சிறிது ஆழ்ந்து நோக்கலாம். சினம் முழுவதும் அடங்கிச் செந்தண்மை பூண்ட சிந்தையளாய் திருவாயில் சிறுமுறுவல் அரும்பச் சிலம்பொன்று திருக்கரத்தை அணிசெய்யத் திகழ்கிறாள் கண்ணகித் தாய். ஆம் வழக்குரைத்து, வாதில் வென்று, வளநகரை எரியூட்டிய பின் காதற்கணவனைக் கண்டு ககன மாந்தர் வாழ்த்தி ஏத்தக்



கடுஞ்சினம் அடங்கிக் களிப்பினோடு வானூர்தியில் ஏறி விண்ணகம் சென்ற தெய்வத்தாயன்றோ?

"தென்னவன் தீதுஇலன்;
தேவர்கோன்- தன்கோயில்
நல்விருந்து ஆயினான்;
நான் அவன்தன் மகள்"

என்று உவகை பொங்க உரைத்த கொங்கச்செல்வி குடமலையாட்டி யாய் நின்று,

"வெண்வேலான் குன்றில்
விளையாட்டு யான் அகலேன்;
என்னோடும், தோழிமீர்! எல்லீரும் வம்,
எல்லாம்"

என்றும் அழைத்து, எல்லோருடைய ஆடல் பாடல்களை எல்லாம் கண்டு கேட்டுக்களித்து,

"நீடூழி, செங்குட்டுவன், வாழ்க!"

என்றும் மனமார வாழ்த்தி மகிழ்ந்தவள் அல்லவா? ஆகவே, குறுநகையும், அருள்விழியும், அணிமுழுதுடைமையும் கொண்டு வந்தோரை எல்லாம், வணங்கினோரை எல்லாம் வாழ்த்தி வரந் தரக் காத்து நிற்கின்றாள்.

காவிரிப்பூம்பட்டினம் வருவாரை எல்லாம் வாழ்த்தி, வரந்தர,

"காகந்தி நல்நகரைக் காலம்எல்லாம் யான் அகலேன்
என்னைத் தொழுதிறைஞ்ச எல்லீரும் வம், எல்லாம்"

என்று கூறி அழைக்கின்றாள். பூம்புகார் செல்வோர் எவரும் முதலில் பத்தினிக்கோட்டத்தில் கற்புத் தெய்வத்தை வழிபட்டு வரங்கொண்ட பின்னரே மற்றெங்கும் செல்ல முடியும். ஆம்; அப்படிப்பட்ட முன் இடத்தை, முதல் இடத்தைத் தேடிக்கொண்டுவிட்டாள் பத்தினிக் கடவுள்!"

(மேலது)

இன்றைக்கும் அக்கோயில் வழிபாடு செம்மையுற நடத்தும் பணியை, அவ் அறநிலையக் காப்பாளர் தாசில் பண்ணை திரு. இரா. இராஜசேகரன் இனிதுநிகழ்த்திவருகிறார்.

அலைகடலுக்கு அப்பாலும்..

இத்தகு நுட்பமும் ஆய்வு மனப்பான்மையும் இருந்ததால் தான், கோலாலம்பூரில் நடைபெற்ற முதலாவது உலகத்தமிழ் மாநாட்டில், தமிழகச்சிற்பக் கலை தொடர்பான ஆய்வுக் கட்டுரையை அவரால் வழங்க முடிந்தது.

அதுமட்டுமன்றி, இத்தகு பேராற்றலை அவர் பெற்றிருந்த காரணத்தால்தான் மலேசியாவில் வழிபாட்டுத்தலத்தில் ஏற்பட்ட ஒரு சிக்கலுக்குத் தீர்வுகாண இந்தியாவிலிருந்து இவர் அங்கு அழைக்கப்பெற்றார். அதில் நீதிபதிகளே வியக்கும் வண்ணம் நீதி வழங்கிய இராஜராஜன் இந்தக் கணேசன் என்பதற்கு, ஒரு நீதிபதியே சாட்சியம் ஆகிறார்:

> “மலேயாவில் ஒரு சிக்கலான வழக்கு ஏற்பட்டது. ஒரு கோயிலில் உள்ள சிலை மாரியம்மன் சிலையா? அல்லது திரௌபதியம்மன் சிலையா? என்பதைப் பற்றிய வழக்கு. வழக்கைத் தீர்த்து வைக்கமுடியாமல், அங்குள்ள நீதிபதிகள் திணறினார்கள். சிறந்த இலக்கிய அறிவும், சிற்ப நூலறிவும், வரலாற்றறிவும் படைத்த ஒருவர்தான் இந்தச் சிக்கலைத் தீர்த்துவைக்க முடியும் என்றுணர்ந்து, இருசாராரும் நண்பர் கணேசனைப் பஞ்சாயத்தாராக நியமித்தார்கள். நடுவர் இதற்காகத் தமிழ்நாட்டில் இருந்து மலேயாவுக்குப் பறந்து சென்றார். சாட்சிகளை விசாரித்துவிட்டு, சிலையின் அம்சங்களை நேரில் கண்டு, அலசி ஆராய்ந்துவிட்டு நண்பர் கணேசன் தமிழில் ஒரு தீர்ப்பு எழுதியிருக்கிறார். முப்பது ஆண்டுகள் நீதிபதியா யிருந்தவருக்குரிய தெளிவோடும், அமைதியோடும், சட்ட நுணுக்கத்தோடும், காரண காரியத்தொடர்போடும், எல்லாவற்றிற்கும் மேலாக இலக்கியப் பயிற்சியால் மட்டுமே பெறக்கூடிய பரிவோடும் எழுதப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்ப்பு.

அதோடு மட்டுமல்லாமல், தமிழில் இப்படி ஒரு அரிய காரியத்தைச் சாதிக்கமுடியும் என்பதை அத்தீர்ப்பு நிலை நாட்டுகிறது. அதைப்படித்த இருசாரார்களும் மனமுவந்து தீர்ப்பை ஏற்றுக்கொண்டார்கள்" (கம்பன் அடிப்பொடி கலைக்களஞ்சியம்,ப.71)

என்று பாராட்டியவர் வேறு யாருமல்லர். அவரோடு இருந்து, இணைந்து கம்பன் திருப்பணியாற்றிய நீதிபதி - ஜஸ்டிஸ் மகாராஜன்தான்.

பாலையைப் பசுமையாக்கிய பாங்காளர்

இவ்வளவு நுட்பமும் திட்பமும் வாய்ந்த சா.க., குழந்தை மனத்தோடு படைப்பாற்றல் திறத்தை வெளிப்படுத்திச் சூழலை இனிமையாக்கியவர் என்ற குறிப்பையும் அவர் தம் கட்டுரை யொன்றில் காட்சிப்படுத்துகிறார்.

1954ஆம் ஆண்டு. இராமநாதபுரத்தில் கம்பர்விழா. அங்கு கம்பன் அடிப்பொடியான சா.க.வுடன் சென்றிருந்த நீதிபதி மகாராஜன், அருகில் உள்ள திருப்புல்லாணித் திருத்தலத்தைத் தரிசிக்க, ஒரு ஜீப் காரில் செல்கிறார்கள். சித்திரை மாதத்து உச்சிப் பகல் பொழுது. பாலைநிலம். அதன்வழியே செல்லும் அவ்வாகனம் அச்சு முறிந்து நின்றேவிட்டது. நிர்க்கதியான நிலை. மாற்றுவண்டிக்குச் சொல்லிவிட்டுக்காத்திருந்த தருணம். உதவி வரக் குறைந்தது 3 மணிநேரம் ஆகும் சூழல். பசி, வெயில், அதனால் வந்த கோபம் எல்லாம்கூடி, கூட்டிவந்த ஜீப் வண்டியை, நீதியரசர் சபித்துக் கொண்டிருந்த நேரம். ஆனால், சா.க. என்ன செய்தார். நீதிபதியே எழுதுகிறார்:

"நண்பர் கணேசனோ உற்சாகமயமாகிவிட்டார். ஒரு ஜமுக்காளத்தை எடுத்து வந்து ஒரு கருவேல மரத்தடியில் விரித்தார். அவருடைய தோல்பையில் இருந்து (தோல் பையா அது, அட்சயபாத்திரம் அல்லது சமயசஞ்சீவி என்றே அதை அழைக்கவேண்டும்). நன்றாகச் சாணை பிடித்த ஒரு கத்தியை எடுத்து வந்தார். அந்தக் கத்தியின் தந்தப் பிடிக்குள்ளேதான் எத்தனை எத்தனை மாயக் கருவிகள். கத்தியால் அரசங்குலையை அறுத்துவந்தார். குலையிலுள்ள பூக்களைக் கொய்து, அவற்றின் விசித்திர

அமைப்பைப் பற்றிப் பேசத் தொடங்கினார். நான் தாவர இயல் படித்தவன்தான். ஆனால், பூவைப் பார்த்து ரசிப்பதற்கு இதுவா நேரம்? என்னுடைய சுடுமூஞ்சித் தனத்தை லட்சியம் பண்ணாமல், நண்பர் ஓர் அரசிலையைச் சுருட்டி, அதில் ஒரு ஈர்க்கம்குச்சியைச் செருகி, வாயில் வைத்துப் பீப்பி ஊதத் தொடங்கினார். அதில் ஆரோகண அவரோகணக் கிரமங்களைக் காட்டினார். கருவேல மரத்திலிருந்து காய்களைப் பிடுங்கி, புல்லாக்கு செய்து மூக்கில் போட்டுக்கொண்டார். ஒரு ஜோடி பச்சைத் தோடுகள் செய்து காதுகளில் மாட்டிக் கொண்டார். பிறகு, கம்பன் பாலைவனத்தை வருணித் திருக்கும் பாடல்களை அவருக்கே உரிய இராகத்தோடு பாடினார். உடனே என் பசியும், கோபமும், ஏமாற்றமும் எப்படியோ பறந்தோடி விட்டன. சோர்வு நீங்கி, நிமிர்ந்து உட்கார்ந்தேன். வெயிலையும், பாலைவனத்தையும் மறந்து ஸஹிருதய நிலையிலே அவருடைய ஆனந்தத்திலே நானும் கரைந்துவிட்டேன். மாப்பிள்ளை வி.கே.சி. நடராஜன் மாலை 4 மணிக்கு ஒரு தனிக்காரில் எங்களை அழைக்க வந்தபோதுதான், எனக்கு மண்ணுலக நினைவு வந்தது." (மேலது.ப.67)

கம்பனில் ஓர் இடம் வரும். தசரத இராமனையும், இலக்குவனையும் அழைத்துக்கொண்டு, தாடகையை வதம்புரிய, விசுவாமித்திரன் கிளம்பிய வழியில் குறுக்கிடும் பாலைநிலம்.

"பருதிவானவன் நிலம் பசை அறப் பருகுவான்
விருது மேற்கொண்டு உலாம் வேனிலே அல்லது ஓர்
இருது வேறு இன்மையால். எரி சுடர்க் கடவுளும்
கருதின். வேம் உள்ளமும்; காணின். வேம் நயனமும்"

என்று பாடுவான் கம்பன். பருதியான சூரியன், பச்சை அற்றுப் போகும்படி பருகிய நிலம். வேனில் அல்லது வேறு பருவமும் இல்லாத பாழ்நிலம். எரிசுடர்க்கடவுளும் கருதிக் கண்டால் காணும் கண்ணும், நினைக்கும் மனமும் வெந்து போகும்படியான வெம்மைநிலம்.

கடக்கும் சிரமம் ஏற்படாமல் இருக்க, இளையோர் இருவருக்கும், அவ்வெம்மையைத்தாங்கும் மந்திரத்தை உபதேசித்தான் அந்த முனிவன். 'பச்சிளம்பிள்ளைகள். பூவின் மெல்லியர்' ஆகிய இளையவர் இருவரையும் மனதில் நோக்கி, அவர்தம் முகம்நோக்கினான், அவர்கள் அம்முனியின் பாதம் நோக்கினர். அம்முனிவன், பாலையை வெல்லும் இரு மந்திரங்களை அப்பாலகர்களுக்கு உபதேசித்தருளினான் என்று கம்பன் பாடுகிறான். (*356*)

இது பொய்யோ, கம்பனின் கற்பனையோ, மெய்யோ? ஆனால், கம்பனைக் கற்ற இரு பாலகர்களுக்கும் ஒருபெரும் முனியாய்க் கம்பன் மறைமுகமாக எழுந்தருளி, அதற்கான மாற்றுமந்திரங்களைக் காட்டினான் என்பதும், கம்பன் அடிப்பொடியை இராமன் ஆக்கி, இளஞ்சிங்கம் இலக்குவன் ஒத்த மகாராஜனின் சீற்றத்தைத் தணித்தான் என்பதும் இங்கு துலக்கமாவதைத் தெளியலாம். இப்படி எத்தனையோ நிகழ்வுகள்.

அதனினும் கொடியது; ஆயினும்...

> "பாலைவனத்தைக் காட்டிலும் கொடியது சிறைவாசம். பூர்த்தி செய்ய முடியாத தேவைகளை மீண்டும் மீண்டும் உள்ளத்தில் கொண்டுவந்து நிறுத்தி மனிதனுடைய பேராண்மையைப் பரிகசித்து, ஆன்ம வீரத்துக்கு உலை வைப்பது சிறைவாசம். அனிச்சமலரினும் மென்மையான பல உள்ளங்களில் நிரந்தரமான கசப்பையும், புளிப்பையும் ஏற்றிச் சீர்குலைத்திருக்கிறது அது. ஆனால், தீரன் கணேசனுடைய உள்ளத்தை அது குலைக்கமுடியவில்லை. காரணம், அவருடைய இலக்கிய அறிவும், எதிர்நீச்சல் போடும் திறமையுமே. சிறை வாழ்க்கையில் அவர் சோம்பியிருந்த நேரமே கிடையாது. திறமையோடு, காய்கறி திருத்தியும், பக்குவமாகச் சமையல் செய்தும், மற்றவர்களுக்குச் சுவையோடு உணவு பரிமாறியும், மற்ற நேரங்களில் சிறைச்சாலைவாசிகளுக்குக் கம்பராமாயணம், திருக்குறள் முதலிய அரிய நூல்களைப் பாடம் சொல்லிக் கொடுத்தும், இராஜாஜி

போன்றவர்களிடம் அரசியல் பாடம் கற்றும், சிறை வாழ்வின் கொடுமைகளை வென்று, உள்ளத்தை உழைப்பால் தூய்மைப்படுத்திக் கரையேறியவர் கணேசன்" (கம்பன் அடிப்பொடி கலைக்களஞ்சியம்,ப.68)

என்கிறார் அந்நீதிபதி.

இராமனுக்கு அம்பறாத்தூணி; கணேசனுக்குக் கைப்பை

இங்கு, இராமனுக்கு அம்பறாத்தூணிபோல, கம்பன் அடிப்பொடிக்கு அமைந்தது கைப்பை. இதுபற்றி இன்னொரு குறிப்பையும் இங்கு சுட்டுவது பொருத்தமுடையது.

"அவர்களுடைய கைப்பெட்டியில், எந்த நேரத்திலும், ஒரு ஸ்கேல், பென்சில், ரப்பர், மேக்னடிக் காம்பஸ், டேப், டிராயிங் பென்சில், கலர் பென்சில், கருவிப்பெட்டி (Instruments Boxs), பூதக்கண்ணாடி ஆகியவை எல்லாம் இருக்கும். இவை (சிற்பத்) தொழில் புரிவோருக்கு அல்லவா வேண்டும்? தந்தை கணேசன் அவர்கள் கோயில்களுக்குச் சென்றால், இவைகளெல்லாம் தொழிற் படத் தொடங்கும்" (மேலது.ப.36)

என்கிறார் ஸ்தபதி கணபதி.

இத்தொழில், காலத்தை இணைக்கும் காரியமாகும் என்பதே இந்நூலின் வேர்ச்செய்தி.

அதாவது, பழந்தமிழ் மற்றும் பழந்தமிழகப் பெருமையைப் பேசிக்கொண்டு நிகழ்காலத்தை மறந்துவிட்ட தமிழகச் சூழலில், அவற்றைத் தம்அரும்பெரும் கலைப்பணிகளால் மீட்டுருவாக்கம் செய்தவர் சா.க.

கலைநயம் பொலிந்த காட்சியமைப்பாளர்

இத்தனைக்கும், கம்பனுக்கு எதிர்நின்ற கழகத்தாருடன் உடனின்று களப்பணியாற்றித் தமிழின் பெற்றியைத் தரணி யறியச் செய்தவர் கணேசன். 'தீ பரவட்டும்' என்று முழங்கிய அறிஞர் அண்ணா அவர்கள் முன்னெடுத்துச் சென்னையில் நடத்திய இரண்டாம் உலகத் தமிழ்நாட்டில், சா.க. உருவாக்கிய கலைக்காட்சியும் அதற்கான கையேடும் இலக்கியச் சாட்சியங்கள். அதற்கென அவர் பட்ட பாடு பெரும்பாடு.

பழந்தமிழ் மக்கள் பயன்படுத்திய கருவிகள்,முதுமக்கள் தாழிகள், இவற்றோடு, ஐந்திணை வாழ்க்கை முறை, சிலம்பு சித்திரித்த பழம்பதி பூம்புகார், செங்குட்டுவன் வடித்த பத்தினித் தெய்வக் கல்படிவம், மாமல்லன் கண்ட சிறப்புமிகு சிற்பங்கள், இடைக்காலத் தமிழ் மன்னர்கள் கையாண்ட போர்க்கருவிகள் எனக் காலத்தைப் பிரதிபலிக்கும் கருவிகளையும் கலைச் சின்னங்களையும் ஒருங்கே சேர்த்து, அக்காலத்தைக் கண்முன் காட்டினார். இதற்கென, பல இடங்களுக்கும் சென்று பல பொருட்களைச் சேகரித்தார்.

> "ஒரே மண்டபத்தில், நாகர்கோவில், திருவண்ணா மலை, சென்னை முதலிய இடங்களில் இருந்து தேர்களும், அவற்றின் உறுப்புகளும், மதுரை, இராமேசுவரம், அழகர் கோயில் முதலிய இடங்களிலிருந்து வந்து நவமணி இழைத்த நகைகள், பிள்ளையார்பட்டி, சிக்கல், மயிலை போன்ற இடங்களிலிருந்து தருவிக்கப்பெற்ற வாகனங்கள்- இவ்வாறு இடத்தாலும் கிழக்கும், மேற்கும் தெற்கும் வடக்குமாகச் செல்ல முடிந்தது" (மேலது, ப.,362)

என்கிறார். சா.க.வோடு இணைந்து கலைக்காட்சிப் பணிமேற் கொண்ட இரா.முத்துக்குமாரசாமி.

தொல்பொருள்பகுதி, ஓவியப்பகுதி, சிற்பங்கள், செப்புப் படிமங்கள் பகுதி, வரலாற்றுச் சிறப்புடைய பொருள்கள், தந்தக் கைவேலைப்பாடு மிக்க பொருள்கள் பகுதி, அரிய நூல்கள் பகுதி, பல்வகை இன்னிசைக் கருவிகள் பகுதி, பழங்கால நாணயங்கள், அரிய நவமணிகளாலான அணிகலன்கள் பகுதி, புகைப்படங்கள் பகுதி, பூம்புகார் மாதிரி அமைப்பு, ஐந்திணை மாதிரி அமைப்பு, தேர்வாகனங்கள் பகுதி முதலிய பகுதிகள் என அமைக்கப்பெற்றிருந்தன. ஸ்ரீரங்கம், அழகர்கோயில் பகுதிகளில் இருந்து தருவிக்கப்பெற்ற நுண்ணிய வேலைப் பாடமைந்த தந்தப் பொருள்கள், தஞ்சை சரசுவதி மகால், சென்னைக் கீழ்த்திசைக் கையெழுத்து ஏட்டுச்சுவடி நூல் நிலையம், அடையாறு நூல் நிலையம், பிரிட்டிஷ் கௌன்சில், மறைமலையடிகள் நூல் நிலையம் முதலிய இடங்களில் இருந்து எடுத்துவரப்பெற்ற தமிழ், மொழி, இலக்கியம், வரலாறு,

தொடர்பாக எழுந்த தமிழ், ஆங்கில நூல்கள், ஓலைச்சுவடிகள், தமிழகத்தில் இருந்த பல்வேறு இசைக்கருவிகள்,பழந்தமிழர்கள் பயன்படுத்திய காசுகள், நகைகள் ஆகிய அனைத்தையும் காவல் துறையின் தீவிரப் பாதுகாப்புத்துணையோடு மக்களுக்கு எந்தவொரு சிரமமுமின்றிக் காட்சிப்படுத்தியதில், அவர் பட்டிருக்கும் சிரமங்களை ஊகித்தறியலாம். இத்தனை பெரிய பணியை ஆற்ற, அவருக்கு அளிக்கப்பெற்ற காலம் ஒருமாதம் என்பது இங்கு கவனத்திற் கொள்ளவேண்டியது.

காலத்தை அடக்கிய கையேடு

"அக்குறுகிய காலத்திலேயே அவர் பெரிய அளவில் காட்சியை அமைத்து இக்கால மயன் ஆனார்" என்று இரா. முத்துக்குமாரசாமி போற்றுவது பாராட்டுக்கும் அப்பால் ஏற்பட்ட பயன் உணர்வு மட்டுமல்ல, மகிழ்வு கலந்த பயவுணர்வின் வெளிப்பாடும்கூட. இதே கால எல்லைக்குள் நின்று, அவர் உருவாக்கிய கையேடு அற்புத வரலாற்று ஆவணம். அதுகுறித்தும் முத்துக்குமாரசாமி தரும் சாட்சியம் முக்கியமானது.

> "முப்பது நாற்பதுபேர் கூடி, நூற்றுக்கணக்கான கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டு, மலர் ஒன்றை வெளியிடும் நிலையில், தாம் ஒருவரேயாய் ஓரிருவரைத் துணைக்கு வைத்துக்கொண்டு அழியாத கலைக் களஞ்சியமான, 'கையேடு' ஒன்றை நமக்கு அளித்தார். கட்டுரை என்ற பெயரால், ஏதோ பெயர் பெற்றவர்களை மகிழ்விக்க எண்ணிப் பயனற்ற சொல் தொகுப்பை வெளியிடாது,கையேட்டில் என்னென்ன பொருள்கள் பற்றிக் கட்டுரை இருக்கவேண்டும் என்று முதலில் பொருள்களை வரையறுத்துக் கொண்டு, அதன்பின் அவற்றைச் சுருக்கமாக, விரைவாக, திறமையாக யார் எழுதித்தருவார்கள் என்று பார்த்து, அவர்களிடம் கேட்டு, மிகக்குறுகிய காலத்தில், 'கையேடு' என்ற பெயரில் கைக்குள்ளடங்கும் பக்க அளவோடு வெளியிட்ட பெருமை திரு. கணேசனையே சாரும்." (மேலது, ப.368)

ஒரு தொகுப்பாசிரியருக்குள்ள கலைத்தன்மையோடு இவ்வண்ணம் கட்டுரைகள் பெற்ற அவர் அச்சுக்கலையின் நேர்த்தியோடு அதனை வடிவமைத்து வழங்கியதும் சிறப்புக்குரியது.

"கையேட்டைத் தயாரிப்பதில் எவ்வளவு கவனம்! அது இன்ன பாயின்ட் அச்சால் கோக்கப்பெற வேண்டும். இன்ன தாளில் அச்சிடவேண்டும் என்பதிலிருந்து, கடைசியில் கட்டடம் இவ்வாறு, முகப்பில் ஏடேந்திய கையின் படத்தோடு அமையவேண்டும் என்பது வரை, ஒவ்வொரு கட்டத்திலும் தனிக்கவனம் செலுத்தி, அதைப்போன்ற நூல் அதற்குமுன் வெளிவந்ததில்லை என்று கூறும் வகையில் நூல் அமைத்தார்". (மேலது)

அச்சுக்கலையில் இத்தகு நோக்கும் போக்கும் கொண்டிருந்த சா.க.விற்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கியவை பழங்காலக் கல்வெட்டுக்களும், ஓலைச்சுவடிகளும்தான். தேடித்தொகுக்கவும் தொகுத்தவற்றைப் பதிப்பிக்கவும் அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் கணக்கில் அடங்கா.

பனையோலைகளில் இருந்து பாதுகாத்து...

அதிலும், கம்பன் காவியத்தைப் பல்வேறு ஓலைச்சுவடிகளில் இருந்து கண்டெடுத்து, அச்சாக்கம் செய்துதருவதில் அவர் காட்டிய ஈடுபாடு பெரிது.

"1935க்கு முன் பி.எஸ்.சி. (B.Sc) வகுப்பில் Firzgerald மொழிபெயர்த்த 'ஒமர் கையாம்' என்ற நூலை எனக்குப் பல்கலைக்கழகத்தில் பரிசாகக் கொடுத்தார்கள். அந்தக் காலத்தில் அவ்வளவு அழகாக அச்சிட்ட புத்தகம் பார்ப்பது அரிது. வெல்வெட் அட்டையில் தங்கப்பூ வேலைப் பாடுகள். உள்ளே ஒவ்வொரு பக்கத்திலும் அலங்கார எழுத்துக்களில் ஒரு பாடல். பாடலுக்கு ஏற்ற ஓர் அழகிய வண்ணப்படம் இந்தப்புத்தகத்தை அருமையாகப் பாதுகாத்து வைத்திருந்தேன். 1940 இல் சா.க. கையில் அந்தப்புத்தகம் போய்ச் சேர்ந்தது. அதைப் பார்த்ததும் அவருடைய உள்ளம் ஆங்கிலேயருடைய இலக்கியப்

பக்தியை நினைத்து உருக ஆரம்பித்தது. "மகாகவி கம்பனுக்கும் இந்த உபசாரம் நாம் செய்ய வேண்டும். அவனுடைய பாடல்களை இந்தத் தோரணையில் அச்சிட்டு அவனை உரிய முறையில் மதிக்கக் கற்றுக் கொடுக்கவேண்டும்" என்று சொல்லிப் புத்தகத்தை மாதிரிக்காக வாங்கிவைத்துக் கொண்டார்.

1942, ஆகஸ்டு மாதத்தில், பிரிட்டிஷ் போலீஸார் கணேசனுடைய காரைக்குடி வீட்டைக் கொள்ளை போட்டு, அங்குள்ள பல லட்சம் ரூபாய் பெறுமான நகைகளையும், பொருள்களையும் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். கொள்ளைபோன சில நாள்களில் நண்பர் கணேசனைக் கண்டு பேசிக்கொண்டிருந்தேன். விடுதலைப்போராட்டத்திலே இந்தியத்தாய்க்குக் கொடுத்த காணிக்கையென்று அந்தக் கொள்ளையை பெருமிதத்தோடு குறிப்பிட்டார்" (மேலதுப.68)

என்கிறார் நீதிபதி மகாராஜன்.

ஒருவேளை, கொள்ளை போகப்படாதிருக்குமெனில், தன் செல்வத்தைக் கொண்டு ஓமார் கையாம் நூல் போல ஒரு வண்ணப்பதிப்பைக் கம்பனுக்கு அவர் கொண்டுவருவதைக் காலம் கண்டிருக்கக் கூடும். என்ன செய்ய?

மலிவு விலையில் மக்களின் கரங்களில்...

ஆனாலும், அந்த முயற்சியைச் செயற்படுத்த மர்ரே கம்பெனி அதிபர் திரு. எஸ்.ராஜம் அவர்கள் கைகொடுத்தார். அதன்வழி, மலிவுவிலையில் மக்களைச் சென்று கம்பன் அடையக் கால்கோளிட்டனர்.

"பாடாந்தரம் கண்டு, நல்ல பாடம் தேர்ந்தெடுப்பது உள்படப் பதிப்பு வேலையில் என்னை ஆட்படுத்தியவர் அவரே! கல்விக்கடல் இராமராசன் முதலான நல்ல புலவர்கள் பலருடைய துணையுடன் அப்பணியில் ஈடுபட்டேன். எண்ணற்ற ஓலைச்சுவடிகளும் அச்சுப் பிரதிகளும் ஒப்புநோக்கப்பட்டன. ஏற்கெனவே, எடுத்த பாடக் குறிப்புகளையும், புதிதாக நாங்கள் எடுத்த பாடக்

குறிப்புகளையும் ஒப்பிட்டுப் பார்த்தோம். பல்வேறு காரணங்களைக் கொண்டு சரியான பாடத்தை ஒருவாறாக நிர்ணயித்தோம். பொருத்தமில்லாத பாடல்களை, பிராக்கட்டுள் அடக்கியோ, அன்றிப் பிற்சேர்க்கையிலோ வெளியிட்டோம். இப்படிப் பணியாற்ற அடியேற்குக் கிடைத்த வாய்ப்பு ஒரு பேறாகும். அதனாற் கிட்டிய அனுபவமும் தெளிவும் எழுதிக் காட்ட முடியாத ஒன்றாகும்" (மேலது,ப..15)

என்று மகிழ்ந்தும் நெகிழ்ந்தும் எழுதுகிறார் கம்பன்அடிப்பொடி.

மழலைகளுக்கும் கம்பகவிதைகள் தந்த மாமனிதர்

ஆய்வுக்கு மட்டுமன்றி, அன்றாட வாழ்விலும் கம்பன் காவியம் பயன்படவேண்டும். அதுவும் வளருங்குருத்துக்களுக்கு வழிகாட்டவேண்டும் என்ற நோக்கில், திருவாளர் பாஸ்கரத் தொண்டைமான் அவர்களை, 'சீதா கல்யாணம்' என்னும் நூலை எழுதவைத்து, "ஸ்ரீமான் மெ.நா.சித. நாகப்ப செட்டியார் அவர்களின் பௌத்திரி, திருவளர்செல்வி வள்ளியம்மையின் காப்புக் கட்டுப்புதுமையில் வழங்க"க் காரைக்குடிக் கம்பன் கழகம் வாயிலாக வெளியிட்டிருக்கிறார் சா.க. அந்நூலின் பதிப்புரை அவர்தம் உள்ளக்கருத்தைத் தெள்ளிதின் வெளிப் படுத்தும்.

"இது கம்பன் கழகத்தின் முதல் வெளியீடு. சென்னைச் சர்வகலாசாலைத் தமிழ்ப் பேராசிரியர் ஸ்ரீரா.பி.சேதுப் பிள்ளையவர்கள் ஆலோசனைப்படி, ஸ்ரீபாஸ்கரத் தொண்டைமான் அவர்களை இந்நூல் எழுதியுதவும்படி வேண்டிக் கொண்டோம். அவர்கள் உடனே இசைந்து, தமது உத்தியோக வேலைகளினிடையே, சிரமம் பாராட்டாது, இதை முடித்துக் கொடுத்தார்கள்... இந்நூலில் கம்பனுடைய நூறு பாடல்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. சொற்களின் சந்தி பிரிக்கப்பட் டிருப்பதால், இளைஞர் யாவரும் கவிகளின் பொருளை எளிதில் புரிந்துகொள்ளக்கூடும். ஒவ்வொரு குடும்பத்திலும் குழந்தைகள் சம்பந்தமான முக்கிய விசேடங்கள் நடைபெறும்போது, இத்தகைய நூல்களை அச்சிட்டோ,

வாங்கியோ, சிறுவர் சிறுமியர்க்குப் பரிசளித்தல் மிகவும் பொருத்தமாயிருக்கும் என்று அன்பர்களுக்கு ஞாபக மூட்ட விரும்புகிறோம்."

இந்நூலுக்கு, நூலாசிரியரான பாஸ்கரத்தொண்டைமான் அவர்கள் எழுதிய முன்னுரை இன்னும் சிறப்பு வாய்ந்தது.

"ஒரு காவியத்தைப் பற்றி, குழந்தைகளிடம் பிரசங்கம் செய்யாதே. காவியத்தையே குழந்தைகளின் கையில் கொடுத்துவிடு" என்று அனடோல் பிரான்ஸ் என்ற அறிஞர் சொல்லுகிறார். இது எவ்வளவு சரியான யோசனை! இந்த ஆலோசனையின்படி நடக்கவிரும்பியே, 'சீதா கல்யாணம்' எழுதப்பட்டுள்ளது. காவியத்தைப் பற்றியாவது, கம்பனது கவிதையைப் பற்றியாவது விரிவான விமரிசனம் எழுதுவது நோக்கமில்லை. அது அவசியமும் இல்லை. தமிழ்நாட்டுச் சிறுவர் சிறுமியர் அனைவரும் கம்பன் யார், அவன் எழுதிய காவியம் எப்படிப்பட்டது என்பதைத் தாமே தெரிந்துகொள்ளக் கூடிய முறையில் இதை எழுதி முடிக்க எண்ணினேன்... கம்பராமாயணம் பால காண்டத்தில் மொத்தம் ஆயிரத்துநானூறு பாடல்கள் இருக்கின்றன. அவைகளில் நூறு பாடல்களே இந்தப் புத்தகத்தில் தொகுக்கப்பட்டிருக்கின்றன. கதைத் தொடர்ச்சியையும் இளைஞர் தெரிந்துகொள்ள, இடையிடையே வசனப் பகுதியும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்நூல் எழுதுவதற்கு என்னைத் தூண்டியவர் காரைக்குடி கம்பன் கழகத்தின் செயலாளரான நண்பர் ஸ்ரீ சா.கணேசன்" என்கிறார்.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்ற வள்ளுவவாக்கை மெய்ப்பிக்கும் சா.க., இதனை எல்லாக் குழந்தைகளிடமும் எடுத்துச் செல்ல மேற்கொண்ட முயற்சி, காலத்தாற் செய்த முயற்சி. காலங்கடந்து இன்றைக்கும் கடைப்பிடிக்க வேண்டிய எளிய, இனிய, இன்றியமையாத முயற்சி என்பதில் இருகருத்திற்கு இடமில்லை. இதுபோல், கம்பகாவியம் மக்களிடைப் பரவ அவர் மேற்கொண்ட அச்சாக்க முயற்சிகள் பற்பலவாய் அமைந்து பயன் நல்கின என்பது வரலாறு.

வரலாறு பேணிய வரலாறு படைத்தவர்

மேலும், காலத்தால் அழியாத வரலாற்றைக் கால காலத்திற்கும் நிலைக்கக் கல்வெட்டில் பொறித்த தமிழர்களின் பதிவுகளைத் தேடித் தொகுத்துப் பகுத்து அளித்துப் பாதுகாக்கவும் அவர் செய்த அரும்பணிகள் மிகவும் குறிப்பிடத் தக்கவை.

அதிலும் சமய பேதம் பாராது சமரசத்தோடு உண்மையை உலகறியச் செய்தவர் என்பதற்கு ஒரு சான்று பின்வருமாறு:

> "தமிழகத்தில் மிகத்தொன்மை வாய்ந்த ஜைன சமய வரலாற்றுச் செய்திகளை ஆராய்ச்சியாளர்களில் பலர் வெளிக்கொணர்வதில்லை. எவ்வளவு தூரம் மறைக்க இயலுமோ, அவ்வளவு தூரம் மறைத்தே வைத்துள்ளனர். ஏதோ சிலர் இங்கும் அங்குமாக ஆராய்ந்து வெளியிடுவர். வரலாற்றுத்துறையில், திரு சா.கணேசனார் இறங்கியதும், ஜைனப்பெருமக்களுக்கும், இளைஞர்களுக்கும் இப் பெரியாரால் ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டதெனில் மிகையாகாது" (கம்பன் அடிப்பொடி கலைக் களஞ்சியம், ப.344)

என்கிறார் திரு.ஜீவபந்து ஸ்ரீபால்.

கல்வெட்டுகளின் காதலர்

கலை, இலக்கிய ஈடுபாடுபோல் கணேசனாருக்குக் கல்வெட்டுத்துறையின்பாலும் மாளாத காதல் உண்டு. காதலியைக் காணப்போகும் ஆர்வத்தோடு ஒவ்வொரு கல்வெட்டுகளையும் தேடிப்பிடித்துக் கண்டு, களவு நிலையில் இருந்த தம் காதலைக் கற்புநிலைக்கு உயர்த்திய காதல் தலைவர் அவர்.

விலைமதிக்கவொண்ணா, வரலாற்றுப்பொக்கிஷங்களான பல கல்வெட்டுகள் கவனக்குறைவால், காலப்போக்கில், கற்சிதைவால் அழியநேரும் என்ற அக்கறையில் அவை யனைத்தையும் பிரதி எடுத்து, அச்சிடப் பெருமுயற்சி எடுத்தார். இதற்காக, தமிழக அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறையில் சிறப்பு அலுவலராகப் பணிபுரிந்த இரா.நாகசாமி அவர்களோடு தொடர்புகொண்டு திட்டம் தீட்டினார். அப்போதைய தமிழக

முதலமைச்சரான திரு.பக்தவத்சலம் அவர்களும் அதனை ஏற்றுச் செயல்பட ஆணையிட்டார்.

> "பத்தாண்டுகளில், தமிழகக் கல்வெட்டுகள் அச்சாக வேண்டும். அதற்கான சிறிய அச்சகம் தொல்பொருள் ஆய்வுத்துறையின்கீழ் அமைக்கப்படவேண்டும். மாவட்டம் மாவட்டமாகக் கல்வெட்டுக்களை ஆய்ந்து, எழுதி அச்சிட வேண்டும் என்பதே இவர் திட்டம். பண நெருக்கடி இருந்த போதிலும், அரசு இத்திட்டத்தை அனுமதித்து, வேண்டிய தொகையை ஒதுக்கியது. தமிழகக் கல்வெட்டுக்களை அச்சிட வேண்டும் என்று அவர் கொண்டுவந்த திட்டம் மிகவும் போற்றத் தக்கது. அதன் பயனாகத் தமிழக வரலாறு குறை நீக்கப்பட்டு நல்ல முறையில் எழுதப்படும் என்று திட்டவட்டமாகக் கூறலாம். தமிழக வரலாற்றை நெறிப்பட எழுத அடிகோலிய பெரியவர் என்று அவரை வருங்காலத் தமிழ்ச் சமூகம் போற்றத்தான் போகிறது" (மேலது,ப.358)

என்கிறார் இரா.நாகசாமி.

கல்வெட்டுத்துறையில் களப்பணியும் காலப்பணியும்

கல்வெட்டுக்களை அச்சிடுதல் என்பது, கவிதையை, கதையை, கட்டுரையை அச்சிடுவதுபோல் அவ்வளவு எளிதான செயல் அன்று. ஒவ்வோர் எழுத்தையும் கண்டு பிடித்து அப்படியே அச்சேற்றுவது அக்காலத்தில் மிகுந்த சிரமம். அதைவிட, தாம் அச்சேற்றும் கல்வெட்டின் உண்மைத்தன்மை மாறாதிருக்க வேண்டும் என்பதில் அவர் எடுத்துக் கொண்ட அக்கறை தனித்துக் குறிப்பிடவேண்டியது. சான்றுக்கு ஒன்று:

> "ஒருமுறை நானும் திரு.சா.கணேசன் அவர்களும், கல்வெட்டுக்களைப் படிக்க வேண்டும் என்று வந்தவாசிக்குச் சென்றோம். செல்லும்வழியில், வல்லம், மாமண்டூர் முதலிய இடங்களில் மகேந்திரவர்மனின் கல்வெட்டுக்களைப் பார்த்துக் கொண்டு சென்றோம். வல்லம் குகையில், மகேந்திரன் கல்வெட்டில், 'ம' என்ற எழுத்துப் பொறிக்கப்பட்டிருந்த விதம் எங்களைப் பெரிதும் கவர்ந்தது. பண்டைய 'ம'விலிருந்து, இன்றைய

'ம' எவ்வாறு தோன்றியது என்பதைப் புரிந்து கொள்வது கடினம். அங்குள்ள எழுத்துத்தான் அதை நன்கு எடுத்துக் காட்டுகிறது. அன்று நாங்கள் பெரும் மகிழ்ச்சி கொண்டோம்" (மேலது)

என்கிறார் நாகசாமி. இதுபோல் எத்தனை நிகழ்வுகள். சமயவேறுபாடின்றிச் சைவ, வைணவக் கோயில்களோடு, சமணக் குகைகளிலும், பௌத்தப்பள்ளி சார்ந்த இடங்களிலும் உள்ள கல்வெட்டுக்களைக் கண்டு 'கல்சொல்லும் கதை' என்று எழுதியவர் அவர்.

'சா.கணேசன் மசோதா'

அத்தோடு, 1966 நவம்பர் மாதத்தில் தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுப்பாதுகாப்பு மசோதா சட்டமன்ற விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஒரு மணிநேரக் கால எல்லையே ஒதுக்கப்பெற்றிருந்த அம்மசோதா குறித்த விவாதத்தில் தெளிவாகவும் சுருக்கமாகவும் சா.க. பங்கேற்றுப் பேசிய பாங்கு அவர்தம் கல்வெட்டுத்துறை மற்றும் வரலாற்றுத் துறைசார்ந்த ஆழ்ந்த புலமையை வெளிப்படுத்தியது. அவற்றைப் பாதுகாக்கவேண்டும் என்று அவர் முன்வைத்த விதம் அத்துறையின்பால் அவர்க்கு உள்ள அக்கறையைப் பிரதிபலித்தது. நவீன கருவிகள் இத்துறைக்கு வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு செய்திகளையும் உள்ளடக்கி அவர் பேசிய விதம் சிறப்பாக அமைந்தது.

"அதில் அவர்க்கு ஏற்பட்ட வேகம், ஒரு மணிநேரம் மட்டும் அனுமதிக்கப்பட்டிருந்த மசோதா ஒருநாள் முழுவதும் சபையின் கவனத்தைக் கவர்ந்தது. இதை ஆதரித்துப் பலரும் பேசினர்... பக்தவத்சலம் அவர்கள் சபையில் எல்லோரும் போற்றிய மசோதாவை நிறைவேற்றினார்கள். அன்று அவை கலைந்து வெளியே வரும்போது, "இது சா.கணேசன் மசோதா" என்று கூறியது என் காதில் வீழ்ந்தது" (மேலது,ப.361)

என்று சாட்சியம் அளிக்கிறார் இரா.நாகசாமி.

நாட்டியக் கலை வல்ல நாயகர் சா.க.

கல்வெட்டுத் துறை தொடங்கிப் பல்வேறு கலைத்துறைகளில், வித்தகராக விளங்கியவர் கம்பன்அடிப்பொடி. அவர் நாட்டியக்கலையிலும் நன்கு தேர்ந்தவர் என்பதற்குச் சான்றாய், "கம்பன் பாடல்களை மட்டும் வைத்துக்கொண்டு ஒரு முழுநேர நாட்டியக் கச்சேரிக்கு ஏற்பாடு செய்து முதன்முதலில் அதனை அரங்கேற்றியவர் அவரேயாவார்" என்கிறார் அ.ச.ஞான சம்பந்தன். அதனை மெய்ப்பிக்கிறது, சா.க. தயாரித்த குறுநூலான 'இராமாவதாரம்' நாட்டிய நாடகம்.

கம்பன் கலை - நாட்டியமாக...

தமிழில் உள்ள அனைத்துக் கலைகளையும் ஆழ உள்வாங்கிக் காவியம் படைத்தவன் கம்பன். நாடகம் என விரியும் அக்காவியத்தில் ஆடலும், பாடலும் உயிரூட்டும் அழகு நாட்டியக் கலைக்கும் பேரளவில் இடமுண்டு. இனிய காட்சியைக் காப்பியப் போக்கில் சித்திரமாக்கியவன் கம்பன். அவனது காவியத்தையே நாட்டியமாக்கி அரங்கேற்றினால் எப்படியிருக்கும் என்று கனவு கண்டார், கம்பன் அடிப்பொடி. பன்னீராயிரம் பாடல்களையும் பாடி முடிக்கவே காலம் போதாது. அப்படியிருக்க, அத்தனையையும் அபிநயம் பிடித்து ஆட எத்தனை மாதங்கள் இடைவெளியின்றி முயன்றால் முடியும் என்பதை அவர் எண்ணாமல் இருப்பாரோ? காலக் கணிப்பிலும், கட்டுப்பாட்டிலும் கம்பன் அடிப்பொடியை மிஞ்ச இன்னொருவர் இன்னும் தமிழகத்தில் தோன்றவில்லை என்பதை யாரும் மறுக்க எண்ணார். எனினும், பெரிதினும் பெரிது செய்யும் பேராளன் கம்பனைத் தலைவனாய்க் கருத்தேற்றிய பின்னர், அவ்வழியில் நடப்பதுதானே அடிமைக்குப் பெருமை. ஆகவே, தன்னெறி துறவாது, தம் கனவும் மறவாது, குறித்த பொழுதுக்குள் கம்பநாட்டியத்தை அரங்கேற்றம் செய்ய ஆயத்தமானார். அதற்காகக் கம்ப காவியத்துள் மூழ்கி 34 கம்பக் கவிமுத்துக்களைத் தேர்ந்து, நாட்டியமாலையை அழகுறக் கோத்தளிக்கிறார், கம்பன் அடிப்பொடி. 'இராமாவதாரம்' என்ற தலைப்பின்கீழ், அடைப்புக்குறிக்குள் 'கம்பன் அருளியது' என்று சுட்டி அவர் படைத்தளித்த பரதநாட்டிய நூலின் முன்னுரை அவரது

கவியுளத்தையும், கம்பபக்தியையும், நாட்டியக்கலையில் அவருக்குள்ள நன்மதிப்பையும், தோய்வையும், புலமையையும் நன்கு விளக்கி நிற்கிறது.

"ஒரு கலையின் மாண்பை எடுத்துக்காட்ட மற்றொரு கலை உதவும். இஃது உலகம் ஒப்புக் கொண்ட ஒன்று. ஒவ்வொரு கலையும் தனக்கென உள்ள வரம்பினுள் நின்று கொண்டே அந்த வரம்பை மீற முயல்கிறது. ஏனென்றால் உணர்த்தும் ஆற்றலுக்கு மிஞ்சிய அளவில் அஃது உணர்வதாலேதான். அப்படியே சொற்கலையும் தன் ஆற்றலைக் கொண்டு உணர்த்த முயலும் முயற்சியில் தளர்ச்சியடையும்போது அதற்கு நடனக்கலை துணை புரிய முன் வருகிறது".

எதற்கு? கம்பனது பேருருவின் ஒரு பரிமாணத்தை உணர்த்துவதற்கு; காரணம்,

"கம்பன் கவிச்சக்கரவர்த்தி; அவனுடைய கவிகள் அற்புதமானவை; பாவம் செறிந்தவை. எனினும், அவைகளும்கூடக் கவிஞன் உணர்ந்தவற்றை, அவன் உணர்ந்த அளவு - அவன் நமக்கு உணர்த்த நினைக்கும் அளவு - உணர்த்த மாட்டாமல் தவிக்கின்றன. அப்படித் தவிக்கின்ற சொற்களுக்கு நடனக்கலை மிக நாசுக்காகக் கை கொடுத்து உதவுகிறது. அவற்றையெல்லாம் நடனத்தில் கண்டு நீங்கள் அனுபவிக்கக்கூடும். நடனத்தைக் கண்டு இன்புற எண்ணும் அன்பர்கள் இச்சிறுநூலை முற்றிலும் படிக்க வேண்டியது இன்றியமையாததாகும். இதைப் படித்துப் பொருளையும் சந்தர்ப்பத்தையும் நன்றாக விளங்கிக்கொண்டால் நாட்டியத்தைச் சரியாக ரசித்து மகிழ முடியும். இதுதான் எங்களின் பணிவான வேண்டுகோள். நன்றி"

என்று 4.4.1962 இல் முன்னுரைத்துத் தருகிறார், கம்பன் அடிப்பொடி. விழாவில் பார்க்க முடியாதாரும் விளங்கிக் கொள்ள, இராக, தாளக் குறிப்புகளோடு, கம்பனது கவி மணிகள் முப்பத்துநான்கும் காற்சலங்கையிட்டு வருகின்றன. பாவங்களை

உள்வாங்கிக்கொள்ளக் கம்பன் அடிப்பொடி, திரைமறைவில் நின்று குறிப்புரை வழங்குகிறார். பரிச்சயமானவர்கள் அந்த பாவனையோடு படிக்கக் கிடைக்கும், இச்சிறுநூல், பொது மற்றும் புதுவாசகர்களுக்குக் கம்பனின் நாட்டியத் திறத்தையும், பாட்டியல் நுட்பத்தையும் நனிவிளக்கும் என்பது உறுதி.

நாடக அரங்கிலும்...

நாட்டியக்கலையோடு நாடகக் கலையிலும் மிகுந்த ஈடுபாடு உடையவர் சா.க. அதனால்தான் பால பருவத்திலேயே பர்மாவில் நாடகங்கள் நடத்திப் பொருள் ஈட்டி, நாட்டுக்கும் கல்விக்கும் அவரால் அறக்கொடைகள் அளிக்க முடிந்தது. (தீபம், தொ-1, ப.430)

அந்தவகையில், காரைக்குடியில் நடந்த ஒரு நாடக நிகழ்விலும் அரங்கில் தோன்றி அவர் அளித்த கருத்துரை, காலத்தை வென்றுநிற்கும் கவித்துவம் உடையது. அந்நிகழ்வு பின்வருமாறு.

நாடக உலகில் கொடிகட்டிப்பறந்த ஒளவை தி.க.சண்முகம் குழுவினர் காரைக்குடியில் நாடகம் நடத்திக் கொண்டிருந்த காலம் அது. 1937ஆம் ஆண்டு ஷண்முகவிலாஸ் நாடக அரங்கில், 'குமாஸ்தாவின் பெண்' என்னும் நாடகம் நடந்து கொண்டிருந்தது. நூற்றுக்கும் குறைவான பார்வையாளர்களுக்கு மத்தியில் சா.க.வும் ஒருவர்.

நாடகம் குறித்து ஒருசில வார்த்தைகள் பகிர்ந்துகொள்ள அவர் விரும்பியதற்கு இசைந்த அக்குழுவினர், நாடகம் முடிவதற்கு ஒரு காட்சி இருக்கும் நேரத்தில் பொதுவாகத் தலைவர்கள் பேசும் நேரத்தில் பேசச் செய்ய விரும்பினர். ஆனால், பிடிவாதத்திற்குப் பெயர் போன சா.க. மறுத்துவிட்டார். 'நாடகம் முடிந்த பிறகு பேசுகிறேன்' என்று உறுதியாக நின்றார்.

'சபையோர் கலைந்துவிடுவார்கள். அதனால் தாங்கள் முன்னால் பேசிவிடுவது நல்லது' என்று நாடகக் குழுவினர் வற்புறுத்தினார்கள்.

"நாடகம் முடிந்த பிறகு நான் பேசப்போகிறேன் என்பதை நீங்கள் அறிவித்துவிடுங்கள். போகிறவர்கள் போகட்டும். அதைப்

பற்றிக் கவலையில்லை" என்று திட்டவட்டமாக அறிவித்து விட்டார், சா.க. அவ்வண்ணமே அறிவிக்கவும் பெற்றது. பின்னர் நடந்தது குறித்து ஔவை தி.க.சண்முகமே குறிப்பிடுகிறார்:

> "நாடகம் முடிந்தது. திரை விடப்பட்டு மீண்டும் உயர்ந்தது. சபையோர் ஒருவர் கூட எழுந்திருக்கவில்லை. எங்களுக்கு வியப்பாக இருந்தது. தலைவர் அவர்கள் மேடைக்கு வந்தார். "குமாஸ்தாவின் பெண்" நாடகத்தின் சிறப்பினைப் பற்றி மிக அருமையாகப் பேசினார். "இப்படிப்பட்ட ஒரு சிறந்த நாடகத்திற்கு நாட்டுக் கோட்டை நகரத்தார் மிகுதியாக வாழும் காரைக்குடியில் ஆதரவு இல்லாத நிலைமை தனவணிகப் பெருமக்களுக்கு இழுக்காகும்" என இடித்துக் கூறினார். அப்போது நாங்கள், 'ஸ்ரீகிருஷ்ணலீலா' நாடகத்தைச் சிறப்பாக நடத்திக் கொண்டிருந்த காலம். "இந்த லீலாக்களை எல்லாம் கொஞ்ச காலம் நிறுத்திவைத்துவிட்டு, மக்களுக்கும் சமுதாயத்துக்கும் பயன்தரக்கூடிய குமாஸ்தாவின் பெண் போன்ற நாடகங்களைத் தொடர்ந்து நடத்துங்கள்" என்று எங்களுக்கு அறிவுரை கூறினார். ஏறத்தாழ, அவருடைய இருபது நிமிடப் பேச்சை இருந்து கேட்டுவிட்டுத்தான் சபை கலைந்தது. எங்கள் வாழ்நாளில் நாடகம் முடிந்தபிறகு, ஒருவர் பேசியது அதுதான் முதல்தடவை. இந்தப் பெருமைக்குரிய தலைவர்தாம் திரு. சா.கணேசன் அவர்கள்" (கம்பன் அடிப்பொடி கலைக்களஞ்சியம், ப.347)

காலக்கடைப்பிடிப்பும், காலத்திற்கேற்ப, கலைவடிவங்களும் உள்ளடக்கங்களும் இருந்தாக வேண்டும் என்கின்ற கண்டிப்பும், பார்வையாளர்களின் போக்கிற்கே முற்றிலும் இசைந்து போகாமல், தன் நெறிக்கண் அவர்களை ஈர்த்து முறைப்படுத்தும் பாங்கும் இக்குறிப்புரையின்கண் வெளிப்படப் பார்க்கலாம். இப்படி அவர்தம் வாழ்க்கை முழுவதும் நடந்த நிகழ்வுகள் எத்தனை எத்தனையோ?

தொட்ட தொட்ட துறைகள் தோறும்...

இவ்வாறு பன்முகப் பரிணாமங்கள் உடையதாய்த் திகழும் கம்பன் அடிப்பொடியாரின் கலையுலகப் பணி பரந்தது, இந்தக்

குறுகிய அத்தியாயப் பக்கங்களுள் அடக்க இயலாதது. 'பாதங்கள் இவையென்னில் படிவங்கள் எப்படியோ' என்கிற நிலைதான். எனினும் ஒற்றைக் குறுங்கருத்தைச் சொல்லி, இவ்வியலை நிறைவுபடுத்தலாம்.

"திறமையென்றால், அது கணேசனிடத்தில் தானிருக்கிறது" என்று அடிக்கடி ரஸிகமணி டி.கே.சி. சொல்லுவார்கள். அது முற்றிலும் உண்மை. இலை நறுக்க வேண்டுமா? ஊறுகாய் போடவேண்டுமா? கோயில் கட்ட வேண்டுமா? சிற்ப சாத்திரத்தின் நுணுக்கங்கள் அறிய வேண்டுமா? ஆகம விதிகளை அறியவேண்டுமா? தமிழ் இலக்கணத்தின் சிறப்பியல்புகள் தெரிய வேண்டுமா? சங்க இலக்கியத்தின் நீள அகலங்களை அளக்க வேண்டுமா? கம்பராமாயணத்தில் எத்தனை உரிச்சொல் பிரயோகமாகி யிருக்கிறது? எழுத்தியல், சொல்லியல், மொழியியல், அரசியல், பொருளாதாரம், தேர்தல் சட்டம், வெட்டெழுத்து ஆராய்ச்சி, தேசவளமை - எதைப்பற்றிக் கேட்டாலும், ஆர்வத்தோடும் தெளிவோடும் அந்தந்தத்



துறையிலுள்ள வல்லுநர்களும் வியக்கும் வண்ணம் விவரங்களை எடுத்துச் சொல்லும் அபாரமான கல்வியும் அறிவும் படைத்தவர் தமிழ்நாட்டிலே கணேசன் ஒருவர்தான்" (மேலது, ப.70)

என்று தீர்ப்பளிக்கிறாரே, நீதிபதி மகாராஜன்.

இப்படித் தொட்ட தொட்ட துறைகள் தோறும் அவர் துலங்கக் காரணம்தான் யாது?

நதிமூலம் ரிஷிமூலம் போல, கணேசமூலம் காண நாம் அடுத்துப் புக வேண்டிய துறை, இலக்கியம்!

□



4. இலக்கியவுலகின் இலக்குவன்

பெயருக்கு முன்னும் பின்னும் பற்பல பட்டங்களை, பெயர்களை இட்டுக்கொள்ளும் தமிழ்ச்சூழலில், தமக்கென்று உள்ள பெயரையும் சுருக்கி, செட்டிநாட்டு வழக்கப்படி 'சாவன்னா கானா' (சா.க) என ஆக்கிக் கொண்டவர் கணேசன். ஆங்கிலத்தில் Saw.Ganesan என்றுதான் குறிப்பிடுவார்.

> "............எதைப்பற்றிக் கேட்டாலும், ஆர்வத்தோடும் தெளிவோடும் அந்தந்தத் துறையிலுள்ள வல்லுநர்களும் வியக்கும்வண்ணம் விவரங்களை எடுத்துச் சொல்லும் அபாரமான கல்வியும் அறிவும் படைத்தவர் தமிழ் நாட்டிலே கணேசன் ஒருவர்தான்" (கம்பன் அடிப்பொடி கலைக்களஞ்சியம், ப.70)

என்று இலக்கியத் தீர்ப்பளித்த உயர்நீதி மன்ற நீதிபதி மகாராஜன்தான், 1970ஆம்ஆண்டில் தமிழக மக்கள் சார்பில், 'கம்பன் அடிப்பொடி' என்னும் பட்டத்தைக் கணேசனாருக்குச் சூட்டியவர்.

இந்தப் பெரும்பட்டம் தவிர, வேறு எந்தப் பல்கலைக் கழகத்திலும் சென்று படித்துப் பட்டம் பெற்றார் அல்லர், அவர். ஆனால், எல்லாப் பல்கலைக்கழகமும் ஏற்றுப்போற்றும் வண்ணம் இனிய புலமைமிக்கவராக அவர் திகழ்ந்தார் என்பதற்கு அவர்தம் எழுத்துக்களே சாட்சியங்களாகும்.

கற்றதும் பெற்றதும்

துள்ளித்திரியும் பாலபருவத்தில் தம் நண்பர்களோடு பாரதியைத் தரிசித்த பேறு பெற்றவர். அவரது பாடலை, அவரே பாடவும் கேட்டவர். அதுபோக, பன்னிரண்டாம் வயதில், அவர்தம் குடும்ப ஆதரவு பெற்று வாழ்ந்த பண்டிதர் சு.சிதம்பரம் ஐயரிடம், ஆறுமுகநாவலர் பாலபாடங்கள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, இலக்கணச்சுருக்கம் முதலியவற்றைப் பாடம் கேட்டார். மோ.கோவிந்தராச ஐயங்கார், வ.வே.சு.ஐயர், பி.ஸ்ரீ போன்றோரிடமிருந்தெல்லாம் கம்பனமுது பருகிக் களித்த சா.க., பிறகு, பதினாலாவது ஆண்டில் தந்தையாருடன் பர்மா சென்றுவிட்டார்.

அங்கு இரங்கூனுக்கு அருகில் உள்ள தோங்குவா என்ற ஊரில் இருந்த சேதுப்பிள்ளை என்பாரிடம் கம்பனைக் கற்கச் சென்றார்.

> "சுமார் ஏழெட்டு மாதங்களே அப்பெருமான் அடிக்கீழ் இருந்து பாடம் கேட்டேன். என்ன அறிவு! அப்பப்பா! துணைநூல் அல்லது விளக்கநூல் ஏதுமின்றி, இலக்கணச் சூத்திரங்கள் உள்பட, எல்லாவற்றையும் மனப் பெட்டகத்தில் அடுக்கி வைத்துக் காத்து வந்திருக்கிறார். தொல்காப்பியம், நன்னூல், யாப்பருங்கலம், வீரசோழியம் போன்ற நூல்கள் மட்டுமன்றி, உரையாசிரியர்கள் காட்டும் மேற்கோள் சூத்திரங்களையுமன்றோ மனத்தகத்து அடக்கி வைத்துக் கொண்டுநின்றார் என்று பலமுறை வியந்து மலைத்து நின்றிருக்கிறேன். அந்தச் சில மாதங்கள் என் வாழ்வுக்கு வழிகாட்டித் தொண்டுக்குக் கைகொடுத்த காலம் என்று என்றென்றும் அவரை வழிபட்டுக் கொண்டிருக்கிறேன்" (மேலது, ப.14)

என்கிறார் சா.க.

அதனால் சிந்தைகளிகூர்ந்து, தமது மணிவிழா நாளில் அவர்களையெல்லாம் மனதால் நினைந்து, கவிபாடி வழுத்துகிறார்:

"எழுத்தும் எண்ணும் இலக்கமுடன்
எழுதப் படிக்கக் கற்பித்த
பழுத்த ஆசான் அரங்க(ன்)ப்பேர்ப்
பரமஞானி சேவடியும்
வழுத்தும் நூல்கள், பிறமொழிகள்,
மற்றும் மேன்மைக் கலைஅறிவும்
கொளுத்திவிட்டோர் பதமலரும்
கொண்டேன் சென்னிக்கு அணிஆக!"

ஆனாலும், அத்தோடு, அவர்தம் படிப்பார்வம் குறைய வில்லை. அங்கு சில நண்பர்களின் உதவியோடு, 'தனவைசிய இளைஞர் தமிழ்ச்சங்கம்' என்ற அமைப்பொன்றைத் தொடங்கி, அதில் ஞாயிறுதோறும் ஏதாவது ஒரு சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்தார். பெரியவர் ஒருவரைத் தலைமை தாங்கவைத்து, மற்ற மூன்று பேச்சாளர்களைத் தமக்குள் தயார்செய்துவிடுவது அவர் வழக்கம். கட்டுரைக்கோவை, ஆனந்தபோதினி போன்ற இதழ்களில் இடம்பெறும் சிறு கட்டுரைகளை மனப்பாடம் செய்து சொற்பொழிவு செய்வதில் ஏற்பட்ட ஆர்வம், பிற நூல்களைத்தேடிப் பெறச் செய்தது.

காலை மாலைச் சிற்றுண்டிக்காகக் கிடைக்கும் ஒரு ரூபாயைக் கொண்டு இரங்கூனில் உள்ள 'நவீன கதாபுத்தக சாலை'க்குச் சென்று நூல்களை வாங்கிச் சேர்த்துப் படிக்கத் தொடங்கினார். மூன்றாண்டுகளில் சுமார் 800 நூல்கள் சேர்ந்தன என்றால் அவரது கற்றலின் ஆர்வத்தையும், வேகத்தையும் கணக்கிட்டுப் பார்த்துக் கொள்ளலாம்.

கல்வியும் தொண்டும் கலைப்பணியும்

1923இல், தென்னாட்டில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் துயருற்ற மக்களுக்கு உதவவேண்டி, தம் சங்கத்தவர்களைக் கூட்டி நாடகம் நடத்தினார்.

"நிவாரண நிதிக்காகவும், சங்க வளர்ச்சி நிதிக்காகவும், நாடகம் நடத்தினோம். 3000 ரூபாய் வசூலானது. செலவு

தவிர்த்து எஞ்சியது 2500 ரூபாய். 1500 ரூபாய் வெள்ளத்துயர் துடைப்பு நிதிக்கு அனுப்பினோம். 1000 ரூபாயைச் சங்க வளர்ச்சி நிதியில் சேர்த்தோம். சங்க வளர்ச்சிக்காக, நாடகங்கள் நடத்தினோம். 'விருத்தகுமார பாலரானது', 'மாமனாக வந்து வழக்குரைத்தது' போன்ற நாடகங்கள் மக்களைப் பெரிதும் மகிழ்வித்தன... நாடகங்கள் மூலம் ஐம்பதாயிரம் ரூபாய் கிடைத்தது"

என்று தீபம் இதழின் பேட்டியில் நினைவுகூர்கிறார், சா.க. (தீபம், தொ-1, ப.430)

பின்னர், 1926-27இல் இரங்கூனில் கல்விக் கழகம் ஒன்றைத் தொடங்கி, 4 லட்சரூபாய் நிதிசேகரித்து, 'செட்டியார் ரெஸிடென்ஷியல் ஹைஸ்கூல்' தொடங்கியது எளிய பணியா? என்ன?

பர்மிய அரசு பாராட்டும் வண்ணம் அமைந்த அந்த உயர்நிலைப்பள்ளியில் சா.க.வும் ஓர் ஆசிரியர். தமிழ், கணக்கு, வரலாறு போன்ற பாடங்களை நடத்திய அனுபவத்தின் பரிமாணங்கள் பின்னர் எப்படி விரிந்தன என்பதை வரலாறு சொல்லும்.

இவ்வாறெல்லாம் பெற்ற படிப்பும், பணியும், தொண்டும் கூடி, கல்வியிற் பெரியராக, சா.க.வை உயர்த்திற்று. பிற்காலத்தில் எந்தக் கவியானாலும், இலக்கியமானாலும் உள்புகுந்து உலவும் ஆற்றலைக் கணேசனார் பெறுதற்குக் காரணம் ஆனவன் கம்பனே.

ஆனால், இந்தப் படிப்பு எல்லையோடு நிறுத்திக் கொள்ளாமல் கம்பக்கடலுள் சா.க. மூழ்கியபோதிலும் பிற இலக்கியங்கள் அனைத்தையும் அடங்காப்பெருந்தாகத்தோடு பருகத் தொடங்கினார். தம் படைப்புகளில் அவற்றைப் பக்குவமாகப் பகிர்ந்துகொள்ளவும் தலைப்பட்டார். அவரைப் பொருத்த அளவில், தமிழ் ஒரு மொழி என்கிற புரிதலோடு நிற்கவில்லை. பாரதிக்குப் பராசக்திபோல், இவருக்குத் தமிழ்த்தாய், தெய்வம். இல்லாவிட்டால், சுந்தரர் பெருமான் திருத்தொண்டத்தொகை பாடியதுபோல் சா.க. தமிழ்த் தொண்டத்தொகை பாடியிருப்பாரா?

அடியார்க்கும் அடியார்

'ஆதிமுதல் ஆசான் அகத்தியன்' தொடங்கி, நக்கீரர், கபிலர் பரணர், சீத்தலைச்சாத்தனார், மருதனார், இளநாகனார், ஔவையார் என அனைத்துச் சங்கப்புலவர்களையும் போற்றிப் பாடுகிற அப்பாடலில், சைவம், வைணவம் கடந்து சமணம், பௌத்தம், இசுலாம்,கிறித்துவம் உள்ளிட்ட எல்லாச் சமயச் சான்றோர்களுக்கும் வணக்கம் உண்டு.

வள்ளலார், பாரதியார், திரு.வி.க., உ.வே.சா., இவர்களோடு, வீரமாமுனிவர், ஜி.யு.போப், குணங்குடி மஸ்தான் சாகிபு, பண்டிதமணியார், வ.ரா., கல்கி, புதுமைப்பித்தன், ரசிகமணி, தெ.பொ.மீ, இவர்களோடு இராஜாஜியையும் போற்றிப் பரவுகிறார் எனில் அவர்களது இலக்கியத்தில் ஆழ்ந்து தோய்ந்து கற்ற, பெற்ற அனுபவத்தின் நன்றிப்பெருக்குத்தான் இக்கவிதை என்பதை உணர்ந்து கொள்ள இயலும்.

இத்தகு ஆர்வம் இவருக்கு ஏற்பட முக்கியக்காரணம், அவரது காலம். அது உண்டாக்கித் தந்த கம்பீரமான மாந்தர்கள் என்பதுதான் உண்மை.

அக்கால அரசியல், அறம், கல்வி, ஆன்மிகம், ஒழுக்கம் உள்ளிட்ட அத்தனையையும் உள்ளடக்கி இருந்தது. காந்தி யெனும் காந்தத்தால் ஈர்க்கப்பெற்ற இவ்வலிய இரும்பு சிறைச் சாலைக்குள் தம்மை இட்டுக்கொண்டபோதும் கற்பதை, நிறுத்திக் கொள்ளவில்லை.

சிறைக்கோட்டமும் கல்விக்கோட்டமே!

> சா.கணேசன், "தமிழ் இலக்கியங்களில் ஆழ்ந்த பற்றுக் கொண்டவர். பலமுறை சிறை சென்றதினால், தம் போன்ற வேறு சில தேசபக்தர்களையும் சிறையில் சந்திக்கும் வாய்ப்பு அவருக்குக் கிட்டிற்று. ஓர் இலட்சியத்தினால் ஈர்க்கப்பட்டு, அந்த இலட்சியத்திற் காகவே சிறைக்குச் சென்றவர்களாகையால், அங்கே அவர்களிடையே வம்புக்கோ, வீண்பேச்சுக்கோ இடமில்லை. அவர்களுடைய சிந்தனையும், சொல்லும் நாட்டைப்பற்றியும், நாட்டுநடப்பைப் பற்றியும், இந்திய

சமுதாயத்தின் நிலையைப் பற்றியுமானவையாகவே இருந்தன. ஆகையால், அரசியல், சமயம், இலக்கியம், தத்துவம் ஆகியவை பற்றி அவர்களிடையே கருத்துப் பரிமாறல், பேச்சு, விவாதம், பயிற்சி ஆகியவை நிறைந்திருந்தன. இந்தச் சூழ்நிலையில், தாம் பயின்றிருந்த தமிழிலக்கியங்களிலுள்ள பெருமைகளை யெல்லாம் தம்முடன் இருந்தவர்களுக்குத் திரு. சா.கணேசன் விளக்கினார். இதன் காரணமாகத் தமிழ் இலக்கியங்களில் ஆர்வமும் ஈடுபாடும் பெற்றவர்கள் பலர். திருக்குறள், தேவாரம், திருவாசகம், நாலாயிரம் ஆகிய நூல் களோடல்லாமல், சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் முதலிய காப்பியங்களிலும் அவருக்கு ஆர்வமும், பயிற்சியும் உண்டு. ஆனால், எல்லாவற்றையும் விட, அவரை முழுமையாக ஆட்கொண்டது கம்பனுடைய ஒப்புயர்வற்ற இராமகாதையேயாகும்" (கம்பன் அடிப்பொடி கலைக்களஞ்சியம்,ப.74)

என்கிறார் நீதியரசர் மு.மு.இஸ்மாயீல்.

இந்திய இலக்கியச் சிற்பி

கற்றும், கற்றதைக் கற்றுக் கொடுத்தும் பெற்ற அனுபவங்கள் சா.க.வுக்குள் முதிர்ந்து நின்ற சூழலில் அவர் வடித்த கதைகள், கட்டுரைகள், செய்யுட்கள் தமிழ் இலக்கியப் பிழிவாகவே அமைந்தன. கருத்துச் செறிவும், இலக்கியப்புலமையும் மிளிரும் அவர்தம் ஆக்கங்கள் உலகு தழுவிய பார்வை கொண்ட இந்திய இலக்கியச்சிற்பியாகவே அவரை உயர்த்தின.

காகன், கே.ஜி, மண்டுமாமா போன்ற பெயர்களில் படைப்பிலக்கியங்களை அவ்வப்போது படைத்தளித்த சா.க., வின் உன்னதப் படைப்பு என்று சொல்லத்தக்கது 'கல்சொல்லும் கதைத் தொடர் ஆகும்.

தமது கல்வெட்டுத் தேடும் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட அக்கதைகள் நுட்பமாகப் பின்னப்பெற்றவை. இலக்கிய நயமும், சித்திரிப்புச் செறிவும், நுட்பமான விளக்கமும் தாங்கி எளிய நடையில் வெளிவந்த அக்கதைகள், அவர்தம் படைப்புகளின் கொடுமுடியெனக் கொண்டாடலாம்.

அதேபோல், ஆய்வுத்துறையில் இவர் எழுதிய கட்டுரைகள் குறைந்த அளவுடையனவே ஒழிய, குறுகிய போக்குடையவை அல்ல. பிள்ளையார்பட்டித் தலவரலாறு, மாமன்னன் ராஜராஜன், Some Iconographic Concepts ஆகியன வரலாற்றுத் துறைக்கு அவர் வழங்கிய மகத்தான தமிழ்க்கொடைகள்.

பாரிஸ் நகரில் சா.க.வின் தமிழ் முழக்கம்

தமிழ் என்றாலே உடன் நினைவுக்கு வருவது, எண்ணும் எழுத்தும். இந்த எண்ணையும், எழுத்தையும் முன்னிறுத்தி, பாரிஸ் நகரில் நடைபெற்ற உலகத்தமிழ்க் கருத்தரங்கில் அவர் அளித்த கட்டுரையின் பிழிவை இங்கே காண்பது அவர்தம் தனித் தன்மை மிக்க ஆய்விற்குத் தக்க சான்றாகக் கொள்வதற்காக.

தமிழின் கண்கள்: எண்ணும் எழுத்தும்

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்' என்பது தமிழின் புகழ்மிகு தொடர். இது கற்போர்க்கு மட்டுமன்றி, மொழிக்கும் ஆகும் என்பதை நுட்பமாய் விளக்கும் கம்பன்அடிப்பொடியின் பாரிஸ் நகரத்து மாநாட்டின் ஆய்வுரை நமக்கு இனிதுணர்த்தக் காணலாம். முதலில் எழுத்துக் குறித்த அறிமுகம் பின்வருமாறு:

> "எழுத்து, எண், இலக்கம், குறுக்கம், குறியீடு போன்றவை யாவும் வரி எழுத்தின் விரிவுகளாகும். எழுத்துக்கள் யாவும் இன்று ஒலியையும், முன்னர் பொருள், சொல் ஆகியவற்றையும் உணர்த்துவன. கண்ணெழுத்து (Pictograph) முன்னர்த் தோன்றியவை. ஒலியை உணர்த்தும் தனி எழுத்தும், கூட்டெழுத்தும் (உயிர், மெய், உயிர்மெய்) பின்னர்த் தோன்றியவை. இவை யாவும் எழுத்துக்கள் ஆகும். உலகிலுள்ள பல மொழிகட்கு எழுத்தே இல்லை. எஞ்சியவற்றில் பலவற்றிற்குச் சொந்த எழுத்தில்லை. எனவே, சொந்த எழுத்தைப் படைத்தவை மிகச் சிறந்த சில மொழிகளே. எழுதப்படும் மொழிகளில் பல, பிற ஒத்த மொழிகளின் எழுத்தையே தனதாக்கிக் கொண்டவை. உலகில் எண் உடைய மொழிகள் மிகமிகச் சிலவே. இலக்கமோ, எண் அறிவுக்கும், ஆய்வுக்கும், விசாரணைக்கும் எட்டிய வரையில் தமிழையன்றி

வேறெம்மொழிக்கும் இல்லை. பொருள் வளமும், கணித நெறியும், விஞ்ஞான அறிவும் வளர வளரத்தான் எண்களின் பெருமையும், இலக்கங்களின் நுண்மையும், நுண்மையின் பலகூற்று நுண்மைகளும், தோன்றும் எண்ணில் தொகையும், தொகையின் பல மடங்குப் பெருக்கத் தொகைகளும், இலக்கத்தின் வகையும் வகையின் பல மடிப்புப் பகுப்புகளும், அவற்றிற்குத் தனித்தனிப் பெயர்களும் இன்றியமையாதனவாகும். இந்த அளவையைமனத்துட்கொண்டு,சிந்திப்போமானால், கணிதத்துறையில் இன்னும் எவ்விடத்தும் ஏற்பட்டிருக்காத உன்னத நிலைக்குத் தமிழர் பல நூற்றாண்டுகட்கு முன்னரேயே உயர்ந்துவிட்டிருக்கிறார்கள் என்னும் மெய்ம்மை தெள்ளிதிற் புலனாகும். எண்களின் பெருக்கத் தொகைகள் நிகண்டுகளால் நன்குணர்த்தப்பெறுகின்றன." (தீபம் இதழ்த்தொகுப்பு, பாகம்-1, பக்.437-438)

இது ஆய்வுக்கட்டுரையன்று. ஆய்வு குறித்து, கவிஞர் சேவற்கொடியோனிடம் தீபம் இதழுக்காக நல்கிய நேர்காணலின் சிற்றுரை. இனி தமிழ் எண்ணின் தனித்துவத்தைப் பின்வருமாறு அவர் உரைக்கக் கேட்கலாம்:

"ஒன்று முதல் கோடிக்கோடிக்கோடி அல்லது, முக்கோடி வரை அதாவது ஒரு தானம் முதல் 22 தானம் வரை உள்ள எண்தொகைப்பெருக்கத்திற்கெல்லாம் தனித்தனிப் பெயர்கள் உள்ளன. அவை, முதலில், தமிழிலேயே அமைந்திருந்தன. ஆனால், பின்னர் பல மொழி அறிஞர்க்கும் பயன்பட வேண்டும் என்னும் பெரு நோக்குடன் அக்காலக் கலைஞர் பொதுமொழியான சமஸ்கிருதத்தில் மொழிபெயர்க்கப்பெற்று வழக்காற்றில் இருந்து வந்திருக்கின்றன. இலக்கம் இருவகையாகத் தமிழில் அமைந்திருக்கின்றன. அரை அரையாகப் பகுத்துக் கொண்டு சொல்லும் இலக்கங்கள் ஒருவகை. மற்றொன்று பத்துப் பத்தாக வகுத்துக்கொண்டு சொல்லும் இலக்கங்கள் ஒருவகை. இவற்றை இரு கூற்றிலக்கம்(Fraction) பதின் கூற்றிலக்கம் (Decimal) எனலாம்" (மேலது, ப.438)

இதுவரை சுட்டியது வரலாற்றுநோக்கோடு சொல்லிய பொதுச் செய்தி. இனித்தான் வருகிறது, வாழ்வியலோடு கம்பன் அடிப்பொடியார் கண்டு தரும் ஆய்வுச் செய்தி.

"முன்னர் அரைவாய் என்றும் மாவாய் என்றும் கூறுவர். இந்தமுறை உடலிடத்தே கண்டு அமைத்ததாகும். உடல் ஒன்று அரை பிரிக்கின்ற இடம். அங்கிருந்து கால் பிரிகிறது. காலின் பகுதி அரைக்கால். அதன் பகுதி வீசம். அதன் பகுதி அரை வீசம். அதன் பகுதி கால் வீசம் என இரு கூற்றிலக்கம் அமையும். கால் வீசம் என்பது 1/64 ஆகும். இவ்வகை, கணக்கிற்குக் காலும், மற்றொரு வகை பதின் கூற்றிலக்கமாக அமையும். அது கால்விரல், கைவிரல்களை அடிப்படையாகக் கொண்டு தோன்றியதாக வேண்டும். இன்று கிராமங்களில் கத்திரிக்காய் முதலியவற்றை எண்ணும்பொழுது, ஒருகை என்று ஐந்தைக் குறிப்பிடல் கருதத்தக்கது. ஒரு காலை ஐந்தாக வகுத்து அதற்கு 'மா' என்றனர். இருகாலும் சேர்ந்தது அரையன்றோ? அந்த அரைக்குப் பத்துமா, அரைக்கு மேற்பகுதியில் இரு கைகள், இரு கை விரல்கள் பத்து. இந்த அரைக்கும் பத்துமா. இங்ஙனமாக ஒன்று இருபது மா ஆயிற்று. ஒரு மாவுக்கு நான்கு காணி. காணி என்பது 1/80 ஆகும். காணிக்கு நான்கு முந்திரி. முந்திரி 1/320 ஆகும். இவை யாவும் மேல்வாய் இலக்கம் எனப் பெயர் பெறும். இங்ஙனமே, மேலே கண்ட நெறியில் முந்திரியை ஒன்றாகக் கொண்டு, மேலும், பகுத்துக் கொண்டு போவது கீழ்வாயிலக்கம் எனப் பெயர் பெறும். அது கீழ்க்கால், கீழ்மா, கீழ்க்காணி, கீழ்முந்திரி வரை செல்லும். கீழ் முந்திரி என்பது 1/102,400 இவ்வகைக் கணக்கு நில அளவை முதலியவற்றிற்கும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இதன்கீழே, இம்மி, 1/1075,200, அணு 1/10752000 இலேசு 1/10,75,20,000, கோண் 1/1,07,52,00, 000 வரை கணித இலக்கங்கள் வகுக்கப்பட்டு வழக்கில் இருந்திருக்கின்றன. இவற்றை நிகண்டுகளாலும், தமிழ் இலக்கியங்களாலும் உணர முடிகின்றது. கம்பன் தனது பெருங்காப்பியத்தில், 'பேரெண்ணான பரார்த்தம்', அல்லது முக்கோடி என்னும் 22வது மேல்தான எண்ணை,

'முக்கோடி வாழ்நாள்' என்றும், மிகச்சிற்றிலக்கமான 12ஆவது கீழ்த்தானமான கோணை, 'அணுவினைச் சதகூறிட்ட கோண்' என்றும் விளக்கிக் காட்டும் அருமைப்பாடு ஒப்பற்றதாகும். இங்ஙனம் இருபத்திரண்டு மேல்தானங்களும், பன்னிரண்டு கீழ்த்தானங்களும், எண்ணிலக்கப் பெயர்களுடன் பல நூற்றாண்டுகளாக வழங்கிவருவதை அசைக்க முடியாத பலவகைச் சான்றுகளுடன் மெய்ப்பிக்கலாம். முப்பது ஆண்டுகட்கு முன்வரையிலும், புத்தகங்களின் பக்க எண்கள் தமிழ் எண்களாகவே மிளிர்ந்தன. இன்று எங்கு போய் மறைந்தது?" (மேலது, பக்.*438-439*)

என்று அவர் விடுக்கும் வினாவுக்கு அவரே விடையும் வைத்திருந்தார். அது அவரின் கனவாகவே இன்னும் இருப்பது காலப்பெருங்கூத்து.

"எவருக்கும் இல்லாத ஒப்பற்ற - தனிப்பெரும் செல்வமான எண்ணிலக்கங்களின் விடிவுக்காக கம்பன் கழகம் தொடங்கவிருக்கும் கல்லூரியில் கணிதப் பிரிவு தொடங்கப்படும்" (மேலது)

என்று முடிகிறது அந்நேர்காணலின் எண் மற்றும் எழுத்து விளக்கம்.

இதுபோல், அவர் கண்டு தந்த நீர்நிலைப் பெயர்களும் விளக்கங்களும், தமிழர்தம் உணவுமுறைகள், தமிழகத்து அளவை முறை ஆகியன அவர்தம் நுண்மாண் நுழைபுலமிக்க ஆய்வாற்றலுக்குக் கட்டியம் கூறுவனவாகும்.

நாகர்கோவில் எழுத்தாளர் சங்க மாநாட்டில்...

உலகத் தமிழ் மாநாட்டில் பங்கேற்ற இப்பெருந்தகை, உள்நாட்டு எழுத்தாளர் சங்க மாநாட்டிலும் பங்கேற்ற பாங்கை அதே தீபம் இதழ் நேர்காணலில் (*1965*) பின்வருமாறு நினைவு கூர்கிறார் எழுத்தாளர் நாரண. துரைக்கண்ணன்.

"*1947*இல் நான் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராக இருந்தேன். நாகர்கோவிலில் அவ்வாண்டு தமிழ் எழுத்தாளர் மாநாடு நடந்தது. மாநாட்டிற்கும் நானே

தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். மாநாட்டின் வரவேற்புத் தலைவராகக் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை இருந்தார். ஸ்ரீமான் ரா.பி.சேதுப்பிள்ளை, கி.வா.ஜ., பெ.தூரன், ம.பொ.சி., சா.கணேசன், நடிகராய் இருந்தும் தமிழ் இலக்கியப் பற்றுடனிருந்த திரு. என்.எஸ்.கிருஷ்ணன், டி.கே.எஸ். சகோதரர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். அப்போது நாஞ்சில் நாட்டைத் தமிழகத்துடன் இணைக்கவேண்டுமென்ற இயக்கம் நடந்தது" (தீபம் இதழ் தொகுப்பு-2, ப.44)

புரவலர் ஆகிய புலவர்

படிப்பும், ஆழ்ந்த புலமையும் வாய்ந்த சா.க. புலவராக மட்டும் திகழ்ந்தவர் அல்லர். புலவர்களைப் புரக்கும் புரவலராகவும் விளங்கியிருக்கிறார். பாரதி தொடங்கித் தன் சமகாலக் கவிஞரான கண்ணதாசன் வரை அவர்தம் பரிவுக்கும் பாசத்திற்கும் உள்ளான கவிஞர் பெருமக்கள் பலராவர்.

"பாரதியார் சென்னையை விட்டுப் புதுச்சேரிக்குப் போனபின் சுமார் பத்து வருஷங்கள் பிரிட்டிஷ் இந்தியாவிற்குள் பிரவேசிக்க முடியாத நிலையில் இருந்தார். அதற்குப்பின் அந்த அகத்தியம் குறைந்து பாரதியார் பாண்டிச்சேரியை விட்டுத் தமிழ்நாட்டுக்குள் சஞ்சரிக்க முடிந்தது. அந்தக் காலங்களில் அவருக்கு மிகவும் ஆதரவாக இருந்தவர்கள் கானாடுகாத்தான் ஸ்ரீ வை.சு.ஷண்முகம் செட்டியார், காரைக்குடி ஸ்ரீ சொ.முருகப்பா, ஸ்ரீராய.சொக்கலிங்கம், ஸ்ரீசா.கணேசன் முதலான செட்டிநாட்டு இளைஞர்கள். இவர்கள் எல்லோரும் இப்போது எனக்கு மிகவும் பழக்கமான அன்பர்கள்..."

என்று தன்வரலாற்று நூலான 'என் கதை'யில், சா.க. பற்றி, நாமக்கல் கவிஞர் குறிப்பிடுவார். (பக்.316-317)

மிகச்சிறு வயதில் பாரதியாரைச் சந்தித்த அனுபவத்தை, சா.க. 'முதல் சந்திப்பு' என்று எழுதியும் இருக்கிறார். பின்னர், பாரதிதாசனோடு கோட்டையூர் நிகழ்வில் ஒருங்கே அரங்கேறி உரையாற்றியும் இருக்கிறார். அவருக்கு ஞானபீடப் பரிசு

வழங்கப் பரிந்துரையும் புரிந்திருக்கிறார் என்பது வரலாறு. நாமக்கல் கவிஞர், கவியோகி சுத்தானந்த் பாரதி அ.சீனிவாசராகவன், கி.வா.ஜ. உள்ளிட்ட பல்வேறு கவிஞர்கள் பெருமக்களை அழைத்து வந்து கம்பன் விழாக் கவியரங்கில் கவிமழை பொழியக் காரணமானவர் சா.க. அவர்களுள் முத்தையா என்கிற கண்ணதாசனும் ஒருவர்.

கணேசரிடம் பயந்த கவியரசு

"சிறுவயதில், நான் காரைக்குடிக்கு அருகிலுள்ள அமராவதிபுதூர் குருகுலத்தில் படித்துக்கொண்டிருந்தேன். ஆண்டுதோறும் காரைக்குடியில் கம்பர்விழா நடக்கும். மாலை நேரத்தில் நான் அங்கு வந்துவிடுவேன். டி.கே.சி.



பேசுகிறார் என்றால் எனக்கு மிகவும் உற்சாகமாக இருக்கும். நோட்டுப்புத்தகமும் பென்சிலுமாக முன் வரிசையில் அமர்ந்து கொள்வேன். கவிதைகளைப் பிரித்துப் பிரித்து அழகாகச் சொல்வார் டி.கே.சி. அப்படி அவர் சொல்லிக் கொண்டுவரும்போதே அனைத்தும் என் மனதில் பதிந்துவிடும்" (தீபம் நேர்காணல், ப.416)

என்று சொல்கிறவர்தான், பின்னாளில் கவியரசு என்று பிரபலம் ஆகிய கண்ணதாசன். ஆனாலும், கம்பன் அடிப்பொடி என்றாலே அவருக்குக் கனத்த பயம் உண்டு. காரணத்தை அவரே கம்பன் கழகக் கவியரங்கில் பின்வருமாறு எடுத்துரைக்கிறார் கேளுங்கள்:

"கடிகாரம் பார்த்தே தான்
காரியங்கள் செய்வதெனப்
பிடிவாதம் கொண்டுள்ள
பேரவையின் தலைவர்களே,
கடிகாரம் என்பகைவன்;
கணேசர் பயத்தினிலே
கடுகி இங்கே ஓடிவந்தேன்!"

(கண்ணதாசன் கவிதைகள்,தொ.6,ப.191)

பிறர் நலம் பேணிய பெற்றியாளர்

சா.க, தமது படைப்புகளைவிடவும் பிறரது படைப்புகளையும், படைப்பாளிகளையும் கொண்டாடுவதில் மிகுந்த ஆர்வம் உடையவராகத் திகழ்ந்தார். புதிய புதிய படைப்பாளிகளை, பேச்சாளர்களை, ஆய்வாளர்களைத் தம் அரங்கிற்கு அழைத்து வந்ததோடு, அவர்களது ஆய்வுக்கும் தமிழ்ப்பணிக்கும் ஆர்வம் ஊட்டினார். அவ்வகையில் அவர்களின் ஆக்கங்களுக்கு அற்புதமான முன்னுரைகள் நல்கினார்.

'கம்பன் புதிய பார்வை' என்னும் நூலுக்கு, 1984ஆம் ஆண்டு சாகித்ய அகாதெமி விருதுபெற்ற அ.ச.ஞானசம்பந்தன், சா. க.வின் ஊக்கம் பெற்று உயர்ந்தவர்.



"இலக்கியத் துறையில், நீண்ட காலமாகச் சொற்பொழிவு செய்துகொண்டிருந்தேன். ஆனாலும், 1940லிருந்து சகோதரர் சா.கணேசன் தொடர்பு ஏற்பட்ட பிறகு கம்பனைப் பொறுத்த மட்டில், எனக்கு அது ஒரு வாய்ப்பைத் தந்தது. கணேசன் கம்பனுக்காகவே வாழ்ந்தார்

என்பதைப் பலரும் அறிவார்கள். மிக உரிமையோடு என்னுடன் நெருங்கிப் பழகவும், பல பிரச் சினைகளைப் பற்றி ஆராயவும் வாய்ப்பு ஏற்பட்டது. அது கம்பனில் தனிப்பட்ட முறையில் ஈடுபட்டு, படித்து ஆராய்ந்து பல நூல்களை எழுதுவதற்கு உதவிற்று. ஆகவே, திரு. சா.கணேசனின் தொடர்பு மறக்க முடியாத ஒன்று" (ஞானசம்பந்தக் களஞ்சியம், ப.19)

என்று குறிப்பிடுகிறார் அ.ச.ஞா.

இந்த வரிசையில் குறிப்பிடத் தகுந்த இன்னொரு பேரறிஞர் எஸ்.ஆர்.கே.என்னும் எஸ்.இராமகிருஷ்ணன். தமிழ் ஆங்கிலம் இரண்டிலும் ஆழங்காற் பட்ட அறிஞர். அவர்




காரைக்குடி கம்பன் திருநாளில் முதன்முதலில் பேசிய தலைப்பு 'கம்பனும் மில்டனும்' (1955) அடுத்து, 1956ல் 'சிறியன சிந்தியாதான்'. இந்த இரண்டு பொழிவுகளும் வரலாற்றுச் சிறப்புடையவை. இவற்றுள் முதற்பொழிவாக அமைந்த 'கம்பனும் மில்டனும்' என்ற தலைப்பே, அவர்தம் முனைவர்ப் பட்ட ஆய்வாகவும் அமைந்தது. ஒப்பாய்வுத் துறையில் முத்திரை பதித்த அவ் ஆய்வேடு நூல் வடிவானபோது நன்றி மறவாமல் அவர் குறிப்பிட்ட முன்னுரையில் இந்த அழுத்தம் புரியும்.

தனக்கென்று எந்தப் பட்டத்தையும் விரும்பாத, ஏற்காத சா.க., எஸ்.ஆர்.கே. முனைவர்ப்பட்டம் பெற்றமைக்கு

மகிழ்ந்து வெண்பாப் பாடியிருக்கிறார். அதில் முனைவர்ப் பட்டமானது, 'செம்புலமை மெய்க்கீர்த்தி' என்று புதுப் பெயர் பெற்றிருக்கிறது.

"கம்பனுடன் மில்ட்டன் கவிநயத்தைக் கண்டளந்து
செம்புலமை மெய்க்கீர்த்தி சேர்ந்தொளிர- தம்பி,நீ
கன்னித்தமிழ் வளர்த்துக் காசினியில் பல்லாண்டு
மன்னிப் பொலிக மகிழ்ந்து"

என்று 'தம்பி' என உரிமையோடு அழைத்து வாழ்த்துகிறார்.



இதுபோல், முதுகுளத்தூர் அட்டாவதானம் சரவணப் பெருமாள் கவிராயரின் பேரரும், காரைக்குடி அழகப்பாக் கல்லூரியின் தமிழ்த் தலைவராகவும் விளங்கிய பூ.அமிர்தலிங்க னாரைப் பலமுறை காரைக்குடிக் கம்பன் விழாக் கவியரங்கில் ஏற்றிப் பெருமை கொண்டவர் சா.க.

இவர்தான் சா.க.வின் மணிவிழா மலருக்கான கட்டுரைகள் தொகுக்க முனைந்தவர். ஆனால், சா.க. மறுத்ததால் அப்பணி அப்படியே நின்றது வரலாறு.

இவர் காரைக்குடிக் கம்பன் கழகக் கவியரங்கில் பாடிய கவிதைகளைத் தொகுத்து, 'கம்பன் கவியரங்கில் மலரமுதன்' என்று காரைக்குடி பாண்டியன் பதிப்பகம் வெளியிட்டது. பூ.அமிர்தலிங்கன் என்ற பெயரின் முன்னெழுத்துகளைக் கொண்டு இவருக்கு மலரமுதன் எனப்பெயர் இட்டவர்

சா.க.தான். அதற்குத் தமக்கேயுரிய சிக்கனத்தோடு, 5.1.64இல் முகமலர் நல்கியவர் சா.க.

"பொலபொலெனக் கவிமாரி பொழிசரவ
ணப்பெருமாள் புகழிற் பூத்தான்,
அலைகடல்போல் புகழ்மோதும் அழகப்பர்
கல்லூரி அமிர்த லிங்கன்
கலைவளமார் தமிழ்க்கம்பன் திருநாளில்
கவியரங்கம் களிப்ப ஏறி
உலைவறியாப் பாமலர்கள் உதிர்க்கின்றான்;
நாமவற்றை உவந்து கொள்வாம்"

இலக்கியவுலகின் இலக்குவர்

இதுபோல் எத்தனையோ பேருக்கு இவர் முன்னுரைகள், சாற்றுக்கவிகள், வாழ்த்துத் தொடர்கள் எழுதியிருக்கிறார்.

அந்தப்பொழுதுகளில் அவர் ஆயிரம் ஆயிரம் எழுதியிருக்கலாம். ஆற்றல்சால் பொழிவாளர் அவர் ஆயினும் மற்றவரைப் பேச வைத்துப் பார்ப்பதில் மனநிறைவுகொள்பவர். மரபில் கவிதைகளை மழைபோல் கொட்டக்கூடிய ஆற்றல் கைகூடியவர்; ஆயினும் அதனை மறைத்துக்கொண்டு மற்ற கவிஞர்களைக் கம்ப முற்றத்தில் கொண்டுவந்து கவியரங் கேற்றியவர்.

இவர்தம் முத்திரை பெற்றுத் தமிழகத்தில் பவனி வந்த பாவலர்கள் பலப்பலர்.

இவைபோக, இவரால் பலன் பெற்றோர் எண்ணற்றோர். ஆயினும் இதையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ளாத தூயர்; தொண்டர்.

தமக்கெனில், எத்துயரையும் தாங்கிக் கொள்ளும் தயாபரர். ஆனால் பிறர்க்கெனில் உயிரும் நல்கும் பெற்றியாளர். இலக்கியத் துறையில் முன்னவர்களையும் பின்னவர்களையும் மேலேற்றி விட்டு, கண்ணும் கருத்துமாய் அவர்கட்கு ஏதும் நேராமல் பேணிக் காத்துப் பெருமையுற வளர்த்ததில் இவர், இலக்கிய இலக்குவர்.

ஆங்கில மொழியில் ஆற்றல் பெற்றவர்

தமிழிலும், ஆங்கிலத்திலும் தன் கருத்தை எடுத்துமொழியும் ஆற்றல் வாய்ந்த இவர், தமிழின் மேன்மையைத் தரணி அறிந்துகொள்ள ஆங்கிலத்தை வாகனமாக ஆக்கிக் கொண்டார். தமிழ் எனும் மொழி, கலை, இலக்கிய, இலக்கண வளமைக ளோடு, எதிர்கால வாழ்விற்கு எப்போதும் வழிகாட்டியாக இருக்கும் பெற்றியை, அதன் தெய்வத் தன்மையைச் சிறப்புற எடுத்துக்காட்டும் ஆங்கிலக் கட்டுரை, Some Iconographic concepts என்பதாகும். அதன் நிறைவில் அவர் எழுதுவார்:

TAMIL THAAI

"Thus various forms of Gods have been conceived and given visual representation. The latest in the series is the conception of 'Tamil Thaai'. She is conceived as the most benign Goddess, occupying a unique place among the languages of the word; whose body is effulgent; who bears the torch of knowledge and whose symbols are dance, music and literature. The visual representation of this concept is seen in the metal image of the Goddess now preserved in Karaikkudi at Kamban Kazhagam. She is shown seated on a globe with four arms and resting her right leg on a lotus indicating her divinity. On the lower left arm she holds palm leaves which stand for literature. A yazh with a curved stem is held across the body with the left arm and this stands for music. The yazh in the representation is the celebrated sengottu yazh referred to in Tamil literature and we can now see it at Thirumeyyam Cave Temple. The lower right arm bearing the Jnana mudra holds an akshamala. The mudra of the Goddess stands for the art of dance and drama. The upper right arm holds the torch of knowledge. The white silken assuming the shape of Tamil Nad. The ornaments that the Devi wears are those described in Tamil literature. This personification of the Tamil Goddess is an outstanding addition to the iconographic concept of the Tamil country." (கம்பன் அடிப்பொடி கலைக்களஞ்சியம்,பக்.211-212)

இந்தக் கருத்து விளைச்சலே, கம்பன் அடிப்பொடியைக் காலத்தை வெல்லும் காரியமாகக் கம்பன் கழகத்தில் தமிழ்த் தாய்க்குத் திருவுருவும் பெருங்கோயிலும் சமைக்கத் தூண்டின என்பது தெளிவு.

காலத்தை எதிர்கொண்ட கடமைவீரர்

இவ்வாறே அரசியல்துறையில் முழுக்கவும் ஆழ்ந்து பணி செய்த ஜீவாவின் நாவில் கம்பநடம் புரியக் காரணமானவர் சா.க. காலக்கணக்கைக் கடந்த அதிசயம் காரைக்குடி, கம்பன் திருநாளில் அரங்கேறியது என்றால் அது ஜீவாவினால்தான். காலத்தை வென்ற பேச்சு அது என்பதும், அது காலகாலத்திற்கும் பேசப்படும் பேச்சாக அமைந்திருப்பதும் அக்காலத்தின் சாட்சியம் என்பதாகப் பதிவு கொள்ளலாம்.

அந்தக் காலம் பல அதிசய முரண்களை, அற்புதங்களை, ஆக்கங்களை ஏற்படுத்திய காலம்.

எதையும் அறியாமல் வெந்ததைத் தின்று விதிவந்தால் சாவோம் என்று அறியாமை வசப்பட்டு அழுந்தியிருந்த அப்பாவிகள் ஒருபக்கம். ஆங்கிலேய வழிதான் அனைத்துக்கும் என்று முற்றமுழுக்க ஐரோப்பிய பாணியில் தம்மை ஆக்கிக் கொண்ட அறிவுஜீவிகள் ஒருபக்கம். பழமைவாதம் பேசி, எதற்கும் ஒரு சாஸ்திர, சம்பிரதாயங்களை முன்வைத்து மக்களை மயக்கிய கும்பல் ஒருபக்கம், இவர்களுக்கு இடையில் எதையும் கேள்விக்குள்ளாக்கி, மார்க்சியத்தை முன்வைத்து ஒரு கூட்டமும், பகுத்தறிவு என்று நாத்திகம் பேசி, பழமரபுகளைக் கேலிக்கும் கேள்விக்கும் உள்ளாக்கி அதேவேளையில் தமிழ்மீது ஒருவித பற்றையும் ஊட்டிய அமைப்பு ஒருபுறமுமாகப் பல்வேறு போக்குகள் இந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்தில் எழுந்தன. இதனால் பல நன்மைகள் விளைந்தன.

வேர்களைத் தேடி விளக்கங்கள் பெறவும், பிறமொழித் துணைக் கொண்டு உலகியலை உணரவும், தன்னிலை உணரவும் இவை களம் அமைத்துக்கொண்டன. ஆரோக்கியமான விவாதங்களும், அடிப்படையையே அசைக்கும் ஆச்சரிய விபத்துக்களும் நடந்தன.

குறிப்பாக, திராவிட இயக்கம் எழுப்பிய அலை உண்டாக்கிய தாக்கம் முக்கியமானது. தமிழின் பெருமையைப் பேசிய அக்கூட்டத்தார் பக்தி இலக்கியத்தை முற்றாகப் புறக்கணித்தனர். பிராமண எதிர்ப்பு, ஆலயப்புறக்கணிப்பாக மாறி, பழந்தமிழ்ப் பண்பாட்டுச் சின்னங்களை மறுதலிப்பதாக அமைந்தது. தமிழின்மீது பற்றும், வடமொழி எதிர்ப்பும் காட்டிய அவர்களின் வாதங்கள் எதிர்மறையான நிலையில் இருந்தாலும் பல அழுத்தமான மாற்றங்களுக்கு அடிகோலியது. தந்தை பெரியார், அறிஞர் அண்ணா என்று அணிவகுத்த அக்கூட்டத்தார், மக்கள் மத்தியில் சொல்லலங்காரப் பந்தல்கள் நாட்டினர். அது, சாதி, சமய அடித்தளங்களை அசைத்துப் போட்டது. சீர்திருத்தச் சிந்தனை கிளர்ந்தது. ஆத்திக - நாத்திக மோதல்களும் நிகழ்ந்தன.

தேசியம், சர்வதேசியம், திராவிடம், சோஷலிஸம், ஜனநாயகம் என்றெல்லாம் முழக்கங்கள் எழுந்தன.

அந்தக் காலக்கட்டத்தில் தான் பொதுவுடைமைத் தளத்தில் இருந்து ஜீவா, குதித்தார். சமயவுலகில் இருந்து அடிகளார் விரைந்தார். வகுப்பறை தாண்டிப் பேராசிரியர்களும், நீதி மன்றங்களுக்கும் அப்பால் இரசனைக்காக நீதியரசர்களும், எழுத்துப்பணிக்கிடையே எழுத்தாளர்களும் மொத்தமாகத் தத்தம் துறைகளில் உழைக்கத் தொடங்கினர். நிறையும் குறையும் இருந்த போதிலும் அதில் ஓர் உயிர்ப்பான இயக்கம் இருந்தது. எல்லாரும் படிக்க ஆரம்பித்தார்கள். படித்தவர்கள் பேச ஆரம்பித்தார்கள். இரண்டும் முடியாதவர்கள் கேட்டார்கள். கேட்கக் கேட்க, சொல்லச் சொல்ல, எழுத எழுத விவாதங்களும் விளக்கங்களும் பல்கிப் பெருகின.

நாவலாசிரியர் பொன்னீலன் பார்வையில்...

இதுகுறித்து ஒரு நடைச்சித்திரமே தீட்டிக்காட்டுகிறார் நாவலாசிரியர் பொன்னீலன்:

> "ஒரு சமுதாயத்தின் பொருளியல் சாதனைகளை உடலென்று குறிப்பிட்டால், அதன் பண்பாட்டுச் சாதனைகளை ஆன்மா என்று குறிப்பிடலாம். இந்தப்


பண்பாட்டுச் சாதனைகளில் மிக முக்கியமானது மொழியும் இலக்கியமும். இலக்கியத்தின்பால் காங்கிரஸ் இயக்கம் கொண்டிருந்த மெத்தனமான, ஏனோதானோ வென்ற போக்கின் காரணமாக, ஏற்பட்ட ஒரு வெற்றிடத்தை திராவிட இயக்கம் மிக அருமையாகப் பயன்படுத்தி நிரப்பியது. சகல ஜாதிகளிலும் இருந்து புதிதாக உருவாகிய நடுத்தரவர்க்கப் பிரதிநிதிகளாக விளங்கிய அவர்கள் கடவுள் எதிர்ப்பை மிகப்பெரிய லட்சியமாகக் கொண்டிருந்தார்கள். இந்த விஞ்ஞான பூர்வமற்ற கடவுள் எதிர்ப்பு, சமூக அளவில் பிராமண எதிர்ப்பாக, பண்பாட்டு அளவில் பக்தி இலக்கிய எதிர்ப்பாக அமைந்தது. இலக்கியத்தையும் தத்துவத்தையும் ஒன்றாகப் பார்த்து, அவர்கள் தத்துவத்தை எதிர்ப்பதற்குப் பதிலாக, இலக்கியத்தை எதிர்க்க முயன்றார்கள். அண்ணா துரையின், 'தீ பரவட்டும்', பேச்சு, 'கம்பரசம்' நூல் போன்றவை, 'யாமறிந்த புலவரிலே' எனப் பாரதி சொல்வோர்களில் முதலாமவர் கம்பரல்ல தொல் காப்பியரே என்ற கி.ஆ.பெ. விசுவநாதனின் பேச்சு - எல்லாமே இந்தத் திசை தவறிய போராட்டங்களின் விளைவே. இந்தப் போராட்டத்தின் நேர் இலக்காக அமைந்தது, கம்பராமாயணம். நிலப்பிரபுத்துவ இலக்கியச் சிகரமான கம்பராமாயணத்தை ஆரிய திராவிட போராட்ட வரலாறாகப் பாவித்தும், ராமன் என்ற ஆரியனின் வரலாறாகப் பாவித்தும், அவர்கள் ஜீவா காலத்தில் பெரும் போராட்டங்கள் நடத்தினார்கள். இதேபோல், சில வறட்டுத்தனமான கம்யூனிஸ்ட்டுகளும் கம்பராமா யணத்தை ஒரு இலக்கியமாகக் கருதாமல் நிலஉடைமைத் தலைவனைப் புகழ்ந்து பாடும் ஒரு வரலாறாகவே கணித்து எதிர்த்தார்கள்.

இன்னொரு புறத்திலோ, கம்பனின் ஆதரவாளர்கள், இவர்களும் திராவிட இயக்கத்தினர் செய்த தவறையோ,

அல்லது தீவிர இடதுசாரியினர் செய்த தவறையோதான் மிகப்பெரும்பான்மையும் செய்தார்கள். கம்பராமாயணம் அவர்களுக்குச் சுவைமிக்க ஒரு இலக்கியமாகப்படாமல், வைணவச் சமயச்செய்யுளின் நூலாகவோ, அல்லது ராமன் என்ற வைணவக் கடவுளின் வாழ்க்கை வரலாறாகவோ பட்டது. அவ்வாறு அதை அவர்கள் அணுகி அதில் மதப் பொய்மையின் முழுமையைத் தேடி, அலைந்தார்கள். இன்னும் சிலரோ, அதில் இலக்கணச் சுத்தத்தையும், சொல்லலங்காரத்தையும், இசை நுணுக்கத்தையும், அல்லது தனித்தனியான அணிநலன்களையும், ரசித்துப் புளகாங்கித மடைந்தார்கள். இதில் சிறு நிலவுடைமைகளை விலக்கி ஒரு பேரரசு உருவாகும் சமூக எதார்த்தத்தை, அதன் சகல அம்சங்களோடும் நிலவுடைமைக்கே உரிய காவிய வடிவத்தில் அமைக்கப்பட்ட ஒரு மாபெரும் இலக்கியம். இதில் அக்காலச் சமூக எதார்த்தத்தைக் கலைப்படிமமாகத் தரிசிப்பதே சரியான அணுகுமுறை என்பதை இவர்கள் யாரும் மனதில் கொள்ளவில்லை. தமிழ் வரலாற்றில்கூட, முந்திய நூற்றாண்டுகளில் இந்த அணுகுமுறை பெரும்பாலும் பின்பற்றப்படவில்லை. ஆனால், பாரதி மாபெரும் கம்ப சித்திரங்களிலுள்ள மானுடத்தன்மையை, மானுட அழகை, மானுட மகோன்னதங்களை, முதன் முறையாகத் தரிசித்து உலகுக்குப் பறைசாற்றினான். பாரதி வழியில் நின்று ஜீவா கம்பச்சித்திரங்களிலுள்ள மானுடத் தன்மையை, கம்பன் மானுடத்தை ஏற்றிப்போற்றுவதை, கம்பனின் பாத்திரப்படைப்புகளில் மானுடத்தன்மைக்கு மிக உன்னத இடம் கொடுக்கப்பட்டிருப்பதைப் புதிய உத்வேகத்தோடு தமிழகத்துக்கு விளக்கினார். இந்த அணுகு முறையிலேயே அவர் கம்பனைப் பேசவும் எழுதவும் செய்தார். காரைக்குடி கம்பன் விழாவில் அவர் ஆற்றிய சொற்பொழிவுகள் நிகரற்ற இலக்கியப்படையல்கள்."
(பொன்னீலன், ஜீவா என்றொரு மானுடன், பக்.296-299)

இந்த இடத்தில் கண்டிப்பாகச் சொல்லியே தீரவேண்டிய சில செய்திகள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று கம்பனுக்கு நேர்ந்த அக்கினிப்பிரவேசம். அந்த நேரத்தில் தீயினும் வேகமாய்ச் சுழன்றெழுந்து அதனால் பரவும் தீமையைப் போக்கி ஞானம் நல்கிய பேரறத்தை, கம்பன்அடிப்பொடியின் பேராற்றலைக் கண்டுகொள்வது காலத்தின் கட்டாயம். அதற்குமுன்னர், கம்பன் கழகத் தோற்றம் குறித்துக் கண்டு கொள்வதும் இன்றியமை யாததுதான்!

□



5. காரைக்குடிக் கம்பன்

“டாக்டர் ஜான்சன் என்ற ஆங்கிலேய அறிஞனுக்கு உற்ற நண்பனாக பாஸ்வல் என்ற அன்பர் ஒருவர் இருந்தார். டாக்டர் ஜான்சனின் வாழ்க்கையையும், அவருடைய எண்ண ஓட்டங்களையும் பாஸ்வல் எழுதி வைத்தார். பாஸ்வல் ஜான்சனுடன் ஒரே காலத்தில் கூடவே வாழ்ந்தார். ஒருவருடன் சமகாலத்தில் அவர் கூடவே வாழாமல், ஆயிரத்து நூறு ஆண்டுகள் கழித்து வாழும் ஒருவர் அவரைப்பற்றி, பாஸ்வலைப் போல எழுதவோ, பேசவோ முடியுமா? முடியும் என்று இந்த இருபதாம் நூற்றாண்டில் நம்மிடையே வாழ்ந்த ஒரு பாஸ்வல். அன்று வாழ்ந்த அறிஞன் கவிச்சக்கரவர்த்தி கம்பநாடன். அவனுக்குப் பின் ஆயிரத்து நூறு ஆண்டுகள் கழித்து வாழ்ந்த பாஸ்வல்தான், கம்பன் அடிப்பொடி என்று தம் பெயரை மாற்றிக் கொண்ட அன்பர் சா. கணேசன்” (கம்பன் அடிப்பொடி கலைக்களஞ்சியம்,ப.372)

'நண்பர்களால், சா.க என்று அழைக்கப்பட்ட இவர், தம் வாழ்நாளில் பெரும் பகுதியைக் கம்பனுக்காகவே செலவழித்தார்' என்கிறார். அ.ச.ஞா.

இந்த நிலை திடீரென்று வந்துவிடவில்லை. இதற்கு இடையில் நிறைய நடந்திருக்கிறது. அதற்குச் சற்றே, அக்காலப் பின்புலத்தை அறிந்துகொள்வது பொருத்தப்பாடுடையது.

வேர்களைத் தேடி...

ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்டு இந்தியா தவித்த காலத்தில், அறிவும், ஆற்றலும், ஆளுமைத்திறனும், இந்தியர்களுக்கு இல்லையென்று ஆங்கிலேயர்கள் கொக்கரித்துக் கொண்டிருந்த காலத்தில், 'அறிவின், இலக்கியத்தின் பெருமைக்குரியன யாவும் ஆங்கிலத்தில்தான்; இந்தியமொழிகளில் இல்லை' என்று அரைகுறை அறிவுடைய பெருங்கல்வியாளராகத் தம்மை அறிவித்துக் கொண்ட ஆங்கில அறிவுடையவர்கள் மத்தியில் தன் கவிமூலம் தேடவேண்டிய கட்டாயம், அக்கால ஆங்கிலக் கல்வி பெற நேர்ந்த இந்தியர்களுக்கு இருந்தது. தேடி, மக்களிடம் கொண்டு சேர்க்கவேண்டிய கடப்பாட்டில் இந்திய அரசியல் விழிப்புணர்வு விரிந்தது; ஆங்கில விவிலியத்திற்கு நேராக, இந்தியத் தத்துவ நூல் எனப் பகவத்கீதையை முன்னிறுத்தியது. இதிகாச, புராண இலக்கியங்களில் துலங்கும் வீரச்சுவையை, நாட்டுப்பற்றை, ஊக்கத்தின் ஊற்றுக்கண்ணைத் தேடத் தொடங்கியது.

கம்பன் கவிதை: விடுதலை வீரர்களின் கைவாள்

அக்காலக்கட்டத்தில், திலகரின் தலைமையில் குழுமிய வீரஇளைஞர்கள் மூவரை ஆக்கிரமித்திருந்த காப்பியம் கம்பராமாயணம். ஒருவர், ஆங்கிலக் கல்வியைத் தம் பாடலில் சாடிய பாரதி. மற்றிருவர், இந்திய எல்லைதாண்டி, ஆங்கிலம் கற்கப் போனவர்கள். ஒருவர் வங்காளி; மற்றொருவர் தமிழர். இவர்கள் மூவரையும் இணைத்துக் காத்தது புதுவை.

தலைமறைவாக இருந்து அரசியல் இயக்கம் நடத்திய பாரதியைப் புதுவை முதலில் வரவேற்றது. பின்னர் வங்கத்திலிருந்து, அரவிந்தரும், இலண்டனில் இருந்து

வ.வே.சு.ஐயரும் வருகைபுரிந்தனர். புறவேகத்திற்கு, வாட் பயிற்சியையும், துப்பாக்கிப்பயிற்சியையும் வழங்கிவந்த வ.வே.சு.ஐயர், உள்ளப்பயிற்சிக்குக் கம்பராமாயணத்தை முன்னெடுத்துக்கொண்டார். உலகப்பேரிலக்கியங்களோடு ஒப்பிட்டு, இந்திய, வேத, உபநிடத, இதிகாச, காப்பியப் படைப்புகளுள் ஆழ்ந்து தேடிய இம்மூவரும் கண்டுணர்ந்தது 'இந்தியாவின் ஆன்மா இலக்கியம்' என்பதைத்தான்.

இந்தியனின் ஆன்மாவிற்கு உற்றதுணையெனக்கொள்ள வேண்டிய இடத்தில் கம்பராமாயணம் இருந்தது என்பதால்தான் 'தற்காப்பிற்காகத் துப்பாக்கியைவிடவும், வ.வே.சு.ஐயர் தூக்கி வைத்துக் கொண்டிருந்தது கம்பராமாயணத்தை' என்கிறது வரலாறு. உலகப்பெருங்காப்பியங்களோடு ஒப்பிட்டுக் கம்பனைப் பார்த்த அவர்தம் ஆங்கில மொழியிலான, 'கம்பராமாயண ஆராய்ச்சி' நூல், அக்காலத்தில் கம்பனைப் பற்றிய பார்வையின் அற்புத ஆவணம்.

'ஆதிகவி' வால்மீகியிடம் வாங்கிக் கம்பன் எழுதிய இராமாயணம், ஒரு மாபெரும் மூலகாவியம் என்று அரவிந்தரும் போற்றுகிறார்.

> "முன்னை இலங்கை அரக்கர் அழிய
> முடித்தவில் யாருடைவில்? - எங்கள்
> அன்னை பயங்கரி பாரத தேவிநல்
> ஆரிய ராணியின் வில்"

என்று பாடிய பாரதி, கம்பராமாயணத்தை, 'இந்தியாவின் சொத்து' எனும் பொருளில் 'ஆர்யசம்பத்து' வரிசையில் வைக்கிறார். வடக்கே, பகவத்கீதையைத் தூக்கிக்கொண்டு போராடிய வீரர்களுக்கு இணையாகத் தெற்கே கம்பனைக் கைக்கொண்டனர் வீரர்கள்.

'கம்பராமராஜ்யம்'

பின்னர் வந்த காந்தியடிகள் முன்வைத்த, 'இராமராஜ்யம்' கம்பன் முன்மொழியும் 'கம்பராமராஜ்யம்' எனத் தமிழகத்துக் காந்தியவாதிகள் உணரும் நிலையும் ஏற்பட்டது. சமய ஒருமை, சமுதாய ஒருமை, உயிர்களின் மீது தனிப்பெருங்கருணை,

அறநெறிநிற்றல், சத்தியாக்கிரகம் என்ற கருத்தாக்கங்களுக்கு, இராமன், குகன், சுக்ரீவன், வீடணன் ஆகிய பாத்திரங்களோடு கம்பன் சுயமாய் அமைத்துப் பாடிய பிரகலாதனும் பெருந் துணைபுரிந்தனர். இதற்கு இன்னொரு புறமும் இருக்கிறது.

தென்தமிழ்ப்பகுதியில் இதிகாசங்களைப் பக்தியோடு படிக்கிற பழக்கம் இருக்கிறது. புரட்டாசியில் இராமாயணமும், வைகாசியில் மகாபாரத - விராட பருவமும் படிக்கப் பெறுகின்றன. சகோதர ஒற்றுமைக்கு, இராமாயணமும், சகோதரர்களைப் பிரிக்கும் சூழ்ச்சிகட்கு இலக்காகிவிடக்கூடாது என்ற எச்சரிக்கைக்கு மகாபாரதமும் முன்னின்று வழிகாட்டி வந்திருக்கின்றன. ஏடுபடிக்கும் இந்நிகழ்வில் மக்கள் கூடுதலாகப் பங்கேற்றுக் கேட்டது, கம்பராமாயணத்தை. சொல்பவர் தத்தம் அனுபவங்களைக் கலந்து விரித்துரைக்க, கேட்போரும் தத்தமது உணர்வுகளையும் அனுபவங்களையும் உள்ளடக்கிக் கொண்டு கேட்டுணர, கம்பராமாயணம் படிக்கிறபோதும் கேட்கிறபோதும் சமகாலத்தைப் பிரதிபலிக்கும் நிகழ்இலக்கியமாகத் தமிழர்களால் உணரப்பெற்றிருக்கிறது.

வாழையடி வாழையென...

"எங்கள் குடும்பத்தில், என் தந்தையார் காலத்தில், புரட்டாசி மாதந்தோறும், கம்பராமாயணம் படித்தல் வழக்கம். பக்கத்தில் உள்ளவர்கள் பலரும் கதை கேட்க வருவார்கள். பட்டக சாலையில் உள்ள மாடத்தில், இராமர் பட்டாபிஷேகப்படம் கொலுவிருக்கும். அதற்குப் பலவகை அலங்காரங்கள் செய்யப்பட்டிருக்கும் அதன் எதிரில் மரத்தாலான சிக்குப் பலகையில், கம்பராமாயண வசனப்புத்தகம் மஞ்சள் - குங்குமம் - மாலை சார்த்தப் பெற்று மங்கலமாக அமர்ந்திருக்கும். இராமர் படத்திற்கு வழிபாடு நடந்து தீபாராதனை காட்டப்பெறும். அதன் பிறகு, கம்பராமாயணப் புத்தகத்திற்கும் அப்படியே நடக்கும். எல்லாம் ஆனபின் என் தந்தையார் அல்லது என் சிறிய தந்தையார் இறைவணக்கம், பல சுருதி முதலிய பாடல்களைப் படித்தபின், இராமகாதையை முதல் நாள் விட்ட இடத்திலிருந்து படிப்பார்கள். இருவருக்கும்

இயலாத வேளைகளில் என்னைப் படிக்கச் செய்வார்கள். கம்பன் கவிகளில் சில ஆங்காங்கே காணப்படினும், கதை முழுவதும் வசனமாகவே இருக்கும், பெரியவர்கள் படிக்கக் கேட்கும்பொழுதும், நானே படிக்கும்பொழுதும், பலவித ஐயப்பாடுகளும், குழப்பங்களும் ஏற்படும். அவற்றை யெல்லாம் பெரியவர்களிடம், கேட்பதற்கு அச்சம். முறையாக ஆசிரியரை அடுத்து, இலக்கிய, இலக்கணப் பாடம் கேட்காத குறை வேறு, இளமைத் துடிப்பும், எதையும் கிண்டல் செய்யும் இயல்பும் சேர்ந்து கொண்டிருந்த காலம். ஆனாலும், தமிழ் படிக்கவேண்டும் என்ற ஆர்வத்தை எந்தைபிரான் கம்பன் எப்படியோ தூண்டிவிட்டான்." (மேலது ப.10)

இப்படித்தான் கம்பனுக்கும் கணேசனுக்கும் சம்பந்தம் உண்டானது. பின்னர் சா.க.வுக்கு, கம்பனைக் குருவாக, தலைவனாக, ஆசானாக, ஆண்டையாக அறிமுகப்படுத்திய பெருமைக்குரியவர், மோ.வே. கோவிந்த ராசய்யங்கார் ஆவார். 'கம்பநாடர்' எனும் பெயரில் மாதஇதழ் ஒன்றை நடத்தி வந்ததோடு, கம்பன் பற்றிய சொற்பொழிவுகளையும் நிகழ்த்தி வந்தவர் அவர். அவரது தனிச்சிறப்புக்குறித்து, சா.க. எழுதுகிறார்:

"ஏதோ ஒரு கட்டத்தை வான்மீகத்துடன் (வான்மீகி எழுதிய வடமொழி இராமாயணத்துடன்) ஒப்பிட்டுக் கம்பனின் மேன்மையை உயர்த்திப் பாராட்டினார். அப்பொழுது அச்சபையிலிருந்த வடமொழி வல்ல அந்தணர் ஒருவர் எழுந்து,"கம்பனை வான்மீகியினும் உயர்ந்தவர் என்று ஒரு பிராமணர் கூறலாமா?" என்று ஒருவகை ஆவேசத்துடன் கேட்டார். அதற்கு மோ.வே.கோ. விடுத்த பதில் என்னைப் பெரிதும் ஆட்கொண்டு விட்டது. "கம்பனின் உண்மையான உயர்வைக்கூற என் பிராமணநிலை தடையாக இருப்பின், ஸ்வாமி! என் பூணூலை இப்பொழுதே அறுத்தெறிந்து விடுகிறேன்!" (மேலது ப.12)

அவரையடுத்துக் கணேசனுக்குக் கம்பனின் தனிப் பேருருவைத் தரிசனப்படுத்தியவர் வ.வெ.சு.ஐயர் ஆவார். அவரைப்பற்றி,

"வ.வெ.சு.ஐயர், பலமொழி கற்றவர், சிறந்த தேசபக்தர். திறனாய்வுத்துறையின் முன்னோடி. 'கம்பனை உலகறியச் செய்த உத்தமர். அவர் காரைக்குடிக்குப் பலமுறை வந்துள்ளார். அப்பொழுதெல்லாம் கம்பன் பெருமையை எப்படியெல்லாமோ கூறி என்னை ஆட்கொண்டவர். "கம்பன் காப்பியத்திற்கு வான்மீகம்தான் மூலம். ஆனால், கம்பன் வான்மீகத்தை மொழிபெயர்க்கவில்லை. முனிவன் படைத்த இறவாக்கதையை மட்டுமே அவன் எடுத்துக் கொண்டான். ஆனால், அந்தக் கதைப்போக்கை மிக நுட்பமாகப் பின்பற்றிக்கொண்டான். என்றாலும், கம்ப ராமாயணம் முற்றிலும் ஒரு மூலக்காப்பியமே. ஆம். அது வான்மீகியின் ராமாயணம் அல்ல. ஆனால், அஃதொரு மகோன்னதமான கவிதை. கம்பனுடைய சந்நிதானத்திலே உலக மகா கவிகளான மில்டன், போப், ஷேக்ஸ்பியர், தாந்தே, விர்ஜில், ஹோமர், பைரன், ஷெல்லி முதலியவர்கள் மட்டுமின்றி ஆதிகவியான வான்மீகியும் முடி சாய்த்து அடிவணங்கி நிற்க வேண்டியவர்!" என்றெல்லாம் அளந்து அறுதியிட்டு வ.வெ.சு.ஐயர் கூறும்பொழுதுதான் கம்பன் வான்முட்டும் பெரும்புகழை அடியனால் அறிய முடிந்தது" (மேலது, பக்.12-13)

என்று அனுபவம் விரிக்கிறார், சா.க.

பின்னர் அவருக்கு வாய்த்த பேராசான், பி.ஸ்ரீ. காரைக்குடியில் இருந்து வெளிவந்த 'குமரன்' இதழின் துணையாசிரியர். எப்பொழுதும் இளைஞர் குழுவோடு இருக்கும் அவரிடம், காந்தியம், இலக்கியம், கம்பனியம் என உரையாடல் வழி பெற்றவர் சா.க.

வாரந்தவறாமல், குமரனில் வரும், கம்பன் கட்டுரையை, பி.ஸ்ரீ, சொல்லச் சொல்ல எழுதிய பேறு சா.க.வுக்குக் கிட்டியது. பின்னர் இரங்கூன் போனதும், அங்கிருந்த சேதுப்பிள்ளை என்பாரிடம் கம்பனமுதம் பருகினார். சிலமாதங்களே பெற்ற அப்பயிற்சி, கம்பனோடு சேர்த்துத் தமிழமுதம் பருகவும் வாய்ப்பு நல்கியது.

பின்னர் தாயகம் திரும்பி, அரசியல் பணிகள் ஆற்றிய போதிலும் தமிழுணர்வு அவரை விடுவதாயில்லை.

அலிப்பூர்ச் சிறையில் கம்பதரிசனம்

சிறைக்கோட்டம் புகுந்தபோதும் தன் சேவைச்சிறப்பால் அது கம்பகோட்டம் ஆகியது. வங்கத்துச் சிங்கமாய் அலிப்பூர்ச் சிறைபுகுந்த ஸ்ரீஅரவிந்தருக்கு, கண்ணதரிசனம் கிட்டியது போல், காரைக்குடித் தீரரான கணேசரால் அங்கிருந்த பலருக்குக் கம்பதரிசனம் கிட்டிற்று. அதனால்தான், நாடு விடுதலை பெற்ற பிறகு காரைக்குடிக்குப் பிரதமராக வந்த, நேருஜி, 'என்ன, கம்பரே நலமா?" என்று விசாரித்திருக்கிறார்.

தம் அரசியல் பணிக்கிடையிலும் தம், இலக்கிய தாகத்தையும், கம்பநேயத்தையும் கணேசன் விடவில்லை. அதுகருதியே, "கணேசன் அரசியல்வாதிகளுக்குள்ளே ஒரு நல்ல தமிழறிஞர், அதேசமயம், நல்ல தமிழறிஞர்களுக்குள்ளே சிறந்ததோர் அரசியல்வாதி" என்று சிறைவாசப்பொழுதில், தம் நண்பருக்கு, சா.க.வை அறிமுகம் செய்துவைத்தார் இராஜாஜி. நாட்டுப் பற்றும், தமிழ்ப்பற்றும் அவருக்கு இரு கண்கள். எனவே,எந்த நிலையிலும் தமிழன்னை துணையோடு கம்பனை மானசீகமாகக் கரம் பிடித்து நடந்தார் கணேசன். அந்த நடை வளர்ந்து காலப்போக்கில், கம்பன் கழகம் அமைக்கக் காரணமாயிற்று. அதற்குக் காரைக்குடியே களமும் ஆயிற்று. அதற்கு முன்னர் காரைக்குடி என்னவாயிருந்தது என்பது குறித்தும் காணலாம்.

கலை இலக்கியத் தலைநகரானது காரைக்குடி

தேசபக்தியும், தெய்வபக்தியும் கலந்தெழுந்த தமிழகச் சூழலில் காரைக்குடி ஒரு கலை, இலக்கிய, அரசியல், ஆன்மிகத் தலைநகராகத் திகழுதற்குப் பல காரணங்கள் உண்டு.

சமயநிலையில், குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம், கோயிலூர் ஆதீனம் மற்றும் பாதரக்குடி உள்ளிட்ட நகரத்தார் மடங்கள் செட்டிநாட்டுப் பகுதியைச் சிறப்புக்குள்ளாக்கின. உலக அளவில் இந்திய சமயநெறியினை மேலெடுத்துச்சென்ற சுவாமி விவேகானந்தர் மற்றும் குருநாதர் இராமகிருஷ்ண

பரமஹம்சர் ஆகியோரின் அடிச்சுவட்டைப் பின்பற்றுமுகத்தான், விவேகானந்த புத்தகசாலை உருவாக்கம்பெற்றது. இத்தகு மரபின் நீட்சிகளாக, ஹிந்துமதாபிமான சங்கமும் (1917) இச்சங்கத்தின் வாயிலாக, இராமகிருஷ்ண கலாசாலையும் (1918) தோற்றம் பெற்றன.

மகாகவி பாரதியார் கடையத்தில் இருந்து, காரைக்குடிக்கு, வரவழைக்கப்பெற்றார். தொடர்ந்து வ.உ.சி. சுப்பிரமணியசிவா, வ.வெ.சு.ஐயர், ஞானியார் சுவாமிகள், விபுலானந்த சுவாமிகள், வீர.சுப்பையா சுவாமிகள், ந.மு.வேங்கடசாமிநாட்டார், திரு.வி.க. உள்ளிட்ட பல்வேறு அறிஞர்கள் வருகை தந்து கலை, இலக்கிய, அரசியல், ஆன்மிக, சமய, சமுதாயத் துறைகளில் சீர்திருத்தங்கள் பல தோன்றுதற்கு வித்திட்டனர். இவர்களுள், காரைக்குடியின் தேசிய எழுச்சிக்கு வித்திட்டவர் சுப்பிரமணிய சிவா என்பது சா.கணேசனாரின் கருத்து.


மேலும், மகாத்மாகாந்தி, சர்தார் வல்லபபாய் படேல், தந்தை பெரியார் உள்ளிட்ட தேசியத் தலைவர்கள் பலரும் வந்து இப்பகுதியில், தேசிய எழுச்சிக்கு வித்திட்டனர்.

இந்தப்பின்புலத்திற்குப் பெரிதும் காரணமாகியதோடு, களத்தில் இறங்கித் தம்மையும் ஈடுபடுத்திக் கொண்டவர்கள், பலராவர். அவர்களுள் சொ.முருகப்பா, கானாடுகாத்தான் வயி.சு. சண்முகஞ்செட்டியார், இராய.சொ. போன்ற பலர் குறிப்பிடத்தக்கவர்கள். பின்னர் சமூக முன்னேற்றம் கருதி, ‘தனவைசிய ஊழியர் சங்கம்’ (1919) தோற்றுவிக்கப் பெற்றது. அதற்கென, ‘தனவைசிய ஊழியன்’ (1920) வார இதழும் தோற்றம் கொண்டது. இதன் ஆசிரியராக, சொ.முருகப்பா பணியாற்றினார். பின்னர். ‘குமரன்’ (1923) மாத இதழும் அவரால் தொடங்கப்பெற்றது. பி.ஸ்ரீ. ஆசிரியராக இருந்து அதனைச் சிறப்புறக் கொணர்ந்தார். காங்கிரஸ் கூட்டம், ஜீவகாருண்யப் பிரச்சாரம், சுயமரியாதை இயக்கக்கூட்டம், தமிழிசை இயக்கம் எனப் பல்வேறு களங்களில், பணிகளை எடுத்துக்கொண்டு வளர்ந்த செட்டிநாட்டுப்பகுதியில் கம்பனுக்கென்றொரு கழகமும் தோற்றம் பெற்றது, 1939இல்.


*1938*ல் ரசிகமணி டி.கே.சி.யைச் சந்தித்ததும், *1939*ல் தேரழுந்தூரில் நடைபெற்ற கம்பர்விழாவில் பங்கேற்றதும் காரணங்களாக, கம்பன் சமாதி அமைந்த நாட்டரசன் கோட்டைக்கு அருகில் உள்ள நகரமான காரைக்குடியில் சா.க. அவர்களால், கம்பன் கழகம் தோற்றுவிக்கப்பெற்றது. 'சொ.முருகப்பா, அரு.சோமசுந்தரம், வி.ஆர்.எம்.செட்டியார், நீலாவதி சுப்பிரமணியம் தம்பதிகள் ஆகியோர் ஒத்துழைப்பு நல்கினர்.' என்கிற சா.கணேசன் செயலராயிருந்து நடத்திய கம்பன்விழா, தொடக்கத்தில் கம்பர் விழா என்றே அமைந்தது.

காரைக்குடியில் கம்பர்விழா

"வெகுதானிய ஆண்டு பங்குனித்திங்கள்,*20,21* (ஏப்ரல்*2,3*) தேதி, ஞாயிறு, திங்கட்கிழமைகளில் கம்பர்விழா காரைக்குடியில் சிவன் கோவில் வடக்கு வீதியில் இதற்கென அமைக்கப் பட்டிருக்கும் அலங்காரக் கொட்டகையில் நடைபெறும்" என்ற அறிவிப்போடு விழா அழைப்பிதழ் அமைகிறது. "திருநெல்வேலி, திருவாளர் டி.கே.சிதம்பரமுதலியார் பி.ஏ, பி.எல், அவர்கள் தலைமை வகிக்க அன்பர்கள் பலர் சொற்பொழிவாற்றுவார்கள் எல்லோருடைய வருகையும் எதிர்பார்க்கப்படுகின்றது" என்கிறது அழைப்பு.


கம்பர் விழா அழைப்பு
-1939-

"முதல்நாள் முற்பகல் மேலமடத்திலிருந்து ஊர்வலம் புறப்படும். தலைவர் வரவேற்புக்குப் பின், தலைவருரை; பிற்பகல் 4 முதல் 4 வரை சொற்பொழிவுகள் என மணியளவு குறிக்கப்பெற்று விழா இரண்டாம் நாள், முற்பகல், *9-11.30* வரை சொற்பொழிவுகள், 4முதல் *6.30* வரை பிரசங்கங்கள், *6.30* தலைவர் முடிவுரை,



8.00 நன்றி 'வாழிய செந்தமிழ்'


சொற்பொழிவாளர்கள், திருவாளர்கள், பி.ஸ்ரீ.ஆச்சார்யா, ஆர்.வி.சாஸ்திரி, எம்.எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை எம்.ஏ.எல்,டி (ஓய்வுபெற்ற பேராசிரியர்), நீலாவதி ராம சுப்ரமண்யம், சுப.ஆறுமுகச் செட்டியார், ப.ராமஸ்வாமி ஐயங்கார், (மணிக்கொடி)" என்பதாக அமைந்த இந்த விழாவின் அழைப்பிதழில், 'சொ.முருகப்பா தலைவராகவும், சா.கணேசன் காரியதரிசியாகவும் கொண்டு அமைக்கப்பெற்ற காரைக்குடி கம்பர் விழாக்கமிட்டியினரால், கம்பர் விழா நடத்தப்படும்' என்கிற குறிப்பு இடம்பெறுகிறது. சிறப்பாக நடந்தேறிய அந்த விழாவில், பங்கேற்ற ரசிகமணி,

> "காரைக்குடியில் கம்பன் பணி தொடங்கிவிட்டது. இனி அது உலகெங்கும் பரவிவிடும்" என்று மனமாரப் பாராட்டி அவர்கள் கூறிய ஆசியும், வாழ்த்துமே கம்பன் கழகத்துக்கு நீரும் உரமுமாய் அமைந்தது. சான்றோர் வாக்குப் பொய்க்காதன்றோ?" (கம்பன் அடிப்பொடி கலைக்களஞ்சியம்,ப.15)

என்று நெகிழ்ந்து அந்நாளை நிகழ்வை நினைவுகூர்கிறார் சா.க.

கம்பன் புகழ் பாடி...

அடுத்த ஆண்டு, 1940 மிகச்சிறப்பான முறையில் விழா நடைபெற்றிருக்கிறது. அவ்விழா அழைப்பிதழில், 'கமிட்டி', 'காரியதரிசி', 'கம்பர்' எல்லாம்போய், 'செயலாளன்,' 'கம்பன்' என்ற எளிய இனிய தூய தமிழ்ச் சொற்கள் இடம்பெற்றன. 'கம்பன்புகழ்பாடிக் கன்னித்தமிழ் வளர்ப்போம்' என்ற முழக்கத்துடன், 'எல்லோரும் வருக' என்ற வரவேற்புடன் அமைகிறது, அழைப்பு.



கம்பன் திருநாள்

(... 21, 22, 23, 24)

"முத்தமிழ்த் துறையின் முறைபோகிய உத்தமர்பலர் கம்பன் திருப்பணியில் பங்கு கொள்ள அன்புடன் இசைந்துள்ளார்கள். கம்பன் புகழ்பருகிக் கன்னித்தமிழ் வளர்க்க அன்பர்கள் யாவரும் வந்து குழும வேண்டுகின்றோம். என்பதற்குக் கீழே காரைக்குடியும் தேதியும், இங்ஙனம் என்பதன்கீழ் சா.கணேசன், செயலாளன்" என்ற குறிப்பும் இடம் பெற்றிருந்தன.

முதன்முதலாக, நாட்டரசன் கோட்டையில் நிகழ்ச்சி அமைத்ததும் இந்த ஆண்டில்தான். இதன் அடிப்படை இன்றளவும் மாறாமல் தொடர்கிறது என்பதையும் இங்கே சுட்டிக்காட்டுவது வரலாற்றுக் கடமை. இருக்கட்டும்.

காரைக்குடிக் கம்பன் விழாவின் இரண்டாம் ஆண்டு விழா, குறித்த முழு அழைப்பும் குமரன் இதழில் பங்குனித்திங்கள் முதல் நாள் இதழில் வெளியிடப் பட்டிருக்கிறது. மறுவாரம், இவ்விழாவை நினைவுகூரு முகத்தான், பின்வரும் செய்தியும் குமரன் இதழில் வெளியிடப்பெற்றது.



கம்பர் விழா

சென்றவாரம் வெளியிட்டு இருக்கிறபடி

1940 வருடம், மார்ச்சு மீ 21, 22,23,24 உகளில் (இன்று முதல் மூன்று நாட்களும்) காரைக்குடி சிவன்கோவில் தென்கரை ஐஸ்கூல் ஹாஸ்டலில் அமைக்கப்பெற்றிருக்கும் அலங்காரக் கொட்டகையில் நடைபெறும். 22.3.40 மாலையில் அமராவதிபுதூர் மகளிர் இல்லத்துப் பெண் குழந்தைகளின் கம்பராமாயணக்கும்மி கோலாட்டங்களும் நடைபெறும். கம்பன் விழா நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு செய்து 23.3.40 ல் மாலை 2.30- 3மணி வரையில் திருச்சியிலிருந்து ஒலி பரப்பப்படும்.

24.3.40 அன்று நாட்டரசன் கோட்டை கம்பர் கோவிலில் விழா நடைபெறும். (குமரன், 21,மார்ச், 1940, ப.6)

வானொலிவழியாய் ஒலிவலம் வந்த அந்நாளைய நிகழ்வு, காலத்தே தோன்றிக் காற்றில் கரைந்துவிட்டது. கேட்போர் கருத்தில் நிறைந்துவிட்டது. ஆனால், கேளாரும் வேட்ப விளக்கும் வகையில், அக்கால, குமரன் இதழில், அவ்விழாக் குறித்த சிறப்புச் செய்திகள் முகப்புப் பக்கம் தொடங்கி, முழுப் பக்கமாகவும், பகுதிகளாகவும் தொடர்ந்து வெளியிடப்பெற்றன. பவளவிழாக் காணும் காரைக்குடிக் கம்பன் கழகத்தின் ஆதிப் பெருவிழா எங்ஙனம் நிகழ்ந்திருக்கும் என்பதைக் கற்பனை செய்து கண்டு களிக்க இது பெரிதும் உதவும்.

'குமரன்' பார்வையில்...


குமரன் இதழில், 'காரைக்குடியில் கம்பன் திருநாள்', 'உற்சாகமான ஊர்வலம்- ஏராளமான கூட்டம்', 'அன்பர்களின் அரிய சொற்பொழிவுகள்' என்கிற தலைப்புகளின்கீழே பின்வருமாறு விழாச் செய்திகள் விளக்கமாகத் தரப் பெற்றிருந்தன.

"காரைக்குடியில் கம்பன் திருநாள் பங்குனித்திங்கள் 8,9,10 ஆகிய மூன்று தினங்களிலும் கொண்டாடப்பட்டது. கம்பன் ராமாயணத்தை அரங்கேற்றிய தினமாகிய பங்குனி அத்தம்- அதாவது, 11ம் நாள் நாட்டரசன்கோட்டையிலுள்ள கம்பன் கோயிலில் விழா கொண்டாடப்பட்டது. இந்த நான்கு தின நிகழ்ச்சிகளும் கீழே தரப்படுகின்றன.

21.3.40 வியாழன் முதல் நாள்-முற்பகல்:
உற்சாகமான ஊர்வலம்

"கம்பன் புகழ் பாடிக் கன்னித்தமிழ் வளர்ப்போம்" என்ற பேரொலியுடன் கம்பன் பட ஊர்வலம் மேல மடத்திலிருந்து புறப்பட்டது. தாரை தம்பட்டங்கள் - பாண்டு முழங்கின. ஸ்ரீ மீனாட்சி பெண் பள்ளியைச் சார்ந்த சாரணர்கள் (Blue Bird) நீல நிற உடையுடுத்தி அணிவகுத்துச் சென்றனர். கம்பன் படம் சப்பரத்தில் அலங்கரிக்கப்பட்டு இரண்டு மாடுகளால் இழுத்துச் செல்லப்பட்டது. சாரணர்கள் கம்பன் வாக்கியங்கள் அச்சிடப்பட்ட அட்டைகளைத் தூக்கிக்கொண்டு வரிசை வரிசையாகப் பின்தொடர்ந்தனர். அவர்களுக்குப் பின்னே பிரசங்கிகளும் பிரமுகர்களும் சென்றனர். ஊர்வலம் மெ.மெ.வீதி வழியாகக் கல்லுக்கட்டியைச் சுற்றி ஹைஸ்கூல் ஹாஸ்டலுக்கு முன் அமைக்கப்பட்டிருந்த கொட்டகைக்கு வந்து சேர்ந்தது. வீடுகள் தோறும் கடைகள் தோறும் கம்பன் படத்திற்கு மாலை அணிவித்தனர். சிற்சில வீடுகளில் ஊர்வலத்திலிருந்தோர்க்கு சுண்டல், பானகம் வழங்கப்பட்டன. இடையில் ஏராளமான மக்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

விழாக்கொட்டகை பலவிதத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. கம்பனது காவியத்திலிருந்து பொருக்கி எடுக்கப்பட்ட வாக்கியங்கள் பல அச்சிடப்பட்ட அட்டைகள் கம்பங்கள்தோறும் தொங்கவிடப்பட்டிருந்தன.



விழா ஆரம்பம்

'ஹனுமான்' ஆசிரியர் ஸ்ரீமான் சங்கு சுப்பிரமணியம் இறை வணக்கம் பாடினார்.

ஸ்ரீமான் சா.கணேசன் அவர்கள்

கம்பன் விழா செயலாளர் ஸ்ரீ சா.கணேசன் பின்வருமாறு கூறினார்:

"பிறமொழியாளர்கள் தத்தம் மொழியிலுள்ள புலவர்கட்குப் பேரார்வத்தோடு விழாவெடுத்தலைக் காண்கின்றோம். இவ்விஷயத்தில் குறைபாடுள்ளவர்கள் தமிழ் மக்களே. ஒப்பற்ற புலவர்பெருமான்களைப் பிறர் உணரும்படி செய்கிறார்களில்லை. 'உலக மகா கவிகளுக்குள்ளே கம்பன் ஒருவன்' என்கிறார்கள் உலகோர். ஆனால், தமிழர்கள் அறிந்தார்களில்லை. தமிழர்களிடையே உணர்ச்சியை - கிளர்ச்சியைத் தூண்டிவிட வேண்டுமென்பதற்காகவே இந்த விழாக் கொண்டாடப் படுகிறது".

ஸ்ரீமான் பி.ஸ்ரீ.ஆச்சாரியார் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

ஸ்ரீமான் சொ. முருகப்பா அவர்கள்

வந்திருந்தோர்களை வரவேற்று ஸ்ரீமான் சொ.முருகப்பா அவர்கள் பேசும்போது, அன்பர்கள் எல்லோரும் இதில் கலந்து கொள்ள ஆர்வம் காட்டியது மகிழ்ச்சிக்குரிய விஷயமென்றும், தமிழ் மணத்தோடு கம்பன் விழா கொண்டாட வேண்டிய அவசியம் குறித்தும், இலக்கிய விஷயத்தில் தமிழர்கள் ஒன்றுபட வேண்டுமென்றும், பற்பல நோக்கினாலேயே இலக்கிய வளர்ச்சி குன்றியதென்றும், வந்திருக்கும் தமிழன்பர்கள் தமிழ் மணத்தை வீசச் செய்வார்கள் என்றும் குறிப்பிட்டார்கள்.

தலைவர் முகவுரை

தலைவர் தமது முகவுரையில், தமிழ்ப்பத்திரிகைகள் சிலவற்றில் இலக்கணப் பிழைகள் மிகுந்து காணப்படுகின்றன வென்றும், காரணம் கேட்டால்,— இது புது நடையென்றும்,

பண்டிதர்களிடையேயிருந்து தமிழை விடுவிப்பதே நோக்க மென்றும் கூறுகிறார்களென்றும், அறியாமையிலேயே மூழ்கி, அதிலேயே குதூகலிப்பது தவறென்றும், மேனாட்டார் பாஷையைப் பற்றி உயர்ந்த எண்ணம் கொண்டிருக்கிறார்க ளென்றும், கம்பன் தமிழைக் கண்ணை இமை காப்பதுபோல் காப்பாற்றினான் என்றும், தமிழ், தமிழர்களால் காப்பாற்றப் படவேண்டுமென்றும் சில கதைகளை வேடிக்கையாகச் சொல்லி விளக்கிக் கூறினார். இத்துடன் முற்பகல் விழா முடிவுற்றது.

பிற்பகல்

தலைவர் முக உரையாகப் பேசும்போது கவிகளில் இடைச் செருகல்கள் பல இருக்கின்றனவென்றும்,படிக்கும்போதே பாட்டிலுள்ள தவறை உணரக்கூடியவாறு காது பண்படுத்தப் பட்டிருத்தல் வேண்டுமென்றும், கஜானாவிலுள்ள ஷராப் பல ரூபாய்களை ஒன்றாகக் குலுக்கி செல்லாத ரூபாயை எடுத்து விடுகிறாரென்றும், அப்படி எடுத்துவிடக் கூடிய அளவு அவனுடைய காது பண்படுத்தப்பட்டிருக்கிறதென்றும் அந்த நிலையை நாம் அடைய வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

ஸ்ரீமான் கு.அருணாசலக் கவுண்டர் அவர்கள்

அடுத்தபடியாக திருநெல்வேலி இந்துக் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர் ஸ்ரீமான் கு.அருணாசலக் கவுண்டர் அவர்கள், "கம்பரும் கற்பாரும்" என்பது குறித்துச் சொற்பெருக்காற்றினார். அவர் தமது பேச்சினிடையே கம்பராமாயணத்தின் சிறப்பைப் பற்றியும், கம்பனைக் கற்க வேண்டிய விதத்தைப் பற்றியும் குறிப்பிட்டார்.

பண்டிதமணி மு.கதிரேசச்செட்டியார் அவர்கள்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர் பண்டிதமணி மு.கதிரேசச்செட்டியாரவர்கள் 'பாஸனும் கம்பனும்' எனும் பொருள் குறித்து உரை நிகழ்த்தினார்கள்.

ஸ்ரீமான் டி.கே.சிதம்பர முதலியார் அவர்கள்

ஸ்ரீமான் டி.கே.சி., "ஒரு கொண்டாட்டம்" என்பதைப் பற்றி பேசினார்கள்.

உரையும் பாட்டும்

ஸ்ரீமான் சா.கணேசன் உரை நிகழ்த்த உடனே அந்தக் கருத்துள்ள கம்பராமாயணக் கவியை ஸ்ரீமான் சங்கு சுப்பிரமணியம் பாடினார். கவியின் தன்மை, காலம், முதலியவைகளைக் கொண்டு உணர்ச்சியுடன் சந்தர்ப்பத்திற்கேற்ற குரலில் உயர்த்தியும் தாழ்த்தியும் பேசினர் - பாடினர். அவர்கள் தங்களைக் கம்பனின் பாத்திரங்களாக எண்ணிப் பேசினர். அந்த உணர்ச்சிமிக்க காட்சி மிகவும் போற்றக் கூடியதாகவிருந்தது.

தலைவர் முடிவுரைக்குப் பின் முதல் நாள் விழா முடிவுற்றது.

22.3.40 வெள்ளி இரண்டாவது நாள் - முற்பகல்

இறைவணக்கத்திற்குப்பின் ஸ்ரீமான் டி.கே.சிதம்பரநாத முதலியார் அவர்கள் தலைமையில் கூட்டம் ஆரம்பமாகியது. தலைவர் சிறிது பேசினார்.

ஸ்ரீமான் ஏ.ராமமூர்த்தி ராயர் அவர்கள்

தூத்துக்குடி கம்பன் கழக ஆசிரியர் ஸ்ரீமான் ஏ.ராமமூர்த்தி ராயர், 'சொல்லின் செல்வன்' என்னும் தலைப்பைக் கொண்டு, அனுமானைப் பற்றிப் பேசினார்.

ஸ்ரீமான் பொ.திரிகூடசுந்தரம் அவர்கள்

ஸ்ரீமான் பொ.திரிகூடசுந்தரம் M.A.B.L. அவர்கள் 'நமது அன்பு நிலையம்' என்பது பற்றிப் பேசினார். அவர் தமது பேச்சிடையே மனிதன் துய்ப்பதற்கேற்றது இலக்கியம் தானென்றும், கம்பனிறந்து எத்தனையோ ஆண்டுகளாயின வென்றாலும், இன்றும் நம்மிடையே அவனுடைய ஆன்மா இருக்கிறதென்றும், கம்பனைப் படிக்க நாம் சுதந்தரமடைய வேண்டுமென்றும், ஏழையில்லை, பட்டினி இல்லை, படிக்க அவகாசமிருக்கிறது என்ற நிலையேற்படும்போது, கம்பன் பிரசித்தி யடைவா னென்றும் உலகம் அன்பு மயமாக ஆகவேண்டு மென்றும் திருக்குறள் அறிவுநிலையமாக விளங்குவதுபோல, கம்பர் அன்பு நிலையம் என்றும், அன்பைக் காப்பாற்ற ஆன்மப் பயிற்சி வேண்டுமென்றும், அன்பைப் பற்றி பல உதாரணங் களோடு இனிமையாகவும், உருக்கமாகவும் பேசினார்.

கம்பராமாயணத்தில், கைகேயி, கோசலை - பரதன் சந்திப்புக் காட்சியை விரிவாக எடுத்துக் கூறினார். இத்துடன் முற்பகல் விழா முடிந்தது.

பிற்பகல்

இறைவணக்கத்திற்குப் பின்னர் தலைவர் டி.கே.சி. பின்வருமாறு கூறினார்:

"தமிழ்ச் செய்யுள்கள் தாளத்திற்கும் நாட்டியத்திற்கும் ஏற்றவை. கம்பன் சொல்லும் காதல் கவியில் தாளமும் நாட்டியமும் எப்படி அமைந்திருக்கின்றனவென்பதைப் பாருங்கள் - கீழ்வரும் கவிதை இசையோடு பாடினார்.

"நாணுலாவு வில்லினோடு பூணுலாவு பாணியும்
தூணுலாவு தோளும் வாளி யோடுலாவு தூணியும்
வாணிலாவி நூலுலாவு மாலைமார்பு மீளவும்
காணலாகு மாயினாவி காணலாகும் ஆகுமே"

இலக்கியத்தை வேறு துறையிலிருப்போர்தான் நன்றாக அனுபவிக்க முடியும். சமுத்திர ஸ்நானத்தை படகோட்டி அனுபவிப்பதில்லையன்றோ? ஒரு கவியின் வார்த்தைப் பண்பு ஏராளமாகயிருக்கலாம். இது கவியின் சாமர்த்தியத்தைக் காட்டும். ஒரு சிலையைப் பார்க்கிறோம். இது கல்லால் ஆக்கப்பட்டதா மண்ணால் ஆக்கப்பட்டிருக்கிறதா என்பதைப் பற்றி நாம் யோசித்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியமென்ன? கலைஞனின் பாவத்தையன்றோ பார்க்கவேண்டும்? அது போன்றே கவியினுடைய வார்த்தைகளில் நிற்காமல், கவிஞனின் ஹிருதயத்துக்குள்ளே நுழைய வேண்டும். கோவிலுக்குள் செல்ல விரும்பியவன் படிகளில் நின்றால் போதுமா? படிகளைக் கடந்து உள்ளேயன்றோ போகவேண்டும்? அழகும் உண்மையுமாகிய மூர்த்தி கவிக்குள்ளே இருக்கிறது.

ஒருவருடைய மேஜையின்மீது சிப்பிகளும் படங்களும் வைக்கப்பட்டிருக்குமாயின், அங்கே ஒரு சிறு பிள்ளை வசிக்கிறான் என்பதை உணரலாம். இடையில் காகிதம் சொருகப்பட்ட கம்பராமாயணப் புத்தகம் ஒன்றிருக்கு

மானால், அங்கே மனிதன் வசிக்கிறான் என்று தீர்மானிக்கலாம். உயர்ந்த நூல்களைப் பார்க்கிறோம் என்றால், அது நம்மை நாமே பார்த்துக் கொள்ளுகிறோ மென்று அர்த்தம். இசை உண்மையைக் காட்டுகிறது. "வார்த்தை நல்ல இசைப்பண்புடன் பிறந்திருந்தால் அதற்குப்பின் உண்மை மறைந்து இருக்கிறது" என்று ஒரு ஆங்கிலப் பேராசிரியர் சொன்னார். நான் மேலே பாடிக்காட்டிய கவியின் நாட்டியத்தன்மை எப்படி யிருக்கிறதென்பதை நீங்கள் நேரிலேயே காண்பீர்கள்".

அமராவதிபுதூர் மகளிர் இல்ல மாணாக்கியர் மேற்கண்ட பாட்டைப் பாடி கோலாட்டமடித்தனர். இன்னும் இரண்டு பாட்டுக்களைப் பாடிக் கும்மியடித்தனர். திரு.மரகதவல்லி அம்மாள் கம்பனிலிருந்து இப்பாட்டுக்களை எடுத்து இதிலுள்ள தாள அமைதியைக் கண்டு கோலாட்டம் போடவும் கும்மி யடிக்கவும் ஏற்பாடு செய்திருப்பது நாம் மிகவும் பாராட்டத் தக்கதாகும்.

ஸ்ரீமான் பாஸ்கரத்தொண்டைமான் அவர்கள்

கோயில்பட்டி சப் மாஜிஸ்திரேட் ஸ்ரீமான் பாஸ்கரத் தொண்டைமான், 'கம்பன் புகழும் கன்னித் தமிழும்' என்பது பற்றிப் பேசினார்.

ஸ்ரீமான் அ.வரதநஞ்சைய பிள்ளை அவர்கள்

'கம்பன் கவிச்சுவை' என்பது பற்றி ஸ்ரீமான் அ.வரதநஞ்சைய பிள்ளை அவர்கள் பேசினார். பல கவிகளைச் சொல்லி கவிநயத்தை விளக்கினார்.

ஒரு காட்சி

கம்பனிலிருந்து ஒரு காட்சியை ஸ்ரீமான்களான சா.கணேசன், சங்கு சுப்பிரமணியன் இருவரும் உரையும் பாட்டுமாக உணர்ச்சியுடன் பேசினர். பாடினர்.

வித்வான் அரு. சோமசுந்தரம் அவர்கள்

'கம்பனும் நடிப்புக்கலையும்' என்பது பற்றி வித்வான் அரு.சோமசுந்தரம் அவர்கள் பேசினார்கள். நடித்தார்கள்.

கம்பன் காவியம் நடிப்பதற்குத் தகுதியானதா? அதனுடைய கவியில் நடிப்பு உணர்ச்சி இருக்கிறதா என்பதை நிதர்சித்துக் காட்டினார். பாட்டுக்களைச் சொல்லி நடித்தார். ஜனங்கள் மிகவும் ரசித்தனர்.

ஆவினிப்பட்டி அன்பர் சுப்பிரமணிய தேசிகர் கம்பனிலிருந்து சில பாடல்களை இசையோடு பாடினார்.

'சீதையின் பேச்சு வன்மை'

பண்டிதமணி கதிரேசன் செட்டியார் அவர்கள், 'சீதையின் பேச்சு வன்மை' என்பது பற்றிப் பேசினார்கள்.

இத்துடன் இரண்டாம் நாள் விழா இனிது முடிவுற்றது.

23.3.40 சனி: மூன்றாம் நாள் முற்பகல்

இறைவணக்கத்திற்குப் பிறகு, சென்னை சர்வகலாசாலை ஆராய்ச்சித்துறைத்தலைவர் ஸ்ரீமான் வையாபுரிப்பிள்ளை B.A.B.L அவர்கள் தலைமை வகித்தார்கள்.

வித்வான் கி.வா.ஜகந்நாதன்

சென்னை, வித்வான் கி.வா.ஜகந்நாதன், 'கம்பன் பாவிகம்' என்பது பற்றிச் சொற்பொழிவு ஆற்றினார்.

ஒரு காட்சி

இடையே அன்பர்கள் சா.கணேசன், சுப்பிரமணியம் ஆகியோரால் ஒரு காட்சி நடத்தப்பட்டது.

ஸ்ரீமான் ரா.பி.சேதுப்பிள்ளை அவர்கள்

ஸ்ரீமான் ரா.பி.சேதுப்பிள்ளை B.A.B.L அவர்கள் 'வில்லின் செல்வன்' என்பதைப்பொருளாகக் கொண்டு இந்திரசித்தன் வில் வலிமையையும் வீரத்திறனையும் குறித்துப் பேசினார்கள்.

பிற்பகல்

இறைவணக்கத்திற்குப் பின்னர், 'சுதேசமித்திரன்' துணை ஆசிரியர் ஸ்ரீமான் உலகநாயக்கர் அவர்கள், 'கம்பன் காட்டிய வழி' என்பது பற்றிச் சிறந்ததொரு பிரசங்கத்தை நிகழ்த்தினார்.

ஸ்ரீமான் திரிகூட சுந்தரம் அவர்கள்

'இராமாயணத்தில் ஒரு சத்தியாகிரகி' என்கிற விஷயமாக ஸ்ரீமான் திரிகூட சுந்தரம் அவர்கள் பேசினார். விபீஷணனை சத்தியாகிரகியாகக் காட்டினார்.

ஸ்ரீமான் ப.ராமசாமி அவர்கள்

'யுத்தச் செய்திகள்' என்பதைப் பற்றிப் பேசினார், ஸ்ரீமான் ராமசாமி. கம்பன் யுத்தச் செய்திகளை எப்படித் தருகிறான் என்பதைத் தற்காலச் செய்தியோடு இணைத்து அழகாகச் சொன்னார்.

ஸ்ரீமான் சொ. முருகப்பா அவர்கள்

'குமரன்' ஆசிரியர் ஸ்ரீமான் சொ. முருகப்பா அவர்கள் 'தமிழ்நாடும் கம்பனும்' என்பது பற்றிப் பேசினார்கள்.

ஸ்ரீமான் ஸ்ரீநிவாச ராகவன் அவர்கள்

'கம்பனென்றொரு மானிடன் வாழ்ந்தது' என்பது பற்றி ஸ்ரீமான் ஸ்ரீநிவாச ராகவன் எம்.ஏ. சொற்பொழிவு நிகழ்த்தினார்.

தலைவர் முடிவுரை கூறினார். கம்பன் படம் எழுதிய ஸ்ரீ எஸ்.கே. அய்யா என்பவருக்குத் தலைவரால் தங்க மெடல் பரிசளிக்கப்பட்டது,

வந்தனம்

விழாச் செயலாளர் ஸ்ரீமான் சா.கணேசன் வந்தனம் கூறினார்.

நான்காம் நாள் 24.3.40 ஞாயிறு: நாட்டரசன் கோட்டை

காலை முதல் வண்டியில் யாவரும் இங்கு வந்து சேர்ந்தனர். திருவாளர் ஆவி. ராம. கம்பர் ராமநாதன் செட்டியாரவர்கள் ஸ்டேஷனில் யாவரையும் வரவேற்றுத் தம் இல்லத்துக்கு அழைத்துச் சென்றார். காலை ஆகாரம் விமரிசையாக நல்கப்பட்டது. ஒரே கருத்துக் கொண்ட இலக்கியப் பெருங்குழு அவர்களுடைய இனிய பெரிய மாளிகையில் ஒருங்கே கூடி உல்லாசமாக உரையாடிக் கொண்டிருந்த காட்சி கண்டு களிக்கத் தக்கதாகும். பகல் அறுசுவையுணவு அளிக்கப்பட்டது. மாலை சுமார் 3.30 க்கு சிற்றுண்டி வழங்கப்பட்டது. அவர்கள் வீட்டிலிருந்தே கம்பர் படத்தின் ஊர்வலம் புறப்பட்டது.

அன்பர் யாவரும் தொடர்ந்து சென்றனர். சுமார் முக்கால் மைல் தூரத்திலுள்ள கம்பர் கோயிலுக்குச் சென்றனர். கம்பர் சமாதியைக் கோயிலாகச் சமைத்து அழகான சோலையாக்கி யிருக்கும் அந்த இடம் உள்ளத்தைக் கவர்வதாக இருந்தது. யாவரும் கம்பரைத் தரிசித்தனர். விழாவுக்கென அமைக்கப்பட்ட அலங்காரப் பந்தலில் சென்னை சர்வகலாசாலை ஆராய்ச்சித் துறைத் தலைவர் எஸ்.வையாபுரிப்பிள்ளை அவர்கள் தலைமை வகித்தார்கள். திரு.வே.மீனாட்சிசுந்தரம் அவர்கள் வாழ்த்துப் பாடினார். வித்வான் கி.வா.ஜகந்நாதன் அவர்கள், 'கம்பன் புனைந்த ஓவியம்' எனும் பொருள் பற்றிப் பேசினார். சு.மி. உதவி ஆசிரியர் திரு.உலகநாத நாயக்கர் அவர்கள் சிறிது... 'கம்பன் கற்பித்த கல்வி' என்பது பற்றி பிரசங்க ரத்னம் மு.பொன்னம்பலம் பிள்ளை யவர்கள் பேசினார்கள். திரு. பி.ஸ்ரீ. ஆச்சாரியார் நாட்டரசன் கோட்டையின் தலப்பெருமை என்பதைப் பொருளாகக் கொண்டு, கம்பர் தனது தெய்வ வாழ்க்கையை அங்கே நிலைப் படுத்தியது மிக்க பெருமை வாய்ந்ததாகுமென்று கம்பன் கவிகள் பலவற்றை யெடுத்து அழகாகப் பேசினார்கள். சா.கணேசனின் வந்தன உரையுடனும், இரவு 9 மணிக்கு விழா இனிது முடிவுற்றது." (குமரன், 28, மார்ச், 1940 பக்.3 மற்றும் 8)

'ஈழகேசரி' யிலும்...

இதே நிகழ்வை முன்னிறுத்தி, ஈழகேசரி இதழ் (பிரமாதி வருடம், பங்குனி மாதம், உரு தேதி. - 7.4.40) காரைக்குடியில் கம்பன் திருநாள் என்று மகுடமிட்டு, தமிழ் மகாகவிக்குப் பாராட்டு என்ற உள்தலைப்பின் கீழ், பின்வருமாறு பதிவு செய்திருக்கிறது:

> "காரைக்குடித் தெருவிலே யாராவது போய் நின்று கொண்டு "கம்பன் வாழ்க" என்று சொல்லுவீர்களே யானால், உடனே, "வாழ்க! வாழ்க!" என்று பக்கத்திலுள்ள வீடுகளிலிருந்து குரல்கள் கிளம்பிவிடும். அப்படி ஊர் முழுதும், 'கம்பன் பித்து' உண்டாகுமாறு செய்து விட்டார்கள். சமீபத்தில் அங்கு கம்பன் விழாக் கொண்டாடியவர்கள்.
>
> ஸ்ரீசா.கணேசன் என்ற காங்கிரஸ் ஊழியரை தமிழ்நாட்டிலுள்ள அநேக அரசியல்வாதிகள் நன்கறிவர்;

காங்கிரஸ் மாநாடுகளில் ஒலிபரப்பிக் கருவி ஏய்த்த சமயங்களிலே, "சா.கணேசனைக் கூப்பிடுங்கள்" என்று அக்ராசனர் கூப்பிடுவது வழக்கம். அந்த சா.கணேசன் தான் இந்தக் கம்பன் திருநாளின் காரணகர்த்தா. ஆனதால், அவர் தமது கர்ஜனைகளை இந்தத் திருநாளுக்கு ஏற்றவாறு அமைத்துக் கொண்டுவிட்டார். ஊருக்குக் கம்பன் பித்து ஊட்டிவிட்டார்.

"கம்பன் புகழ் வாழ்க!" என்று அவர் கர்ஜிப்பார். "வாழ்க! வாழ்க!" என்று ஜனத்திரள் அலைமோதும். அதோடு விடுவாரா? "கன்னித்தமிழ் வாழ்க!" என்று வானைக் குரல் முட்டும்படி மீண்டும் ஒரு போடு போடுவார். "வாழ்க! வாழ்க!"என்று அன்பர்கள் பதிலுரையும் குமுறும். முதனாள் கம்பன் படத்தை வைத்து வீதிவீதியாக ஊர்வலம் நடந்ததே, அப்போதும் சரி, பிறகு நான்கு நாட்கள் பல அறிஞர்கள் பிரசங்கம் செய்தார்களே அந்தக் கொட்டகையிலும் சரி, இந்த கர்ஜனைகள் பத்து நிமிஷத்துக்கொருமுறை இடி குமுறுவதுபோல நிகழ்ந்து கொண்டேயிருந்தது"

என்று விரித்துச் செல்கிறது, அச்செய்தித்தாள் தொடர். தனித்தனி உள்தலைப்புகள் இடப்பெறாமல், ஒவ்வோர் அத்தியாயம் எனக் கருதத் தக்க இடங்களில் ஒரு பூச்சின்னத்தை இடைவைத்து ஒரு பக்க அளவில் வெளியிடப் பெற்ற செய்தி ஒரு நேர்முக வருணனையாகவே விளங்கக் காணலாம்.

"ஆயிரம் வருஷங்களுக்குப் பிறகாவது நம் கவிஞனுக்கு மரியாதைகள் செய்யத்தொடங்குகின்றோமே" என்று காரைக்குடிக்கு வந்திருந்த ஒவ்வொரு தமிழன்பரும் திருப்தி கொண்டார்கள்.

இதற்கு முன்பெல்லாம் தமிழ்நாட்டிலே எங்காவது கம்பராமாயணப் பிரசங்கம் நடைபெற்றால் சுண்டல் விநியோக சமயத்திலேதான் கூட்டம் நிறைவாயிருப்பதைக் கண்டிருக்கிறோம். காரைக்குடியிலே நடந்த கம்பன் கவிதைப் பிரசங்கங்களின்போது எப்போதுமே கூட்டம் கொட்டகையில் இருந்து கொண்டிருந்தது ஒரு

ஆச்சரியமான விஷயமாயிருந்தது. அதுமட்டுமா? கடைசிப் பிரசங்கி இரவு மணி 9 மணிக்கு ஆரம்பித்து, பத்தேகால், பத்தரைக்குத்தான் முடிப்பார். அதற்கப்புறம்தான் அவரவர்களுக்கு வயிற்று ஞாபகம் வந்து அவரவர் வீடுகளுக்குத் திரும்புவதைக் கண்டோம்! 'செவிக்குண வில்லாதபோது' என்று தொடங்கும் என்று தொடங்கும் குறளையே இந்த சம்பவங்கள் ஞாபகப்படுத்தின.

முதனாள் விழாவில் தலைமை வகித்த பி.ஸ்ரீ.ஆசார்யா கம்பன் புகழ் பாடுவதற்காகவே தாம் ஜன்மமெடுத் திருப்பதாக நினைப்பவர். நண்பர்களோடு சல்லாபிக்கின்ற நேரமானாலும் சரி, சாப்பிடுகின்றபோதும், சரி, உலாத்தப் போனாலும் சரி, அன்றாடம் கம்பராமாயணத்திலிருந்து ஆயிரம் வரிகளையாவது மேற்கோள் நாட்டாவிட்டால் அந்தத் தினத்தை, 'ஒரு நாளாக' பி.ஸ்ரீ. கணக்குப் பண்ணுவதேயில்லையாம். அப்பேர்ப்பட்ட பி.ஸ்ரீ.யின் பிரசங்கம் எப்படியிருக்கு மென்று ஊகித்துக் கொள்ளுங்கள்.

'கம்பரும் கற்பாரும்' என்ற விஷயமாக திருநெல்வேலி தமிழ் வித்வான் கு. அருணாசலக் கவுண்டர் ஒரு பிரசங்கம் செய்தார். மொத்தம் எட்டுப் பிரசங்கங்களிலாவது சொல்லியிருக்க வேண்டிய அவ்வளவு பொருள்களையும் கடகட, படபடவென்று இந்த ஒரே பிரசங்கத்தில் கொட்டிக் கொட்டி அவர் பேசினார். பண்டித வர்க்கத்தினர் எப்படி அதி வியாக்யானங்கள் செய்கிறார்களென்பதையும் அதனாலேற்படும் பலாபலன்களையும் அவர் வெளுவெளு என்று அன்று வெளுத்துவிட்டார். 'சந்தன வனமும்... சண்பக வனமும்' என்று வார்த்தைகளுள்ள ஓர் முட்டைக் கூறி அவர் மேற்கூறிய இரு வனங்களிலும் சுற்றிச் சுற்றி வந்து கொண்டேயிருந்தார்.

□

பண்டிதமணி கதிரேசம்செட்டியாரின் திருநாமத்தைத் திராவிடபூமியிலேயுள்ள கலாதாஸர்களான கிராமஸ்தர்கள் நன்கறிவர். அவர் ஒரு நாள், 'பாஸனும் கம்பனும்' என்ற

விஷயம் பற்றி பிரசங்கித்தார். பாஸன் செய்த ராமாயண நாடகங்களின் ஏடுகள் ஒரே ஒரு இடத்தில்தான் அகப் பட்டதாம். அந்த வடமொழிக் கவிஞன் பண்டிதப் பெயர்களை உபயோகிக்கும் லாகவத்தை ஸ்ரீகம்பனும் கையாண்டிருக்கிறாரென்பதை எடுத்துக்காட்ட 'தாளிபுலாக' நியாய ரீதியில் உதாரணம் காட்டிப்பேசினார். பாஸனின் நூலிடத்தும், ருது சம்ஹாரம் போன்ற வேறு கிரந்தங்களிடமும் கம்பனுக்குப் பரிச்சயமிருந்திருக்க வேணுமென்பதை கரதலாமலகமாக எடுத்துரைத்தார். பண்டிதமணிக்கு தட்சிண பாஷையான தமிழிலே மேதைமை ஜாஸ்தியா? சமஸ்கிருதத்திலே பாண்டித்ய மதிகமா? என்று கண்டுபிடிப்பது கஷ்டம். சிவபிரான் நடன மாடும்போது கையிலுள்ள உடுக்கை அடித்தாரென்றும் அந்த உடுக்கின் ஒரு பக்கத்தினின்று திராவிடமும், மறு பக்கத்தினின்று சமஸ்கிருதமும் உதித்தனவென்று கதை சொல்வார்கள். பண்டிதமணியின் அன்றைய பிரசங்கம் அப்படி சிவபிரான் உடுக்காகவே யிருந்ததென்னலாம். பிரசங்கத்துக்கு ஏதோ ஓர் தலைப்புத் தரவேண்டுமே யென்று தந்தார்களே அன்றி அவர் அன்று ஆபால கோபாலமாக பல விஷயங்களையும் பல மனுஷர்களையும் பற்றி விளாசினார்.

டி.கே.ஸி. என்று செல்லமாகச் சொல்லப்படும் தென்காசி சிதம்பரநாத முதலியார் அவர்களுக்கும் கம்பனுக்கும் போன ஜன்மத்திலே ஏதாவது உறவு இருக்கத்தான் வேண்டுமென்பார்கள். கம்பனால் எழுதப்படாத பாட்டுக்களை டக்கென்று பொறுக்கி யெடுத்து வெளியே வீசுகிறாரே, இது வேறு யாராவது செய்யக்கூடிய காரியமா? நன்கவிக்கும் புன்கவிக்குமுள்ள வித்யாசங்களைக் காட்ட கரும்பலகை, சோக்கட்டி சகிதம் மேடைக்கு வந்து அவர் செய்த பிரசங்கம் ஆனந்தமா யிருந்தது. சபையிலிருந்த அந்த ஆனந்தத்தை, களிப்பை- இல்லை- எக்களிப்பை என்னென்று சொல்வது?

□

ஹனுமந்தனுடைய செயற்றிறன்களை எப்படிக் கம்பன் அநுபவித்துப் பாடியிருக்கிறானென்பதை

தூத்துக்குடியிலிருந்து வந்த ஸ்ரீராமராயர் ஒரு நாள் பிரசங்கத்தில் நன்கு கூறினார். வரதநஞ்சையாபிள்ளை என்று சேலத்திலிருந்து வந்திருந்த பண்டிதர், கம்பன் எவ்வாறு பழைய தமிழ்க் காவியங்களில் தோய்ந்து படித்து இந்நூலை ஆக்கி யிருக்கிறாரென்பதை விவரித்தார். ஐம்பெரும் காப்பியங்களிலே, 'அரசனை உயிராகவும், நாட்டு மக்களை உடலாகவும் வர்ணித்திருப்பதை, கம்பன் அடியோடு மாற்றிப் பாடினானென்றும், கம்பனுடைய சுதந்திரவேட்கைக் கண்களிலே மக்கள் தான் ஒரு நாட்டின் உயிர்களென்றும், அரசன் கருவியாகிய உடல்தானென்றும்' பண்டிதர் எடுத்துக்கூறினார். ஸ்ரீஅரு.சோமு என்ற மற்றொரு பிரசங்கி தமது பேச்சோடு பாட்டையும், பாட்டோடு நாட்டியத்தையும், நாட்டியத்தோடு ஹாஸ்யத்தையும் கலந்து கலந்து பேசியது, பெரிய சிருங்கார லஹரியாயிருந்தது. அவர் கம்பன் பாட்டுக்களுக்குக் கொஞ்சம் நாட்டிய பாவங்களையும் காட்டினார். "ஐயோ, ரேடியோவில் இத்தனை சுவையையும் பிடித்துவைக்க முடியாதே" என்று ரஸிகர்களுக்கு ஒரு கிலேசத்தையும், அவர் உண்டாக்கி விட்டார். இனிமேல், அடுக்குத்தொடர் வரிசைகளை மடக்கிப் பேச்சோடு விடுவதில், ஸ்ரீ சேதுப்பிள்ளைக்கு ஒப்பாருமிலர்; மிக்காருமிலர். 'வில்லின் செல்வ'னென்பது அவர் விளக்குவதாயிருந்த விஷயம், மோனை முத்தமிழ் ஓட்டம், யானையொத்த நடை கொண்டு நிகழ்ந்தது.

ஸ்ரீபாஸ்கரன் என்பார் பேசிய பேச்சும், நாட்டரசன் கோட்டையில் வித்வான் பொன்னம்பலப்பிள்ளை செய்த பிரசங்கமும், தனித்தனிச் சிறப்புக் கொண்டவை. திருவாளர் வையாபுரிப்பிள்ளையவர்கள் எத்தனை கம்பராமாயணப் பழம்பிரதிகளைப் பார்த்திருக்கிறா ரென்பது அவர் காட்டிய பாடபேதங்களினின்றும் தெரிந்தது. இன்னும் கி.வா.ஜகந்நாதன் போன்ற பண்டிதர்களும், ப.ராமசாமி போன்ற மறுமலர்ச்சிக் காரர்களும் கம்பனின் காவிய அழகுகளை அன்றாடம் எடுத்துக்கூறி மக்களை மகிழ்வித்தார்கள்.

திருநெல்வேலி இந்துகல்லூரி இங்கிலீஷ் புரபெசர் ஸ்ரீசீனிவாசராகவன் காரைக்குடியில் செய்த பிரசங்கமும், அதைவிட நண்பர்களிடையே அமர்ந்து அவர் அளவளாவும்போது கம்பனிலிருந்து காட்டும் பெரு நயங்களும் பிரமாதமானவையா யிருந்தன. ஷேக்ஸ்பியரி லிருந்து ஒரு உபமான ஸீன், மில்தனிலிருந்து ஸத்ருசமான ஒரு சம்பவம் இப்படியே அவர் தமது பேச்சை மெருகு கொடுத்த வண்ணமே பேசி மகிழ்வித்தார்.

இவ்வாறு நிகழ்ந்த ஒவ்வொரு பிரசங்கமும் ஒவ்வொரு விதத்தில் அற்புதமாயிருந்தது.

□

காரைக்குடி கம்பன் திருநாளிலே கம்பன் நூலிலிருந்து பேரறிஞர்கள் அள்ளி அள்ளித் தந்து விருந்து வைத்தார்கள். அந்த அறிஞர்களை அன்போடு வரவேற்று உபசரித்து காரைக்குடி பிரமுகர்கள் விருந்துகளளித்த விவரமும் ஏட்டிலே சொல்ல முடியாது.

அந்தக் கல்கண்டு அப்பத்தின் இனிமையைப் புகழ்வதா? இளங்கொழம்பு, வெள்ளையப்பம், கோளா இப்படி அந்தச் செட்டிநாட்டு சம்பிரதாயத் தீனிவகைகள் பரிமாறப்பட்டனவே அந்த அன்பைப் போற்றுவதா?

காரைக்குடியில் சில பள்ளிக் கூடச் சிறுமிகள் கம்பன் பாட்டைப் பாடிக்கொண்டு கோலாட்டமடித்தது வெகு நல்ல காட்சிகளாகும். காரைக்குடியில் நடந்த இந்தக் கம்பன் திருநாள் தமிழ்நாட்டில் இதர ஊர்களிலும் அடுத்த வருஷம் நடைபெறுமாயின் அதுதான் சா.கணேசன் போன்ற ஊழியர்களுக்குத் தமிழகம் தரும் கைம்மாறாகும்."

("தென்னிந்தியாவில் காரைக்குடியில் சென்ற மார்ச்சு மாதம் 21ந்தேதியிலும் அதற்கடுத்த நாட்களிலும் கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பனின் திருநாள் கொண்டாடப் பட்டது. பல அறிஞர்கள் சொற்பொழிவாற்றினர். அந்த வரலாற்றைப் பற்றிய ஒரு ரசமான கட்டுரையை,

'சங்குமணி' யென்பவர், 'ஹநுமான்' பத்திரிகையில் எழுதியிருப்பதை இங்கே தருகிறோம். தமிழ்நாட்டின் இலக்கிய பண்டிதர்களை நமது நாட்டிலுள்ளவர்களும் அறிமுகப் படுத்திக்கொள்ள இது ஒரு சந்தர்ப்பமாகும்")

என்ற குறிப்புக்குக் கீழ் தரப்பெற்ற இக்கட்டுரை அக்காலத் தமிழில், அக்கால நடைமுறைகளை அப்படியே சித்திரப் படுத்திக் காட்டும் அழகில் இருந்து விடுபடுமுன்பே, இக் காலத்திலும் இதில் பெரிய மாறுபாடேதுமின்றி, காரைக்குடியில் நடக்கும் கம்பன் திருநாளின் நிகழ்வுகளை நினைத்துப் பார்க்க முடிகிறது. ஓராண்டு நிகழ்வே இவ்வாறாயின் ஒவ்வோராண்டு நிகழ்வும் இதுபோல் எழுதப்பட்டிருக்குமாயின் அதுவே தனித்துத் தெரியும் ஒரு வரலாற்று ஆவண நூலாக அறியக் கிடைக்கலாம்.

அது ஒருபுறம்இருக்க, இக்கட்டுரையாசிரியர் தமிழகத்திற்கு முன்வைத்த வேண்டுகோள் நிறைவேற்றப் பெற்று, காரைக்குடியில், சா.க. தொடங்கிய கம்பன் விழா, ஊர்கள் தோறும் நடத்தப்பெற்று வருவது வரலாற்று முக்கியத்துவம் உடையதல்லவா? அதற்கு வலுச்சேர்ப்பது போல, காரைக்குடியில் கம்பன் விழா நடந்த அடுத்தடுத்த நாட்களிலேயே தமிழகத்தின் பல பகுதிகளில் கம்பன் விழாக்கள் நடைபெற்ற செய்திகளை, குமரன் இதழ் வெளியிட்டிருக்கக் காணலாம். அவை பின்வருமாறு:

கம்பன் திருநாள்

இராமச்சந்திரபுரம்

ஸ்ரீராமகிருஷ்ண வாலிபர் சங்கத்தின் சார்பில் 24.3.40 பிற்பகல் 4 மணிக்கு கம்பன் திருவுருவச் சித்திரம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு வாத்தியங்களுடன் ஊர்வலம் வந்தது. விழாவிற்கு வித்வான் கோபாலகிருஷ்ண பிள்ளை தலைமை வகித்தார். ஸ்ரீ தி.சொ.ராமசாமிச்செட்டியார் வந்திருந்தோரை வரவேற்றார். திருவாளர்களான சொ.முருகப்பா, சொ.பெரியணன், நா.அ.அண்ணாமலை, நாகசுந்தரமய்யர் ஆகியோர் முறையே, 'கம்பன் திருநாள்','கம்பச்சித்திரம்' 'வால்மீகியும் கம்பனும்', 'கம்பன் கவிநயம்' எனும் பொருள்

பற்றிப் பேசினார்கள். தலைவரின் முடிவுரைக்குப் பின் கூட்டம் 7.30 க்கு இனிது கலைந்தது.

ஆவினிப்பட்டி

விவேகாநந்தர் கல்விக்கழகத்தில் கம்பன் திருநாள் கொண்டாடப்பெற்றது. காலை 8.30 மணியளவில் கம்பர் பெருமானின் படம் ஊர்வலமாகக் கொண்டு வரப் பெற்றது. மாலை 5 மணிக்கு கழகக்கட்டிடத்தில் சென்னை ஸ்ரீ பி.ஸ்ரீ.ஆச்சாரியார் தலைமையில் கூட்டம் நடந்தது. சென்னை, வித்வான் ஸ்ரீ கி.வா.ஜெகந்நாதன், 'கம்பரும் விவேகாநந்தரும்' என்பது பற்றி சொற்பொழிவாற்றினார். பின்னர், தலைவர் கம்பரது கவிச்சித்திரத்தை பல அரிய உதாரணங்களால் எடுத்துக் காட்டினார். வந்தனோபசாரம் கூறப்பெற்ற பின் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

லெட்சுமிபுரம்

சொக்கலிங்க வித்தியாசாலையில் (25.3.40) மாலை 4 மணிக்கு கம்பர் விழா கொண்டாடப்பெற்றது. ஈரோடு திரு.என். ஹரிகரர் தலைமை வகித்தார். ஆசிரியர் ஸ்ரீ எம். இராமநாதய்யர், "கம்பர் தந்த காவியம்', என்பது பற்றிப் பேசினார். மாணவ மாணவிகள் பிரசங்கம், தேவாரம், திருப்புகழ் முதலியவைகளை நிகழ்த்தினார். தலைவர் முடிவுரைக்குப்பின் வந்தன வாழ்த்துடன் சபையோர்களுக்குக் கற்கண்டு வழங்கப் பெற்று விழா இனிது நிறைவெய்தியது.

ஈரோடு

24.3.40ஞாயிற்றுக்கிழமையன்று மஹாஜன உயர்தரப் பள்ளி தலைமை ஆசிரியர் எஸ்.மீனாட்சிசுந்தர முதலியார் பி.ஏ., எல்.டி. அவர்கள் தலைமையின்கீழ், ஷே கொண்டாட்டம் பள்ளியில் கொண்டாடப்பட்டது. அது சமயம் மேற்படி பள்ளியின் தமிழ்ப்பண்டிதர்களான தோழர்கள் சிவபாதஹிருதயம்பிள்ளை அவர்களும், ஆளவந்தார் அவர்களும் கம்பரின் சிறப்பைப் பற்றி வெகு விமரிசையாக தக்க மேற்கோள்களுடன் சொற்பொழிவு ஆற்றினார்கள்.

உத்தமபாளையம்

காரனேஷன் கிளப் ஆதரவில், கம்பர் திருவிழா ஸ்ரீ முகம்மது உசேன் தலைமையில் கொண்டாடப்பட்டது. பண்டித வித்வான் சங்குப்புலவர், 'கம்பர் கவிநயத்'தைப் பற்றிப் பேசினார். மற்றும் பலர் பேசியபின் விழா முடிவடைந்தது.

திருக்கோயிலூர்

தென்னாற்காடு ஜில்லா திருக்கோயிலூரில் திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் தலைமையில் மார்ச் 24உ யன்று தமிழ்ச்சங்கத்தின் ஆண்டுவிழா நடந்தது. திருக்குறளைப் பற்றியும் கம்பன் காவியத்தைப் பற்றியும் பலர் பேசினர்.

விழுப்புரம்

தொண்டமண்டல தமிழ் இளைஞர் சங்கத்தின் சார்பில் கம்பன் திருநாள் கொண்டாடப்பட்டது. கம்பன் கவிநயத்தைப் பற்றிப் பலர் பேசினர்.

திருவெண்ணெய்நல்லூர்

கம்பன் வாழ்ந்ததாகச் சொல்லப்படும் இங்கு, கம்பன் திருநாள் கொண்டாடப்பட்டது.மகாமகோபாத்யாய சுவாமிநாதய்யர் எழுதியிருந்த ஆசிச்செய்தியில், கம்பன் வாழ்ந்த ஊர் இது அல்லவென்றும், மாயூரம் தாலுகாவி லுள்ள கதிராமங்கலத்தையடுத்த வெண்ணெய்நல்லூர் தானென்றும் குறிப்பிட்டிருந்தார். இந்த விஷயத்தைப் பற்றிப் புலவர் ஆராய்ச்சிக்குப் பத்திரிகை வாயிலாகத் தர்க்கம் துவக்கவேண்டுமென்று கூட்டம் தீர்மானித்தது. அதற்கென ஒரு கமிட்டியும் நியமித்தது. (குமரன் பிரமாதி வருடம் பங்குனி மீ 15 உ ப.7)

தமிழகத்துக்கு அப்பாலும்...

தமிழ் பேசும் மாநிலமாக இருந்தாலும் தமிழகத்திற்கு அடுத்து அமைந்துள்ள புதுச்சேரியில் கம்பன் கழகம் தோற்றம் கொள்ளக் காரணமானவர் கம்பன் அடிப்பொடி. கால ஒழுங்கில் கறாரான அவர், புதுவையில் தொடங்கிய விழாவில்

காலதாமதத்தை அனுமதித்ததும் காலத்தாற் பதிவுசெய்ய வேண்டிய ஒன்றல்லவா?

"1966ல் புதுவையில் நிகழ்ந்த முதற் கம்பன் விழா, குறித்த நேரத்தில் தொடங்கவில்லை. சுமார் இரண்டு மணி நேரம் தாமதமாயிற்று. அவ்விழாவில், பேசிய கம்பனடிப் பொடியவர்கள், "இன்று நேர்ந்த காலதாமதத்தை நாம் பொருட்படுத்துவதற்கில்லை" என்றார். அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. அன்று சனிக்கிழமை.மாலை ஐந்தரை மணிக்கு, விழா தொடங்கவேண்டும். அதற்குமுன், விழாவில் பங்குகொள்ள வந்திருந்த தமிழறிஞர்களின் ஊர்வலம் நிகழவிருந்தது. குறித்த நேரத்தில், அவர்கள் வந்திருந்ததும், ஊர்வலம் புறப்படவில்லை. அதற்குக் காரணம், அவ்வூர்வலத்தில், யானையும் இடம்பெற வேண்டும் என்னும் திட்டம். அன்று காலையில் திடீரென்று முடிவு செய்யப்பட்டது. அந்நாளில், புதுவையை அடுத்த கடலூரில் சர்க்கஸ் நடந்து கொண்டிருந்தது. அங்கிருந்து யானையை அழைத்து வர, ஏற்பாடு செய்யப்பட்டது. அது, புதுவைக்கு வர ஒரு மணி நேரம் தாமதமாயிற்று. வந்த யானை மேல் கம்பராமாயண ஏட்டை வைக்கலாமென்றனர் சிலர். அப்போது, புதுவைக் கம்பன் கழக முதற்றலைவராகவும், புதுவை மாநில முதலமைச்சராகவுமிருந்த வை. வெங்கட சுப்பாரெட்டியாரவர்கள், 'வெறும் யானைமேல் வைக்கக் கூடாது; அதன்மேல், பூக்களால் அலங்கரிக்கப்பட்ட தவிசிட்டு, அத்தவிசின் மேல் ஏட்டை வைக்க வேண்டும்" என்றார். அதன்படி தவிசு அமைக்க ஒரு மணி நேரமாயிற்று. மேளம், நாகசுரம், முதலிய பல்வேறு இசைக்கருவிகள் முழங்கக் கொடி, தோரணம் முதலியவற்றோடு அலங்கரிக்கப் பட்ட யானை, கம்பராமாயண ஏட்டைச் சுமந்தவண்ணம் முன்னே செல்லப் பேராசிரியர் அ.சீனிவாசராகவன், கம்பனடிப்பொடி, நீதிபதி மகாராஜன், ம.பொ.சி. முதலிய பேரறிஞர்களும், தமிழன்பர்களும், ஆயிரக்கணக்கான பொதுமக்களும் ஊர்வலமாகப் புதுவைப் பெருந் தெருக்களில், ஊர்வலமாகச் சென்றபோது, மக்களின் மகிழ்ச்சி வெள்ளம் கரை புரண்டோடியது. கம்பனடிப்

பொடியார், "தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்" போலானார். எதிர்பாராத முறையில், விழாவின் தொடக்கம் மிகச்சிறப்பாய் அமையக் காரணமாயிருந்ததாலேயே, அன்றைய காலதாமதத்தை அவர் பொருட்படுத்தவில்லை என்பது தெளிவு. குடமுழுக்கைக் கண்டு மகிழும் பக்தர்களைப் போல், கம்பன் விழாக்களைக் கண்டு களித்தவர், கம்பனடிப்பொடியவர்கள் என்றால் மிகையாகாது" (நெல்லை மாவட்டக் கம்பன் கழக வெளியீட்டு மலர், பக்.4344)

என்கிறார். புதுவையைச் சேர்ந்த புலவர் தமிழ்வேள்.

இதுபோல், கொழும்பு உள்ளிட்ட பிற நாடுகளிலும் கம்பன் கழகம் தொடங்கக் காரணமான கணேசன், கம்பன் கழக விழாக்களில் காட்டும் புதுமையும் பொதுமையும் காலத்தாற் கவனத்திற் கொள்ளவேண்டியனவாக அமைந்திருக்கின்றன.

பன்னருங்கலைதெரி பட்டிமண்டபம்

இந்த வகையில் நாம் தனித்துக் காணவேண்டிய ஓர் இலக்கிய வடிவம், பட்டிமண்டபம். இதனை வடிவமைத்து இந்த நூற்றாண்டில், முதன்முதலில் தமிழ்கூறு நல்லுலகிற்கு அறிமுகப் படுத்தியவர் சா.க.

முதற்பட்டிமண்டபம்

*1941*இல் முதல் பட்டிமண்டபம், காரைக்குடி, கம்பன் திருநாளில், நடத்தப்பெற்றது. தலைவர் - சென்னைச் சர்வகலா சாலையின் ஆராய்ச்சித்துறைத்தலைவர், ராவ்சாகிப் ச.வையாபுரிப்பிள்ளை.பி.ஏ.பி.எல், அவர்கள். பொருள்: 'கம்பனும் ஒட்டக்கூத்தனும் ஒரு காலத்தவரா?'

"கம்பனும் ஒட்டக்கூத்தரும் ஒரு காலத்தவர் அல்லர். உத்தரகாண்டம் ஒட்டக்கூத்தரால் பாடப்பட்டதல்ல சுமார் *500 -550* ஆண்டுக்குள் பாடப்பட்டது அது என்பது என் தீர்மானமான முடிவு. அதற்கு அசைக்கமுடியாத சான்றுகள் உத்தரகாண்டத்திலும். அரிகேசரி பாடிய இரகு வம்சத்திலும் உள. எனவே, ஒட்டக்கூத்தனும், கம்பனும் ஏதோ போட்டி போட்டுக்கொண்டு ராமகாதை

பாடியதாயும், அதில் ஒட்டக்கூத்தன் தோற்றுவிட்டதாயும், கட்டப்பட்ட அபத்தக் கதையை மறுத்து, உண்மையை உலகுக்குணர்த்த வேண்டுமென்று கருதி, இந்த வாதத்தை முதலில் நான் என் எழுத்துரையைத் தொடங்கினேன். வையாபுரியார் தலைமை தாங்கினார். மு.இராகவையங் கார், கே.என்.குமரேசபிள்ளை, கு.அருணாசலக்கவுண்டர், மு.அருணாசலம், ஜி.சுப்பிரமணியம் போன்றவர்கள் ஒட்டியும் வெட்டியும் பேசினர். முதற்பட்டிமண்டபத்தில் கட்சி பிரித்து வாதிடவில்லை. அவரவரும் தத்தம் விருப்பப்படி வாதிட்டனர். வையாபுரியார் இருவரும் வேறு வேறு காலத்தவர் என்றும் உத்தரகாண்டம் ஒட்டக் கூத்தன் பாடியதல்ல என்றும், ஒட்டக்கூத்தன் காலத்திற்கு மிகவும் பிற்பட்டதென்றும் தீர்ப்பளித்தார்" (கம்பன் அடிப்பொடி கலைக்களஞ்சியம்,ப.295)

என்று ஒரு நேர்காணலில் நினைவுகூர்கிறார், சா.க.



பின்னர், இரு கட்சிகளாகவும், அடுத்து மூன்று அணியினராகவும் வாதிடுவதாக அமைந்த இப்பட்டிமண்டப நிகழ்வில், பார்வையாளர்களும் பங்கேற்கும் வண்ணம் நோக்கர்கள் தெரிவு செய்யப் பெற்று, அவர்கள் ஒரு கட்சியை நீக்கவும் வாக்களிக்கச் செய்தார். எஞ்சிய இரு அணியினரின் வாத, பிரதிவாதங்களை வைத்து, நடுவர் தீர்ப்பளிப்பார். அதிலும் நிறைவுறாது, பின்னர் மேல்முறையீட்டுப் பட்டிமண்டபமும் தொடங்கும். இப்படியெல்லாம் கம்பனுள் ஆழ்ந்திருக்கும் கவியுளத்தைக் காலத்திற்கேற்பக் கண்டு உலகிற்குக் காட்டப் பெருமுயற்சி மேற்கொண்டார் சா.க.

பட்டிமண்டபத்தலைப்பும், பங்கேற்போர் பட்டியலும், திட்டமிட்டுக் குறித்த நேரத்தில் தொடங்கி முடிக்கும் பாங்கும் அவரின் கலை, இலக்கிய, நிர்வாகத்திறன்களுக்குக் கட்டியம் கூறுபவை.

வேழமுக வில்லியர்

காரைக்குடி, கம்பன் கழகத்துப் பட்டிமண்டப நிகழ்ச்சியில் தனித்தன்மையாக அமையும் ஒரு தொடக்க நிகழ்ச்சி- 'வேழமுக வில்லியார்' என்பதாகும். இது பட்டிமண்டப அமைப்பையும், நடைமுறை முதலியவற்றையும் அவையோர்க்கு எடுத்துக் கூற, நடக்கும் ஒரு குறுநிகழ்வு. பழைய காலத்துக் கட்டியங்கார பாணியை இங்கு ஒப்பிட்டுப்பார்த்துக்கொள்ளலாம்.

அது எப்படி அமையும் என்பதற்குக் கம்பன்அடிப்பொடி தந்த ஒரு வாக்குமூலம்:

> "அமரர் அ.சீனிவாசராகவனும், எளியேனும் மேடையில் வந்து மைக்கின்முன் அமர்வோம். பேராசிரியர் பேச்சைத் தொடங்குவார். நான் பதில் உரைப்பேன். பட்டிமண்டபம் என்றால் என்ன என்பார். யான் சிறிது விளக்குவேன். அவர் மேலும் தெளிவு செய்வார். பட்டிமண்டபம் என்றால் ஒரு வாதமேடையே! இங்கு சொற்போர் நிகழும். ஒரு தரப்பினர் ஆம் என்றும், மற்றொரு தரப்பினர் இல்லையென்றும் வாதிடுவர். அதனால், தனிச்சொற்பொழிவைவிட, கேட்பவர் உள்ளத்தில் மகிழ்ச்சியையும் தெளிவையும் இஃது அரும்பச் செய்யும் என்று கூறியது நினைவில் உளது." (மேலது.ப.296)

வேழ முக வில்லியர் - ஒருவிளக்கம்

இந்த வேழமுகவில்லியர் என்பது, சா.க., மற்றும் அ.சீனிவாசராகவன் ஆகியோரைக்குறிக்கும். கணேசனுக்கு இன்னொரு பெயர், வேழமுகம். வில்லிபுத்தூராரைத் தந்த மண்ணில் இருந்து வந்த கவிஞர் அ.சீ.ரா. முன்னவர், வேழமுகர். பின்னவர், வில்லியார். இருவரும் இணையும் கம்பன் கழக மேடையில் இவர்கள் 'வேழமுகவில்லியர்'. இது ஒருபொருள்.

மற்றொரு நுட்பமும் இதில் உண்டு. இந்தியப் பெரும் இதிகாசங்கள் இரண்டு. ஒன்று. இராமாயணம், மற்றொன்று பாரதம். வடமொழியில் தோன்றிய இப்பெருங்கதைகளைத் தமிழுக்குத் தந்தவர்கள், கம்பனும் வில்லியும். எனவே, 'பன்னருங்கலைதெரி பட்டிமண்டபம்' என்று கம்பன் சொன்னதைக் காட்ட, வேழமுகத்தாரும் வில்லியாரும் இணைந்தனர்.

அதுமட்டுமில்லை. வியாசர் சொல்லச் சொல்ல, விநாயகர் எழுதிய கதை பாரதம். இங்கே வில்லியார் (அ.சீ.ரா) கேட்க, வேழமுகத்தார் (சா.க) பதில் சொல்ல, இருவருக்கும் இடையில் நடக்கும் ஒரு குறுநாடகம், 'வேழமுகவில்லியர்'.

முந்தைய இயலில் சொல்லிய வேழமுகத்தை இந்த நிகழ்வோடு ஒப்பிட்டுப்பார்த்தால், இந்த நூலின் பாவிகம் புரியும். பின்னர் இதே பணியை, தற்போதைய கம்பன் கழகச் செயலர், கம்பன்அடிசூடியைக் கொண்டு நிகழ்த்திக்காட்டினார் சா.க.



"கம்பன்விழா நிகழ்ச்சிகளில் புதுப்புது உத்திகளைக் கையாண்டு, பொலிவுபெறச் செய்வார். கருத்தரங்கம் என்றும், பட்டிமண்டபம் என்றும் புதிய நிகழ்ச்சிகளைப் புகுத்தி, விழாவைக் கலகலப்பாக்குவார். என்னையும் என் கணவரையும், எதிர்எதிர் அணிகளில் நிறுத்தி மோத விடுவார். பார்வையாளர்களுக்கு அது குதூகலத்தை ஏற்படுத்தும். இந்த நிலை, எல்லா ஊர்களிலும் நடைபெற்ற பட்டிமண்டப நிகழ்ச்சிகளிலும் பின்னர் வாடிக்கையாகி விட்டது" (மேலது, ப.47)

என்கிறார் இராஜேஸ்வரி நடராஜன்.

பட்டிமன்றமா? பட்டிமண்டபமா?

இங்கே இன்னொரு குறிப்பும். 'இது பட்டிமன்றமா? இல்லை, பட்டிமண்டபமா?' நறுக்குத்தெறித்தாற்போல் சொல்லுகிறார்: "மரபு மாற்றப்படக்கூடாதது. முன்னையோர் எல்லாம் ஒருபடித்தாய், 'பட்டிமண்டபம்' என்றே வழங்கி வந்துள்ளனர். கம்பனும் அப்படியே." இது, கம்பன் அடிப்பொடியின் தீர்ப்பு.

இதுபோல், காரைக்குடிக் கம்பன் கழக நிகழ்ச்சிகள் குறித்து ஒரு தனிநூலே எழுதலாம்.

தாய்க்கழகத்தின் தனித்தன்மை

இப்படி மேடைப்பொழிவுகளை ஒரு நிகழ்த்துகலை (Performing Art)யாக மாற்றி மக்களை ஈர்த்தவர் சா.க. அதிலும் ஒவ்வொருமுறையும் அவர் தெரிந்தெடுக்கும் தலைப்புகளும், தேர்ந்தெடுக்கும் ஆட்களும், அந்தந்தக் காலத்தேவையின் அடிப்படையில் அமைவது மிகவும் குறிப்பிடத்தகுந்த ஒன்று. ஊர்கள்தோறும் கம்பன் பெயரில் கழகங்கள் தோன்றக் காரணமான தாய்க்கழகம் காரைக்குடிக்கென்று பல தனித் தன்மைகள் உண்டு. அவற்றுள் சிலவற்றைப் பின்வரக் காணலாம்.

"காரைக்குடியில் நடந்து வந்த கம்பன்விழா, இங்கிலாந்தில், உலகப்புகழ் பெற்ற நாடக ஆசிரியனும், கவிஞனுமான சேக்ஸ்பியருக்கு ஆண்டுதோறும் அவர்

> பிறந்த ஊரான ஸ்ட்ராபோர்டு - அன் - அவன் என்ற ஊரில் விழா நடத்துவது போன்று, அதே தரத்தில், கவிச்சக்கரவர்த்தி கம்பனுக்குக் காரைக்குடியில் நடப்பதாகக் கருதப்பட்டது. கம்பன் விழாவில் ஒருவர் கலந்துகொண்டால், பேசினால், அவருக்குத் தமிழறிந்த மனிதன் என்ற முத்திரை வந்து சேர்ந்துவிடும். மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் கவிதைகள் அரங்கேறியது மாதிரி, கம்பன்விழா மேடை கருதப்பட்டது"

என்ற தா.பாண்டியனின் (ஜீவாவும் நானும், ப.38) கருத்தைக் கவனித்தால், காரைக்குடிக் கம்பன் கழக நிகழ்வின் போக்கும் ஆக்கமும் எப்படி இருந்திருக்கும் என்பது புரியும்.

இங்கே இன்னொன்றையும் குறிப்பிட்டாக வேண்டும். நிகழ்ச்சியில் இடம்பெறாத யாரையும் மேடையேற அனுமதிக்கவும் மாட்டார்.


பார்வையாளராகவந்த ஒரு பிரமுகரின் பண்பும் கழகப் பாங்கும்

ஒருமுறை, அரசியல் மற்றும் கலைத்துறையில் பிரபலமான ஒருவர், செட்டிநாட்டுத் திருமணம் ஒன்றிற்கு வந்து விட்டு, இலக்கிய ஆர்வம் காரணமாக முன்னறிவிப்பின்றிக் கம்பன்விழாப் பட்டிமண்டப நிகழ்ச்சிக்கு வந்துவிட்டார். சாதாரண ரசிகர் ஒருவர்போல், எந்த ஒரு கெடுபிடியும் இன்றி, கம்பன் அடிப்பொடிக்கே தெரியாது, பார்வையாளர்கள் வரிசையில் வந்து அமர்ந்துவிட்டார். இந்தச் செய்தி, காட்டுத்தீ போல் பரவி, பெருங்கூட்டம் கூடிவிட்டது. அவரைக் காணவும் முண்டியடித்தது.

சிலர், கம்பன் அடிப்பொடியிடம், 'அவரை மேடையேறிச் சில வார்த்தைகள் பேசச் செய்தால் கூட்டம் அமைதியாகத் திரும்பும்' என்று சொன்னதைக் கம்பன் அடிப்பொடி ஏற்கவில்லை. வந்திருந்தவரும் அதை விரும்பவில்லை. ஆயினும், பார்வையாளர்களுக்குக் காட்சிப்படுத்தவேண்டி விழா மேடைக்கு வெளியே ஓர் உயரமான இடத்தில் அவரைத் தோன்றச்செய்து இரசிகர்களை அமைதிகொள்ளச் செய்தார் கம்பன் அடிப்பொடி. அந்தப் பிரமுகர் வேறு யாருமல்லர்

'மக்கள் திலகம்' என மக்களால் போற்றப்பெற்ற பாரத ரத்னா எம்.ஜி.ஆர்தான்.

மேலும், அக்காலத்தில் எதிர்நிலையில் நின்று கம்பனை விமர்சித்தவர்களும், கம்பனை உள்ளபடி உணர்ந்து உலகறிய உரைக்கக் கம்பன் கழக மேடையினைக் களமாக்கித் தந்தவர், கணேசன். அவரால் இனங்கண்டு ஊக்குவிக்கப்பெற்ற பொழிவாளர்கள் எண்ணற்றோர். பொருளாழமற்ற, எதுகை,மோனைச் சொற்களை வைத்துக் கிளர்ச்சியை உண்டு



பண்ணிக் கரவொலிகளை அறுவடை பண்ணிக் கொண்டிருந் தோர் முற்றுகையிட்டிருந்த தமிழக அரங்குகளை, ஆழம் நிறைந்த இலக்கிய மேற்கோள்களையும், பாடல் வரிகளையும் எடுத்துக்காட்டித் தமிழின் மேன்மையையும், தமிழர்தம்



பண்பாட்டு, அறிவியல் செழுமையையும் கடைக் கோடி மக்களும் கற்றுய்யும் கலையரங்கங்களாக மிளிரச் செய்தவர். பழந்தமிழர்தம் பட்டிமண்டபத்தைப் பாங்கறிந்து புதுக்கிக் கம்பனைக் கற்றுத்துய்க்கவும் கடைப்பிடித்தொழுகவும் உரிய வகைசெய்தவர். நீதியரசர்கள், பேராசிரியர்கள், அரசியல் பிரமுகர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், அரசு அதிகாரிகள், பொதுமக்கள் எனச் சமூகத்தின் அனைத்து அங்கத்தவர்களும் கம்பன் புகழ்பாடிக் கன்னித் தமிழ் வளர்க்கக் கம்பன் அடிப்பொடியால் தூண்டப்பெற்றனர்.

காலந்தவறாத கடமை வீரர்

காலமும் கருத்தும், நேரமும், அதனை நடத்தும் நேர்மையும் சா.க.வின் தனிமுத்திரை.

> “நேர்மை, நேரந்தவறாமை இரண்டும் அவருக்குப் பக்கபலம். இதில் எல்லாம் கண்டிப்பும் கறாருமாய் இருப்பார். வள்ளல் அழகப்பச்செட்டியாராக இருந்தாலும் சரி, கவியரசு கண்ணதாசனாகவே இருந்தாலும் சரி, உரிய நேரத்தில் கம்பன்விழா மேடைக்கு வரவில்லை என்றால், காத்திருக்க மாட்டார். தாட்சண்யம் காட்டாமல், “கம்பன் வாழ்க!” என்று முழங்கி, உரிய நேரத்தில் ஆரம்பித்து விடுவார். இதற்குப் பயந்தே, எல்லோரும் உரிய நேரத்தில்

மேடை ஏறிவிடுவார்கள்" (கம்பன் அடிப்பொடி கலைக்களஞ்சியம்,ப.47)

என்ற இராஜேஸ்வரிநடராஜனின் அனுபவ வாக்கு இதற்கு அணி சேர்க்கும்.

காலத்தை வென்ற பேச்சு

காலந்தவறாத கடமை வீரர் கணேசன் நடத்தும் கம்பன் கழகத்தில் நேரக்கட்டுப்பாடு தவிர்க்க முடியாதது. எப்பேர்ப் பட்ட பேச்சாளராயினும் ஒதுக்கப்பெற்ற பொழுதுக்குள் பேசி முடித்தே தீர வேண்டும். காலம் காட்ட பேச்சு மேடையின் மீது எச்சரிக்கை விளக்கு பொருத்தப்பெற்றிருக்கும். அச்சிவப்பு நிற விளக்கு எரியும்போது நிறுத்தியே தீர வேண்டும். இது காரைக்குடிக் கம்பன் கழக வாடிக்கை.

தம்மை மறந்து கம்பன் கவிதைக்குள் புகுந்த ஒரு பேருருவம், காலம் கடந்து கம்பன் கவியமுதை வாரி வழங்கிக் கொண்டிருக்கின்றது. சிவப்புவிளக்கும் நிறுத்த முடியாத அப்பொழிவைக் கேட்ட கம்பன்அடிப்பொடி, 'நிறுத்தச் சொல்லிக் காட்டிய் சிவப்புவிளக்கை, தம்மை வரவேற்கும் சிவப்புக் கொடியென்று கருதிப் பேசிவிட்டார்' என்று நகைச் சுவையோடு சொல்லி அவர் தம் உரையை நிறைவடையச் செய்தார். விளக்கை விலக்கி விளக்கவுரை தந்த சிவப்புக் கொடியுடை செம்மல் வேறு யாருமல்லர் தோழர் ஜீவானந்தம்தான்.



அந்நிகழ்விற்குத் தலைவர் அ. சரவண முதலியார்.

"ஜீவா, பேச ஆரம்பித்தார். 'தமிழ் நாட்டின் இயற்கை வளத்தை, வனப்பை

வர்ணிக்கிற கம்பன், மதுரையில் தமிழ்ச் சங்கம் இருக்கும், அதில் சொக்கிப் போகாமல், விலகிப்போ என அனுமனை எச்சரிப்பது போன்ற வருணனை சஞ்சீவியைத் தேடிப்போகிறவன் அங்கே உட்கார்ந்துவிடக் கூடாது' என்பதற்காகத்தான் இத்தகைய வருணனை. மணித்துளி 43, 45 ஐத்தாண்டி 80 மணித் துளிகட்கு மேலாகிவிட்டது. மணி அடிக்கவில்லை. தலைவர் ஜீவா பேச்சை நிறுத்தச் சொல்லவில்லை. கூட்டத்தினர்க்குச் சற்று வியப்புதான். ஏனெனில், யாராவது 45வது மணித்துளியைத் தாண்டுகிறபோது, மணிச் சத்தம் கேட்கும். அதையும் கேட்காது பேசினால், சா.கணேசன் மேடையில் ஏறிவிடுவார். இது வாடிக்கை. இன்று அதுபோல் ஒன்றும் நடக்கக் காணோம். ஜீவா வழக்கம் போல வேர்த்து வேர்த்துப் பேச்சை முடித்து உட்கார்ந்தார்.

தலைமை தாங்கியது பேராசிரியர் சீனிவாசராகவனா, அல்லது சரவணமுதலியாரா என்பது சரியாக நினைவுக்கு வர மறுக்கிறது. இருவரில் ஒருவர் தலைமை. அவர் பேசத் தொடங்கினார். "என்ன ஜீவா காலவரம்பைத்தாண்டிப் பேசியபோதும் மணியடிக்காமல், இருந்தீர்களே ஏன்?" என 'நீங்கள் கேட்க மாட்டீர்கள். ஏனெனில், நீங்களும் அவர் இன்னும் பேசட்டும் என்றே கேட்டுக்கொண்டு இருந்தீர்கள். அது மட்டுமல்ல, நான் சிவப்பு விளக்கைப் போட்டால், அவர் உற்சாகமாக மேலும் பேச ஆரம்பித்து விடுவார்" என்றவுடன் கைதட்டி, சிரித்தனர்.

"நான் தலையிடா தற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு. ஜீவா பேசினால் தடுக்கத் தலைப்பட்டிருப்பேன். ஆனால், கம்பனே வந்தல்லவா பேசினான். நான் எப்படித் தடுப்பேன்?" என பலத்த கைதட்டலுக்கு இடையே நன்றி கூறி முடித்தார். மரபுக்கு மாறாக, அன்றைக்கு மட்டும் நன்றியுரை வழங்கினார் சா.கணேசன். 'ஆண்டுதோறும் கம்பன் விழாவுக்கு ஜீவா வரவேண்டும்' என்று அழைப்பும் விடுத்தார். 'அழைத்தால் வருவேன்' என ஜீவா சொல்ல, 'மேளதாளத்துடன் வரவேற்போம்' என சா.கணேசன் சொல்ல, கம்பன் கழகத்தில் நிரந்தரப் புலவராக அங்கம்

பெற்றுவிட்டார் ஜீவா. இதற்குப் பிறகு, தி.மு.க. ஏடு ஒன்று ஜீவா படத்தை கேலிச்சித்திரமாகத் தீட்டி, கை, கால், நெற்றி, நெஞ்சு பூராவிலும் திருநீறு பூசி இரு கைகளிலும், சப்பளாக் கட்டை பிடித்து, ராமா, ராமா, கோவிந்தா எனக் கூத்தாடுவது மாதிரிப் போட்டு இருந்தது. கட்சிக்குள்ளும் சிலர் இதை வெட்டி வேலை என்று கருதினர். பேசினர்... ஆனால், பின்னர் என்ன நடந்தது என்பதை நாடறியும். அதனைத் தொடர்ந்து அவர்தம் இறுதிக்காலம் வரைக்கும் கம்பன் கழக நிகழ்வுகளில் கலந்துகொள்ளாமல் இருந்ததே இல்லை" (ஜீவாவும் நானும், பக்.*40-44*)

என்று எழுதுகிறார் தா.பாண்டியன்.

துன்பங்களுக்குத் துணை கம்பன்

நலக்குறைவாக, அவர் மாஸ்கோ மருத்துவமனையில் படுத்திருந்தபோதிலும் அவருக்குப் பக்கத்துணையாக இருந்தவர்களுள் கம்பனும் ஒருவன்.

"தம்பி, பாரதி என் பக்கத்திலேயே இருக்கிறான். கம்பனும் வள்ளுவனும் இளங்கோவும் உண்டு. அவர்களைப் படித்துப் படித்து அவர்கள் வீசிக்கொண்டே யிருக்கும் அறிவுஒளியில் சோவியத் வாழ்வைக் கண்டும், கேட்டும், படித்தும் சிந்தித்தும் ஆய்கிறேன். தமிழனுக்கும், பாரதநாட்டுக்கும், உலகுக்கும் என் கடமையை மேலும் ஒரு துளி அதிகம் ஆற்ற அவாவி.... அன்பு ஜீவா"

என்று தம்பி சுவாமிநாதனுக்கு. மாஸ்கோவில் இருந்து, *28.8.62* எழுதிய கடிதத்தில் (பாவை பப்ளிகேஷன்ஸ் வெளியீடு, உறவினர் நண்பர்கள் பார்வையில்..,ப.*30*) குறிப்பிடுவார்.

மேலும் அறிய, எனது, 'காரைக்குடியில் ஜீவாவின் கம்ப முழக்கம்' என்கிற நூல் உதவும். என்றாலும், ஜீவாவைக் குறிப்பிடும்போது காலத்தை மறக்காமல் இருக்க முடியாது.

கம்பனுக்கு நேர்ந்த அக்கினிப்பிரவேசம்

அக்காலத்தில், உண்மைக்கு மாறாக, 'ஆரிய திராவிடப் போராட்டமே இராமாயணக்கதை' என்றும், 'ஆபாசக் களஞ்சியம்' என்றும் காமரசங்காட்டி, 'தீ பரவட்டும்' என்று

கம்ப காவியத்தைக் கொளுத்தும் சூழல் தமிழகத்தில் எழுந்த போது, கம்பனுக்கான அக்கினிப்பிரவேசம் தமிழ்மண்ணில் அரங்கேறியபோது, சீதையின் மேன்மையை உலகுக்கு உணர்த்த அக்கினிதேவனே நேரில் தோன்றி அறிவித்ததுபோல், கம்பனின் மேதாவிலாசத்தை உலகிற்குணர்த்தக் காலம் தமிழகத்திற்குப் படைத்துத் தந்த அக்கினிதேவனாக, கம்பனின் அடியார்களுக் கெல்லாம் அடியார் என்று தம்மை அறிவித்துக்கொண்டு கணேசனை அவதாரம் எடுக்கவைத்தது காலம்.

> "சமூக அமைப்பில் திராவிட இயக்கங்கள் மட்டும் தோன்றாமல் இருந்திருந்தால், தமிழன் இந்திய அரசியலிலும், உலக அரங்கிலும் இன்று வகிக்கும் பெரிய இடத்தை அடைய முடியாமலேயே போயிருக்கும் என்பதும் வரலாற்று உண்மை. தந்தைபெரியாரின் சுயமரியாதை உணர்வுகள் தமிழனுக்கு அவசியமான ஒன்று. எனவே, அதனை எப்பாடுபட்டாவது பாதுகாக்க வேண்டிய பொறுப்பு திராவிட இயக்கத் தலைவர்களுக்கு ஏற்பட்டதை யாரும் குறை கூறமுடியாது. தமிழ் உணர்ச்சியைத் தூண்டிய திராவிடத் தலைவர்களே தமிழ் மணம் கமழும் கம்பராமாயணத்தைக் கடுமையாக விமர்சிக்க வேண்டிய கட்டாயம் தோன்றிவிட்டது. கம்பராமாயணத்தின் தமிழ்நலம் என்ற நல்ல விஷயத்துள் திராவிட இயக்கம் பெரிதும் கண்டித்த மேட்டுக் குடியினர் புகுந்து கொண்டதால், கம்பராமாயணத்தையும் கண்டிக்க வேண்டிய கட்டாயம், தமிழ் இனத் தலைவர்களுக்கு நேர்ந்துவிட்டது. இது ஒரு விபத்தே என்பது என் அபிப்ராயம்"

என்கிறார் சுகி. சிவம். (கம்பன் நேற்று, இன்று, நாளை, பக்.21-22) அவர் மேலும் சொல்கிறார்:


> "கம்பராமாயணத்தைக் கொளுத்துவது என்ற எண்ணம் கடவுள் எதிர்ப்பால் ஏற்பட்டதாக இருக்க முடியாது. வடபுல ஆதிக்கம் மேட்டுக்குடி ஆதிக்கம் தமிழனை இரண்டாம் பட்சக் குடிமகனாக்குவதைத்

தமிழ்த் தலைவர்கள் விரும்பவில்லை. கம்பராமாயண வளர்ச்சி வடபுல ஆதிக்கம், மற்றும் உயர்சாதி ஆதிக்கத்திற்கு மீண்டும் வழிவகுக்கும் என்று திராவிட இயக்கத் தலைவர்கள் கவலை அடைந்திருக்க வாய்ப்பு உண்டு. எனவே, கம்பராமாயண எதிர்ப்பு பரவத் தொடங்கியது.

பேரறிஞர் அண்ணா போன்றவர்களே, கம்பராமாயணத்தில் தேடித்தேடிக் குறை கண்டுபிடித்துப் பேசத் தொடங்கினர். மிகச்சிரமப்பட்டு சமய அங்கீகாரம் பெற்ற கம்பராமாயணத்தின் தெய்விகம் காயப்படுத்தப்பட்டது. அதில் உள்ள சிருங்கார சுவை மேடைகளில் பேசப்பட்டு, கம்பரசம் பாயத் தொடங்கியது. கம்பனுக்குத் தர்ம சங்கடமான காலம் தொடங்கிவிட்டது. வேடிக்கையாகச் சொன்னால், கம்பனுக்கு ஏழரைச் சனி பிடித்த காலம் அது." (மேலது,ப.22)

கனன்றெழுந்தது ஒரு கார்நிறக் கதிர்

அதை எதிர்த்து, அறப்போர் நிகழ்த்தத் தாம் அமைத்த கழகத்திற்குப் பலரையும் அழைத்துப் பதில் தரச் செய்தார் சா.க. அதற்குத் தோளொடுதோளாய்ப் பலரும் துணைசெய்யத்



தொடங்கினர்.அவர்களில் ஒருவர் கி.பக்ஷிராஜன். இவர் நெல்லைக்காரரர். அவர் சொல்கிறார்:

"...கம்பன் திருநாளுக்கு நான் சென்றிருந்தபோது, தமிழ்நாட்டில் அப்போது வன்மையாகத் தோன்றிவிட்ட நாத்திக இயக்கத்தைப் பற்றி நாங்கள் விவாதித்தோம். திடீரென்று, ஒரு வெறி கொண்ட குரலில், திரு. கணேசனின் வார்த்தைகள் வெளிவந்தன. "என்னுடைய கம்பனை ஒருவன் பழிக்கவா? பக்ஷி, அவனது ராமாயணத்தை எரிக்கவா? இது என்னுடைய தமிழ்த்தாயை அவளுடைய மக்கள் முன்னிலையிலேயே நிறுத்தித் துகிலுரிவது போலல்லவா? அதைக் கண்டும், நான் சும்மா கிடப்பேனோ? அப்படிச் செயலற்றுக்கிடக்க, நானொரு பாண்டவனில்லை. பக்ஷி, எப்படியும், தமிழன்னையின் மானம் காக்க உறுதிபூண்டேன். ஆனால், பிறரைப்போல் வன்முறை கொண்டு, எதிர்க்க மாட்டேன். நான் காந்தி சீடன். அமைதியான முறையைத்தான் பின்பற்ற உன்னினேன். கம்பன் புகழையும், அவன் பாடிய ராமனின் அவதார மகிமையையும் தமிழ்நாட்டில் பறையறைந்து பரப்புவதன்மூலம், தமிழன்னை, துகிலுரியப் படாமல், காக்கத்திட்டமிட்டேன். அத்திட்டத்தின் முதற்படி தான் இக்கம்பன் திருநாள் தொடக்கம். நீயே பார். இத் திருநாளை நான் ஒரு தமிழ்த்திருநாளாகக் கொண்டாடுவதன் மூலம், கம்பன் புகழும் காகுத்தன் காசில்கொற்றமும், தமிழனின் தெய்வ பக்தியும், நம்பிக்கையும், தமிழர் உள்ளங்களிலே வளருமென்பது என் முழு நம்பிக்கை" என முழங்கி ஓய்ந்தார்.

என் உள்ளத்திலே வியப்பு ஒருபுறம். மகிழ்ச்சி ஒருபுறம். ஆனால், திரு.சா.கணேசனால் இது முடியுமா? என்ற ஐயம் எல்லாவற்றுக்கும் மேலாகத் தலைதூக்கி, "ஆனால்..." என்று கேட்க வைத்தது.

"என்ன ஆனால்? சொல்லேன். ஏன் தயங்குகிறாய்?" என்று சா.க.வின் ஆர்வம் மிகுந்த குரல் உறுமிற்று.

"நாம் ஊக்கத்துடன் கம்பன் கவிதையையும் அவன் புகழையும் பரப்புவதில், முனைந்து செயல்பட்டோ



மானால், தன்னடைவே தமிழன் உள்ளம் சிந்திக்கும் - இத்தகைய, கவிஞனையும், அவன் கவிதையையுமா எரிக்க முற்பட்டோம்?- என்று தன் செயலுக்குத் தானே வருந்திக் கழிவிரக்கம் கொண்டு திருந்தி, உண்மைத் தமிழ் மகனாவான். இதில் எனக்குச் சந்தேகமில்லை" என்று கூறினார்" (கம்பராமாயணக் காலவர் சா.கணேசன், நெல்லை மாவட்டக் கம்பன் கழகம்,ப.28-30) என்கிறார்.

இந்த வாக்கு அப்படியே மெய்ப்பட்டுப்போனது வரலாறு.

கம்பனே பரம்பொருள்

பின்னொரு முறை, "மர்ரே. கொணர்ந்த யுத்தக் காண்டத்தின் புத்தகவெளியீட்டுவிழாவில் இடைச் செருக்ல்கள் பற்றிப் பேசச் சொன்னார். விழா முடிந்த பின், கணேசன் என்னிடம், "பக்ஷி, முன்னொரு நாள் உன்னிடம் வெறிகொண்டு பேசியதை நீ மறந்திருக்க மாட்டாய். என் சபதத்தை நிறைவேற்றும் வகையில், என் தமிழ்த்தாய் ஒரு வள்ளலைத் தந்தாள். கம்பன் கவிதை இப்போது பல்லாயிரம் தமிழர்கள் கைகளிலே தவழ்கிறது. அங்கங்கே, கம்பராமாயணச் சொற்பொழிவுகள் பரவலாக நிகழ்கின்றன. என் திட்டத்தின் வெற்றிப்பாதையில் இது இரண்டாவது படி. என் பரம்பொருளான இராமன் என் சபதத்தை நிறைவேற்றி வைப்பான் என்பதில் எனக்கு ஐயமில்லை" என்றார். நான் மெல்லக் கேட்டேன். "உன் பரம்பொருள் இராமனா?" என்று. கணேசன் கூறினார்: "ஆமாம்!" (மேலது)

விரிக்கப் பொருள் தரும் சுருக்கச் சூத்திரம் இது. எனினும், இந்த இடத்தில், கம்பன் அடிப்பொடியின் காலச்சூழலை மனக்கொள்வது இன்றியமையாதது. அவருக்குக் கம்பனிடம்

இத்தகைய ஈடுபாடு உண்டாகக் காரணமானவர். பி.ஸ்ரீ எனும் பேரறிஞர். காரைக்குடியில் இருந்து வெளிவந்துகொண்டிருந்த 'குமரன்' இதழின் ஆசிரியப் பணிபுரிந்த அவருடன் ஏற்பட்ட தொடர்புதான் இவரைக் கம்ப ராமாயணத்துள் மூழ்கச் செய்தது. பி.ஸ்ரீ. இராமாயணம் குறித்த கட்டுரையைச் சொல்லச் சொல்ல எழுதிய சா.க. அதன்வாயிலாக நிகழ்ந்த உரையாடல்கள் விளக்கங்கள் மூலம் பெற்ற அனுப வங்கள் பல. அவர் சொல்வதாகப் பக்ஷிராஜன் எழுதுகிறார்:

> "அந்நாட்களில், அவரிடமிருந்து, கம்பனை அணுகும் முறையையும், கம்பராமாயணத்தைப் பதமாகப் படித்துச் சிந்திக்கவும் அதன்பலனாகக் கம்பன் கண்ட பரம்பொருள் இராமன் எனவும், கம்பன் அருள்பெற்ற ஒரு தெய்வரிஷி எனவும், என் உள்ளத்தே உணர்ந்துகொண்டேன். இந்த எண்ணத்தை மேலும் அரண் செய்தவர், நம் பாரதநாடு செய்த புண்ணியமே உருவெடுத்ததுபோல், அவதரித்த மகாபுருடர் (கண்களை மூடி, உள்ளே தேம்பித் துண்டை எடுத்து கண்களை ஒற்றிக் கொண்டார்.) மகாத்மா காந்தியே" என்று,அப்பெயரைக் கைகூப்பிக் கொண்டே கூறினார்" (மேலது, ப.32)



என்று சொல்லும் இடத்தில் இராம அவதாரமும், காந்தியப் பிறப்பும் நேர்கோட்டில் நிற்கத் தாங்கி நிற்கும் தளமாகக் கம்பன் திகழக் காணலாம். இதற்கு இன்னும் வலுச்சேர்க்கும் செய்திகளும் பின்வருமாறு:

"நாட்டில் பிறந்து படாதன பட்டு" - என்று நம்மாழ்வார் கூறியவாறு, இராமபிரானைப்போல் பல இன்னல்களையும் தாங்கிச் சத்திய வழியில் நடந்தவன் என்று நான் கருதும் என் கம்பனும், நம் கண்முன்னாலேயே அவ்வாறு வாழ்ந்து காட்டிய காந்திமகானும் கண்ட பரம்பொருளே, எனக்கும் பரம்பொருள். அவன்தான் கம்பன் காட்டிய இராமபிரான். பக்ஷி, கம்பன் பாடல்களில் என் ஆன்ம தாரகமாக நான் கொண்ட பாடல்கள் மூன்று. என் பரம்பொருள்.

"மூலமும் நடுவும் ஈறும் இல்லதோர் முதன்மைத் தாய
காலமும் கணக்கும் நீத்த காரணன் கையில் ஏந்திச்
சூலமும் திகிரி சங்கும் கரகமும் துறந்து தொன்மை
ஆலமும் மல்கும் வெள்ளிப் பொருப்பும்விட் டயோத்தி வந்தான்"

வந்த காரணம்?

"அறந்தலை நிறுத்தி வேதம் அருள்சுரந் தமைந்த நீதித்
திறந்தெரிந் துலகம் பூணச் செந்நெறி செலுத்தித் தீயோர்
இறந்துக நூறித் தக்கோர் இடர்துடைத்தேக ஈண்டும்
பிறந்தனன் தன்பொற் பாதம் ஏத்துவார் பிறப்ப றுப்பான்"

எனவே, சிற்றறிவினராய நாம் அவனை நோக்கி,

"உன்னை உள்ள படியறியோம். உலகை உள்ளத் திறனுள்ளோம்
பின்னை அறியோம், முன்னறியோம், நடுவும் அறியோம் பிறழாமல்,
நின்னை வணங்கி, நீ வகுத்த நெறியில் நிற்கும் அதுஅல்லால்
என்னை அறிவோம் செயற்பால? இன்ப துன்பம் இல்லானே"

என்று கம்பன் கூறியபடி வாழ, முயல்வதுதானே, நாம் செய்ய வேண்டியது. பிறர், பரம்பொருளை எப்பெயரிட்டு வணங்கினாலும், என் பரம்பொருள் கம்பன் காட்டிய பரம்பொருள்தான்" (மேலது, பக்.32-33)

என்று தெளிவுடன் உரைக்கக் காரணம் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து பெற்ற உணர்வு. வள்ளுவநெறியில்,

மானுடமாண்பு மங்காமல் வாழும் மார்க்கத்தைக் காந்தியடிகளிடம் கற்ற கணேசன், கம்பன் காட்டிய பரம்பொருள் என, இராமனைத் தேர்ந்துகொண்டது, உருவவழிபாட்டு நிலையில் அன்று. உள்ளப் பயிற்சிக்கான வழிபாட்டுமரபில். மூன்று பாடல்களும் முன் வைக்கும் செய்திகளை நிரல்படுத்திப் பார்த்தால் இந்த உண்மை புலனாகும்.



கம்பன் கொடுத்த பிச்சை

காலமும் கணக்கும் நீத்த காரணன் மானுடனாக அயோத்தி வந்தான். காரணம், அறந்தலை நிறுத்த. அவனைப் பணிந்தால் பிறப்பறுப்பான். அவனை எங்ஙனம் அறிதல் இயலும்? அவனை வணங்கி அவன் வகுத்த நெறியில் நிற்றல். அதுதான் வழிபாடு. அங்கே வில்லேந்திய இராமன் இல்லை. கம்பனின் சொல்லேந்திய மானுடம் நிற்கிறது. காந்திய உருவில் புறத்தேயும், கம்பனின் பாவிக மரபில் அகத்தேயும் கண்ட இலட்சியத்தலைவன் அவன். அதனால்தான், சா.க., இராமனை வழிபடவில்லை. கம்பனை

வழிபட்டார். இராமனுக்குக் கோயில் அமைக்க முனையவில்லை. கம்பனுக்குச் சிலையமைத்துக் காட்டினார். திருவையாற்றில், தியாகப்பெருமான் சமாதியில் பஞ்சரத்னகீர்த்தனை பாடுவது போல, அதே ராகபாவத்தில், நாட்டரசன்கோட்டையில், 'கம்பனின் அருட்கவி ஐந்து' இசைக்கச்செய்து மலர்வழிபாடு செய்து மகிழ்ந்தார்.

இந்த நேரத்தில், மூன்றாம்இயலில், வை. கணபதி ஸ்தபதி கூறிய தொடரின் மீதியை, இங்கே நினைவுபடுத்திக்கொண்டால் இது இன்னும் புரிபடும்.

> "... தந்தை சா.கணேசன் அவர்களிடம் கண்ட கலை உள்ளத்தின் பரப்பையும், ஆழத்தையும் வேறு யாரிடத்திலும் நான் காணமுடியவில்லை. .... எங்கெங்கு மற்றவர்கள் தயங்குகிறார்களோ, பிறர் கருத்தை எதிர்பார்க்கிறார்களோ, அங்கெல்லாம் நயத்தோடு எடுத்துரைக்கும் ஆற்றல் நிரம்ப, அவர்களிடம் இருக்கின்றது. தந்தை சா.கணேசன் அவர்களுடன் எத்தனையோ கோவில்களுக்கும் கலைக்கூடங்களுக்கும் சென்று வரும் பேறு பெற்றிருக்கிறேன். ஆங்காங்கே உள்ள சிற்பங்களைப் பார்த்து அவர்கள் பேசுவதை அவர்கள் தரும் புதுவிளக்கங்களை - சுட்டிக்காட்டும் நயங்களைக் காதாரக் கேட்டு, உள்ளம் மகிழ்ந்து வியந்தும் இருக்கிறேன். இவர்களுக்கு மட்டும் இத்துணை ரசிகத் தன்மை எங்ஙனம் தோன்றியது என்று நான் துணிந்து இதுவரை அவர்களைக் கேட்க முடியவில்லை. அவர்களே ஒருமுறை பிறரிடம் இதுபற்றிச் சொல்லிக்கொண்டிருந்த உண்மை என் மனதை நெகிழச் செய்துவிட்டது. அவர்கள் சொன்னதெல்லாம் இதுதான்: "கம்பன் ஒரு சகலகலாவல்லவன். அவனைப் புரிந்துகொள்ள நான் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பலமுனைப்பட்டவை. இதனால் ஒன்றல்ல, பல துறைகளைப்பற்றி ஆழ்ந்து ஆராய வேண்டியதாயிற்று. இவையெல்லாம் கம்பன் கொடுத்த பிச்சை" (கம்பன் அடிப்பொடி கலைக்களஞ்சியம்,ப.34)



இந்தப்பாங்குதான் 'யாரொடும் பகைகொள்ளலன்' என்கிற பண்பைக் கம்பன்அடிப்பொடிக்குக் கற்றுத்தந்தது. அதையும் மீறித் தோழமை நெறிபூணச் செய்தது.

கம்பனைக் கொளுத்தச் சொன்னவர் களோடு கரங்கோத்துக் கொண்டு, கன்னித்தமிழ் புகழ் பரவக் களம் இறங் கினார். கலைக் காட்சி நடத்தினார். 'தீ பரவட்டும்' என்று முழங்கிய அறிஞர் அண்ணாவுடன் கரங்கோத்துத் தமிழ்த் திருப்பணிகள் பல செய்தார்.

அந்த அழுத்தமிகு உறவுதான், அறிஞர் அண்ணாவின் மறைவு, அக் கம்பநேயரைக் கண் கலங்க வைத்தது; கையறு நிலைக் கவிபாட வைத்தது.

அண்ணாவின் மறைவுக்கு அடிப்பொடியார் அஞ்சலி



"அண்ணிமுதல் தம்பிமார்கள்
அரியபல நண்பர்,அன்பர்
எண்ணற்ற நாட்டு மக்கள்
இலட்சோப லட்சம் ஆனோர்
கண்ணற்ற துயரின் மூழ்கிக்
கதிகலங்கிக் கதறி ஏங்க,
அண்ணாநீ எங்குச் சென்றாய்?
அண்ணா நீ எங்குச் சென்றாய்?

"அண்ணா அண்ணா என்றுஇங்கே
அன்பினால் எல்லாம் நின்றன்
மண்ணவர் எல்லாம் நின்றன்
மாண்பினால் ஈர்க்கப் பட்டுக்
கண்ணினீர் வெள்ளம் சிந்திக்
கதறியே பதறி நிற்க
நண்ணலார் போல நீயும்
நாடிறந் தெங்குச் சென்றாய்?
பொல்லானாம் கால னுக்கும்
பொன்னுயிரை ஈந்துவிட்டாய்?

உலகினை நீத்தா யேனும்
உளங்களில் நிலைத்துவிட்டாய்!
புலனெலாம் ஓய்ந்தா யேனும்
புலவனாய் ஓங்கிவிட்டாய்!
தலைமையை நீத்தா யேனும்,
தலைவரில் உயர்ந்து விட்டாய்!
அலைகடல் அருகில் பள்ளி
அமர்ந்தருள் அண்ணா நீயே!

பல்துறை அறிவு மிக்க
பண்பினால் அறிஞர் அண்ணா
கல்வியில் பெரியன் ஆன
கம்பன்தன் சிலையின் பாங்கர்
சில்லெனும் காற்று வீசச்
சிறந்தினி திருந்து சென்னைப்

பல்கலைக் கழகம் போற்றப்
பார்மிசை என்றும் வாழ்க!

"எந்தஒரு மொழிக்கும் இல்லா
எழுத்தெண்ணி லக்கம் மூன்றும்
முந்தைமொழிக் கெல்லாம் மூத்த
முதுமொழியாய் என்றும் உள்ள
செந்தமிழ்க்கே!" என்றும் உண்மைச்
சிறப்பதனைக் கேட்ட போது
அந்தமிலா மகிழ்ச்சி கொண்ட
அண்ணாநீ நிலைத்து வாழ்க!

கல்லெழுத்தைக் கண்டும், தொன்மைக்
கலைப்பொருளை நோக்கி நின்றும்
தொல்லியாழ் கண்டு நோக்கித்
துருவிநலம் ஆய்ந்து பார்த்தும்
பல்சுவைதேர் நெஞ்சம் ஆரப்
பாராட்டி ஊக்கம் தந்த
நல்லறிஞன் அண்ணா நாமம்
நானிலத்தில் செழித்து வாழ்க!

இந்தியர்தம் நெஞ்சில் வாழும்
எழிற்காந்தி அடிகள்போலச்
செந்தமிழர் சிந்தை எல்லாம்
சேர்ந்துகுடி புகுந்து நின்று
சந்ததமும் வாழு மாற்றால்
தமிழகத்துக் காந்தி என்னும்
அந்தமிலாக் கீர்த்தி பெற்ற
அண்ணாநீ வாழ்க, வாழ்க!"

(என அமையும் இப்பாடல் கம்பன்அடிசூடி பழ.பழனியப்பன் கண்டுதர அவர்களுக்கு நன்றி சொல்லி, இப்போதுதான் முதன்முதலில் இந்த நூலின் வாயிலாக அச்சுவாகனம் ஏறுகிறது.)

இதில் மகாத்மாகாந்தியைத் தலைவனாக ஏற்ற சா.க. 'தென்னாட்டுக்காந்தி' என்று அண்ணாவை அழைப்பதும், 'அண்ணிமுதல் தம்பிமார்கள்' என்று உரிமை சொல்லித் தொடங்குவதும், தனக்கும் அவருக்கும் உள்ள தமிழுறவை

நினைவுகூர்ந்து கவிச்சொற்களைக் கண்ணீராய்ச் சிந்தி, கவிதாஞ்சலி செய்து நிறைவில், 'அந்தமிலாக் கீர்த்தி பெற்ற அண்ணா நீ வாழ்க' என்று முடிப்பதும் அண்ணாவின் மெய்க்கீர்த்தி என்றாகி அமைகிறது, இல்லையா?

கோட்டையூரில் பாவேந்தரோடு சா.க

இதுபோல், பாவேந்தர் பாரதிதாசன்மீது இவர் கொண்டிருந்த மதிப்பும் அதிகம். கோட்டையூரின் பாரதி வாசகசாலையில் மூன்றாம் ஆண்டுவிழாவில் பாவேந்தர் பாரதிதாசனின் தலைமையில் உரையாற்றியிருக்கிறார் சா.க. அந்நிகழ்வு பற்றி, (குமரன், வைகாசிமீ 31 உ ப.11) இதழ் பின்வருமாறு பதிவு செய்கிறது.

கோட்டையூரில் ஆண்டுவிழா- ஸ்ரீபாரதிதாசன் தலைமை (ஒரு நிருபர்)

> "கோட்டையூர் பாரதி வாசகசாலையின் மூன்றாவது ஆண்டுவிழாவும், 'கம்பன் நூல்நிலைய' ஆரம்பவிழாவும் சென்ற ஞாயிற்றுக்கிழமை (16.6.40) பிற்பகல் 4 1/2 மணிக்கு மெ.கி. காம்பவுண்டில் அமைக்கப்பட்ட கொட்டகையில் நடந்தன. புதுவை புலவர் திலகம் ஸ்ரீபாரதிதாசன் தலைமை வகித்தார். தலைவருக்கு உபசாரப்பத்திரம் படித்தளிக்கப்பட்டது. அறிக்கை படிக்கப்பட்டது. தலைவர் முன்னுரைக்குப் பின்னர் காரைக்குடி ஸ்ரீ சா.கணேசன் தமிழும் - தமிழனும் என்பது பற்றி பேசினார். அவர் முற்காலத் தமிழ்- தமிழன், தற்காலத் தமிழ்- தமிழன் இவற்றைப் பற்றி விரிவாகப் பேசினார். மேலும், பாஷை கடவுளால் உண்டாக்கப்பட்டதென்று சொல்வதெல்லாம் உபசாரமொழியென்றும் ஆரம்பத்தில் தமிழ் சாதாரணமாக இருந்தே பிறகு உயர்ந்த தென்றும், ஆங்கிலேயர் பலர் உலகிலேயே உயர்ந்த பாஷை என்று கருதப்பட்ட கிரீக்கைவிட தமிழ் உயர்ந்ததென எழுதியிருக்கின்றனரென்றும், மோட்டார் போன்ற ஆங்கிலப்பதங்களைத் தமிழாகவே கருதி உபயோகப் படுத்த வேண்டுமென்றும், அதற்குத் தனித்தமிழில் பதம் கண்டுபிடித்து உபயோகிக்கவேண்டியதில்லை யென்றும்

குறிப்பிட்டு உலகிலேயே உயர்ந்த நீதிநூல் திருக்குறள் என்பதற்குச் சான்று கூறி விளக்கினார்."

பின்னர், 'தமிழும் கவிஞரும்' என்பது பற்றி ஸ்ரீதயாநந்த பாரதியும், தலைமையுரையாகப் பாரதிதாசனும் பேசியிருக்கின்றனர். அதற்கடுத்து,

"அமராவதி புதூர் மகளிர் இல்லத்து மாணவிகள் கம்பன், பாரதி, தேசிகவிநாயகம்பிள்ளை ஆகியோரின் பாடல்களிலிருந்து சிலவற்றைப் பாடி கும்மி கோலாட்டமடித்தனர். காரைக்குடியில் நடந்த கம்பர் விழாவுக்கு வராத அன்பர்கள் பலர், கம்பராமாயணப் பாடல்களைப் பாடி கும்மி கோலாட்டமடித்தது கண்டு வியந்து பாராட்டினர். கம்பர்விழாவில் பாடிய பாட்டுக்களுடன் இப்பொழுது புதிய பாட்டுகள் சிலவற்றையும் சேர்த்துப் பாடினது குறிப்பிடத்தக்கது"

என்பது முக்கியமான குறிப்பு,

கோட்டையூரிலும் கம்பர் கொண்டாட்டம்

காரைக்குடி எல்லைக்கும் அப்பால் கம்பனை எடுத்துச் செல்லும் முதற்பணியாக இது இருந்திருக்கலாம். பின்னர் ஊர்கள் தோறும் இவ்விழாக்கள், அமைப்புகள் தோன்றியிருக்க இதுவும் ஒரு நல்ல தொடக்கமாகக் கருத இடமிருக்கிறது.

கருத்தும், கொள்கையும் வேறுவேறு ஆனாலும், இவ்விருவரையும் இணைத்தது தமிழ்.

அதுகருதியே ஞானபீட விருதுக்கு உரியவராக, பாரதி தாசனைப் பரிந்துரைத்தார் சா.க.

இதுதொடர்பான இன்னொரு மேற்கோளையும் இங்கே இணைத்துப் பார்ப்பது இன்றியமையாதது.

பரிசுக்குரியவர் பாவேந்தரே!

"பாரதிய ஞானபீடம் 1964 ஆம் ஆண்டுக்குரிய ஓரிலக்க ரூவாய் இலக்கியப் பரிசை இவருக்கு வழங்குவதாக இருந்தது. அதற்குரிய பூர்வாங்க வேலைகளெல்லாம்கூட முற்றுப் பெற்றுவிட்டன. இப்பரிசு வாழும் கவிஞர்களுக்கு வழங்கும்



பரிசு. 1964 ஆண்டு ஏப்ரல் திங்களில் இவர் இறந்ததும், இவருக்குக் கிடைக்க விருந்த இப்பரிசு மலையாளக் கவிஞரான சங்கர குருப்பிற்குக் கொடுக்கப் பட்டு விட்டது. இது பாவேந்தருக்கு மட்டுமன்று. தமிழ்க் கவிதைத்துறைக்கும் தமிழ்நாட்டுக்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும்.

பாவேந்தருக்கும் தமிழ்க் கவிதைக்கும் கிடைக்கவிருந்த பெருஞ்சிறப்புப் பறிபோனது பற்றி நான் மிகவும் வருந்தினேன். இப்பரிசுக்குழுவில் ஓர் உறுப் பினராக இருந்த திருவாளர் காரைக்குடி சா.கணேசன் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதி இதுபற்றி விசாரித்தேன். அவர் அன்புகூர்ந்து இதுபற்றிய விளக்கத்தை எனக்குக் கடிதம் மூலம் தெரியப்படுத்தினார்கள். அவர் கடிதத்தைக் கீழே கொடுத்திருக்கிறேன்.

கம்பன்அடிப்பொடி ஓம்

Phone: 600&396
Kamban Manimandapam
Karaikkudi - 623002

20.5.76

அன்புள்ள முருகுசுந்தரம் அவர்கட்கு, வணக்கம். உங்கள் 17.05.76 கடிதம். நன்றி.

பாவேந்தர் வரலாற்றைத் தொகுத்தெழுதும் உங்கள் முயற்சியை வரவேற்கிறேன். முழுவெற்றி பெற வாழ்த்துகிறேன்.

பாரதீய ஞானபீடம் எவ்விதவேறுபாடுமின்றி இந்திய இலக்கியப் படைப்பிற்கு ஆண்டுதோறும் ஓரிலக்க ரூபாய் பரிசு வழங்குவது நாமெல்லாம் அறிந்ததே.

1964ல் பன்மொழிப்புலவர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், திரு.பெரியசாமித்தூரன் இவர்களுடன் யானும் சேர மூவர் குழு பரிந்துரை செய்ய நியமிக்கப் பெற்றது.

தெ.பொ.மீ. அக்குழுத்தலைவர்.

எங்களுள் மாறுபாடின்றி மூவரும் பாவேந்தர்தாம் பரிசுக்குரியவர் என்ற ஒரே முடிவுக்கு வந்தோம். அங்ஙனமே எங்கள் பரிந்துரையை முறைப்படி ஞான பீடத்திற்கு அனுப்பி வைத்தோம். இத்தகவலை பாவேந்தர் மகனிடம் யானே நேரில் கூறினேன்.

இதில் ராஜாஜி எந்தவிதத்திலும் தலையிடவில்லை. தலையிடவும் மாட்டார்கள். ஆனால் எங்கள் பரிந்துரை பற்றி அவர்களிடம் கூறினேன். அவர்கள் எங்கள் முடிவு சரியானதே என்றும் கொள்கைக் கோலை வைத்துக் கவிதையை அளக்காத எங்கள் முறையே நன்றென்றும் கூறிப்பாராட்டினார்.

பாரதிதாசன் கவிதை நலத்தையும் மனிதப் பண்பாட்டையும் மதிப்பதற்கு கொள்கை அல்லது கட்சிச் சார்பு என்றுமே தடையாக அமையக்கூடாது என்பதே அக்குழுவிலிருந்த மூவருடைய ஒருமித்த கருத்து.

உங்கள் பணி செம்மையாகவும் திறமையாகவும் நிறைவேறும் என்பதற்கு உங்கள் ஆர்வமும் அணுகு முறையுமே சான்றாக உள்ளன. வாழ்க.

அன்பன்

கம்பன் அடிப்பொடி

(கவிஞர் முருகுசுந்தரம், பாவேந்தர் ஒரு பல்கலைக்கழகம், பக்.95-96)

பாரதிதாசன் இருந்திருந்தால் முதல் ஞானபீட விருது அவருக்குக் கிட்டியிருக்கும். தமிழன்னைக்குத் தக்கதொரு பெருமையைத் தேடித்தந்த மகிழ்வில் மக்களைக் கூட்டிப் பாராட்டுவிழாவும் சா.க. பண்ணி யிருப்பார். காலத்தின் வேகத்தில் ஒரு சாட்சியமாவதைத் தவிர வேறு என்ன சாதித்து விட முடியும் என்று கேலிக்குள்ளாக்குகிறது வரலாறு.

அதற்காக விட்டுவிடமுடியுமா, என்ன? மளமளவென்று பணிகள் பலப்பல செய்த அவரின் மகத்தான கம்பன் பணிகளில் மணிமண்டபம் ஒன்று. அவர்தம் மணிவிழா நினைவாக மலர்ந்த மண்டபம்.

> “மொழி சமயத்திற்கு அப்பாற்பட்டது. இந்துக்கள், பௌத்தர்கள், சமணர்கள், கிறித்தவர்கள், முஸ்லீம்கள் ஆகிய பல மதத்தினரும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டதன் காரணமாகவே, தமிழில், பெரும் அறிஞர்களாகவும், கவிஞர்களாகவும், இலக்கியக்கர்த்தாக் களாகவும் இருந்திருக்கிறார்கள். இன்றும் இருக்கிறார்கள். இவர்கள் அனைவருக்கும், சமய பேதமின்றித் தமிழ், பொது மொழியாவதோடு, தமிழ் இலக்கியங்கள் பொதுச்சொத்தும் ஆகும். இந்தக் கோணத்தில் பார்க்கும்போது, கம்பனின் காப்பியத்தில்,எல்லாமதத்தினரும் ஈடுபட்டவர்களாகவே இருந்தார்கள். என்ற போதிலும், இராம காதை, இந்துக்களின் கடவுளரின் ஒருவருடைய அவதாரத்தைப் பற்றியது ஆகையால், அது ஒரு இந்து சமயக் காவியம். அதுவும் ஒரு வைணவ காவியம் என்ற எண்ணமும் இடம் பெறாமல் இல்லை. இந்த எண்ணமே தனித்து நிலைபடு மானால், இந்துக்களைத் தவிர, அதுவும் வைணவர்களைத் தவிர, - வேறு யாருக்கும் கம்பனுடைய இராமாயணத்தில் அக்கறையோ, ஈடுபாடோ கொள்வதற்கு இடமோ, வாய்ப்போ, இல்லாமல் போய் விடும். இந்தக்குறுகியநிலை கம்பனுக்கு ஏற்படக்கூடாது என்பதற்காக, கம்பன் விழாவில் கம்பனுடைய படைப்பு ஒரு சமயக் காப்பியமாக அணுகப்படாமல், ஒர் இலக்கியமாகவே அணுகப்பெற்றது. இதன் காரணமாகக் கம்பன் விழாவில் எல்லாச் சமயத்தினரும் தாராளமாக முழுமனதுடன் பங்குபெற ஒரு

வாய்ப்பு உண்டாயிற்று. இதன்பலன் என்னவென்றால், கம்பனுடைய காப்பியத்தை மதபேதமின்றித் தமிழறிந்த அனைவரும் நுகரமுடிந்தது. அதன் அழகையும், அருமையையும் அனுபவிக்க முடிந்தது". இத்தகைய ஒரு பேரரங்கத்தைக் கம்பனுக்கு நிர்மாணித்துக் கொடுத்தவர் அமரர் சா.க. என்று சொல்வது முற்றிலும் உண்மை." (மு.மு.இஸ்மாயீல், கம்பனடிப்பொடி கலைக்களஞ்சியம், பக்.77-78)

அத்தோடு அவர் தம் பணிகளை நிறுத்திக் கொள்ளவில்லை. கம்பன் கழகத்தின் சார்பில் அப்படிக் கட்டப்பட்ட மணி மண்டபத்தில் கம்பன் பெயரில் கல்லூரி தொடங்கக் கனவு கண்டார். அதில் மறைந்துவருகின்ற கலாச்சாரங்களையும், பண்பாட்டுச் சிறப்புக்களையும் உலகிற்கு எடுத்துரைக்கக் கம்பன் கழகத்தை முன்னெடுத்துச் சென்றார். அது ஒரு பல்கலைக் கழகம் ஒத்த பரிமாணங்களை உடையது என்பதற்குப் பின்வருகின்ற அவர்தம் வாக்குமூலமே சான்றாக விளங்கக் காணலாம்:


"உலகின் தலைசிறந்த தத்துவங்கள் எனப் போற்றப் படுவன கீழை நாட்டுத்தத்துவங்கள், கீழைநாட்டுத்



தத்துவங்களை ஆராய்ந்த பிரெஞ்சுப்பேராசிரியர் ஒருவர் அந்தத் தத்துவங்களின் மூலம் அனைத்தும் இந்தியாவைச் சார்ந்தது என்று குறிப்பிட்டு எழுதினார். அதை 'இந்தியத்துவம்' (Indology) என அழைத்தார். பிரெஞ்சுப் பேராசிரியர் குறிப்பிட்டுள்ள 'இந்தியத்துவத்தை' ஆராய்ந்து பார்த்ததில் நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காடு தமிழ்த் தத்துவங்களாக இருக்கின்றன. தமிழ்த் தத்துவங்களை வெளிநாட்டினர் உணரத்தவறி, அதை, 'இந்தியத்துவம்' என்றழைக்கின்றனர். ஆகவே, கம்பன் கழகம் தொடங்க இருக்கும் 'கம்பன் கல்லூரி'யில் 'தமிழ்த் தத்துவங்கள்' (Tamillology) என்ற பிரிவு தொடங்கப்பட இருக்கிறது. அக்கல்லூரியில் தமிழ், சமஸ்கிருதமும், ஆங்கிலமும் ஆகிய மொழி இலக்கியங்களும், இந்தியக் கலையும் கட்டடக்கலையும் இந்தியத் தத்துவ முறைகள், புதைபொருளாராய்ச்சி, கல்வெட்டாராய்ச்சி, நாணயங் களைப் பற்றிய ஆராய்ச்சி, சிற்பக்கலை, விக்கிரகங்களைப் பற்றிய அடிப்படையை விவரிக்கும் கலை, பழங்காலச் சின்னங்களைப் பாதுகாக்கும் முறை, பழங்காலக் கணிதமுறை, கோள்நிலைகளை ஆராய்ந்து கையாளும் முறை, சமூக நாகரிக வரலாறு, இசை, நடனம், வண்ணக்கலை, மொழிகளின் வரலாறு, மதங்கள், நிர்வாக முறைகள் ஆகியவைகளும் பாடப் பிரிவுகளாக அமைய இருக்கின்றன" (தீபம், தொ-*1*, ப.*434*, நவம்பர் *1971*)

என்று தீபம் இதழின் நேர்காணலில், கவிஞர் சேவற் கொடியோனிடம் தன் கனவை விரிக்கிறார்.

இதற்குப் பிறகு, உட்புறத்தே தாங்கும் தூண்கள் ஏதுமின்றித் தனிப்பெரும் கலையம்சத்துடன் ஆன, கம்பன் மணிமண்டபம் நிர்மாணித்தும் தமிழன்னை ஆலயம் அமைத்தும் தாம் பிறந்த ஊருக்கும், மொழிக்கும், நாட்டுக்கும், உலகுக்கும் தம் காலத்தின் சாட்சியத்தை நல்கிய கம்பன் அடிப்பொடியைக் காலம் வென்றுவிட்டது. ஆனால், அவர்தம் அரிய பணிகளால் அவர் காலத்தை வென்றுவிட்டார்.



ஆம்! நெல்லை மாவட்டக் கம்பன் கழக வெளியீட்டுமலரில், ச.திரவியம் என்பார் தரும் குறிப்பே இதற்குத் தக்க சாட்சியம்.

"*1982.* காரைக்குடியில் கம்பன் விழா. மருத்துவ மனையில் இருக்க வேண்டிய கம்பனடிப்பொடி, விழா மேடையில் வீற்றிருக்கின்றார். "விழாவின் இடையில் நான் இறக்க நேரிட்டால், என் பிணத்தை ஓர் அறையில் போட்டுப் பூட்டிவைத்துவிட்டு, விழா முடிந்தபின் ஆவன செய்யுங்கள்" என்றாராம் நண்பர்களிடம்! கம்பனடிப் பொடி இறக்கவில்லை. அவர் இன்றும் நம்மோடுதான் இருக்கிறார்; வழிநடத்துகிறார்." (ப.82)

மெய்தானே!

□



காலத்தின் சாட்சியம்:

கம்பன்அடிப்பொடி

“மூலமின்றி, நடுவின்றி, முடிவும் இன்றி,
முற்றறிந்தோர் அளவைவழி முயன்றுகாணும்
காலமொடு கணக்கெல்லாம் கடந்துநிற்கும்
கருதரிய முழுமுதல்போல் கடந்துநிற்கும்
ஞாலமுடன் பிறந்தவளை, நலிவே இன்றி
நாள்நாளும் செழிப்பவளை, நங்கட்கெல்லாம்
சீலமருள் தமிழ்த்தாயை, தெய்வம்என்று
தினந்தினமும் தொழுதேத்தச் செழிப்போம் யாமே”

என்று உலகத்தமிழ்த்தாயை,பிரபஞ்சப் பெருந்தாயாய்க் கருதித் துதிக்கிற கம்பன்அடிப்பொடி தமிழை ஒரு மொழியாக மட்டும் கருதவில்லை. அது கடந்த பரம்பொருளாகவே காணுகிறார். இங்கே இவரின் தத்துவப்பார்வை, கலைப் பார்வை, இலக்கியப் பார்வை, நுட்பமாய் விரிகிறது.

தெய்வபக்தி, தேசபக்தியாகி, திருமால் மீது ஆண்டாள் பூண்ட காதல்போல், கம்பன் மேல் தீராக்காதலன் ஆன சா.க., தமிழைத்தெய்வமாகவே கருதிக் காண்கிறார். இந்த இடம் மிகவும் நுட்பமானது. வறட்டுச் சடங்கு சம்பிரதாயங்களை உள்ளடக்கியதாக, அவர்தம் தமிழ்ப்பக்தியை மதிப்பிட்டுவிடுதல் தகாது.

கலை, இலக்கியம், வரலாறு முதலான கனபரிமாணங் களையும் கடந்து தமிழை அதன் தெய்வாம்சத்தோடு உள்வாங்கிக் கொண்ட சா.க.வின் பன்முகப்படைப்பாற்றலின் மொத்த வெளிப்பாடு, தமிழ்த்தாய்த்திருக்கோயில் எனலாம். ஒருவகையில் கம்பனோடு போட்டியிட்டு, இக்கம்ப காதலர் எழுப்பிய கற்காவியம் தமிழ்த்தாய்த் திருக்கோயில் எனலாம்.

அகத்தியன் தொடங்கி, வள்ளுவன், இளங்கோ, கம்பன் ஆகிய இவர்களை மீறித் தமிழன்னைக்குச் சொற்கோயில் அமைக்க முடியாது என்பதை ஆழஉணர்ந்து கொண்ட அக்கலைச்சக்கரவர்த்தி, தொல்காப்பியரைக் கடந்து தமிழின் தனித்தன்மையைக் காக்கும் இலக்கணம் செய்யமுடியாது என்பதை உணர்ந்து தெளிந்த அந்த உண்மைத்தொண்டர், தானறிந்த துறைகளில், மிக உன்னதமான, தமக்கேயுரிய துல்லிய, தூய நல்லறிவின் வெளிப்பாடாக எழுப்பிய அற்புதக் கலைக் கோயில்தான் தமிழ்த்தாய்த் திருக்கோயில்.

முன்னவர்கள் யாவரும் தத்தமக்குரிய தனிப்பெருந் துறைகளில் தமிழன்னைக்குத் தனிப்பெரும் அடையாளத்தை ஏற்படுத்தியதுபோல, தன் காலத்தில் தன் அடையாளமாகத் தமிழன்னைக்கு எழுப்பிய கலைக்கோயில் வெறும் கற்கோயில் மட்டும் அன்று. கலையும், இலக்கியமும், அரசியலும், ஆன்மிகமும், கைகோத்து மேலெழுப்பிய திருக்கோயில்.



உண்மையில் பார்த்தால், கம்பன் அடிப்பொடி, தாம் தலைவன் எனத் தேர்ந்த கம்பனுக்கல்லவோ இக்கலைக்கோயிலைச் சமைத்திருக்கவேண்டும்? அதைவிடுத்து, தமிழன்னைக்குத் தனிக்கோயில் எழுப்பி, பரிவார தெய்வங்களாய், கம்பனை, வள்ளுவனை, இளங்கோவை, தொல்காப்பியனை, அகத்தியனை அமைத்திருக்கக் காரணம் என்ன?

இது விரிந்த ஆய்வுக்குரியது. ஆனால் ஒரு சில உண்மைகள் புரியவருகின்றன.

சா.க.வின் பாலபருவத்தில் தியாகி சுப்பிரமணிய சிவா, காரைக்குடியில் முகாமிட்டிருந்தார். 'பாரதாஸ்ரமம்' அமைத்து, தேசவிடுதலைத் திருக்கூட்டத்தை உருவாக்கும் பணியில் உழைத்துக்கொண்டிருந்தார்.

அதற்காகக் காரைக்குடி நகரின் தெருக்களில், 'தேசீய பஜனை' நடத்தினார். சிவா, பாடுவார். பின்தொடர்ந்து,

"ஸ்ரீநிவாசவரதன், தியாகராஜசிவம், கல்கி, டி.சதாசிவம், ஆகியோரும் நானும் மற்றவர்களும்

பாடுவோம். தேசீய கவி பாரதி அவர்களின் வந்தேமாதரம் என்போம்', 'செந்தமிழ் நாடெனும் போதினிலே' என்ற இருபாடல்களும் அப்போது எங்கள் பஜனைப் பாடல்களாக இருந்தன" (தீபம், தொ-2, ப.430)

என்று பின்னாளில், தீபம் இதழ் நேர்காணலில் குறிப்பிடுகிறார்.

சிவா, தமது பாரதமாதா திருக்கோயிலை முதலில் அமைக்கத் திட்டமிட்டிருந்த இடம் காரைக்குடிப்பகுதியில்தான். பின்னர் அது நிகழாது போயிற்று.

எப்படியோ, பாரதமாதாவும், பைந்தமிழ் அன்னையும், ஒருருவாக, ஒருணர்வாக, சிவாவின் வாயிலாக, பாரதி பாடல்களின்மூலம் சா.க.வின் பிஞ்சு நெஞ்சில் பதியம் ஆனார்கள். காலகாலமாய்ப் பெற்ற கலை, இலக்கிய, அரசியல், ஆன்மிக, கம்பத்தாக்கத்தில் அது எழுந்து வளர்ந்து பூத்துக் காய்த்துக் கனிந்து, பக்குவமாக வெளிப்பட்டபோது தமிழன்னை கோயில் கொண்டருளினாள்.

சா.க. காலத்தில் கனன்றெழுந்த தேசியமும், திராவிடமும் இணைந்து தமிழியமாய் எழுந்த கலைச்சாசனம் என்றும் இத் திருக்கோயிலைக் கருதலாம். இல்லையெனில்,

"தமிழ்த்தாயின் படிமத்தைக் கண்டு அறிஞர் அண்ணா அவர்கள் மனமுருகப் பாராட்டினார்கள். இதன் அச்சுப்படத்தைப் பெற்றுக்கொண்டபோது, அதைக் கண்களில் ஒற்றிக் கசிந்துள்ளம் நெகிழ்ந்தார்கள். தமிழ்த்தாயின் செப்புப்படிமத்தை வடித்து வெற்றி கண்ட அமரர் சிற்பகலா சாகரம் - திரு. ம.வைத்தியநாத ஸ்தபதியார் இதன் அருமையை, அமைதியை, வடிவினை, உள்ளுறை பொருள் எல்லாம் பலவாறு பாராட்டி மகிழ்ந்தார். அப்பொழுது அவர், "நடராஜமூர்த்திக்குப் பிறகு இம்மூர்த்தியே பல்லாற்றானும் கலை, தத்துவம், விஞ்ஞானம் ஆகிய மூன்றின் கருத்துச்செறிவுமுள்ளது. எங்களைப்போன்ற ஸ்தபதிகட்கு இந்த இரண்டு மூர்த்திகளுந்தான் அற்புதப் பொருளாக உள்ளன." என்று கூறியது என் செவிகளில் இன்னும் ஒலித்துக்



கொண்டிருக்கிறது" (கம்பன் அடிப்பொடி கலைக் களஞ்சியம்,ப.283)

என்று 19.03.1970 அன்று, அக்காலத்தைய கல்வியமைச்சர் நாவலர், நிதியமைச்சர் மதி ஆகியோர் பங்கேற்ற கம்பன் மணிமண்டபக் கால்கோள்விழா வரவேற்புரையில், சா.க. குறிப்பிடுவாரா?

எத்தகு பெருமிதத்திற்குரிய அரும்பணிகள் என்றாலும், அது குறித்துப் பணிவாக மௌனம் சாதிக்கும் சா.க. இப்படி ஒரு கருத்தைக் குறிப்பிட வேண்டிய அவசியம், அவருள் கனன்றெழுந்த தமிழின் பெருவெளிப்பாடு என்றே கொள்ள வேண்டியிருக்கிறது.

எத்தனையோ, கோயில்கள் எழுப்பியும், புனரமைத்தும், திருப்பணிகள் பலபுரிந்து, கும்பாபிஷேகங்கள் நடத்தியும் பெற்ற அனுபவத்தின், முதிர்ந்தஞானத்தின் வெளிப்பாடாக இத்திருக்கோயில் அமைந்தது. எனவே, இனி, ஆலய வழிபாடுகள் அர்த்தமற்ற சடங்குகளால் தமக்குரிய தன்மைகளை நழுவவிடும் காலத்தில் கலை, இலக்கிய, எழுச்சிகளின்மூலம் தமிழகத்தைக் காக்கத் திருவுளம் கொண்டு மீண்டும் தமிழன்னை செங்கோல் ஏந்தி உலா வருவாள் என்ற தொலைநோக்கு உணர்வும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

எளிவந்த தன்மையால், நம்மோடு இருந்தவர் என்பதால் அவர்தம் அளப்பரிய தமிழுணர்வை மொழி எல்லையுள் முடக்கி



விட முடியாது என்பதன் பேருருவாகவே இத்திருக்கோயில் அமைவதாகக் கருத வேண்டியிருக்கிறது.

ஒருவகையில், கம்பன் அடிப்பொடியின் கலையான்மா நிரந்தரமாய்த் தங்கித் தவம் செய்யும் புண்ணியத் திருத் தலமாகக் காரைக்குடியும், புண்ணியத் திருக்கோயிலாகத் தமிழன்னை திருக்கோயிலும் இருக்கும் என்பது நம்பிக்கை.

நம்பிக்கை, அறிவியல், ஆய்வு என்கிற தன்மைகளுக்கு அப்பாற் பட்டது என்றாலும் அதில் உண்மையும் இருக்கும் என்பதை உணர்வோர் உணர்வர். அத்தகு உணர்வின் வேகத்தில்தான்,

"அகரமுதல் னெளகாரம் அந்தமாக
ஆம்எழுத்து இருநூற்று நாற்பத் தேழாம்;
பகருமெண்கள் உருவது பன்னிரண்டாம்;
பகும்இலக்க வடிவங்கள் பத்தோடெட்டாம்;
தொகுகுறுக்கம் பற்பலவாம்; சொல்லை விட்டுத்
துன்னுபொருள் உணர்த்துவது குறியீடாகும்

தகுமுறையில் இவைவரியாய்த் தந்துநிற்கும்
தமிழ்த்தாயின் மலரடிகள் தலைமேற்கொள்வாம்!"

என்று பாடுகின்றார்.

ஒலியும் வரியும் இருபுறத்து வதிய, நிலைத்த புகழாய்த் தமிழன்னை, கம்பன் கழகத்தில் இருந்தருள்புரியப் பின்வரும் வெண்பாவைப் பாடி மகிழ்கிறார்.

"ஒலித்தாய் வரித்தாய் உவந்துமுறையே
வலப்பால் இடப்பால் வதிய- நிலைத்தபுகழ்
கன்னித் தமிழ்த்தாயே! கம்பன் கழகமதில்
மன்னிப் பொலிக மகிழ்ந்து"

தொடர்ந்து, ஒலித்தாயின் திருக்கோலம் விளங்கும் பெற்றியைப் பின்வருமாறு பாடி அவள் பாதம் பணிகிறார் சா.க.

"வலக்கை விளக்க முத்திரையும்,
வலமேல் கரத்தில் வெண்சங்கும்,
துலக்கு சுடர்க்கோல் இடமேலும்,
தூய யாழை இடக்கரத்தும்,
தலத்தோர் காணத் தாங்கியருள்
தமரம் ஆன முதல் தேவி
ஒலித்தாய் பாதம் போற்றிடுவோம்
உலகம் உய்ந்து வாழ்வதற்கே!"

அவ்வண்ணமே, வரித்தாயின் திருக்கோலத்தைப் பாடி, வையம் உய்ந்து வாழப் பணிவதைப் பணியாக்குகிறார்.

"எழுதும் ஆணி வலக்கரத்தும்,
'இது!' என் சூசி வலமேலும்
பழுதில் சுடர்க்கோல் இடமேலும்,
பனையே டதனை இடக்கரத்தும்,
செழுமை யாகத் தாங்கிநிதம்
செவியோர் ஒலியைக் கண்காண
வழிசெய் வரித்தாய் பதம் பணிவோம்
வையம் உய்ந்து வாழ்வதற்கே!"

ஒலித்தாயும், வரித்தாயும் இருபுறம் விளங்க நடுநாயகமாக இருந்தருள்புரியும் தமிழன்னையின் திருக்கோயில் முக்கோண மேடையானது, முக்கோணவடிவிலானது,



அது, தமிழகத்தின் நில அமைப்பைப் பிரதிபலிப்பது. இயல், இசை. நாடகம் என்னும் முத்தமிழ் மும்மதிலாக ஆக்கம் பெற்றிருக்கின்றது.

'எண், எழுத்து, இலக்கமதாய் இலங்கு மூன்றும்' இத் திருக்கோயிலின் பிரகாரமாக இலங்குகின்றது. ஆசிரியம், வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா, பரிபாடல் எனும் யாப்பு வகையின் ஆறு பிரிவுகளும் இத்திருக்கோயிலின் ஆறு தளங்காக ஆக்கம்பெற்றிருக்கின்றன. மேலும், அறுவகை இலக்கணம் அல்லது யோகஆதாரம் ஆறும் ஆறு உறுப்புகளாக, நிறுத்தல், முகத்தல்,

பெய்தல், நீட்டல், தெறித்தல், சார்த்தல் என்னும் ஆறுக்கும் தேவையான எண்ணல் என்பவை ஆறு கோண விமானமாகவும் கலசமுமாகவும் ஆக்கம்பெற்றிருக்கின்றன.

ஆறுதூண்கள், அறுவகைச் சமயங்கள்; தமிழன்னை இருந்தருளும் தாமரைத் தவிசு, தமிழைப் போற்றுவாரின் உள்ளத் தாமரை; சேர,சோழ, பாண்டியராகிய மூவேந்தரின் வில், புலி, கயல் குறிகளுடன் 21 சுடர்களைத் தாங்கியது திருவாட்சி.

இத்தனை சிறப்புகளும் தாங்கிய இத்திருக்கோயிலில் திருவோலக்கம் கொண்டு விளங்கியருளும் தமிழன்னையின் தத்துவப்பொருளை அரங்க சீனிவாசன் எழுதிய தமிழ்த்தாய் அடிமுடி விளக்கம் என்னும் கவிதை வரிகளில் அணிவகுக்கக் காணலாம்.

முக்கனிகளான வாழை, மா, பலா, இவற்றோடு இளநீர், தேங்காய், தேன், பால், சர்க்கரை போன்றவை படையற் பொருள்களாக இருக்கவேண்டும் என்பது சா.க. எழுதிவைத்த திருக்குறிப்பு.

1970ல் பெயர்த்தெழுதிய தமிழ்த்தாய் திருக்கோயில் பற்றிய குறிப்புகளில் அவர் தந்திருக்கும் சில சிறப்புக் குறிப்புகள் பின்வருமாறு.

> "தமிழ்த்தாய் முதலிய வழிபாட்டுத் திருவுருவங்கட்கு ஆடை, அணி, மாலை, மலர் முதலிய அணிதல் கூடாது. ஆனால், மூர்த்திகளை எவ்வகையாலும் ஒட்டாமல் மேலும், கீழும், பின்புறமும், இருபக்கங்களும் அணி செய்யலாம்.
>
> வழிபாடு செய்பவர்கள் யாவருக்கும் சந்தனம், பால், சர்க்கரை, மலர் ஆகியவையே அருட்பொருளாய் வழங்கப்பெறும்.
>
> வழிபட வருவோர் அவரவர் மதித்துப் போற்றும் சமயக் குறிகளுடனும் சமயச்சின்னங்களுடனும் வரலாம். அவரவர்களின் சொந்த உபயோகத்திற்குத் தேவையான திருநீறு, குங்குமம், திருமண், கோபி போன்றவை கிடைக்கும்படி செய்யலாம். ஆனால், அஃதெதுவும் கோயிற்பொருள் (பிரசாதம்) என்ற முறையில் அல்ல.



கோயில் பொதுவழிபாடு நிறைவேறியதும், தேங்காய், பழம், மலர் முதலிய உள்ள தாம்பாளத்தை வந்திருக்கும் பெருமக்களில் ஆண்டுமுதலியவற்றால் மூத்த ஒருவர்க்கு (சாதி,மதபேதமின்றி) வழங்கி மரியாதைசெய்தபின் யாவர்க்கும் சந்தனம், மலர், சர்க்கரை வழங்கப்பெற வேண்டும். (கம்பன் அடிப்பொடி கலைக்களஞ்சியம், பக்.291-292)

என்றெல்லாம் அவர் வகுத்தளித்த விதிமுறைகள் முற்றிலும் புதுமையானவை; பொதுமையானவை.

அத்தோடும் அமையாமல், பாரதமாதாவிற்குப் பாரதியார் பள்ளியெழுச்சி பாடியதுபோல் கம்பன்அடிப்பொடி, தமிழன்னைக்குத் திருப்பள்ளிஎழுச்சி பாடியிருக்கின்றார். அதே சமயம் பாரதி பாடாத, தாலாட்டும் பாடியிருக்கின்றார். அது போல், பெயர், நாடு, ஊர், ஆறு முதலான பத்து அங்கங் களையும் முன்வைத்து விளக்கித் திருத்தசாங்கம் பாடியிருக் கின்றார். சுந்தரர் பாடிய திருத்தொண்டத்தொகை மரபில், தமிழ்த் தொண்டாற்றிய அறிஞர்களைப் போற்றித் தமிழ்த்திருத் தொண்டத்தொகை பாடியிருக்கின்றார். திருவாசகப்பெருமை உணர்ந்த அவர், புதுமையாய், அடைக்கலப்பத்தும் பாடி

யிருக்கின்றார். குலசேகராழ்வார் மரபில், 'ஏதேனும் ஆகேனோ?' என்று பாடிய கம்பன் அடிப்பொடியின் கவிதைகளில் கம்பன் முற்றத்துக் கல்துகளாய்த் தாம் கிடக்க என்ன தவம் செய்ய வேண்டுமோ? என்று இரங்கிப் பாடும் பக்திரசம் நெகிழ்வுறச் செய்கின்றது. அத்தோடு தம் ஒத்தாரையும் உடனிருந்தாரையும் பாடவைத்திருக்கிறார்.

இவ்வளவுக்கும் இடையில், மீனாட்சி ஆச்சியை, இல்லறத் துணையாய் ஏற்று, மங்கையர்க்கரசியைப் பெற்றிருக்கிறார். பெயரன் பெயர்த்தியர்க்குத் தமிழ்ப்பெயர்கள் சூட்டி கொண்டாடி மகிழ்ந்திருக்கிறார். அவர்தம் ஒவ்வொரு பணிக்கும் சொல்லுக்கும் ஆழ்ந்த உட்பொருள் உண்டு என்பதை உணர்ந்து கொள்ளக் களம் அமைக்கும் உன்னதச் சான்றுகள் அவை.

அரசியல், சமயம், கலை, இலக்கியம், கம்பன் அனைத்தையும் உள்ளடக்கி ஒரு நூற்றாண்டுக்கும் உள்ளான காலத்தில் வாழ்ந்துநிறைந்த கம்பன் அடிப்பொடியாம் சா. கணேசன் தம் காலத்தில் அளித்த சாட்சியம், காலத்தால் அழியாத சாட்சியம், கல் கொண்டு எழுதிய கவினுறு சாட்சியம் தமிழ்த்தாய் திருக்கோயில்.அதன் உட்பொருள் உணர்ந்து நற்பணியாற்றிட வரும் ஒரு தலைமுறைக்காய்க் கல்லாய் உறைந்திருக்கிறாள் கன்னித்தமிழ் அன்னை.

எழுப்பி, எல்லோரையும் தெய்வவாழ்வு வாழ்விக்க, இன்னொரு கணேசன் எப்போது வருவார்?

காலம் தான் சொல்ல வேண்டும்.

அதுவரைக்கும் காலத்தின் சாட்சியமாய் நிறைந்திருக்கிறார் கம்பன் அடிப்பொடி சா.கணேசன்.

□

துணைநின்ற நூல்கள்

1 அப்துல் காதர், தமிழும் கம்பனும், வானதி பதிப்பகம், சென்னை,மு.ப.2009.

2 அமிர்தலிங்கன்.பூ, கம்பன் கவியரங்கில், பாண்டியன் பதிப்பகம், காரைக்குடி, மு.ப.1964

3 ஆச்சார்யா.பி.ஸ்ரீ., நான் ரசித்த கம்பனும் கம்பன் கழகங்களின் கடமைகளும், நெல்லை மாவட்டக் கம்பன் கழகம், பாளையங்கோட்டை, மு.ப.1981.

4 ஆளவந்தார்.ஜி.,(தொ.ஆ) எஸ்.ஆர்.கே.வாழ்வும் வளமும், எஸ்.ஆர்.கே. நினைவு மலர்க்குழு, சென்னை, மு.ப. 1996.

5 இராமகிருஷ்ணன்.எஸ்.டாக்டர்,கம்பனும் மில்ட்டனும் - ஒரு புதிய பார்வை, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, இரண்டாம் பதிப்பு, 1983.

6 இராமராசன்.எஸ்.கே., கம்பன் சமணம், திருத்தக்க தேவர் இலக்கிய மன்றம், வந்தவாசி, மு.ப.1965.

7 இராமலிங்கம்பிள்ளை.வெ.நாமக்கல் கவிஞர், என் கதை, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 7ஆம் பதிப்பு,2010.

8 இளவரசு.இரா.முனைவர், இந்திய விடுதலை இயக்கத்தில் பாரதிதாசன், மருதம் வெளியீடு, திருச்சி, மு.ப. 1990.

9 கண்ணதாசன் கவிஞர், கண்ணதாசன் கவிதைகள், 6ஆவது தொகுதி, வானதிபதிப்பகம், சென்னை, 4ஆம் பதிப்பு, 1987.

10 கணேசன்.சா. கம்பன் அடிப்பொடி, கட்டுரைக் களஞ்சியம், காரைக்குடி கம்பன் கழக வெளியீடு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, மு.ப.1998.

11 கணேசன்.சா. கம்பன் அடிப்பொடி, நகரத்தார் வரலாறு, நன்றி ரோசா முத்தையா ஆய்வுநூலகம்.

12 கணேசன்.சா., கம்பன் அடிப்பொடி, பிள்ளையார்பட்டி தல வரலாறு,பிள்ளையார்பட்டி கற்பகவிநாயகர் நகரத்தார் அறநிலை, பிள்ளையார்பட்டி 3ஆம் பதிப்பு,1988.

13 கணேசன்.சா., கம்பன் அடிப்பொடி, மாமன்னன் ராஜராஜன், வ.உ.சி.நூலகம்,சென்னை, மு.ப.2009

14 கம்பன் அடிப்பொடி (தொ.ஆ) தமிழ்த்தாய் பிரபந்தம், கம்பன் அறநிலை, காரைக்குடி, மு.ப.1993.

15 காசி.அ.அருட்கவிஞர், கம்பன் அடிப்பொடியாரின் நுண்ணாற்றலும், மண்டோதரியின் மாண்பாற்றலும், கம்பன் பதிப்பகம், வேலூர், மு.ப.2009.

16 கிருங்கை சேதுபதி, இந்தியஇலக்கியச் சிற்பி- குன்றக்குடி அடிகளார், சாகித்யஅகாதெமி, புதுதில்லி, மு.ப. 2011.

17 குப்புசாமி முதலியார்.எஸ்.என்.வேலூர், (தொ.ஆ) எந்தைபிரான் கம்பன், கம்பன் பதிப்பகம், வேலூர், மு.ப.2006.

18 சபாநாயகம்.வே.,(தொ.ஆ) தீபம் இதழ் - தொகுப்பு-1, கலைஞன் பதிப்பகம், சென்னை. மு.ப.2004.

19 சிதம்பரம்.சித., கம்பனடிப்பொடி சா.கணேசன் கவிதை வரலாறு, சிவா பதிப்பகம், சென்னை, மு.ப.2009.

20 சிவம்.சுகி., கம்பன் நேற்று - இன்று - நாளை, வானதி பதிப்பகம், சென்னை, மு.ப.2001.

21 சிற்பி பாலசுப்பிரமணியம்.முனைவர், கம்பனில் மானுடம், வானதி பதிப்பகம், சென்னை. மு.ப.2002.

22 செல்வராஜ்.டி, ஜீவானந்தம், சாகித்திய அகாதெமி, புதுதில்லி, மு.ப.2002.

23 சேதுபதி, அற்புதத்துறவி அடிகளார், கபிலன் பதிப்பகம், புதுச்சேரி, மு.ப.2008.

24 ஞானசம்பந்தன்.அ.ச., கம்பன் புதிய பார்வை, கம்பன் கழகம், சென்னை, ம.ப.

25 திரவியம்.கா., தேசியம் வளர்த்த தமிழ், பூம்புகார் பிரசுரம், சென்னை, மூன்றாம் பதிப்பு,1982.

26 திரு.வி.க.,மனிதவாழ்க்கையும் காந்தியடிகளும், பாரிநிலையம், சென்னை,11ஆம் பதிப்பு, 2000.

27 பழனியப்பன்.பழ. 'கம்பன்அடிசூடி', (தொ.ஆ), கம்பன் அடிப்பொடி கலைக்களஞ்சியம், உமா பதிப்பகம், சென்னை. மு.ப.2009.

28 பழனியப்பன்.பழ. 'கம்பன்அடிசூடி',(தொ.ஆ) கம்பன் கல்வியில் பெரியன், மணிமேகலை பிரசுரம், சென்னை. மு.ப.2003.

29 பாண்டியன்.தா., ஜீவாவும் நானும், விஜயா பதிப்பகம், கோயமுத்தூர், மு.ப.2002.

30 பொன்னம்பல அடிகளார்.தவத்திரு குன்றக்குடி, (ப.ஆ), குன்றக்குடி அடிகளார் நூல் வரிசை, தொ-16, மணிவாசகர் பதிப்பகம், சென்னை. மு.ப.2002.

31 பொன்னீலன், ஜீவா என்றொரு மானுடன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2ஆம் பதிப்பு, 2003.

32 பொன்னீலன், தவத்திரு குன்றக்குடி அடிகளார் தமிழகத்தின் ஆன்மீக வழிகாட்டி, நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, மு.ப.1991.

33 பாஸ்கரத்தொண்டைமான்.தொ.மு., வேங்கடம் முதல் குமரி வரை, பொருநைத்துறையிலே, அபிராமி பப்ளிகேஷன்ஸ், சென்னை, மு.ப.1986.

34 பாஸ்கரத்தொண்டைமான்.தொ.மு., சீதா கல்யாணம், கம்பன் கழகம், காரைக்குடி, மு.ப. விஷூ வருடம், ஆவணி மாதம், 23 தேதி.

35 மணி.பெ.சு., வீரமுரசு சுப்பிரமணிய சிவா, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மு.ப.1984.

36 முருகு.சுந்தரம்,கவிஞர், பாவேந்தர் ஒரு பல்கலைக் கழகம், அன்னம் வெளியீடு, சிவகங்கை, மு.ப.1990.

37. ..... ஜீவா நினைவின் அலைகள், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை. மு.ப.2007.

37. ....உறவினர் நண்பர்களின் பார்வையில் ஜீவா, பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, மு.ப.2007.

மலர்கள்

1 கம்பன் அடிப்பொடி நினைவலைகள், கம்பன் கழகம், கரூர்,

2 காந்திமெய்யப்பர் நினைவு மலர், காரைக்குடி. 07.05.1961.

3 கம்பராமாயணக் காவலர் சா.கணேசன், சிறப்புக் கட்டுரைகள், நெல்லை மாவட்டக் கம்பன் கழகம், பாளையங்கோட்டை,1983.

4 கம்பராமாயணத்தத்துவப் பேராசான் அமரர் இரா.இராதா கிருஷ்ணன் வாழ்க்கை வரலாறும், சிறப்புக் கட்டுரைகளும், நெல்லை மாவட்டக் கம்பன் கழகம், பாளையங்கோட்டை, மு.ப.1984.

5 ஞானசம்பந்தக் களஞ்சியம், அ.ச.ஞா. ஆயிரம் பிறை விழா, வெளியீடு, கோவை, மு.ப.1997.

6 பத்தினிக்கோட்டம், பூம்புகார்- மேலையூர், பத்தினிக் கோட்ட அறநிலை வெளியீடு, பூம்புகார், நாகை மாவட்டம், மு.ப.2010.

7 முருகப்பனார் மணிவிழா மலர், ஹிந்து மதாபிமான சங்கம், காரைக்குடி, மு.ப.1953.

இதழ்கள்

1 குமரன், 21,மார்ச், 1940,

2 குமரன், வைகாசிமீ 31 உ

3 ஈழகேசரி ,7.4.1940

4 மக்கள் சிந்தனை,குன்றக்குடி.

5 தினமணி- தமிழ்மணி, சென்னை, 5.4.2009

6 தினமணி - தமிழ்மணி, சென்னை, 13.1.2013.

7 ஜனசக்தி, சென்னை. 5.4.2009

8 தீக்கதிர், மதுரை, 6.4.2009.

இணையதளங்கள்

1 http://tamilartsacademy.com/books/tavam/chapter01.xml

2 http://kambanadippodi.blogspot.in/

3 http://kambantamilcentre.blogspot.in/

ஆசிரியர் அறிமுகம்

புதுச்சேரி பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரித் தமிழ்த்துறையின் உதவிப் பேராசிரியர் முனைவர் சொ.சேதுபதி, தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் வள்ளல்பாரி உயர்நிலைப் பள்ளியில், பள்ளிப் படிப்பையும், பாரம்பரியமிக்க, மேலைச் சிவபுரி கணேசர் செந்தமிழ்க்கல்லூரியில் தமிழ்க் கல்வியும் பெற்றவர். முதுகலை, இளமுனைவர், முனைவர் பட்டங்கள் பெற்ற இவர் கல்வியியலிலும் இளங்கலைப்பட்டம் பெற்றவர்.

பல்துறை சார்ந்த நூல்கள் படைத்துவரும் கவிஞர்; சிறுகதையாளர்; நாடகஆசிரியர்; ஆய்வாளர்; சொற்பொழிவாளர். 1990களில் இருந்து வெளிவந்து கொண்டிருக்கும் 'தொடரும்' இலக்கிய இதழின் ஆசிரியர் குழுவில் ஒருவர். தமிழ் இணையப் பல்கலைக் கழகத்தின் பாடத்திட்ட வல்லுநர் குழுவிலும் ஒருவராகத் திகழும் இவர், ஆரோவில் தமிழ்மரபு மையத்தின் ஆலோசனைக்குழு உறுப்பினராகவும் விளங்குகிறார்; உலகத் திருக்குறள் பேரவையின் இளைஞர் அணித்தலைவர்; சாகித்ய அகாதெமி தமிழ் ஆலோசனைக்குழு உறுப்பினர். பல்வேறு கருத்தரங்குகளிலும் கலை இலக்கிய ஆய்வு மாநாடுகளிலும் பங்கேற்று எழுபதுக்கும் மேற்பட்ட கட்டுரைகள் வழங்கியுள்ளார்.

தமிழக அரசின் குறள்பீடப் பாராட்டிதழ், இசைஞானி இளையராஜா இலக்கிய விருது, புதுவை பாரதிதாசன் அறக்கட்டளை வழங்கிய பாரதி இலக்கியச்சுடர் விருது, பாரத ஸ்டேட் வங்கி இலக்கியப்பரிசு, மற்றும் சென்னைக் கம்பன் கழகம், திருப்புத்தூர்த் தமிழ்ச்சங்கம், கலை இலக்கியப் பெரு மன்றம், தமுஎச உள்ளிட்ட கலை இலக்கிய அமைப்புகளின் விருதுகள், பரிசுகள் பலபெற்றவர்.

கவிதை, சிறுகதை, நாடகம், சிறுவர் இலக்கியம், பாரதி ஆய்வுகள் எனப் பல்வேறு துறைகளில் நாற்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவர்.

தொடர்புக்கு: 321, 3ஆம் முதன்மைச் சாலை, மகாவீர் நகர், புதுச்சேரி - 605008,பேச: 09443190440, sethukapilan@gmail.com



'காலமும் கணக்கும் நீத்த காரணன்' ஆகிய கம்பனுக்கே தன்னை அடிமையாய்க் கொண்ட கம்பன் அடிப்பொடியின் வரலாறு, ஒரு காலத்தின் வரலாறு.

கலை, இலக்கிய,பண்பாட்டு, அரசியல் தளங்களின் ஊடே பயணமாகிக் கம்பனுக்கு அருகில் கொண்டு சேர்க்கும் சா. கணேசனாரின் இலட்சியப் பாதை, 'எல்லையொன்றின்மை எனும் பொருள் அதனைக் கம்பனின் குறிகளால் காட்டிட முயலும் முயற்சி'யின் ராஜபாட்டை.

என்றுமுள தென்றமிழை இயம்பி இசைகொண்ட கம்பன் அடிப்பொடி,சென்ற நூற்றாண்டின் இலக்கிய சாட்சியம். இனிவருந்தலைமுறைக்கு இவரே இலட்சியம்.

Code No.: P 1246

பாவை பப்ளிகேஷன்ஸ்

#16 (142) ஜானி ஜான் கான் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன் : 28482441, 28482973.
e-mail : pavai123@yahoo.com

9 788177 356939

₹ 140/-